நக்கீரர்

(சொர்ணாம்பாள் சொற்பொழிவுகள்)

ச. தண்டபாணி தேசிகர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்
1973

நக்கீரர்

NAKKIRAR
2609
by Tantapani Tecikar

(சொர்ணாம்பாள் சொற்பொழிவுகள்)

மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்

CONNEMARA PUBLIC LIBRARY
MADRAS
3.50

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்
1973

முதற் பதிப்பு 1973

சொர்ணம்பாள் வெளியீடு எண் : 8

இளங்கோ அச்சகம்,
புதுச்சேரி.

9-JUN 1974
MADRAS

அமைப்பு முறை.

பக்கம்

முகவுரை I

அமைப்புமுறை

முதல்நாள் சொற்பொழிவு 1—57

நக்கீரர் பெயர்க் காரணம்—குலம்—சமயம்—வாழ்க்கைநிலை—புலமைத்திறன்-குணமும்-பெருமையும்-அரசர்கள்-சிற்றரசர்கள்—வேளிர்கள்-திணை வகைகள் — ஊர்கள்.

2-ம் நாள் 58—94

மீன் வகைகள் — விலங்கு வகைகள் - மர வகைகள்—மலர் வகைகள்-மக்கள் — மக்கட் பாகுபாடு — பல்லியங்கள் - போர்க் கருவிகள் — அணி வகைகள் - கடவுள் வழிபாடு — வளமைநலம்.

மூன்றும் நாள் 95—162

புதுமைப் படைப்பு — பெயர்க் காரணம் - ஆற்றுப்படை-பழக்க வழக்கங்கள் - இறை வழிபாடும் பயனும் — புராண வரலாறுகள் - மந்திரங்களும் ஓதும் முறையும், நிற்கும் முறையும் முருகன் கையிலுள்ள படைக்கலன்கள் — முருகனுடைய மறு பெயர்கள் - தெய்வங்கள் - உரை வேறுபாடுகள் - அரிய இலக்கண இலக்கியங்கள் — நெடுநல்வாடை — பெயர்க் காரணம் — இப்பாடலால் அறியப்படும் பலதுறை நுணுக்கங்கள்.

முகவுரை

செந்தமிழ் சேதுப்பிள்ளையவர்கள் வைத்த வைப்பு நிதியின் வாயிலாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆண்டுதோறும் நிகழ்வது புலவர் திருநாள். அந்நாளில் நிகழும் சொற்பொழிவின் தொகுப்பாக, இந்த ஆண்டு வெளிவரும் ஆராய்ச்சி "நக்கீரர்" என்னும் இந்நூல்.

புலவர் பெருமக்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையும், சொல்லிக்காட்டிய கவிதைகளும் அவர்களைப்பற்றி நாம் அறிந்து கொள்ளத் துணைசெய்வன. அவற்றுள் வாழ்க்கை அவர்களாலாவது; அவர்கள் காலத்து உடன் இருந்தோர்களாலாவது எழுதி வைக்கப் பெற்றிருப்பின் அது நமக்கு உண்மையான வரலாற்றுச் சாதனமாதல் கூடும். அதுதான் நம் முன்னோரின் மரபாக அமையவில்லையே! தான் தற்புகழுதல் தகுதியன்றே என்ற முடிவில் ஊன்றி நின்றவர்களாயிற்றே! ஆதலால் அவர்கள் சொல்லிக் காட்டிய கவிதைகளின் துணைகொண்டே இவ்வரலாறு எழுகிறது.

கவிஞனுக்கு உண்மை வாழ்வும், இலட்சிய வாழ்வும் என இருவகை வாழ்வு உண்டு. அவையிரண்டும் அவன் கவிதையில் காணப்பெறும். அவற்றோடு சமுதாயச் சூழ்நிலை ஆட்சிமுறை முதலியவைகளையும் அறியலாம். இங்ஙனம் காலம் கடந்த நிகழ்ச்சிகளைக் காட்டும் மாயக் கண்ணாடிகள்-கவிதைகள்.

இந்நூலில் மூன்றுநாள் சொற்பொழிவின் சுருக்கமும் இடம்பெற்றுள்ளது. முதல்நாள் நிகழ்ச்சியில் நக்கீரர் வரலாற்று நுணுக்கங்களும், முடிமன்னர், சிற்றரசர், குடிமக்கள் வரலாறுகளும் உடனுறைந்த புலவர்களைப்பற்றிய குறிப்புகளும், செய்யுளமைப்பு இடவகைகள் இவைகளைப்பற்றிய விளக்கங்களும் இடம் பெறுகின்றன.

2-ம் நாள் பொழிவாக மரஞ்செடி கொடிகள், நீர்வாழ்வன. விலங்கு, பல்லியங்கள், போர்க் கருவிகள், அணி ஆடை முதலிய ஒப்பனைப் பொருள்கள் கடவுள் வழிபாட்டு முறைகள் உவமநலம் முதலியன இடம் பெறுகின்றன.

3-ம் நாள் நிகழ்ச்சிக் குறிப்புக்களாக உரையாசிரியர் கள் இவர் கவிதையையாண்ட இடங்கள்; அன்புநெறிப் பாடலாகிய திருமுருகாற்றுப் படையைப்பற்றிய பலதுறை ஆராய்ச்சிக் குறிப்புகள்; புராண வரலாறுகள் இதில் வரும் கூத்துமுறைகள் இந்நூலுக்கு உரை செய்தோரும் உரை களில் காணப்பெறும் கருத்து மாற்றங்களும்; அரிய இலக் கண மாற்றங்கள். நெடுநல்வாடைபற்றிய ஆய்வு நுணுக்கங் கள் வரலாற்று வழக்கங்கள் முதலியன இடம் பெறுகின்றன.

இங்ஙனம் இந்நூல் மூன்று பகுதியாகப் பலவேறு தலைப்புகளில் நக்கீரர் பெருமானின் பலதுறைப் பேரறிவுத் திறத்தினையும் கற்பனைத் திறனையும் கற்போர் சிந்தை களிக்க கவிதையமைக்கும் ஆற்றலையும் ஓரளவு எளிமையாகத் தொகுத்துணரத் துணையாகும் என்ற எதிர்நோக்கு எமக்கு உண்டு.

அண்ணமலைப் பல்கலைக் கழகம் அணிவிரல் முடக்கல் ஓட்டாத – அறிவாற்றலில் தலைசிறந்த செந்தமிழ்ச் சான்றோர் களாகிய கா. சுப்பிரமணிய பிள்ளை, மகா மகோபாத்திய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், கவிசேகர இரா. இராகவயங்கார், சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் முதலான பல பேர றிஞர்களைப் பெற்றுச் செந்தமிழ் பணியில் சிறந்து விளங் வருவது என்பது தமிழ்நாடு அறிந்த ஒன்று. பல்கலைக் கத்தின் வாயிலாகவும் சார்பாகவும் இதுவரை வெளி ஆராய்ச்சி நூல்கள் மிகப்பல. அத்தகைய பல்கலை கத்திற்கு அடியாகிய மீனாட்சி தமிழ்க் கல்லூரி துத் தேறிய மாணவர்களில் அடியேனும் ஒரு ஆண்டு மாகாண முதல்வகைத் தேறிய வாய்ப் மையால் முதல் முதலிலே இராசா. சர்

செட்டியார் அவர்களுடைய அருளுக்கிலக்காகி ஆசிரியனாகவும் சில ஆண்டு பணியாற்றியபின் மீண்டும் இராசா. சர். முத்தையச் செட்டியார் அவர்களுடைய அன்பிற்கிலக்காகிப் பதினைந்தாண்டுகளுக்கு மேல் பல்கலைக் கழகத்தில் பணி புரிந்து ஓய்வு கொண்ட என்னை இந்தச் சொர்ணம்பாள் சொற்பொழிவுக்கும் தக்கவனாக்கிய தமிழ்ப் பல்கலைக் கழகமாகிய இதற்கு என்றென்றும் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையேன்.

இந்நூல் ஓர் ஆய்வுநூல். கருத்து மாற்றங்களே ஆய்வின் அடிப்படை. எனக்கு முன்னே இம்முயற்சியில் ஈடுபட்டுத் தனிநூலாகவும் நூலின் உறுப்பாகவும் கட்டுரைகளாகவும் கருத்தை அளித்த அறிஞர்கள் பலர். அவர்கள் காட்டிய வழியில் நின்று பின்னோன் வேண்டும் விகற்பங் கூறல் மரபாதலின் சில மாற்றங்களையும் தந்து இந்நூலை முடித்திருக்கிறேன்.

செந்தமிழுலகம் சிறந்தன கொண்டு, சிந்தனை பெருக அடியேனுக்கு உதவுமாக!

திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவு.
அண்ணமலைப் பல்கலைக் கழகம்
அண்ணமலை நகர்
8—5—73

இங்ஙனம்
அன்பன்,

ச. தண்டபாணி

நக்கீரர்

அறிஞர் பெருமக்களே! மாணவ நண்பர்களே!

நாம் அனைவரும் இன்று திருநாளில் கலந்து களித்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய அன்றாட வாழ்வில் அவ்வப் போது நேர்படும் மேடு பள்ளங்களிலும், துன்ப இன்பங்களிலும் இருந்து சில மணித் துளிகளாவது விலகி, மகிழ்ச்சி மயமாக இருக்க எண்ணுகிறோம். மகிழ்ச்சி என்றால் துன்பங் கலவாத இன்பம்.

இத்தகைய இன்பத்தை எய்த எளிய வழியாக, பருவந் தோறும் விழா; மாதத்திற்கு மாதம் விழா; ஆண்டுக்கு ஒரு விழா இப்படி எல்லாம் கொண்டாடுகிறோம். கொண்டாடி னாலும் நிறைவான—நிலையான இன்பம் கிட்டுவதில்லை. விழாக்கள் பெரும்பாலும் காலக்கழிவு விழாவாகவும்—காசுக் கழிவு விழாவாகவுமே முடிகின்றன. அங்ஙனமன்றிக் கருத்து வளர்ச்சி விழாவாக அமையுமாயின் அது நமக்கு எத்துணைச் சிறந்தது! எத்துணை இன்றியமையாதது.

அத்தகைய விழா அறிஞர் திருவிழா—அறிவுத் திருவிழா. நம் நாட்டு அறிஞர்கள், வரலாற்றுலகிலே மறைந்தவர்கள். ஆனாலும், அவர்கள் வாய் வந்த பாடல்களிலே சிறிது தம்மைத் தலைகாட்டி நிற்பவர்கள்.

அவர்கள் பாடலைக் கொண்டு அவர்கள் வாழ்வ[illegible] உணருகிறோம். அவர்கள் வாழ்விலே பின்னிப் பிணைந்து[illegible] கின்ற வேந்தர்கள் வீரர்கள் வேளாளர்கள் வரலாறு[illegible] உணருகிறோம். அங்ஙனம், தன்னையும் விளக்கி[illegible] பாடலைக் கொண்ட தலைவனையும் விளக்கி[illegible] அறிஞர்கள்.

நம்மிடையே வாழ்வாங்கு வாழ்ந்து மறை[illegible] சேதுப்பிள்ளையவர்கள் தம் வாழ்நாட் ப[illegible]

நாளாகப் பல்கலைக் கழகங்கள் கொண்டாடப் பணித்தார்கள். அதனால் அவர்களும், அவர்கள் அன்னையாரும் நம்மால் ஆண்டுகள்தோறும் நினைவு கூரப்பெறுகிறார்கள். ஆகவே புலவர் திருநாளால் புலவன் நம்மிடையே புத்தொளி பெறுகிறான். அவனைக் காப்பாற்றிய புரவலன் போற்றப் பெறுகின்றான். இதற்கென்று அறக் கட்டளையமைத்த அண்ணல் சேது போற்றப்பெறுகிறார். அன்னையார் போற்றப் பெறுகின்றார்கள். இங்ஙனம் விளக்கங்காணும் விழாவின் இன்றைய பொருளாக உள்ளவர் துளக்கமில் காட்சி நக்கீரர் ஆவார்.

நக்கீரர் இன்றைய விழா நாள் தலைவர் மட்டும் அல்லர்; கடைச் சங்கத்திருந்த புலவர் பெருமக்கள் அனைவருக்குந் தலைவர். சங்கப் பலகை உண்டான காலத்திலே முதன் முதலாக அதில் ஏறும் உரிமை பெற்றவரும் இவரே.

சிவபெருமானே இவரை '[1]அசைவிலா மனஞ்சேர் தண்டமிழ்ப் பாவலன்' என்றும், '[2]கற்ற கீரன்' என்றும் பாராட்டுகிறார் எனில், இவர் பெருமான் போற்றும் பெரும் புலவராகத் திகழ்ந்தார் எனற்கு வேற்றுச் சான்றும் வேண்டுமோ?

தெருளுறு கீரனாகிய இவருடன் ஒப்ப வைத்தெண்ணப் பெறும் பெருமைபெற்றோர் கபில பரணர் இருவரும் என்பதைப் பரஞ்சோதி முனிவர் செய்த திருவிளையாடற் புராணம் தெரிவிக்கும். 'மதுரையில் தமிழறியும் பெருமானாகிய சொக்கலிங்கப் பெருமான் திருவருளாற் கிடைத்த சங்கப் பலகையில் முதன் முதலாக ஏறிய நக்கீரரோடு அடுத்து உடன் ஏறியிருந்தவர்கள் கபிலரும் பரணரும்[3] என்று வரலாற்றால் அறியப் பெறும்.

இவர் வழிவழிப் புலவர். உண்மையறிவும் உள்ளத்...ம் உடையவர். தமிழ் நாட்டில் சில சொற்கள் தன் ...ற் றீர்ந்தும், தீராமலும் தனித்த பொருளோடு தனிச் ... செலுத்தி வருகின்றன அவற்றுள் ஒன்று நக்கீரர் ...லும். இதன் ஆற்றல் ஒருவர் பெயராக அவரை

...லியூர் நம்பி திருவிளையாடல் 17ம் படலம், பாடல் 6
...திருவிளையாடல் 53-ம் படலம். 26-ம் பாடல்.
" 51-ம் படலம் 27-ம் பாடல்.

மட்டும் உணர்த்துவதாக இல்லை. தான் ஆய்ந்து கண்ட முடிவையும்—கொள்கையையும் ஓரிம்மியளவும் விட்டுக் கொடுக்காத—செல்வத்திற்கும் செல்வாக்கிற்கும் சிறப்புக்கும் அடிமையாகாத—ஏன்? தெய்வத்திற்கும் அஞ்சாத—உண்மையறிவும் ஊக்கமும் பெருமிதமும் உடைய பண்போவியத்தை உணர்த்துவதாக அமைந்துவிட்டது. அனைவராலும் எளிதில் அறியப் பெறுவதாகவும் நின்று நிலவி வருகிறது. பட்டி தொட்டிகளிலுங்கூட 'பாரடா இவன் ஒரு நக்கீரன் சொன்னதைச் சாதிப்பான்' என்ற அளவிலே செல்வாக்குப் பெற்றுள்ளது. அத்தகைய சொல்லாற்றல் இவராலேயே ஏற்பட்டதென்றால் இவர் புலனுணுக்கம் எத்துணைச் சிறந்தது.

இவர் தந்தையார் மதுரைக் கணக்காயனார் என்பவர். மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்றே இவர் நூல்களிற் போற்றப்பெறுகின்றார்.[1] இவர் மகனார் கீரங்கொற்றனார் ஆவர். இவர்[2] கீரவிக் கொற்றனார் எனவும் வழங்கப்பெறுகின்றார். ஆகவே தந்தை, மகன், தான் என்ற மூன்று தலைமுறை தமிழ்ப் புலவரான பெருமை படைத்தவர்.

இங்ஙனம் மரபு வழிவந்த தமிழ் வளர்க்கும் புலமைக் குடும்பத்திலே பிறந்த நக்கீரர் வாழ்ந்த ஊர் மதுரை. இது இவர் தந்தையார் பெயர் உரைப்பவே அறியப்பெறும்.

இவர் தந்தையார் மதுரைக் கணக்காயர். மதுரைக் கணக்காயனார் எனவும் வழங்கப்பெறுவர். கணக்காயர் என்பது தொழிலால் வந்த பெயர். ஆயர் வேட்டுவர் என்பன போல.

கணக்கு — நெடுங்கணக்கு. அது அரிவரி எனவும் வழங்கும். ஆகவே நெடுங்கணக்காகிய அரிவரியைக் கற்பித்தவர் கணக்காயர். எழுத்தறிவிக்கும் இறைவர். இவர் காலத்தில் இவர் இத்துறையிற் சிறந்து விளங்கினராதலால்

1. இறையனாராகப் பொருளுரை பக் 8... தொல் பொருள் மரபு 94-க்கு பேரா இரை.
2. " " உரை மரபு.
3. குறுந்தொகை. 1955 பதிப்பு. பாடினோர் வரலாறு பக் 132.

இவருக்கு இப்பெயரே சிறப்பாக வழங்குவதாயிற்று. இயற்பெயர் மறைந்தது என்பர்.

மகாமகோபாத்தியாய ஐயர் அவர்கள், தமிழில் அரிச்சுவடிக்குத் தமிழ்க் கணக்கு என்றும் நெடுங்கணக்கு என்றும் பெயருண்டு. ஆயம் — கூட்டம். பிள்ளைகளைக் கூட்டமாகச் சேர்த்துத் தமிழ்க் கணக்கைக் கற்பிக்கும் உபாத்தியாயர் கணக்காயர் எனப்படுவர்' என்பார்கள்.

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்கள், குறுந்தொகை 304-ம் பாட்டுப் பாடிய புலவர் கணக்காயன் தத்தன் என்று குறிப்பிடப்பெறுவதால்[1] இவரது இயற்பெயர் தத்தன் என்பதே என்பர்.

ரா. இராகவையங்கார் அவர்கள் 'கணக்காயனர் என்பது ஓத்துரைப்போர் உவாத்தியாயர் எனப் பொருள்படும். இவர் பரந்த புகழுடைய சிறந்த பள்ளிக்கூட உவாத்தியாயராக இருந்தனர் போலும். குறுந்தொகையில் 'கணக்காயன் தத்தன்' என்றிருத்தலான் இவரியற்பெயர் தத்தன் என ஒருவாறு கொள்ளலாம் என்பர்.[2]

எண்ணுக்கும் எழுத்திற்கும் கணக்கென்ற பெயருண்டு என்னும் பிங்கலந்தை[3]. "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப" என்ற திருக்குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர் 'எண் என்பது கருவியுஞ் செய்கையுமாகிய கணிதம். எழுத்தென்பது இலக்கணம் என்பர்.[4] பருதியார் எண்ணுகிய சோதிடமும் எழுத்து முதலாகிய அஞ்சு லட்சணமும் என்பர்[5]

சிவஞான முனிவர் "மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி" என்ற பகுதியில் எழுத்து என்பது இயற்றமிழ்.

---

1. நற்றிணை பாடினோர் வரலாறு பக். 17
2. அக. நா. பக். 26 முகவுரை.
3. எண்ணும் எழுத்தும் கணக்கெனலாகும் பிங்கலத்தை, பண்பிற் செயலின் வகை. 327.
4. திருக்குறள் 392 பரிதியார் உரை.
5. ,, 392 பரிதியார் உரை

அஃது எண்ணென்ப ஏனை எழுத்தென்ப அவ்விரண்டும், கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்பவற்ருனும் உணர்க' என்பர்.[1]

இச்சொல் "கலிப்பா என்ருேதுதல் கணக்கோ" என்புழி[2] நியாயம் என்னும் பொருளில் வந்துள்ளது. "அன்றைக் கணக்கு இன்றும் வந்திருக்கின்றது அம்புலியாடவாவே"[3] என்புழியும் அப்பொருளதாதலைக் காணலாம். மற்றும் 'கற்றினி எல்லாக் கணக்கும் கலந்துரை காண்டி என்னையே'[4] என்புழி 'நூல்' என்னும் பொருளிலும், "காலங்கள் சொல்லாயதுதான் உன் கணக்கும் என்ருல்" என்புழி மேற்கோள் என்னும் பொருளிலும்[5] வந்துள்ளன. "கணக்காயர் ஓத்துரைப்போர்", "நூலுரைப்போர்" என்ற நிகண்டுகளும், கீழ்க்கணக்கு மேற்கணக்கு என நூல்கள் வழங்கப்படுவதும் இக்கருத்தினை யரண் செய்யும். இவையனைத்தையும் தொகுத்து நோக்கின், கணக்கு என்பது அரிவரியை மட்டும் உணர்த்துவதாகாது. எண் எழுத்து சோதிடம் ஐந்திலக்கணம், நியாயம், நூல் மேற்கோள் முதலான பல பொருள்களைக் காட்டுவதாய் விளங்கக் காண்கிருேம். ஆகவே கணக்காயர் என்பவர் இங்ஙனம் கூறிய எல்லா அறிவையும் உடையார்; ஏதுக்காட்டி எதனையும் நிறுவும் ஆற்றலுடையார் என்பது பெறப்படும்.

இனி ஆயர் அல்லது ஆயனர் என்பதை ஊன்றிப் பார்ப்போம். நம் முன்னோர்கள் கூறுவதுபோல கூட்டத்தினை யுடையவர் என்ற பொருளில் வந்திருக்குமானல் சங்கம் சங்கத்தார், கூட்டம் கூட்டத்தார், ஆயம் ஆயத்தான் ஆயத்தார் என வருமேயன்றி ஆயர் ஆயனர் எனவரும் என்றல் அத்துணை ஏற்புடையதன்று. ஆகவே கணக்கினை ஆய்பவன் கணக்காயனர் என்ருயிற்று எனலாம். எனவே இவர் நெடுங்கணக்கு ஆசிரியர் அல்லர். கணிதமும், சோதிடமும் இலக்கண இலக்கிய நூல்களும் ஆய்ந்து, ஏதுக்களாலும் எடுத்துக்காட்டுக்களாலும் விளக்கும் பேரறிவாளர் என்பது போதரும்.

1. தொல்-பாயிர விருத்தி பக், 11 நாவலர் பதிப்பு.
2. தமிழ்விடு தூது கண்ணி 81.
3 முத்துகுமாரசாமிப் பிள்ளைத் தமிழ் அம்புலி: 8.
4 நீலகேசி: புத்தவாது 55 பாடல்
5. ,, ஆசீவக வாது 63 பாடல்.

சங்க இலக்கியத்தில் நக்கீரர், நக்கீரனார், மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரன், கணக்காயனார் மகனார் நக்கீரனார் எனப் பல வடிவங்களில் நக்கீரர் காணப்பெறுகின்றார். ஆனால், மதுரை நக்கீரர் நீங்க ஏனையவை யாவும் கணக்காயனார் மகனையே உணர்த்துவன. மதுரை நக்கீரர் அவரில் வேறானவர் என்பதுபோல மகாமகோபாத்யாய ஐயரவர்கள் புறநானூற்று முகவுரையிற் கருதுகிறார்கள்[1] பிற்காலத்து ஆய்வாளர்கள் அனைவரையும் ஒருவராகவே கருதுவர். (புறம் முக. பக். 57 பார்க்க.பதிப்பு 5)

ரா. இராகவய்யங்கார் அவர்களும், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அவர்களும் குறுந்தொகையுட், 'கொல்வினைப் பொலிந்த' என்னும் பாடலாசிரியன் கணக்காயன் தத்தன் என்றிருப்பதைக் கொண்டு இருவரையும் ஒருவாறு கொள்ளலாம் என்று ஐய நிலைக்களனைக் கருதினார்களே யன்றித் துணிந்து கூறவில்லை. ஐயரவர்கள் மதுரைக் கணக்காயனாரையும் கணக்காயன் தத்தனையும் வேறாகவே கருதுகிறார்கள். எங்ஙனமாயினும், மதுரைக் கணக்காயர், தொகைநூலுள் ஐந்து பாடல்களை ஆக்கியவரும் தொல்கேள்வித் துறைபோகியவரும், ஆவார். அவருடைய அறிவாற்றலின் சிறப்பு இளமையில் நம் நக்கீரனாரிடமும் தந்தையறிவு மகனறிவாக விளங்கக் கண்ட தமிழுலகம் இவரை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் எனத் தந்தையொடு இணைத்து எண்ணலாயிற்று. நக்கீரரும் "மகன் உரைக்கும் தந்தை நலத்தை" என்றதற்கு ஏற்பச் சிறந்து விளங்கினார் என்ற எண்ணங்கள் முறைமுறையே எழுவனவாம்.

நக்கீரர் என்ற பெயர்க் காரணம்:

கீரன் என்பதே இவரது இயற்பெயர். இயற்பெயர் முன்னர் 'ந' என்னும் சிறப்புப் பொருள்தரும் இடைச்சொல் வந்தமையே இதற்கு ஏற்ற சான்றாகும்.[1] உதடன், சாத்தன், தத்தன் முதலானபெயர்கள் புலவர்களுக்கு இட்ட பெயரான இயற்பெயராக வழங்கியது போல, இவரும் கீரன் எனப் பெய[ர்]ப்பெற்றார் எனலே இயைபுடையதாம்.

அங்ஙனமன்றிச் சிலர் பாலப்பன் என்பது இவரது ிள்ளைப்பெயர். பாலுக்கு க்ஷீரம் என்ற வட சொல்லின் சிதை வாகிய கீரம் என்பதும் பெயர். ஆகவே பாலப்பனே கீரனாயிற்று என்பர். பாலப்பன் என்பதைவிடப் பாலத்தன்-நப்பாலத்தன் என்பனவே நக்கீரன் எனவாயிற்று எனலாமே!

சிலர் 'கீர்' என்னும் ஆரியச் சொல்லுக்கு கிளி என்பது பொருள். கிளி போன்ற இனிய மொழியைப் பேசுபவன் கீரன் ஆயிற்று என்பர்

சிலர் ஆரிய மொழியில் கவ் வருக்கத்து மூன்றாமெழுத் ாலான கீர் என்பது சொல் எனப் பொருள்படும். ஆகவே சொலல் வல்லான் கீரன்என்பர். இவையனைத்தும் ஆரிய மொழி ின் அடிப்படையிலே ஏதாயினும் பெயர்க் காரணங் காண வேண்டும் என்னும் எழுச்சியால் விளைந்த வீழ்ச்சியாகும்.

சங்க இலக்கியங்களில் அந்தில் இளங்கீரனார், இளங்கீர ர்,அல்லங்கீரனார்,இம்மென்கீரனார்,புல்லங்கீரனார், கழாஅர்க் ரன், காசிபன் கீரன் முதலான இருபத்து மூன்று கீரனார்கள் ளர். இவற்றைக் கொண்டு ஆராயின், கீரன் என்பது சாத் ன் கொற்றன் குமரன் என்பனபோல அக்காலத்தில் மக்க க்கு இட்ட பெயராக வழங்கிற்று என்பதே ஏற்புடையதாம். ன்றியும் தமிழ்நாட்டில் கீரனூர், கீராந்தை கீரன் குடி முதலிய ர்ப் பெயர்களும் தொன்றுதொட்டே வழங்குகின்றன. ஆத ால் கீரன் என்பது அக்காலத்தில் மக்களுக்கு இடப்பெற்ற னித் தமிழ்ப் பெயர் எனலே பொருந்துவதாம்.

லம்:

சங்க காலம், அறிவாற் பெருமை காண்பதே யன்றிக் குலத்தாற் பெருமை பேணாத காலம். ஆகவே புலவரிற் பெரும்பாலோர் தங்குலத்தைப் பற்றிய சிறு குறிப்பும் தந்திலர். அதனால் அவர்கள் புலமையின் பெருமை யறியப்படுகின்ற அளவு இலக்கியங்களில் குலநலம் காணப்பெறுதல் இல்லை, ஆயினும் தொன்றுதொட்டுவழங்கும் சில செவிவழிச்செய்திகளை ும், அவைகளை யடியாகக் கொண்டு, உலக விருப்பமும்–புனைந் துரையும் ஏதுவாக எழுந்த வரலாறுகளையும் துணைக் கொண்டே

குலமும் நலமும் அறியப்பெறுகின்றன. ஆதலால் நக்கீரர் குலத்தைப் பற்றியும் நாம் அவற்றையே துணையாகக் கொள்ள வேண்டியுள்ளது.

சண்ப மாறனென்னும் வங்கிய சூடாமணிப் பாண்டியன் அவையில் 'கொங்கு தேர் வாழ்க்கை' என்னும் செய்யுளின் பொருளமைதி குறித்துச் சங்கப் புலவராக வந்த சொக்கநாதப் பெருமானுக்கும், நக்கீரனுக்கும் ஒரு வாது நிகழ்ந்தது. அவ் வாதம் பொருள் பற்றிய வாத நிலையிலிருந்து விலகிச் சாதி வாதமாயிற்று. அப்போது சிவபெருமான் கூறியதாக வரும் வெண்பா,

அங்கங் குலுங்க அரிவாளில் நெய்தடவிப்
பங்கப் படவிரண்டு கால்பரப்பி—சங்கதனைக்
கீர்கீர் என அறுக்கும் கீரனோ என்கவியைப்
பாரிற் பழுதென் பவன்.

என்பது. இதற்கு எதிராக நக்கீரன்,

சங்கறுப்ப தென்குலமே தம்பிராற் கேதுகுலம்
பங்கமறச் சொன்னாற் பழுதாமே—சங்கை
அரிந்துண்டு வாழ்வோம் அரனாரைப் போலே
இரந்துண்டு வாழ்வ திலை.

என்றார். இவற்றான் அறியப்படுவது நக்கீரர் சங்கறுக்கும் குலத்தினர் என்பது. இவ்வரலாற்றிற்கு நம்பி திருவிளையாடல்,

அங்கங் குலுங்க அரிவாளின் நெய்யென்றோர்
பங்கக் கவிதை பரமன்சொல விளிந்து
சங்கறுப்ப தெங்கள் குலம் தம்பிராற் கேதென்றோர்
துங்கமுறுங் கவிதை சொன்னனெதிர் துணிந்து.

எனத் துணை செய்கின்றது.

இந்த வரலாற்றையும்,

[1]'வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த'
" வளைகளைந் தொழிந்த கொழுந்து "

என்னும் அகப்பாட்டடியில் வேளாப் பார்ப்பான் என்பதற்கு எழுதப்பெற்றுள்ள 'யாகம் பண்ணாத பார்ப்பான். இவர்

1. அக. நா.

ளுக்குச் சங்கறுக்கையும் ஒரு தொழில்' என்னும் உரைக்குறிப்பையும் துணைக்கொண்டு மு. இராகவய்யங்கார் அவர்கள் நக்கீரர் சங்கறுக்குந் தொழிலையுடைய வேளாப் பார்ப்பார் என்பர்.

நாவலர் வேங்கடசாமி நாட்டார் அவர்கள் யாகம் பண்ணாத ஊர்ப்பார்ப்பான் என்ற உரைக்குறிப்பைத் துணைக்கொண்டு ஊர்—உலகம்—உலகம்—விசுவம். ஊர்ப்பார்ப்பான் விசுவ பிராமணன். ஆகவே நக்கீரர் வேளாப் பார்ப்பராகிய விசுவ பிராமணராம் என்பர்[1]. சிலர், சீர் கருணீகர் புராணம் செய்தவர் நக்கீரர் ஆகையால் சீர்கருணீக மரபினர் என்பர்.

புலவர் புராணம் உடையார் "ஓர் பரவன் இல்லில் புத்தியுடைச்சேயானன் பாலப்பன் என நாமம் புனையப்பெற்றான்" என்றுகூறி, இவர், பரதவர் குலத்தினர். அவர்களுக்கும் சங்கறுக்கையும் ஒரு தொழில் என்பர்[2] மேலும் அவர் கற்பனை நக்கீரர் தமிழ் படித்ததனால் குலத்தொழிலில் விருப்பற்றவராயினர் என்று இயைபும் காட்டத் தொடங்கியது. இங்ஙனம் இவர், குலம் இன்னதென்றறியப்படாத மொழி வழித் தமிழர் குலமாயினர்.

சமயம் :-

இவர் சமயம் சமயக்காழ்ப்பில்லாத அனைத்துச் சமயங்களையும் தழுவிய சைவமாகும் என்பதை அவர் நூல்கள் அறிவிக்கின்றன. ஆயினும் திருமுருகாற்றுப்படையிலிருந்து அவர் முருகனிடத்து உருகிய மனமுடையார் என்பது மட்டும் துணியப்பெறும். நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி 'கபி... பரணர் நக்கீரர் முதனாற்பத்தொன்பது பல் புலவோர்... அ... சேவடிகே பொருளமைத்து இன்பக் கவி பல பாடும் ... களே என்கின்றது. இதனாலும் சைவமெனத் துணிய...

இவர், பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்து... மாறனை நோக்கி,

---

1. ந.மு.வே.,.நக்கீரர் பக் 6, 7.
2. புலவர் புராணம் நக்கீரர் 1, 2.

[1]"ஏற்றுவலனுயரிய எரிமருளவிர் சடை
மாற்றருங்கணிச்சி மணிமிடற்றேனும்
அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடியோனும்
விண்ணுயர் புட்கொடி விறல்வெய்யோனும்
பிணிமுக வூர்தி ஒண்செய்யோனும் என
ஞாலங்காக்கும் முன்ப"

எனப் புகழ்கின்றார். மேலும் சீற்றத்தில் சிவனையும், வலியில் வாலியோனாகிய பலராமனையும், புகழில் மாயோனையும், முன்னியது முடித்தலின் முருகனையும் ஒத்திருக்கின்றாய் எனப் பாராட்டுகின்றார். இவற்றால் இவர் காழ்ப்பற்ற கருத்தினர் என்பது பெறப்படும். அன்றியும் இவர் சிவபூசை செய்ததாக வரலாறும் உண்டு. ஆகவே இவர் பிறசமய வெறுப்பற்ற உண்மைச் சைவர் என்பது துணியப்பெறும்.

வாழ்க்கை நிலை:-

இவர் புலவர் பேரவைத் தலைவராக விளங்கினர் என்பதில் ஐயமின்று. இவ்வுண்மையை இறையனரகப்பொருளுரையும், புராண வரலாறுகளும் தெரிவிக்கும்.

நக்கீரன் என்றவுடனே செருக்குடைப் புலவர், பிற புலவரை மதிக்கும் பண்பில்லாதவர் என்ற கருத்து நிலவுகிறது. ஆனல் செந்தமிழ்ச் சிறப்பும் வரம்பும் அழிதலாகாது ; ஆழ்ந்த புலமையில்லாதார் புலவரெனப் பெயர் பூண்டு அவைகளிற் போந்து தமிழின் தனித் தன்மையைக்—கன்னிமையைக் கெடுத்தலாகாது என்ற நோன்பு பூண்டவர். அதனல் எதனை ... நன்கு ஆராய்ந்து ஒப்பும் உள்ளத்தினர். ஆதலால் இவரை ... தாக உணர்ந்த உலகம் 'இங்ஙனம் கருதுவதாயிற்று. ... புலவர் பெருமக்களிடத்துப் பெருமதிப்பு வைத்திருந்தவர் ... த

"உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன்" (அகநா. 78)

...எப் பாராட்டுவதால் அறியலாம். அதிலும் எத் ... பாராட்டு. எங்கெல்லாம் உலகமுண்டோ

;ல்லாம் பரவுகின்ற புகழ்: சிலரால் மட்டுமன்று; பல
ட பலகாலும் பேசப்படுகின்ற புகழ். நல்ல புகழ் அதனை
ய கபிலன் என்று இவர் பாராட்டும் அருமை ஆழ்ந்
ய்ந்து சிந்தித்தற்குரியது.

தமிழகப் பகுத்த இமிழிசை முரசின்
வருநர்க்கு வரையாப் பெருநாளிருக்கை
தூங்கல் பாடிய ஓங்குபெரு நல்லிசைப்
பிடிமிதி வழுதுணைப் பெரும்பெயர்த் தழும்பன் என

(அகநா. 227)

ழுதுணைத்தழும்பன் என்னும் அரசனுடைய கொற்றமும் புக
ழம் தூங்கல் என்னும் புலவன் பாடியதால் ஓங்கின; பெருகின
ன்று புலவனைப் போற்றி, அவன் வாயிலாகப் புலவனைப்
போற்றுகின்ற சிறப்பும், கற்றோரிடம் அவருக்குள்ள பற்றும்,
ன்மதிப்பும் குறிக்கப்பெறுகின்றன.

இதுபோன்று மற்றொரு குறையும் இவர் மேற் கூறப்படுவ
துண்டு. அது கடவுளரிற் சிவனையும்—அரசருள் பாண்டியனை
யும் அன்றி வேறு எவரையும் புகழாதார் என்பது. இவர்
துரையாசிரியர் ஆதலால் சொக்கலிங்கப் பெருமானிடமும்,
பாண்டியனிடமும் சிறந்த அன்பு இருக்கலாம். ஆனால் பிற
தெய்வங்களிடம் அன்பிலாதார் என்ற குறை சிறிதும் பொருந்
தாது என்பதை அவர் வாய்ச்சொற்களே சான்று பகரும். திரு
முருகாற்றுப்படை முழுதுமே முருகன் வழிபாட்டு நூல்தானே!
நோய்க்கு மருந்துபோலச் சிறைப்பட்ட காலத்துச் சிறை வீடு
பெறப் பாடப்பெற்றது. அதனாலே அவர் பிறதெய்வம் வணங்
குபவரெனல் சாலுமா எனலாம். மாலைக்காலத்திலே செவ்
வானத்தில் கொக்குகள் பறந்து போகின்றன. அத்தோற்றம்
நக்கீரர் மனத்தில் நெடுவேள் மார்பின் ஆரமாகக் காட்சி வழங்
குயது. உண்மையான அன்பு இல்லையானால் காணுவவெல்
ம் அவையே போறல் என்ற இயல்பு உண்டாகுமா? அப்
பகுதியை மீட்டும் சுவைப்போம்.

"நெடுவேள் மார்பின் ஆரம்போலச்
செவ்வாய் வானந் தீண்டி மீனருந்தும
பைங்காற் கொக்கினம் நிரைபறை யுகப்ப"

என்பது அப்பகுதி, சொல்லிச் சொல்லிச் சுவையுங்கள். ம படத்திலே வானமும் கொக்கும் தோன்றும். மேலும் திரும பலராமன் முதலியோரும் பாராட்டப் பெறுகின்றனர். ஆ லால் இவரைப்பற்றி வழங்குங்குறைக்குச் சிறிதும் இடமின் யுணர்க.

அங்ஙனமே அரசர் பெருமக்களில், நெடுஞ்செழியன், மாறன், பழையன் மாறன், பசும்பூட் பாண்டியன் முதலிய பா டிய மன்னர்களையே யன்றிக் கரிகாற்சோழன் கிள்ளிவளவ செம்பியன் முதலான சோழ மன்னர்களையும், குட்டுவன் வான வரம்பன் முதலிய சேர மன்னர்களையும் வாழ்த்தியும் கூறியும் உள்ளார். மன்னர்களை மட்டும் அன்று பிடவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தன், வேண்மான் முதலிய வேளாளர்களும் பாராட் டப்பெற்றுள்ளனர் இங்ஙனம் மக்களை மக்களாக ஒப்ப மதிக் கும் உயர்குணம் படைத்தவரேயன்றி நக்கீரர் குறுகிய மனம் படைத்தவர் அல்லர் என்பதைத் துணியலாம்.

நக்கீரர் பிறருக்கு உரைக்க ஒழுகுபவரல்லர். தம் வாழ்க்கை யின் படிப்பிடிப்புக்களையே பாடலில் அமைத்து, வருங்காலத் தமிழகத்துக்கு வாழக்கற்றுக் கொடுப்பவர். ஆதலால் பின்வரும் அவர் வாயுரைகொண்டு அவர் வாழ்க்கைமுறையையறிவோம்.

அவனி முழுதாளும் அரசனுகட்டும்; அடவியில் திரிந்து அல்லும் பகலும் உணவுக்காக வேட்டையாடி வாழும் வேடனு கட்டும்; உண்பது நாழியரிசியும் உடுப்பவை இரண்டாடை களுந்தாமே! மற்றவைகளில்தான் என்ன வேறுபாடிருக்கிறது. காண்டல் கேட்டல் உற்றல் உயிர்த்தல் எல்லாம் இருசாரார்க் கும் ஒன்றுகத்தானே உள்ளன. ஆதலால் பணம் படைத்ததன் பயன் பலருக்கும் கொடுத்துத் தானும் நுகர்தலே. அங்ஙனம் அன்றித் தேனீப்போலச் சேர்த்து வைப்போம் எனிலோ நம்மையறியாமலே நம்மைவிட்டு நழுவுவன பல செல்வங் என்கின்றுர். இவர் அரசவைத் தலைவராய் அறிஞர் போ வாழ்கின்றவர், வாய்வேதாந்தியாக இருக்கமாட்டார். அர பால் பெறும் பரிசில்களைப் பலருக்கும் அருத்தித் தாமும் உண் இன்புற்றிருப்பாரன்றே! ஆதலால் இவர் வாழ்க்கை ஏற்று

ஈந்து, கொண்டு-கொடுத்து வாழ்ந்த பெருமிதமுடையது எனலாம்.)

(மேலும், பணந்தேடப்போன கணவன் வாராமையால் மனையிடத்து மனைவியொருத்திக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிருள். அவளுடைய தோழி அவளைப் பார்த்துக் கவலைப் படாதே எனத் தேற்றுகிருள். வற்புறுத்துகிருள்.

'உயிர்கலந்தொன்றிய தொன்றுபடு நட்பின்
செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர் போல

தையல்! 'நின்வயின் பிரியலம் யாம்' எனக்கூறி நாம் அழத் துறந்தனர் என்று அவள் கூறும் இழிவுரை தலைவியின் மனத்திற் கறுக்கென்று தைத்தது என் கணவனைக் குறை சொல்ல இவள் யார்? என் கணவன் இப்பிழையுடையவரா என்று எண்ணுகிருள். அவள் வாயடைத்துக் கிடக்கவாவது பொருள் வயிற் பிரிந்த என் காதலர் விழுநிதி விரைவினின் எய்துவராகி என்கிருள் எனக் கூறும் நமது நக்கீரர் புகார்ப் பட்டினத்தை யொத்து, எல்லா வளமுங் கெழுமிய நம் வீட்டிலே இருந்து விருந்து புறந்தருதற்காகப் பெருஞ் செல்வம் பயன்படுவதாக என்று கூறுகின்ருர். இவை நக்கீரருடைய வாய்ப்பேச்சு மட்டுமன்று: அவர் வாழ்க்கையின் படப்பிடிப்பே எனலாம்.)

மற்ருேர் இடத்திலே மருங்கூர்ப் பட்டினத்தியல்பைக் கூறவந்த நக்கீரர் 'பெண்கள் விருந்தயர்கின்றனர். அதனுல் புறங்கடையில் சோற்றுப் பருக்கை நிரம்பச் சிந்திச்சிதறிக் கிடக்கின்றன. அங்காடியிலே இருல் மீனைக் கவர்ந்த காக்கைகள் அச்சோற்றினை வயிருர உண்டு, தோணிகளிலுள்ள பாய்மரக் கூம்புகளில் தங்குகின்றன என்கிருர், எச்சிற் கையாலும் காக்கை ஓட்டாத ஈயாலோபிகள் அல்லர் அங்கிருக்கின்ற பெண்கள். விருந்திடும்போது சிந்திய சோறு பல காக்கைகளுக்கு உணவாகின்றன அத்துணைத் தாராள மனம் படைத்தவர்கள் அங்குள்ள தாக்கணங்கனையார்கள் என்கிருர். இது பெண்கள் ...ப்தியாயினும் இவர் மனத்தின் வளந்தானே. இவற்றையெல் ...ம் அடியாகக் கொண்டு இவர் வாழ்க்கை நிலை யாரையும் ...ர்வு தாழ்வு கருதாது, பொதுமையாலும் சிறப்பு வகை

யானும் நோக்கிச் சிந்தை மகிழச் செய்யும் செவ்விய வாழ்க்கை, ஈத்துவக்கும் இன்ப வாழ்க்கை இரக்கமிக்க வாழ்க்கை, பிறர் போற்ற வாழும் வாழ்க்கை என்பன அறியப்பெறும் அன்றோ!

புலமைத் திறன் :-

திறமான புலமைக்கிலக்கணம் உண்மையென்று துணிந்த வற்றை எவர் முன்னும் அஞ்சாதுரைக்கும் ஆற்றலும், அவர் மறுப்பினும் ஒறுப்பினும் தந்நிலையிற் றளராமையுமாகிய உறுதி யுடைமையுமே. இத்தகைய புலமை இவர் பால் மிக்கிருந்தது.

இவர் மலைக்குற மகளைக் காதலிக்கும் தலைவனைத் திருத்தும் தோழனாகிறார். அங்கே தன் துணிவிற்கும் அரசனதுயர் பிற்கும் இழுக்குவாராவண்ணம், அவனைத் திருத்துவதன் வாயிலாக உலகிற்கு உண்மை நீதியை யுணர்த்தவேண்டும் என்று கருதியவர்.

"... ... ...காமம் யாவதும்
நன்றென உணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும்பேதைமைத்து"

என்கின்றார். நீ குறமகளை விரும்பலாகாது. உன்னுடைய குலநலத்திற்கும் அறிவு நலத்திற்கும் ஏலாதது என்பதை யுணர்த்த, அவனை நேரே கூறாது அவனிடம் விளைந்த காமத்தின் இயல்பு கூறுவார்போல இடித்துரைத்துத் திருத்தியதாம். அங்ஙனமே, பொருளை வைத்து வாழக்கருதி யீயாத செல்வரை நோக்கிக் கூறும் புலமைத்திறமாகிய

"செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே'

(புற 189)

என்பதும் மிகத்துணிவுடன் கூடிய இடித்துரையாகும்.

மற்றொன்று, பழைமையை நிலைக்களனாக வைத்துப் ... மையைப் புகுத்துதலும் புலமைத் திறத்தின் சிறப்பி... பாகும். செந்தமிழ் இலக்கிய வுலகிலே கூத்... பாணரும் பொருநரும் விறலியும் அரசன் புகழைப்பாடித்...

பெற்றுவந்த பரிசில் சிறப்பினை, பெறாத, தம்மினத்தவர்க்கும் காட்டி, நீங்களும் வறுமையால் வாடவேண்டாம் செல்லுங்கள் புகழுங்கள் பரிசிலைப்பெறலாம் என்று வழிகூட்டி யனுப்பிவந்த வழக்கமே யிருந்தது. இவ்வியல்பையே வரம்பாகக் கொள்ள வேண்டும் என்று

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றி
பெற்றபெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயன்எதிரச் சொன்னபக்கமும

எனத் தொல்காப்பியமும் சொல்லியது. வறுமை காரணமாக பொய்மையாளரைப் பாடுவதும், நில்லாத செல்வத்தைப் பெறுவதும் வயிறு கழுவுவதும், வறுமையை யன்றாடம் போக்குவது மட்டுமா சமுதாயத்தின் இலக்காக முடியும். முடியாது! முடியாது மெய்ப்பொருளை நாடுவதும் நிலைத்த பேரின்பமாகிய பெறலரும் பரிசிலை பெறுவதுமே மனித வாழ்வின் இலட்சியமாக வேண்டும்; அதனை வற்புறுத்தும் ஆற்றுப்படைகள் இல்லையே என்று எண்ணினார். ஆற்றுப்படை மருங்கில் அன்பன் ஒருவனை அறுமுகக் கடவுளிடத்து ஆற்றுப்படுத்துகிறார்; விறலியரையும் கூத்தரையும்போல வயிற்றுத் தீத்தணிய வழி தேடாதீர்கள் பிறவிப்பிணி போக்கிப் பேரின்பத்தை வேண்டுங்கள் என்கிறார் இது ஒரு வகையான புதுமையைப் புகுத்திய புலமைத்திறம்.

கூத்தராற்றுப்படை, பாணராற்றுப்படை என்றால் கூத்தரை ஆற்றுப்படுத்தியது, பாணரை ஆற்றுப்படுத்தியது என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவே இத்தொகைச்சொல் விரியவேண்டுமா? முருகனிடத்தில் ஆற்றுப்படுத்தியது என ஏழனுருபுவிரியட்டுமே, என்ற இலக்கண விதிப் புதுமையையும் விளைவிக்கின்றார். வாங்குபவன் பெயரையடுத்துத்தான் ஆற்றுப்படையமைய வேண்டுமா. கொடுப்பவன் பெயரையடுத்தும் அமையட்டுமே என்று பெயர் வைத்தாரோ என்னவோ? அப்படியே நெடுநல்வாடையிலும் ஓர் புதுமை. இதனை அத்தலைப்பில் பின்பு எண்ணுவோம். இங்ஙனம் உறுதியும், ஆய்வும், உரைக்கும் ஆற்றலும் அஞ்சாமையும் ஆகிய புலமைத்திறம் மிக்கவர் நக்கீரர்.

குணமும்—பெருமையும் :-

குணம் என்பது பூவிற்கு மணம்போலவும் சர்க்கரைக்குத் தித்திப்புபோலவும் பொருளொடு இயைந்த தன்மை; பெருமை என்பது செயற்கரிய பல செய்தும் தருக்கின்றியிருத்தலின் பிறரும் போற்றும் பெற்றிமை. இவ்விரு குணங்களும் தம் முளியைபுடையன ஒன்ருல் ஒன்று உயர்வன ஆகவே, நக்கீரரிடம் இவை எங்ஙனம் அமைந்துள்ளன. எங்கெங்கு விளங்குகின்றன என்பதற்கு ஓரிரண்டு எடுத்துக்காட்டுக் காண்போம்.

சோழநாட்டுப் பிடவூர் கிழான் மகன் பெருஞ்சாத்தனைப் பாராட்டுகிருர் நக்கீரர். பெருஞ்சாத்தன் தன் மனைவிக்கு இவரை யறிமுகம் செய்விக்க, "இவனை என்போற் போற்று என்ருேனே அதற்கண்டு அவன் மறவலேனே" என்கின்ருர். நானில்லாக் காலத்து இவன்வரினும் இவனை என்னைப்போல விருந்தயர்க என்று அவன் சொன்ன சொல்லைக் கூறுவதால் இவர் அவனல் எத்துணை நம்பிக்கையோடும் உயர்வோடும் கருதப்பெற்ருர் என்று அறிகிருேம். இது அவருடைய குண நலத்தை யறிதற்குச் சிறந்த சான்ருகும். அன்றியும் இதனல் நன்றியுணர்வும் அறியப்பெறும்.

காலம் :-

இவர் நிறைமொழி மாந்தர் இனத்தைச் சேர்ந்தவர். நிறைமொழிக்குப் பரிமேலழகர் தரும் விளக்கம் அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களை அப்பொழுதே பயக்தும் மொழி என்பது. அதனையுடைய மாந்தர், புலனடக்கமும், மன ஒருமைப்பாடும் பெற்றுத் திண்ணிய எண்ணமுடையார். அத்தகைய மன மாண்பு படைத்த இவரது பெருமையை விளக்கும் வரலாறு ஒன்றுண்டு. தொல்காப்பியப் பொருளதிகாரத்து 490ம் சூத்திரவுரையில் பேராசிரியர்.

முரணில் பொதியில் முதற்புத்தேன் வாழி
பரணர் கபிலரும் வாழி—அரணிலா
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோடன்
ஆனந்தம் சேர்க சுவாகா.

என்ற பாடலையும்,

ஆரியம் நன்று தமிழ்தீ தென் றுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்திய ராணையால்
செந்தமிழே தீர்க்க சுவாகா. பெருந்தொகை:

என்ற பாடலையும் மேற்கோள் காட்டி "இவை தெற்கண் வாயில் திறவாத பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரர், ஒருவன் வாழவும் சாவவும் பாடிய மந்திரம் அங்கதப்பாட்டாயின" என்று கூறியுள்ளார்.

இந்நிகழ்ச்சியை யறிவிக்கும் மரபுவழிச் செய்தியொன்று கேட்கப்படுகிறது. 'மதுரையில் பட்டி மண்டபம் ஒன்றிருந்தது. ஒருக்கால் அதன் தெற்குக் கதவு திறக்க இயலாதது ஆயிற்று. அப்போது நக்கீரர் தமிழ்ப்பாட்டுப் பாடித் திறந்தார். அது கண்ட மன்றத்தார் வியந்து நக்கீரரைப் பாராட்டினர். நக்கீரரை நோக்கித் தமிழ் இத்துணைச் சிறப்புடையதேல் ஒருவனைச் சாவவும் வாழவும் பாடியருளவேண்டும் என வேண்டிக் கொண்டனர். அப்போது அம்மண்டபத்திற்குத் தலைவனாக விளங்கிய கோடன் என்பான் அத்தகைய ஆற்றல் ஆரியத்திற்குண்டேயன்றித் தமிழுக்கேது என்று இகழ்ந்தான். நக்கீரர் தமிழ்மொழியைப் பழித்த கயவனை ஒழித்து அறிவுறுத்த வேண்டும் என எண்ணி முற்குறித்த பாடல்களைப் பாடினார். அக்கணமே இறந்துபட்டான் என்பது அது. இதனால் இவர் பெருமை நன்கு விளங்கும். இச்செய்தி தமிழ் நாவலர் சரிதையிற் காணப் பெறுவது. இந்நூலை முதற்கண் பதிப்பித்த தில்லை நடேசச்செட்டியார் அவர்கள் தெற்கண் வாயில் திறவாப் பட்டி மண்டபத்தார் தமிழ்ச் சங்கத்தார் என்றும், வடமொழிச் சங்கத் தலைவனாக இருந்த குயக்கோடன் தமிழை இகழ்ந்தான் என்றும் குறிப்பர். இவற்றை யாராயும்போது, பேராசிரியர் தந்த குறிப்பையும், அடியாகக் கொண்டு இவ்வரலாறு தலையுங்காலும் உடலும் கற்பிக்கப்பெற்று வளர்ந்தது என்று துணியப்பெறுமாயினும் அங்கதப் பாட்டு என்பதற்கும் ஆக்கவும் அழிக்கவும் வல்லது என்பதற்கும், நக்கீரர் நிறைமொழி மாந்தரே என்பதற்கும் இழுக்கின்று. இதனால் இவர் பெருமை நீண்டு விளங்கும்.

மேலும் பேராசிரியர் 'களவியற் பொருள்கண்ட நக்கீரர்' எனவும், 'புலவுத் துறந்த நோன்புடையார் ஆகலின் பொய்

கூறுர்' எனவும் போற்றுகின்றுர். இதனுலும் இவர் புலாலைத் தீண்டுந் தொழிலாகிய சங்கறுக்குந் தொழிலுடையவரல்லர் என்பதும் நன்குணரப் பெறும்.

ஒருவர் உள்ளத்தில் உள்ளதை உரையானறியலாம் ஆகலான், இவர் வாய்ச் சொல்லாகிய பாடல்களைக் கொண்டு புலமையைப் போற்றும் புலமை, கேள்கேடூன்றவும் கிளைஞர் ஆரவும், கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும் செய்வினை முற்றிச் செல்வம் ஈட்டி | வாழுந்திறம், பேரவாவைக் கடிந்து செல்வத்துப் பயனே ஈதல் ஆதலால் ஈட்டுதலைக் காட்டிலும் ஈதலே மேல் என்று உணர்த்தும் ஆற்றல், உயிர் கலந் தொன்றிய தொன்றுபடு நட்பில் செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தொழுகும் சீரிய நட்பு, முடியுடை மன்னரையும் குடி யுடை வேளிரையும் ஒப்ப நோக்கும் பொதுநோக்கு, நல்லன காணின் போற்றுதல் அல்லன காணின் யாராயிருப்பினும் கடிந் துரைத்தல் முதலான பெருங் குணங்களை அறியலாம். ஒவ் வொன்றையும் எடுத்தியம்பின் மிக விரியும்.

கவிஞன் வாழ்வு உணர்வியல் வாழ்வு; உளவியல் வாழ்வு; உழைப்பியல் வாழ்வன்று. அதனுல் அவனுடைய புற வாழ்க்கையனைத்தும் பிறர் கையையே எதிர்நோக்குவதா யிருந்தது. அதனுல் அவன் வாழ்விலே பல மன்னர்கள் சிற்றரசர்கள் வேளிர்கள் வீரர்கள் அனைவரும் கலந்திருப்பர். இவன் கூறும் நீதியால்—உரையால்—புகழால் அவர்கள் உள்ளம் விரிந்து பரந்து பண்பட்டுப் பழுத்திருக்கும். அவர் களால் புலவன் வாழ்வு வறுமைப் புயல் வீசாத அமைதியான வாழ்வாக அமைந்திருக்கும். இது இயற்கை. அதுபோலவே நம் புலவரேறு நக்கீரருடைய வாழ்விலும் பலர் கலந்துள்ளார் கள். அவர்களைப்பற்றி முறையே இவர் வாய்ச்சொல் அளவில் ஆய்வோம். அதற்குத் துணையாகப் பிறர் வாய்மொழியையும் தேவைக்குத்தகக் காண்போம்.

இவரால் பல பாடல்களாற் பாராட்டப்பெற்றுேன் தலை யாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், நெடுநல் வாடையென்னும் தனிப் பாடலைப் பெற்றவன் எனின், இவனே அவராற் பெரிதும் விரும்பப் பெறுபவன் என்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ !

1. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் :

இவன் சேரல், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்ற எழுவரையும் தலையாலங்கானம்வரை துரத்திச் சென்று கொன்றான் என்கிறார் நக்கீர். இவனே இவரால் பசும்பூட் [1]பாண்டியன், [2]பசும்பூண் வழுதி, [3]செழியன், [4]வழுதி' என்ற பெயர்களால் குறிப்பிடப்படுகிறான் என்று ரா. ராகவய்யங்கார் அவர்கள் கூறுவார்கள்.[5]

நக்கீரர் இவனைப் பற்றித் தெரிவிக்கும் வரலாற்றுக் குறிப்புக்கள் :

'கொய் சுவர் புரவிக் கொடித்தேர்ச் செழியன்' (அக. 36, 57) "கல்லாயானைக் கடுந்தேர்ச் செழியன்" (நற், 340) "நாடு பல தந்த பசும்பூண் பாண்டியன்'' (அக. 253) சிறுவெண் காக்கை நாளிரை பெறூஉம் பசும்பூண் வழுதி" (நற் 358), "அரண் பல கடந்த முரண்கொள் தானை வாடாவேம்பின் வழுதி'' (அகநா. 93) இவை. இவற்றுள் நெடுநல்வாடை மட்டும் பாட்டுடைத் தலைவனையே கிளவித் தலைவனாகக் கொண்டு யாக்கப்பெற்றமையான் அவனியற் பெயரைச் சுட்டிக் கூறப்பெறாத நிலை எய்திற்று. ஆதலால் 'வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகமொடு' என்று குறிப்பான் பாண்டியனைத் தலை உணர்த்தியது. ஆகவே நக்கீரரால் பசும்பூட் பாண்டியன் முதலிய பெயர்களாற் குறிக்கப்பெறுகின்றவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தானே என்பது ஊன்றியாராய்தற்கு உரியது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

தலையாலங்கானத்தில் போர் வென்றான் எனப்படுதலால் அப்போர் வேறு சில இடங்களிலும் நிகழ்ந்திருக்க வேண்டும்; அங்கு அவன் பகைவரைத் துரத்தியிருக்க வேண்டும். மீண்டும் அவர்கள் தலைதூக்க அவர்களைத் தலையாலங் காட்டில் கொன்றிருக்க வேண்டும் என்பதை ஊகிக்கலாம் அல்லவா? இதற்குத் துணையாக,

1 அக நா. 253; 2 நற்றிணை 358; 3 அக நா. 36 57. நற்றிணை 340.
4 அக நா 93, 5 அகநானூற்றுக் கம்பர் விலாசப் பதிப்பு முகவுரை பக். 49.

அமையணி யானை மறப் போர்ச் செழியன்
பொய்யா விழவின் கூடற் பறந்தலை
உடனியைந் தெழுந்த இருபெரு வேந்தர்
கடல்மருள் பெரும்படை கலங்கத் தாக்கி
இரங்கிசை முரசம் ஒழியப் பரந்தவர்
ஓடு புறங்கண்ட ஞான்றை
ஆடுகொள் வியன்களத் தார்ப்பினும் பெரிதே

என்ற பரணர் பாடலை நோக்குவோம். அதில் இருபெரு வேந்தர் எனப்பட்டார் சேரலும், செம்பியனும் ஆவார். அவர்களோடு,

சினங்கெழுதிதியன், போர்வல் யானைப் பொலம்பூணெழினி,
நாரரி நறவின் எருமை யூரன்
தேங்கமழகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் பொருநன்

என்ற ஐவருடன் இயைந்தனர் என்பதும், எதிர்த்த இடம் கூடற் பறந்தலையென்பதும், கூடல் விழவறா அணிநகர் என்பதும், செழியன் அவர்களை முரசத்தைப் போட்டு ஓடும்படிச் செய்து அவர்களைப் புறங்கண்டான் என்பதுமாய முதற்போர் நிகழ்ச்சியைப் பரணர் அறிவிக்கின்றார்.

முசிறி சுள்ளியம் பேரியாற்றங் கரையில் உள்ளதோரூர். (அகம் 149) இப்போரிலே சேரன் படிமம் ஒன்றைக் கைப்பற்றினன் என்பதும் தெரிகிறது. அப்போரிலே பகை வீரர்களைப் புண்படுத்திக் கொணர்ந்த யானைப் படைகளையும் வென்றான். (அகநா 57-வரி 15–17) என்றும் பின்பு தலையாலங்கானத்தில் அனைவரும் ஒருங்குசேர்ந்து எதிர்க்க அவர்களை இனித் தலையெடாத வண்ணம் கொன்று களம் வேட்டான் என்றும், (அகநா 36 வரி 14–22) நக்கீரர் கூறுவர்

இவன்காலத்தில் கொங்கர்களுடைய தலையெடுப்பும் இன்னும் மிகுதியாக இருந்தது. அவர்கள் தாமே நேரிற் சென்று அடக்கும் ஏற்றமும் தகுதியும் உடையரன்மையின் அதிகன் என்னும் தன் படைத்தலைவன் ஒருவனை ஏவி வென்றான் என்பதை

வாடாப் பூவின் கொங்கரோட்டி
நாடு பல தந்த பசும்பூண் பாண்டியன்
பொன்மலி நெடுநகர்க் கூடலாடிய
இன்னிசை யார்ப்பு'' [அக நா. 253

ன்னும் பகுதி நன்கு விளக்கும். மீண்டும் ஓடிய கொங்கர் ள் மற்றொரு காலத்து, வாகையென்னும் ஊரிலுள்ள பறந் லையில் கூடி எதிர்க்க, அங்கே இவன் வினைவலனாகிய அதி ன் கொங்கர்களால் கொல்லப்பட்டான் என்பதை

வாகைப் பறந்தலை பசும்பூண் பாண்டியன்
வினைவலதிகன் களிறொடு பட்டஞான்றை
ஒளிறுவாட் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே
[குறுந் 393.

என்னும் நக்கீரர் வாய்ச்சொல் நன்கு விளக்குகிறது.

மற்றும் தலைவி கூற்றாக, என் அழகு, செழியனுடைய மருங்கூரை ஒத்தது. மருங்கூரோ பஞ்சுபோன்ற தலையை புடைய இருல் மீனின் முடங்கலைச் சிறுவெண்காக்கை காலை புணவாகப்பெறும் ஊர் எனக் கூறுகின்றார். இதனால் செழிய னுக்கு மருங்கூர் உரியதென்பதும் அதன் வளமும் அறிவிக்கப் பெறுகின்றன.

இந்த மேற்கோளைத் துணைக்கொண்டே சிலர் "இவன் கொங்கர் தலைவனான அதிகனை வென்று, வெற்பகத்துத் தன் ஒளிறுகளைப் பரப்பினான் எனக் கூறுவர். அவர்கள் காட்டும் 62, 253 அகப்பாடல்கட்கு அக்கருத்தின்மையை நன்கு ஓர்க.

மேலும் நெடுநல் வாடையால் செழியனது வாழ்வியல் வளத்தையும், அவன் காதலியையும் கருதாது கருமமே கண் ணாகக் கொண்டவன் என்பதையும் உளநிறையப் புகழ்கின்றார். ஆகவே நக்கீரருக்குத் தலையாலங்காளத்துச் செருவென்ற நெடுஞ்செழியனிடம் தனித்ததோர் பற்று இருந்திருக்க வேண்டும். அவர் அவனைப்பற்றித் தந்த பாடல்களையடியாகக் கொண்டு, பிறபுலவர்கள் கூறுவனவற்றையும் துணையாகக் கொண்டு அவனுடைய வாழ்க்கை வரலாற்றையே ஓரளவு சித்தரிக்கலாம் போலிருக்கிறது.

சங்க இலக்கியங்களில் சேரமான் குட்டுவன்கோதை, சேரமான் கோக்கோதை மார்பன், சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை என மூவர் கோதைப் பெயருடையார் குறிக்கப்பெறுகின்றனர். அவருள் நம் நக்கீரராற் பாராட்டப் பெற்றவன் சேரமான் கோக்கோதை மார்பனுகலாம்.

இவர் கோதை மார்பன் (அக 346) குட்டுவன் (அக 290) கோதை (அக 346) வானவரம்பன் (அக 389) என்றெல்லாம் வழங்குகிருர். இவையனைத்தும் சேரமான் கோக்கோதை மார்பனையே உணர்த்துவனவாகலாம். சிலர் குட்டுவன் என்பது மட்டும் குட்டுவன் கோதையைக் குறிக்கும் என்பர்.

குட்டுவன் என்பது குட்ட நாட்டுத்தலைவன் என்னும் பொருளது. குட்டநாடு மலைநாட்டகத்ததோரூர். குட்டுவனுக்குத் தொண்டி நகரம் உரியது என்பதை

வெண்கோட்டியானை விறற்போர்க்குட்டுவன்
தெண்டிரைப் பரப்பிற் றெண்டிமுன்றுறை

[அக 290

என்ற பகுதியுணர்த்துகிறது. இதனையும்

''கோதை மார்பிற் கோதையானும்
கோதையைப் புணர்ந்தோர் கோதையானும்
மார்கழி மலர்ந்த நெய்தலானும்
கள் நாறும்மே கானலந் தொண்டி
அஃதெம்மூரே அவனெம் மிறைவன்''

என்ற பொய்கையார் பாடலையும் இணைத்துஎண்ணும்போது

'குட்டுவன் தொண்டி' 'கோதை மார்பிற்கோதை .....தொண்டி'

என்ற பகுதிகள் இருவரும் ஒருவரே என்று எண்ணச் செய்கின்றன. அல்லாமலும், நக்கீரரே, கோதை மார்பன் உவகையிற் பெரிதே (அக 346) என்கிருர். இவற்றை இணைத்து எண்ணின் நக்கீரர் கூறும் குட்டுவன், கோதை, கோதை மார்பன் என்னும் மூன்று பெயர்களும் சேரமான் கோக்கோதை மார்பனையே உணர்த்துவன எனத் துணியலாம். ஆகவே குட்டுவன் கோதை இவரின் வேருவன். 'இவர்' வானவரம்பன்' என்பது யாரை என்பது உணரக் கூடியதாக இல்லை

3. பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன் மாறன் :

புறநானூற்றில் இவனை நக்கீரனர் பாடிய பாட்டு (56வது) ஒன்று உள்ளது. இவன் இலவந்திகையை யடுத்துள்ள பள்ளியொன்றிலே போர் நிகழ அதில் துஞ்சியவனுதல் வேண்டும். அதனுல் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன் மாறன் எனப்படுகிருன். இலவந்திகை என்பது இயந்திர வாவிக்கும், இவ்வாவியைச் சூழ்ந்த அரசனும் அவன் உரிமையும் ஆடுஞ்சோலேக்கும் பெயராக வழங்கி வந்தது. பெருங் கதையிலே, (பெருங். 40 : 311-2) நிறைக்குறின் நிறைந்து பெயர்க்குறின் யெகும், பொறிப்படையமைந்த பொங்கு இலவந் திகை" என வரும் பகுதி இதன் அமைப்பை நன்கு விளக்கு கிறது மணிமேகலேயிலும் பன்மலரடுக்கிய நன்மரப்பந்தர், இலவந்திகையின் எயில் என வருகிறது. ஆகவே இவன் போகந் துய்க்கும் பொழிலே இறக்கும் இடமாயினமையின் அதனேயே சிறப்படையாகக்கொண்டு வழங்கப்பட்டான் என்பதுணரப் பெறும். இவனேப்பற்றி இவர் பாடலில் குறிப்பின்றேனும், மருதனிளநாகனர் பாட்டில் "பூந்தார் மாற" என்ற விளிக்குறிப் புண்மையானும் அதனையடுத்து நக்கீரனர் பாட்டுக் கோக்கப் பெற்றிருப்பதாலும் இவர் பாடலும் நன்மாறனேப் பாடிய பாட் டாகக் கொள்ளலாம்.

நக்கீரனர் நன்மாறனை நால்வர் கடவுளரோடு ஒப்பிடு கின்ருர். யாரானும் மாற்றருஞ்சீற்றத்தான் மாற்றருங்கணிச்சி மணிமிடற்ருேனேயும், வலிமையான் அடல்வெங் நாஞ்சில் பனேக் கொடியோனுகிய பலராமனேயும், புகழால் இகழுநர்அடு நனுகிய திருமாலேயும், முன்னியது முடித்தலால் முருகனேயும் நன்மாறன் ஒத்துள்ளான் எனப் பாராட்டுகின்ருர். இங்ஙனம் பாராட்டு வதின் நோக்கம் அவனுக்கரியதொன்றும் இல்லே. ஆகவே அவன் இரவலர்க்கு முடி முதலிய அருங்கலங்களேயுங்கூட மனம் சுருங்காது அள்ளி அள்ளிக் கொடுப்பவன் என்பதை யுணர்த்துவதே ஆகும்.

செல்வத்துப் பயன் ஈதலும் துய்த்தலுமாகிய இரண்டே. அவற்றுள் ஈதலே மூன்னுணர்த்தி இன்பநுகர்வும் தோன்றத்

துய்த்தலைப் பின்உணர்த்துகின்றார். இவனுக்கு ஒளி பொருந்திய வயிரவளையணிந்த உரிமை மகளிர் பலருளர். அவர்கள் பொன்வள்ளத்திலே வார்த்து வார்த்துக் கொடுக்கக் கள்ளை வாங்கி வாங்கியுண்டு, தாழ்ந்தார்க்கும் சார்ந்தார்க்கும் தண் மதிபோலவும், நேரார்க்கும் பிரிந்தார்க்கும் வெய்யோன்போலவும் உலகுள்ளளவும் நெடிது விளங்குக என வாழ்த்துகின்றார்.

இவனது இளமைக் காலத்தில், வடமவண்ணக்கன் பேரி சாத்தனாரும், ஆவூர்மூலங்கிழாரும் தனித்தனியே பரிசில் வேண்டி வர அவர்கட்குப் பரிசில் தர நீட்டித்தான். அவர்கள் வெகுண்டு நின்றோரன்னர் நின்புதல்வர் எனவும் நோயிலராக நின்புதல்வர் எனவும் பாடினர். ஆதலால் மன்னன் மனந் திருந்திப் புலவர்க்கு அடையாநெடுங்கதவுடையனாயினான். அப்போது வந்த புலவர் நக்கீரர். அவன் இவர் தகுதியறிந்து வழங்கியிருக்கிறான் ஆதலால் உளமார ஞாயிறும் மதியும் போல உலகுள்ளவரை வாழ்க என வாழ்த்தினர் ஆதல் வேண்டும்.

பழையன்மாறன் :

பழையன்மாறன் இருதிறத்தான் வழங்கப்படும் இரு பழையர் சங்க இலக்கியத்துட் காணப்படுகின்றனர். இவருள் நக்கீரர் கூறும் பழையன்மாறன் கூடலருகிலே நடந்தபோரிலே கிள்ளிவளவனோடு பொருதான் என்றும், அவனாற் கொல்லப் பெற்றான் என்றும், பகைமன்னர் நாடு பலவற்றைக் கவரக் கோதை மார்பன் என்னும் சேரன் மகிழ்ந்தான் என்றும் நாட்டார் உரையால் அறியப்பெறுகின்றது இவ்வரலாற்றை உணர்த்தும் அகநானூற்றுப் பகுதி.

> "இழையணி யானைப் பழையன் மாறன்
> மாடமலி மறுகிற் கூடலாங்கண்
> வெள்ளத்தானையொடு வேறு புலத்திறுத்த
> கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்க்
> கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி
> ஏதின்மன்னர் ஊர்கொள
> கோதைமார்பன் உவகையின்"

என்பது.

மேலும், மோகூர்க் குறுமன்னனாகிய பழையன் ஒருவன் இருந்தான் என்று மதுரைக்காஞ்சியான் அறியப்படும். சோழ நாட்டிலே போர் என்னும் ஊர்த் தலைவனாகப் பழையன் ஒருவன் இருந்தான் என்று (அக நா 186) கூறும். இவருள் மோகூர்ப்பழையனே பாண்டிய மன்னற்குப் படைத் தலைவனாகிய குறுநில மன்னன்.

கிள்ளிவளவன் :

கிள்ளிவளவனில் இருவருளர் ஒருவன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் மற்றவன் குளமுற்றத்துத் துஞ்சியவன். இவ்விருவருள் யார் பழையன் மாறனால் கொல்லப் பெற்றவன் என்று தெளிதல் இன்றியமையாதது. குராப் பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன் ஒருக்கால் சேரநாட்டுக் கருவூரை எறிந்தான் என்ற நிகழ்ச்சியைக் கோவூர் கிழார் "வஞ்சி முற்றம் வயக்களனாக, அஞ்சா மறவராட் போர் பழித்துக் கொண்டனை பெரும குடபுலத் ததரி" (புற. 373) எனக் கூறுவதால் அறிகிறோம். ஆகவே குராப்பள்ளித்துஞ்சிய இவனுக்கும் சேர மன்னனுக்கும் பகை இருந்தது என்பது துணியப்பெறும். இவன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று கூடலருகில் பொருதபோது, பாண்டிய மன்னனுடைய படைத்தலைவனாகிய பழையன் மாறன் வளவனை வென்று அவன் குதிரைகளையும், யானைகளையும் கவர அது கண்டு கோதை மகிழ்ந்தானாதல் வேண்டும். ஆகவே குராப் பள்ளித்துஞ்சியவனே பழையன்மாறனால் வெல்லப்பட்டவன் என்பது துணிவு.

கிள்ளிவளவன் :

இவன் கருவூர்கொண்டு குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவனாதல் வேண்டும். இவனைப் பழையன்மாறன் கூடலருகில் வென்று யானை குதிரைகளைக் கவர்ந்தான் என்பது முன் ஆராயப்பெற்றது.

கரிகாற் சோழன் :

இவனது வெற்றி கொடைத்திறன் முதலியவற்றை நக்கீரர் நேரே குறிப்பிடவில்லையாயினும், இவன் நாடும்

பழையன் மாறனும் பாண்டிய மன்னனே என்றும், அவனையும் சோழனையும் வென்று சேரன் மகிழ்ந்தான் என்றும் பதிற்றுப் பத்து... பகுதிக்கு உரை கண்டார் ரா. ரா. அவர்கள், தமிழ் வரலாறு பக், 51 வரிகள்,

ஊர்களும் வளமிக்கனவாக இருந்தன என்பதை "புதுப் பெண் (பாயசம்) அயினி காய்ச்ச அடுப்பிலே பாலே உலே நீராக ஏற்றுகிருள். தன்னேடொத்த இளமகளிரோடு பால் முற்றிய பசிய நெற்கதிரைக் கொய்துவந்து உரலில் இட்டு அவலிடிக்கிருள். அவலிடிக்கும் ஒலிக்கு அஞ்சிச் சூல்கொண்ட வெண்குருகு வாழைக்குலேயைவிட்டு மாமரத்திற்குப் பறந்து செல்லும் நகரம் இடையாறு. அது கரிகாலன் ஊர் என் கின்ருர். இதனுல் மக்கள் மணவாழ்வும் அமைதியான— இன்பகரமான சூழ்நிலேயும் உணர்த்தும் வாயிலாக அவன் ஆட்சிச் சிறப்பைக் குறிப்பிடுகின்ருர். (அக நா 141)

பொலம்பூட் கிள்ளி :

இவன் யார் என்பதைக் குறித்துணர வாய்ப்பில்லேயாயினும், கோசர் படையினே யழித்தவன், காவிரிப்பூம்பட்டினத்தைத் தலேநகராகக் கொண்டாண்ட சோழ மன்னன் என்ற அளவு நக்கீரர் வாயுரையால் அறியலாம். (அகநா 205)

செம்பியன் :

இவன் தலேயாலங்கானத்துச் செருவிலே நெடுஞ் செழியனுல் வெல்லப் பெற்றவன் என்பதை மட்டும் நக்கீரர் உடன் ஒருங்கினராக உரைக்கப்பெறும் எழுவருள் ஒருவனைக் குறிப்பதால் அறியலாம். (அகநா. 36) அங்ஙனமே சோழர் சிறப்புகு

"ஆரங்கண்ணியகுபோர்ச்சோழர்
அறங்கெழு நல்லவை உறந்தை"

எனவும் (அகநா 93)

"கடலந்தானேக் கைவண் சோழர்
கெடலரு நல்லிசை உறந்தையன்ன" (அகநா. 369)

எனவும் அவர்கள் அணியும் ஆத்திமாலேயையும், போர்த் திறத்தையும், கடல்போற் பரந்த சேனேயமைப்பையும், அவர்கள் நாளோலக்க நீதிமன்றச் சிறப்புக்களேயும், தலே நகரின் புகழ் முதலியவற்றையும் பொது வகையில் விளக்கு கின்ருர்.

தித்தன் :

தித்தன் என்ற பெயருடையார் மூவர் சங்க இலக்கியங்களிற் காணப்படுகின்றனர். அவர்கள், தித்தன், வீரைவேண்மான் வெளியன் தித்தன், தித்தன் வெளியன் என்பவர்கள். அவர்ளுள் வீரைவேண்மான் வெளியன் தித்தனை நற்றிணை 59ம் பாடல் அறிவிக்கிறது; அவன் வேளிர் குலத்தவன் வீரை என்னும் நகரினன் என்பன அவனைப்பற்றி அறியப்படும் குறிப்புக்கள். இப்பாடலையியற்றியவர் முது கூத்தனார் என்பவர்.

தித்தன் வெளியனைப்பற்றி அகநானூறு 152, 226 ஆகிய இருபாடல்கள் அறிவிக்கின்றன. இவனுடைய உறையூரில் நாளோலக்கப் பேரவையிலே முழக்கிய கிணையொலியைக் கேட்டுக் கட்டி என்பான் அஞ்சியோடிய ஆர்ப்பினையும், அவனுடைய சினங்கெழுதானைச் சிறப்பினையும் அறிவிக்கின்றன. இவன் வெளியன் தித்தனுடைய மகனாக இருக்கலாம் என்றும், ஆதலால் வேளிர்குலத்தவன் என்றும், உறந்தை ஒரு காலத்து இவன் வயப்பட்டிருந்தது என்றும் சிலர் கருதுவர். இவனைப் பாராட்டிய புலவர் பரணர்.

தித்தன் என்பவனைப்பற்றி அகநானூறு 6ம் பாடலும், 122ம் பாடலும், புறநானூறு 80ம் பாட்டில் 'போரருந் தித்தன் காண்க' என்ற பகுதியும், 352, 395ம் பாடல்களும் குறிக்கின்றன. இவனைக் குறித்துக் கூறிய புலவர்கள் பரணரும், சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளியைப் பாடிய சாத்தந்தையாரும், நக்கீரரும் ஆவர். இவனைப்பற்றிய வரலாறுகளாகப் புலவர்கள் தெரிவிப்பன :- இவன் மிக்க சிறப்பினையுடையவன்; யானைப் படையை யுடையவன்; அழியாப்புகழ் படைத்த உறந்தைக்குரியவன், ஐயை என்பாளுக்குத் தந்தை என்பனவாம்

தித்தனும் தித்தன் வெளியனும் உறந்தைக்குரியவராகக் குறிக்கப் பெறுதலானும், வெளியன் தித்தன் தித்தன் வெளியன் என வருதலான் இவரிருவரும் தந்தை மகன் முறையராக இருக்கலாம் என்றும் ஆகவே மூவரும் தந்தையும், மகனும், பேரனும் ஆவார்கள் எனவும் கருதுவார்கள் இரா. இராகவய்யங்கார் அவர்களும் அவர்களைப்பின்பற்றிய சிலரும்.

புறநானூற்றுரைகாரர், சாத்தந்தையார் பெருநற்கிள்ளியைப் பாடிய

இன்கடுங்கள்ளின் ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி,
ஒருகால் மார்பொதுங்கின்றே யொருகால்
வருதார் தாங்கிப் பின்ஒதுங்கின்றே
நல்கினும் நல்காஞயினும் வெல்போர்ப்
போரருந் தித்தன் காண்கதில் லம்ம
பசித்துப் பணைமுயலும் யானைபோல
இருதலை யொசிய வொற்றிக்
களம்புகு மல்லற் கடந்தடு நிலையே.

என்னும் பாட்டில், போரருந்தித்தன் என்பதற்கு இவன் தந்தையாகிய வெல்லும் போரினையுடைய பொருதற்கரிய தித்தன் என்று உரை எழுதி, என்றது தந்தையுடன் வெறுத்து போந்தான் அமருட் புகுந்து இப்போர் செய்தானை அவன் விரும்பின் உவக்கின்ருன்; விரும்பாவிடின் அஞ்சுகின்ருன் என்பதாம் என்று விளக்கந்தந்தனர் உரையாசிரியர். இதனல் தித்தன் என்பான் உறையூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட சோழமன்னன் என்பதும் அவன் மகனே சோழன் போரவைக் கோப் பெருநற்கிள்ளி என்பதும் தெளியப்பெறும்.

ஆனல், அறிஞர் பெருந்தகை இரா இராசவய்யங்கார் அவர்கள் தித்தனைச் சோழன் என்று பலர் கருதி எழுதினர் என்றும், அதற்குக் காரணம் உரைகாரர் எழுத்தும், உறந்தையைத் தித்தனுக்குரியதாகப் புலவர் பாடியதுமே' என்றும் கூறி, அங்ஙனம் சோழனுகக் கொள்ளுதல்கூடாது வேளிர் மரபினன் சிற்றரசன் என, நிறுவுவர். அதற்கு அவர்கள் காட்டும் ஏதுக்கள் :-

1 உரைகாரர் விளக்கத்திற்கு மூல நூலில் இடமின்மை.

2 வேறு இடங்களில் தித்தன் வேளிர் குலத்தவனுகவே குறிப்பிடப்படுதல்.

3 சோழர் மரபில் தித்தன் என்ற பெயரைக் காணகில்லாமை.

4 தித்தன் சோழனுயின் அவன் ஊகன் எனப்படு வானுக்கு கொடுத்த 'ஆரங்கண்ணி' முதலியவற்றை அவன் தந்தை எங்கும் ஏன் தேர்ந்தெடுக்கவில்லை? எனல்

5 தித்தனாட்சியிலுள்ளபோதே. மகன் கோப்பெருநற் கிள்ளி எனச் சிறப்புப் பெயரோடு வழங்கப்பெற்றது ஏன்? எனல்

6 நமது ஆசிரியர் நக்கீரர் தித்தன் உறந்தை என்றவர் சோழ ருறந்தை என்றும் கூறினரே காரணம் என்ன எனல்,

7 யாண்டும் உறந்தை சோழர்க்கே யுரியதென்றற்கு பல எடுத்துக்காட்டுக்கள்.

இந்த ஏழு காரணங்கள் காட்டிப் புறநானூற்று உரைகாரரையும் அவர் வழிவந்த ஆசிரியர்கள் பலரையும் மறுத்துத் தித்தனை வேளிர் என்பர். இதன்கண் நிகழும் ஐயங்கள் சிலவற்றையும் அமைதிகள் சிலவற்றையும் கண்டு தெளிவோம்.

ஆய்வு வரவரக் கண்டாராய்தலேயன்றி ஒரு முடிவின் கண் கருத்தூன்றி நின்று அதற்கான சான்றுகள் தேடுவதன்று. இவர்கள் முதல் வரியிலேயே 'தித்தனைச்சோழர் என்று கருது வார்கள் சிலர் அது பொருந்தாது' என்று தொடங்கினர்கள். ஆகவே இது முடிவு கொண்டு அதற்கு ஆதாரம் தேடுத லாகவே முடிதலின் அடைமொழியில்லாத போர்வல்ல தித்தனும், ஊரும் மரபும் பேரும் முறையே பூண்ட தித்தர் களும் ஒரு வழியினர். ஒருவர் என்ற கொள்கையை எண்ணச் செய்துவிட்டது. நெடுஞ்செழியன் இருவருளராகவே சங்கச் சான்றோர் ஒருவனை ஆரியப்படை கடந்த என்றும் ஒருவனைத் தலையானங்கானத்துச் செருவென்ற என்றும் அடைகொடுத்துப் பிரித்து ஓதினர். குட்டுவன் என்பார் இருவராதலைக் குட்டுவன் இரும்பொறை குட்டுவன் சேரல் எனச் சிறப்புப் பெயரைச் சார்த்தியும் ஓதினர். இன்னணம் பலஎடுத்துக்காட்டுக்கள் உள. ஆகவே சோழ மன்னனாகிய தித்தன் வேளிரில் வேறுபட்டான் என்பது கருதியே சங்கச் சான்றோர்கள் சிவனுரைத் திருச்

சிவனார் என்னுததுபோல அடையின்றிக்கூறி. வேளிர்கள் குடிமக்களும் சிற்றரசர்களும் ஆதலின் அவர்களில் வேளிர் குடியில் வரும் தித்தனை வீரைவேண்மான் வெளியன் தித்தன், தித்தன் வெளியன் என மரபு கூறியும் ஊர் குறித்தும், தந்தையின் பெயரொடு சார்த்தியும் கூறுவார்கள் ஆயினர். ஆதலின் இருவரையும் அல்லது மூவரையும் ஒரு குடியினர் என மயங்கல் வேண்டாதறெொன்று.

அன்றியும் புறநானூற்றுரைகாரர்காலம் நம்முடைய காலத்தைவிட நூலெழுந்த காலத்திற்கு மிக அண்மையது. அப்போது அவர்கள் எடுத்தாண்ட இலக்கியங்களும், வரலாற்றுச் சான்றுகளும் நமக்குக் கிடைக்காமல் இருக்கலாம். இன்று நமக்குக் கிடைப்பன சில அவர்கள் கண்ணிற்படாமலும் செவியிற் சேராமலும் இருக்கலாம். அவர், மூலத்தில் இல்லையேனும் செவிவழிக்கேட்ட வரலாற்றுண்மையை நினைத்துத் தந்தையான தித்தன் என எழுதினராயின் அது இழுக்காதற்கு ஏது என்னை ?

பெருநற்கிள்ளி போரவை வைத்திருந்தான். அதில் அடிக்கடி மற்போர் முதலியன நிகழ்த்தி வெற்றிகொண்டான் என்று ஐயா அவர்களே சொல்லுகிறார்கள். ஓரரசின் இளவரசன் தந்தையரசாளுங் காலத்திலேயே போரவையைத் தனியே அமைத்திருந்தான் என்பதும், அதில் அவன் தம்மோடு எல்லா வகையானும் ஒத்தார்மாட்டன்றி எல்லாரோடும் உடன் பழகினான் என்பதும் தந்தைக்குப் பிடியாத செயலாயிருக்கலாம். பிறந்த குடிக்கேற்ப ஐம்பெருஞ் சுற்றத்தோடும் எண்பேராயத்தோடும் பழகவேண்டிய இவன் பல்லாரோடு புறநகரிலும் புறங்காட்டிலும் பழகியது அரசற்குப் பிடிக்காமையால், இவனுடைய வீரத்தில் ஐயுற்று, அரசுரிமையில் இருந்து விலக்கியிருக்கலாம். அதனாலே அவன் காலத்துப் புலவர் நக்கண்ணையார் 'புற்கையுண்டும் பெருந்தோளன்னே' என்றார். உரைகாரர் தங்காலத்து அறியப்பெற்ற வரலாற்றையும் விரித்து 'தன் நாடிழந்த வறுமையால் புற்கை நுகர்ந்தானாயினும் பகைவர் அஞ்சத்தக்க பெரிய தோளையுடையன்' என்றார் எனவும் துணியலாம்.

மற்றும் பரணர், இவனுக்கும், மகன் கோப்பெருநற் கிள்ளிக்கும் உள்ள மனவேற்றுமையைக் கருதி இன்னர் தந்தை என்று அறிவிக்க வந்தவர்' ஐயை தந்தை மழைவளந் தரூஉம் மாவண் தித்தன்' என்றூர். மகாவித்வான் அவர்கள் கூறுவதுபோலத் தித்தன் என்பானும், வீரைவேண்மான் வெளியன் தித்தனும் ஒருவனாக-வேளிராக இருந்து—அவன் மகன் தித்தன் வெளியனையின் எங்காவது தித்தன் வெளியனை விதந்து யாரேனும் ஓதியுள்ளனரா? ஆகவே தித்தன் என்பான் சோழன். அவன்மகனெடு மாறுபட்டிருந்தான்; ஆதலால் அக்காலப் புலவர் 'ஐயை தந்தை மாவண் தித்தன் (அகம் 6 பாட்டு) என்றனர் என்பதும் துணியலாம் அன்றோ?

முற்காலச் சோழர்களின் மரபுவழிப் பட்டியலை முழுதும் அறிந்தார் யார்? இங்கும் அங்குமாகச் சிலரை அறிகின்றோமே யன்றி முழுதும் அறியப்பெருதபோது தித்தன் என்பான் சோழன் மரபிற் பெயராக இருத்தல் இயலாது என எங்ஙனம் துணிந்து கூற இயலும். அன்றியும் பரணர் 'மழை வளந் தரூஉந் தித்தன்' "மாவண் தித்தன்" அவனது பிண்ட நெல்லின் உறந்தை என்பதிலிருந்தே மன்னனுதலைத் தோற்றுவிக்கின்றூர். மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தலின் துன்பங்களைத் தொகுத்துக் கூறுகின்ற இளங்கோவடிகள் 'மழைவளங் கரப்பின் வான் பேரச்சம்' என்கின்றூர். (சிலப்—25 காட்சி வரி 100) முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி, ஒல்லாது வானம் பெயல் என்பார் வள்ளுவர். ஆகவே தித்தன் மழை வளந்தரும் மாவண்மை வாய்ந்தவனெனவே மன்னனுதல் பெறப்படும்.

மேலும் நக்கீரர், புறநானூற்றில்,

> சீர் சான்ற விழுச் சிறப்பின்
> சிறுகண் யானைப் பெறலருந் தித்தன்
> செல்லா நல்லிசை யுறந்தைக் குணது

எனத் தித்தனைச் சிறப்பித்து அவனல் அழியாப் புகழ் பெற்ற அவனுடைய உறந்தைக்குக் கிழக்கே என்றவர், 'கடலந்தானைக் கைவன் சோழர் கெடலரு நல்லிசை யுறந்தை யன்ன' என்றும்

கூறுகிறார் இவற்றுள் 'செல்லா நல்லிசை' கெடலரும் நல்லிசை என்பன இரண்டும் ஒத்த கருத்தன. ஆகவே தித்தன் சோழனே என்பதை உணர்த்தவும், அவனுளும் உறந்தை அவனுக்கு மட்டும் உரியதன்று. அவன் வழிவரும் சோழர் குடியினர் அனைவர்க்கும் முறைமையின் உரியது. இவன் தன் மகன்மேற் சீற்றங்கொண்டு மறுப்பினும், இவன் ஐயை தந்தை யாதலின் மகன் வழிச் செல்லாது இவன் அரசுரிமை மகள் வழியே செல்வது என்பவற்றை உய்த்துணர்த்தக் கூறினாராக, இதனை வேறாகக்கொண்டு மயங்கல் வேண்டாமே?

தன் தந்தை மனமாற்றங்கொண்டிருக்கின்றான்; கெடலருந் தானையனாகவும் வெலற்கரும் வீரனாகவும் விளங்குதலின் தன் மகன் அங்ஙனம் ஆளுந்திறமிலி என்று ஐயுற்றே அவனை விலக்க, மகன் பெருநற்கிள்ளி ஆமூர் மல்லனோடு அவனூரின் கண்ணேயே மற்போர் செய்தான்; வென்றான்; என அவன் போர்த் திறத்தைக் கூறுகிறார் சாத்தந்தையார். இவன் போராற்றலைத் தித்தன் காண்க என வேண்டுகிறவர் 'நல்கினும் நல்காளுயினும்' காண்க எனக்கூற வேண்டியதன் இன்றியமை யாமையை ஆழ்ந்து நோக்கின், இவன் மாற்றாரும் போற்றும் போர்த்திறம் வாய்ந்தவன் இவனிடம் அரசினை நல்கலாம், அவனுக்கு மனம் இடந் தரவில்லை. ஆயினும் போரைக் காண்க அரசை யீவதும் யீயாமற் போவதும் இரண்டும் ஒன்று தான். இருப்பவள் ஒரே பெண். அவளுக்கு மரபுப்படி அரசில்லை. எங்குச் சுற்றியும் ஆட்சி தம் பால் வரத்தான் போகிறது. ஆனாலும் தந்தைமனங் களிப்புடனிருக்கட்டும் அதற்காகக் காண்க என வேண்டுகின்றார்.

நக்கண்ணையார் "அடிபுனை தொடுகழல் மையணற்காளை" என்கின்றார். இது சோழன் பெருநற்கிள்ளியின் இளமையை காட்டுவது. ஆகவே உரையாசிரியர் கூறியாங்கு இளமைக் யிலேயே அரசனை வெறுத்துத் தன் போர்த்திற முதலிய வற்றைப் பலவிடங்களிலும் காட்டி வெற்றி கொண்டவன் என்பதை உணரலாம்.

அடுத்து, தித்தன் உறந்தை என்ற நக்கீரர், ஆர் முதலிய அடையாளப் பூவைச் சொல்லிச் சோழ மன்னர்களைக் குறிப்பிடு

கின்றவர் தித்தனுக்கு மட்டும் ஏன் மாலை, முரசு முதலிய வற்றைக் கூறவில்லை எனலாம். தித்தன் சோழ மரபினன் என்பது தெளியக்கிடத்தலானும், நகர் கூறவே ஏனையதாமே போதருமாகலானும் விதந்து கூறத்தான் வேண்டும் என்ற நியதியின்மையானும் கூறிற்றிலர். இதனானும் தித்தன் சோழர் குடியினனே என்பது துணிவாம்.

அடுத்து, தித்தன் மன்னனாயின் அவனுள்ளபோதே மகன் கோப்பெருநற்கிள்ளியெனப் போற்றப்பெற்றிருக்க இயலாது என்பதன் ஏற்புடைமையாராயவோம்.

பெருநற்கிள்ளி ஆமூர் மல்லன் முதலிய பலரொடு பொருதுள்ளான். அவன் அரசேற்றுத் தன்னாட்சியைச் செலுத்துகிற காலத்திலேதான் அவன் சிறப்பிக்கப் பெற்றிருப்பான். ஆகவே பின்வரும் சிறப்புப் பெயரைச் சேர்த்துத் தொகுப்பாசிரியரும் பிறரும் வழங்கினராயின், அதனால் இவன் அவன் மகனல்லன். மகனாயின் சிறப்புப் பெயருடன் வழங்கியிருக்க இயலாது என்பது யாங்ஙனம் பொருந்தும்.

ஆகவே, தித்தன் சோழ மன்னனே என்பதும், ஏனைய தித்தர்கள் வேளிராக இருக்கலாம் என்பதும், பெருநற்கிள்ளி மன்னன் இறந்த பிறகோ, அவனால் உண்மையுணரப்பெற்ற பிறகோ அரிசுரிமையை எய்தினனாகல் வேண்டும் என்பதும் பெறப்படும் அதனாலேயே வரலாற்றுண்மை தேர்ந்த நக்கீரர் தித்தன் உறந்யைச் சோழனுறந்தை என இயைபுபடுத்திக் கூறினர் என்பதும் தெளியப்பெறும்.

அருமன் :

"ஆதியருமன் மூதூரன்ன" "மூதிலருமன் பேரிசைச் சிறுகுடி" என்பனவே அருமனை அறிவிப்பன. இவற்றுள் நற்றிணையில் வரும் நக்கீரர் பாடல் இவனூர்ச் சிறப்பை மிக அழகாக எடுத்தியம்புகின்றது. காக்கை தன் குஞ்சுகளை யணைத்துக்கொண்டு, தன் சுற்றத்தையும் விளித்து கருனைக் கிழங்கின் கறியோடுகூடிய செந்நெலரிசிச் சோற்றை, தெய்வப் பலியோடு உண்ண, கூரை வீட்டிலே காத்துக்கொண்டிருக்கும்

ஊர் அருமனுடைய ஊர் என்கின்றார். இதனால் காக பலியும், தெய்வ பலியும், வழங்கும்வள்ளன்மையும், வளமும் உடைய ஊர் அருமனது என்றவாறும், இதனால் இவன் சிறு வீட்டையுடையவன், ஊர்த்தலைவன், வள்ளன்மை மிக்கவன் என்ற குறிப்புக்களும், வேளாளனாதல் கூடும் என்ற முடிவும் கிடைப்பதாகக் கொள்ளலாம்.

அன்னி :

இவன் ஒரு குறுநில மன்னன். இவனைப்பற்றி நக்கீரர் கூறுவது :-

"... ... ... பல்வேள் எவ்வி,
நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்
பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
திதியனொடு பொருத அன்னிபோல
விளிகுவை"

என்பது இதில் அன்னி என்பான் திதியனொடு மாறு கொண்டு அவனூர் மீது படை எடுத்துச் சென்றான். அவன் காவல் மரமாகிய புன்னையை வெட்ட முயன்றான். அப்போது 'எவ்வி' என்பான் நயமான நல்லுரைகள் பலவற்றைக் கூறித் தேற்றினன். அன்னி அவற்றைக்கேட்டும் அடங்கானாகித் திதியனொடு பொருது அவன் காவன் மரத்தையும் வெட்டி வீழ்த்தினன். அதனால் திதியன் மீண்டும் சினந்து படை கொண்டு எழுந்து அன்னியைக் கொன்றான் என்ற அளவே நக்கீரர் தரும் வரலாறு. இதனோடு இணைத்தெண்ணப் பரணர் கூறுவன.

"... ... ... தந்தை
கண்கவின் அழித்ததன் தப்பல் தெறுவர
ஒன்றுமொழிக் கோசர்க்கொன்று மூரண்போகிய
கடுந்தேர்த்திதியன் அழுந்தைக்கொடுங்குழை
அன்னி மிஞிலியின் இயலும்"

என்னும் பகுதி அன்னிக்கு மிஞிலியென்பாள் ஒரு மகள் இருந்தாள், அவள் பேரழகி. அவள் தந்தையாகிய அன்னி யின் கண்ணைத் திதியன் போரிலே பிடுங்கிய ஒன்றுமொழிக்

கோசர்களைக் கொன்று பழி தீர்த்துக்கொண்டான். திதியன் ஊராகிய திருவழுந்துரிலே சூள் முற்றிக் குழையணிந்து பெருமிதந்தோன்ற உலாவினான் என்பதையறிவிக்கும் களமனார், கூறும், ... பெருஞ்சீர்

அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிய
நன்னர் மெல்லிணரப் புன்னை போல
கடுநவைப் படீஇயர் மாரோ

என்னும் பகுதி அன்னிக்கும் திதியனுக்கும் குறுக்கைப் பறந்தலையில் போர் நடந்தது அதில் திதியனைவென்று அன்னி அவனுடையகாவல் மரமாகிய புன்னையை வெட்டினான் எனப் போர் நிகழ்ந்த இடம் உணர்த்தப் பெறுகின்றது.

நக்கீரர் இவ்வரலாறுகள் அனைத்தையும் அகத்தடக்கியே கூறினார் எனல் தெளிவாம். இவன் மகளே மிஞிலி என்பவள்.

இருங்கோ வேண்மாள் :-

இவன் தலையாலங்காலத்துச் செருவென்ற நெடுஞ்செழியனோடு பொருத எழுவரில், வேளிர் குலத்தவர்களான ஐவரில் ஒருவன். (அக. 125, 18- 22) இவன் இருங்கோவேள் என்னும் புலி கடி மாஅலின் மகனாக இருக்கலாம். வேண் மான் என்பது வேள்+மகன் என்பதன் மரூஉ என ரா. இராகவய்யங்கார் அவர்கள் கூறுவார்கள் (தித்தன் பக் 3) துவராபதியினின்று வந்த நாற்பத்தொன்பது வேளிருள்வேள் எனக் கபிலராற் பாராட்டப் பெற்றவன். இருங்கோ என்பது வேளிர்குடியின் ஒரு கிளை யாகும்.

எருமை:

இவன் குடநாட்டு வடுகர்கட்குத் தலைவன். கட்டியென்பானோடு சேர்ந்து பாண்டியனோடு பொருது தோற்றான். இவனைப் பற்றி நக்கீரர்

"நேராவன்றோள் வடுகர் பெருமகன்
பேரிசை எருமை நன்னாட்டுள்ளதை
அயிரியாறு இறந்தன ராயினும்"

என்கின்றார். இப்பாடலால், வடுகர் உணவு, உடை நடை முதலியனவும், இவன் அவர்கட்குத் தலைவன் என்பதும்

உணர்த்தப்பெறுகின்றன. வடுகர்கள் இந்நாட் படகர்களாக இருக்கலாம்.

எருமையூரன் :

இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனால் வெல்லப்பட்ட வேளிர் ஐவருள் ஒருவன். எருமை-என்பது மகிடாசுரனாகவும் எருமையூர் என்பது மகிடபுரியாகிய மைசூராகவும். அது சாமுண்டி மகிடாசுரனை வதைத் தமையால் வந்த பெயரெனவும் இன்று புராண வரலாறாக மாறியது.

எவ்வி :

இவன் நாடு மிழலைக்கூற்றம்: இது காவிரியால் வளம் பெறுவது. மீன்விற்கும் பாண்மகள் மீனுக்கு விலையாக நெல்லை விரும்பாது முத்துக்களை வேண்டுகிறாள் என இந்நாட்டுச் செல்வ வளத்தை நக்கீரர் பாராட்டுகிறார். இவன் திதியனுடைய காவன் மரத்தை வெட்டப் புறப்பட்ட அன்னியின் தீய செயலைத் தடுக்க நயம்புரி நன்மொழி பல கூறினவன். இவன் யாழ் ஒலிக்கும் நீடூருக்குத் தலைவன். தன் ஏவலை ஏலாத பகைவர்களை வென்று அரிமணவாயிலைச் சார்ந்த உறத்தூரிலே கள்ளோடு பெருஞ்சோற்றைப் படைகட்கு அளித்தான் என்று பரணர் கூறுவர். (அக 266) எவ்வி வீழ்ந்த செருவில் எனவும் (அகம் 115) 'எவ்வியிழந்த வறுமை எனவும் (குறுந் 19) வரும் பகுதிகள் இவன் போரிடை வெல்லப் பட்டமையையும் வீழ்ந்து பட்டமையையும் உணர்த்துவன.

எழினி :

இவன் ஐம்பெரு வேளிரில் ஒருவன். நெடுஞ்செழியனால் தலையாலங்கானத்துப் போரிலே வெல்லப்பட்டவன். அதியமான் எழினிக்குப் பங்காளி என்பாரும் உளர். போர்வல் யானைப் பொலம்பூண் எழினி என நக்கீரர் இவனைப் பாராட்டுகின்றார்.

தழும்பன் :

இவன் பெரிய வீரன்; சிறந்த கொடையாளி; கூரிய வாளாலே தமிழ் நாட்டைத் தன்னகப்படுத்தியாண்டவன்;

கொடைமுரசொலி கேட்டு ஏற்பாராகவருவோர் இடையீடு படாத பெரிய நாளோலக்கச் சிறப்பையுடையவன்; 'தூங்கல் என்னும் புலவராற் பாராட்டப்பெற்றவன்; பெண் யானையால் மிதிக்கப்பட்மையால் வழுதுணங்காய்போலத் தழும்புடையவன். அதனால் தழும்பன் எனச் சிறப்புப்பெயர் பெற்றவன். ஊணூர் அவனுக்குரியது. அது மதில் சூழ்ந்தது என்ற பல செய்திகளை நக்கீரர் (அக நா 227) தெரிவிக்கின்றார்.

திதியன் :

இவன் நெடுஞ்செழியனால் வெல்லப்பெற்ற வேளிர் ஐவருள் ஒருவன். திருவழுந்தூரில் வாழ்ந்த குறுநிலமன்னன் இவனுக்கு ஒரு புன்னைமரம் காவன் மரமாக இருந்தது. அதனை அன்னி என்பான் வேள் எவ்வி எவ்வளவு தடுத்தும் வெட்டி வீழ்த்தினன். அதுபற்றி இவனுக்கும் அன்னிக்கும் குறுக்கைப் பறந்தலையில் போர் நடந்தது. அங்கு அன்னியை இவன் வென்றான். அன்னி மிஞிலி என்பாள் ஒரு பெண் தன் தந்தையின் கண்ணைக் கோசர் பிடுங்கிவிட்டனர் என்று முறையிட்டாள். அதற்காக மனமிரங்கி இவன் குறும்பன் துணையையும் கொண்டு கோசர்களைக் கொன்றனன். அது கண்ட அன்னி மிஞிலி மகிழ்ந்து செருக்கித் திருவழுந்தூர் தெருக்களில் உலவினள். (அக நா 35, 1.6)

திரையன் :

இவன் கொடையாளி. அழியாப் புகழ் பெற்றவன்! பவத்திரி என்னும் ஊரினன். அவ்வூர் நெய்தல் நிலத்திலே சோலை சூழ்ந்த இடத்தில் உள்ளது. இவன் மலைவேங்கடம் என்பர் காட்டூர்க்கிழார் மகனார் கண்ணனார். இவனும் தொண்டைமான் இளந்திரையனும் ஒருவனோவேறானவனோ என்று ஐயுறுவாரும் உளர்.

பாரி :

இவன் வேள்பாரி எனவும் வழங்கப் பெறுவான்; கடையெழுவள்ளல்களில் ஒருவன். இவன் அகநானூற்றில் நக்கீரராலும், ஔவையாராலும் குறிக்கப்பெற்றவன். புறநானூற்றில்

27 பாடல்களால் பாராட்டப்பெற்றவன். இவையன்றி "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய, பிறங்குவெள்ளருவி வீழுஞ்சாரற் பறம்பிற்கோமான் பாரி" எனச் சிறுபாணாற்றுப் படையும், இவன் மலையிற் பலாப்பழங்கள் மிகுந்தன என்பதை 'பலாஅம்பழுத்த' என்னும் பதிற்றுப்பத்து (11)ப் பகுதியும் தெரிவிக்கின்றன. நக்கீரர் மகண் மறுத்தமை காரணமாக மூவேந்தரும் இகலி முற்றுகையிட்டிருந்த காலத்துங் பாரி கபிலர் நன்ருக ஆய்ந்து வினை செய்தலால் நெடுந்தூரத்தி லிருந்து கிளிகளைக்கொண்டு நெற்கதிர்களைக்கொணரச் செய்து, அவற்றை ஆம்பற்பூவாலாகிய அவியலொடு கூட்டி மக்களுக்கும் படை வீரர்களுக்கு ஊட்டிப் பல யாண்டுகள் பாதுகாத்துப் பகைவரை முறியடித்து ஓட்டிய பாரி எனச் சிறப்பிக்கின்ருர் (அக நா 78) பாரியின் வரலாறு மிக விரிவாகப் புறநானூற்றிற் பேசப் பெற்றுள்ளது.

பொருநன் :

வீரன். இவன் தலையாலங்கானப் போரிலே பாண்டியனால் வெல்லப்பெற்றவருள் ஒருவன். இது வீரனைக் குறிக்கும் பொதுப்பெயராயினும் இங்கு ஒருவன் இயற்பெயராக உள்ளது. வேளிர்களுள் ஒருவன். இவனைப் பற்றிய வரலாறு ஒன்றும் அறியக்கூடவில்லை. நக்கீரர் இவனை இயல் தேர்ப் பொருநன் என்பதால், இவன் தேர்மீது நின்று பொருதலில் வல்லவன் என்பதும் உணரப்பெறும்.

முசுண்டை :

இவன் சிறந்த கொடையாளி: கிணைப் பாணர் கிணைப் பறையைக்கொட்டிப் பாடிவருவாராயின், அவர்களுக்கு நாடோறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினையுடைய காளைகளின் கழுத்தில் பொன்னரி மாலைகளைக் கட்டித் திமிலில் சந்தனம் பூசிக் கொடுப்பான். உணவு ஊட்டுவான், பெரியதேர்களையும் ஆண் யானைகளையும் வர வர வற்ருமல் கொடுப்பான். இவனுடைய ஊர் வேம்பி; இவை நக்கீரர் இவனைப் பற்றித் தரும் செய்திகள். புலவர்கள் வேறு எவரும் இவனைக் குறிப் பிடவில்லை.

வாணன் :

இவன் ஊர் சிறுகுடி. இது சோழ நாட்டிலுள்ளது. இது பொய்யா நெல்வளம் உடையது என அகப்பாடல்களால் அறிவிக்கப் பெறுகின்றது. இவனை நக்கீரர் நற்றிணையில் பாடிய பாடல் 'புல்லேன் மகிழ்ந' என்னும் 340ம் பாடல் செழியன் ஏரிமடை திறந்ததும் வாய்க்காலையடைந்து திரும்பிய வாளைமீன் சேற்றுவயலுக்குள்ளே ஓடி, உழுகின்ற எருமைகளின் காற்சேறுபட்டுப் புள்ளியை உடையதாகி, உழவர் சிறுகோலால் அடிக்கவும் அஞ்சாது வரப்பினைக் கடந்துசெல்ல முடியாமையால் அங்கேயே கிடந்து புரளுகின்ற காவிரியின் வடகரைக் கண்ணதாகிய சிறுகுடி என அவனுடைய ஊர் போற்றப் பெறுகின்றது. (நற் 340) சிறுகுடி பாண்டிய நாட்டில் உள்ளது என்பாரும் உளர் அது பொருந்தாமையை காவிரி வடகரைக் கண்ணுள்ளது என்ற குறிப்பால் தெளிக.

கொங்கர் :

கொங்கு நாட்டு மக்கள். இவர்கள் சிறந்த வீரமரபினராகவும் இருந்தனர். உழைப்பினுல் பாதல நீரையும் பெறும் ஊக்கமுடையவர்கள். இவர்களைப் பசும்பூண் பாண்டியன் போரில் வென்று துரத்திவிட்டு அவர்களுடைய நாடுகள் பலவற்றையுங் கைப்பற்றினன். இச்செய்தியை நக்கீரர்

"வாடாப்பூவின் கொங்கர் ஓட்டி
நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்
பொன்மலி நெடுநகர்க் கூடலாடிய
இன்னிசை யார்ப்பு"

என்ற அகநானூற்றுப் பாடற்பகுதியால் அறிவிக்கின்றார்.

கோசர் :

கோசர் (215) இவர்கள் ஒரு குழுவினர். வீர மரபினர். நக்கீரர் 'வளங்கெழு கோசர் விளங்குபடை" (205) என்கின்றார். இவர்களை வட நூற்றுணைகொண்டு (கோசர் பார்க்க) வத்தவ மரபினர், கௌசாம்பி நாட்டவர்கள் என்பர் ரா. ராகவய்யங்கார் அவர்கள், இவர்கள் கொங்கிளங்கோசர் வலம்புரிக் கோசர் கோசர் துளு நாடன்ன (அக15) என அழைக்கப் பெறுவதால் கொங்கு நாட்டிலும், துளு நாட்டிலும் வலம்புரியென்னும், (புற 283) ஊரிலும் வாழ்ந்த மரபினராகலாம். நக்கீரர்.

"வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங் கெழுகோசர் விளங்குபடை நூறி
நிலங் கொளவெஃகிய பொலம்பூட் கிள்ளி"

என்கிறார். இதிலிருந்து கோசர்கள் சொல்லுறுதி உடையவர்கள். புகழ் மிக்கவர்கள் வளமிக்க வாழ்வினர்; பொலம்பூண் கிள்ளியொடு பொருது அழிந்தனர், அவர் நிலத்தை கிள்ளிகைப் பற்றினன் என்ற செய்திகள் அறிவிக்கப்பெறுகின்றன. (அக நா. 205)

இங்ஙனம் முடியுடை வேந்தர்களும், குறுநில மன்னர்களும், வேளிரும், பிறரும் பண்பாட்டின் எடுத்துக்காட்டாக ஆண்டாண்டுக் காட்டப்பெறுகின்றனர்.

நக்கீரர் காலத்துப் புலவர்கள்:

மதியொளி விண்மீன்களின் நடுவிலேதான் உயர்ந்ததாக உணரப்பெறுகிறது. ஞாயிற்றொளி இணையில்லாமலே ஏற்றம் பெறுவதாயினும் மதியோடிணைத்து எண்ணப்பெற்று உயர்வு உணரப்பெறுகிறது. அதுபோல நக்கீரர் பெருமானும் புலவர்களிடையே ஏறுபோல விளங்கினர் என்பதை வரலாறுகளும், சங்க நூல்களும் தெரிவிக்கின்றன. ஆயினும் நக்கீரராற் புகழப்பெற்ற புலவரும், அவர் காலத்துப் புலவர்கள் பலரும் உள்ளனர். அவருள் வாய்மொழிக் கபிலன் என நக்கீரராற் புகழப் பெற்ற புலவர் கபிலர் ஒருவரே என முன்னர்க் காட்டினுமாயினும் (அக நா 78) தூங்கல் என்னும் புலவரும் இவராற் குறிக்கப்பெறுகின்றார், தூங்கல் பாடிய ஓங்குபெருநல்லிசை... தழும்பன் (அக நா 227) என்பது அப்பகுதி.

நக்கீரர் பாராட்டிய அரசர்களையும். சிற்றரசர்களையும், வேளிர் முதலாயிருரையும் பாராட்டிய பிறர் புலவர்கள் அனைவரும் இவர் காலத்தவரே எனப் பொதுவகையாற் கூறலாம் ஆயினும், புலவர் மரபு தம் கவியில் பழைய செய்திகளை யறிவித்தலும் உண்டாதலின் எவை பழையன என்று தேர்ந்து கோடலும், அரிய செயலாம். ஆகவே அனைவரும் ஒருகாலத்தவர் என்ற முடிவிற்கு சிறிது பிறழ்வும் உண்டாகலாம். அவற்றை ஆய்ந்து அறுதியிடுவது இவ்விரிவுரைக்குப் புறம்பான செயலாகும்.

காலம்:

நக்கீரர் வாழ்ந்த காலம் செந்தமிழ் நாடும்—மொழியும் சிறப்புடன் வாழ்ந்த காலம், கடைச்சங்க காலம். நாம் சங்க கால நக்கீரரையும் உரையாசிரியர் நக்கீரரையுமே ஒருவரெனக் கொண்டு கி. பி. முதலிரண்டு நூற்றுண்டுகளே கடைச் சங்ககாலம் எனப் பலர் ஆய்ந்துகண்ட முடிவின்படியே துணிவோம்.

கடைச்சங்கம் சில நூற்றுண்டுக் காலம்வரை தொடர்ந்து நடைபெற்றமையின் கடைச்கங்கப் புலவர்களில் யார் யார் இந்த இந்த நூற்றுண்டைச் சார்ந்தவர் என வரையறுக்க இயலாது. ஆனுலும் நக்கீரரது செய்யுளமைப்பு, தெய்வங் குறித்த தனிநூலாக்கம், சொல்லாட்சி இவற்றைக் கொண்டு இவர் இரண்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நக்கீர தேவ நாயனுராகிய திருமுறை நக்கீரனுர் நம் ஆய்விற்கு எடுக்கப்பெருமையால் அவர் காலம் ஈண்டுக் கருதப் பெறவில்லை. ஆகவே இவர் காலம் வாலாயமாக இரண்டாம் நூற்றுண்டின் பிற்பகுதி எனலாம்.

நக்கீரர் காலத்து நாட்டு நிலை:

புலவனுடைய புலமை, நாட்டு நடப்போடு இணைந்து, அக்கால மக்களுடைய ஒழுகலாறுகளையும் குணநலங்களையுந் தாங்கி, வாழ்வும்-தாழ்வும், போரும்-சீரும் ஆகிய இவற்றின் வரலாறுகளையுணர்த்துவனவாய், தம் எதிர்நோக்கான இலட்சிய வாழ்வையும் இணைத்து, கற்பனை வண்ணம் பூசிக் கவிதையாக உருக்கொள்வது. ஆகவே புலவனுடைய வாய்மொழியைக் கொண்டு அக்காலச் சமுதாய நிலையை அறியலாம். அங்ஙனமே நக்கீரர் வாய்மொழியைக்கொண்டு ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறு ஆண்டுகட்கு முன்பு தமிழகம் எங்ஙனம் இருந்தது. தமிழர்கன் எப்படியிருந்தனர் முதலியவற்றைக் காண்போம்.

நம் அனுபவத்திற் காணுகின்றோம்; வாழ்வில் சில தட்டு முட்டுக்கள் இருந்தாலும் அவற்றிற்காக நம் பண்டிகைகளையும்

களியாட்டங்களையும் மறந்துவிடுவதில்லை. அதுபோலத்தான் அன்றும், நாட்டில் போரும் பொருமையும் இருந்தாலும் ஒரு வகை அமைதியான சூழ்நிலையிலே வாழ்ந்தது எனலாம். இல்லையானல் நாட்டின் ஒளி ஓவியமாக எழுந்து இன்றும் விளங்கும் நக்கீரர் சிந்தை இத்தனை இனிய கவிதைகளை எழுப்பியிருக்க முடியாது. ஆகவே நாட்டிலே பல சிற்றரசர்களும், மூன்று பேரரசர்களும் முடியாட்சி நடத்திய சூழலில் அவ்வப்போது சண்டையும் சச்சரவும் நிகழ்ந்திருக்கின்றன. இல்லையானல் இன்பக் கவிதை எழுத வந்த அவர் வாயில்

'வாடாப்பூவின் கொங்கர் ஒட்டி (அக நா 253)
நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்
பொன்மலி நெடுநகர்க் கூடலாடிய
இன்னிசை யார்ப்பு"

எனப் போர்வழிப் பிறந்த இன்ப ஓசை எழுந்திருக்குமா? இதனல் அப்போதிருந்த சமுதாயம் அல்லது நாடு இன்பத்தில் துன்பமும், துன்பத்தில் இன்பமுங்கண்டு என்றும் எதிலும் விஞ்சாத அமைதியான வாழ்விற்றிளைத்தது என்பதை அறிகிறோம்.

மற்றும்,

"..—நெடுந்தேர்
இழையணி யானைப் பழையன் மாறன்
மாடமலி மறுகிற் கூட லாங்கண்
வெள்ளத் தானையொடு வேறுபுலத் திறுத்த
கிள்ளி வளவன் நல்லமர் சான்அய்க்
கடும்பரிப் புரவி யொடு களிறுபல வவ்வி
ஏதின் மன்னர் ஊர்கொளக்
கோதை மார்பன் உவகையிற் பெரிதே

என கிள்ளிவளவன், சொந்த ஊரிலே இருந்த பழையன் மாறனைக்கொன்று, அவன் ஊரையும் பொருளையும் கவர்ந்து கொள்ள, பக்கத்தூரிலே உள்ள கோதை மார்பன் மகிழ்ந்தான் என்ற செய்தி அறிவிக்கப் பெறுகின்றது. இதனலும் வலியான் மெலியானை வாட்ட, ஊர்ச்சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சியாகக் கொண்டு பார்க்கும் பண்பாட்டுடன் மன்னர்நிலை யிருந்தமையறியப்பெறும்.

வலிமிகுதியால் அன்னியென்பான் திதியன் என்பவனோடு பொருது அவன் காவல் மரமாகிய புன்னையை வெட்டத் தொடங்கியபோது, நடுநிலையாளனாகிய வேள் எவ்வி எவ்வளவோ நயம்புரி நன்மொழி கூறியடக்கவும் அடங்கானா யினன் (அகநா. 126) என்ற பகுதி ஏதுவின்றியே பொரும் நிலையும், சொன்னாலும் கேட்காத அடங்காத்தன்மையும் அன்றும் இருந்தன, என்பதும் அறியப்பெறும். அந்நிகழ்ச்சிகளையும் அறிவுரையாக மாற்றி வழங்கியது புலவர் வாழ்வு என்பதும் அறியப்பெறும்.

"ஈரம்பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓரேர் உழவன் போலப்
பெருவிதுப்புற்றன்றால்"

என்ற குறுந்தொகைப்பகுதி, இவர்காலத்து நாட்டுமக்களிற் சிலர் செல்வநிலையையும், அவர்கள் கிடைத்த காலத்தைப் பயன்படுத்தும் பரபரப்பையும் காட்டுவது.

உண்பதுநாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக்குமே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே

என்ற இவருடைய செவியறிவுறூஉ நாட்டுச் சூழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதாகும். நாட்டிலே செல்வத்தைச் சேர்த்து வைத்துக் கண்டு மகிழும் கயவர்கள் சிலரும் இருந்திருக்கிறார்கள் எரிமலைபோல அதனைக்கண்டு மனங்குமுறும் ஏழைகளும் இருந் திருக்கின்றனர், ஒருவர் நிலையை ஒருவர் உணராமலே நாடு போய்க்கொண்டிருந்திருக்கிறது. அதனால் நாட்டில் அமைதி யின்மை தலைதூக்கி நின்ற நேரத்திலே நக்கீரர் இருவருக்கும் உண்மையைக்கூற இதனை உணர்த்துகிறார். ஆகவே இது நாட்டுநிலையை யறிவிப்பதோடு மட்டுமின்றி, ஒரு புலவன் நாட்டைப் பாதுகாக்க வேண்டியதன் இன்றியமையாமையை யும் காட்டுகிறது.

இரப்பவனுடைய கை நிறைய புதிய பொருள்களை அள்ளிக்கொடுக்கின்ற அளவு பொருள்தேடவேண்டும் என்று (அக 389) இவர் கூறும் பகுதி, அப்போது நாடு பறவைகளையும்,

விலங்கு இனங்களையும்போலத் தன் வயிறு நிறைய வேண்டும் என்ற அளவிலேயே இருந்திருக்கவேண்டும். அச்சூழ்நிலையை மாற்றும் மருந்தாகவே நக்கீரர் இதனைக் கூறுகின்றார் எனலாம்.

மக்கள் ஒருவரை ஒருவர் நச்சி வாழப் பிறந்தவர்களே. தனி வாழ்வு மனித வாழ்வேயன்று; ஆகையால் நண்பு என்னும் நாடாச் சிறப்புடையவர்களாகவே வாழ்க என்பார்.

உயிர்கலந்தொன்றிய தொன்றுபடு நட்பின்
செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர் (அகநா 200)

என்கிறார். இதனால் நண்பு செய்யின், உயிர்கலந்த நட்பாதல் வேண்டும். நட்டபின் சொல்லாலும் செயலாலும் வேறுபட்டவர்கள் ஆதல் கூடாது; ஒன்றிய நிலை அமைதல் வேண்டும்; அங்ஙனம் ஒன்றிய நிலை வருமாயினும், மனத்துட் கறுப்பு வைத்துப் பழகுதல் கூடாது. குற்றமற்ற மனமொடு பழகுதல் வேண்டும் என்கிறார். இவர் சமுதாயத்தில் எத்தகைய மனிதப் பண்புகளைக் கண்டிருப்பார் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது இப்பகுதி. நட்டவர்களைப்போல நடிப்பவர்கள், உள்ளொன்று வைத்தும்புற மொன்று புரிவார்; கறுகறு என்று நண்பனையும் குலைக்க நாள் பார்ப்பவர்கள் இத்தனை பேரையும் கண்டிருக்கிறார். அந்த அனுபவம் இலட்சிய நட்பிலக்கணத்தைச் சொல்ல வைத்தது. ஆகவே சமுதாயத்திலுள்ள மேடு பள்ளங்கள் அறியப் பெறுகின்றன.

இவ்வளவோடு இதனை நிறுத்திப் பொதுவகையில் இவர் செய்யுளமைப்பை நோக்குவோம்.

செய்யுள் அமைப்பு

நக்கீரர் பாடிய செய்யுட்கள் அகத்திலும் புறத்திலுமாக முப்பத்தேழு செய்யுட்கள் உள்ளன. அவற்றுள் அகம்பற்றியன அக நானூற்றில் பதினேழு பாடல்களும் குறுந்தொகையுள் எட்டும், நற்றிணையுள் ஏழும், ஆக முப்பத்திரண்டு பாடல்கள், புறம்பற்றியன மூன்று பாடல்கள். ஏனைய நெடுநல்வாடையும் திருமுருகாற்றுப்படையும். இவை யொழிய நக்கீரர் குமர

வேள் மீது பாடியன வாகப் பத்து வெண்பாக்கள் உள்ளன இவையனைத்துமாகச் சங்ககால நக்கீரர் செய்தவை 47 பாடல்கள்.

இவற்றுள், அகநானூற்றுப் பாடல்களில், மருதத்திணை பற்றியன மூன்றும், பாலைத்திணைபற்றியன ஒன்பதும், குறிஞ்சித்திணை பற்றியன ஒன்றும், நெய்தற்றிணைபற்றியன நான்கும் ஆகப் பதினேழு பாடல்கள்.

குறுந்தொகையுள் குறிஞ்சிபற்றியன ஐந்தும் பாலைபற்றியன இரண்டும் மருதம்பற்றிய ஒன்றும் ஆக ஐந்து பாடல்கள்.

நற்றிணையுள் நெய்தல்பற்றியன மூன்றும், பாலைபற்றியன இரண்டும். மருதம்பற்றியதொன்றும், முல்லைபற்றியதொன்றும் ஆக ஏழு பாடல்கள்.

இவையொழிய, இருமையும்பற்றிய நெடுநல்வாடையும், அன்புநெறிக்ப்பாடல்களாகிய திருமுருகாற்றுப் படையும், அவற்றின் இறுதியிற் சில வெண்பாக்களும் உள்ளன.*

உரை நூல் இறையனார் அகப்பொருளுரை. இவர் பாடிய பாடல் அமைப்பில் அகம்பற்றியன அகநானூறு, குறுந்தொகை நற்றிணை ஆகிய நூல்களில் பாலைபற்றியன பதின்மூன்றும், நெய்தல்பற்றியன ஏழும், குறிஞ்சிபற்றியன ஆறும், மருதம் பற்றியன ஐந்தும், முல்லைபற்றியது ஒன்றுமாக அமைந்துள்ளமை சிறிது சிந்தித்தற்குரியது.

புணர்ச்சியும் அதன் நிமித்தங்களுமாகிய குறிஞ்சி தலைவனும் தலைவியுமாகிய இருவரும் இன்பருந்தும் ஒத்தநிலையினது ஆகலின் அதனை ஆறு பாடல்களால் அறிவித்த ஆசிரியர், அவ்வின்பம் பிரிவின்கண் இவ்வாறு இருந்தேம் என்று எண்ணிச் சொல்லிபுலம்பித்தேற்றி உணர்தற்றன்மைத் தாகலின் பிரிவைப் பதின் மூன்று பாடல்களானும், ஊடலும் அதனிமித்தமுமாகிய மருதம் காமத்திறத்தை மிகுவிப்பதாகலின் அதனை ஐந்து பாடல்களானும். மெல்லியலாராகிய தலைவியரால் ஆற்றியிருத்தற்கரியதாகிய முல்லை அருமை நோக்கி ஒரு பாட்டாலும் உணர்த்தப்பெற்றுள்ளது.

இவர் இயற்றிய பாடல்களில் அகம்பற்றிய பாடல்கள் அனைத்தும், திருமுருகாற்றுப்படையும், நெடுநல் வாடையும், புறநானூற்றில் 395 நீங்க ஏனைய இரண்டுபாடல்களும் நேரிசையாசிரியப்பாக்கள். 395ம் பாடல் மிகச் சிதைந்து உருக்குலைந்து இருப்பதால் இன்னபாடல் என்று சொல்ல இயலவில்லை. அச்சிட்டுள்ள முறையிற் பார்த்தால் இருசீரடியும் சொற்சீரடியும் பெற்று ஈற்றயலடி முச்சீராய் அமைந்திருந்தலின் இதனை இணைக்குறளாசிரியப்பாவாகக் கருதலாம்.

நேர்புநிரை, நேர்பு நிரைபு, நேர்நேர்பு முதலான குற்றுகரச்சீர்களும் அகவலில் விரவியுள்ளன.

நக்கீரர் பாடற்களிற் கூறப்பெறும் யாறுகள்

1. வையை:

இது பாண்டிய நாட்டு நதிகளுள் ஒன்று. "மலிபுகழ் வையை" (புற 71) "வையையென்னும் பொய்யாக் குலக்கொடி" (சிலப்) என்றெல்லாம் புலவர் நாவிற்பொருந்தி வருவது. இதனை நமது நக்கீரர்பெருமான் "வருபுனல் வையை" என்கின்றார். வருபுனல்—இடையறாது மேலும் மேலும் வருகின்ற புனல். இது அரிவாள் ஆவுரிஞ்சுதறி என்பனபோல முக்காலவினைத்தொகை. ஆகவே என்றும் ஒழுகுகின்ற புனலையுடைய வையை என்றாராம். மதுரையாசிரியர் நக்கீரனார் வையையை ஒரு ஜீவநதியாக்கியதில் வியப்பென்ன?

2. காவிரிப் பேரியாறு:

இது சோழ நாட்டை வளம்படுக்கும் ஒரே ஆறு. இதனைப் பேரியாறு என்பதிலே நிறைவிருக்கிறது. இதுவே பல கால்களாகப் பிரிந்து பரந்து புலமெலாம் உணர்வென உலாவுகிறது.

ஞாயிறு நான்கு திசையிலுந் தோன்றிச் சுட்டுக் கொளுத்தி, சுக்கிரன் தெற்கில்தோன்றினாலும் இவற்றால் நாடுவற்

கடஞ்சூழ்வதாயினும் 'அந்தண் காவிரி வந்து கவர் பூட்டும் என்று புலவர் மக்களாற் போற்றப் பெறுவது. இதனை நமது நக்கீரர்.

''மலைமிசைத்தொடுத்த மலிந்துசெலல் நீத்தம்
தலைநாண் மாமலர் தண்டுறைத் தயங்கக்
கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேரியாறு'' (அக நா. 126)

எனக் காவிரிப் பேரியாற்றின் மிடுக்கினையும், தோற்றத்தையும் உணர்த்துகிறார். குடமலையிற் பிறந்து தொடுத்ததுபோல இடையீடின்றித் தொடர்புடையதாகப் பெருக்கெடுத்தோடி வருகிறது. வருகின்ற வேகத்திலே முதல் அலர்ந்த மலர்களை அடித்து வருகிறது. அவைகள் துறைகள் தோறும் ஒதுக்கப் பெற்று விளங்குகின்றன. அங்ஙனம் வந்த வெள்ளம் இறுதியாகக் கடற்கரையையும் கரைத்து மெலிவிக்கிறது என்கிறார்.

3 அயிரியாறு:

இது எருமை நாட்டுள்ள தோராறு: இதனை நக்கீரர் அகநானூறு 253ம் பாடலில்,

''பேரிசை யெருமை நன்னாட்டுள்ளதை
அயிரியா றிறந்தன ராயினும்''

என்ற பகுதியான், விளக்குகின்றார். அயிரியாறு அயிரை யாறு எனவும் வழங்கப்பெறும் எனச் சிலப்பதிகாரத்து "உருகெழு மரபின் அயிரை மண்ணி" எனவரும் பகுதியறிவிக்கின்றது. இவ்வியாறு அயிரை மலையிலிருந்து உண்டாவதால் இப்பெயர்பெற்றதோ எனவும் எண்ணக்கூடும். இப்பெயர் "உருகெழு மரபின் அயிரை பரைஇ" "கடவுளயிரையின் நிலைஇ" என்ற பதிற்றுப் பத்துப் பகுதிகள் (பதிற் 79, 88, 90) அடி 147. (பதிற்று 9ம்பத் பதிகம் 13-4) மலையை யுணர்த்துவனவாக அமைந்துள்ளன.

4. ஆன்பொருநை:

இது கருவூரையடுத்து ஒடும் ஆறு. இது "தண்பொருநை" (புறம் 11) "தண்ணான் பொருநை" (புறம் 36) "புல்லிலைவஞ்சிப் புறமதிலலைக்கும் கல்லென் பொருநை" எனவும் "வருபுனனீர்

ஆன்பொருநை" (சிலப் வாழ்த்து 14) எனவும் புகழப்படுவது. இதனை இவர் காட்டும் அழகு மிகச் சிறந்த சிந்தனைக்குரிய தாகும்.

"கடும்பகட்டியானை நெடுந்தேர்க் கோதை
திருமா வியனகர்க் கருவூர் முன்றுறைத்
தெண்ணீர் உயர்கரைக் குவைஇய
தண்ணான் பொருநை"

என்கின்றார். இதில் ஆன் பொருனைநதியினது, கருவூரையடுத் தோடுவதும், இருகரையும் புரளச் செல்லும் வேகமும், என்றும் குளிர்ந்திருப்பதுமாகிய மூன்று இயல்புகள் எடுத்துக் காட்டப் பெறுகின்றன.

இவையொழிய கயம் பைஞ்சுனை முதலிய நீர்நிலைகளும் குறிக்கப்பெற்றுள்ளன. பாரியின் பறம்புமலைக் கண்ணதாகிய "தீம்பெரும் பைஞ்சுனை" நக்கீரரால் பாராட்டப்பெற்றது. தீம்சுனை; பெருஞ்சுனை; பைஞ்சுனை எனச் சுனையினது இனிமையும் பெருமையும், பசுமையுமாகிய மூன்று குணங்கள் குறிக்கப்பெற்றுள்ளன.

நீர்த்துறைகள் :-

i **வையை வார்மணல் அகன்றுறை:** இது வையைத் துறைகளில் ஒன்று. இங்கே மருத மரங்கள் ஓங்கியுள்ளன. பூம்பொழில் ஒன்று இதனையடுத்துள்ளது என்ற செய்திகள் தெரிவிக்கப்பெறுகின்றன. (அக 36 வரி 9-10)

ii **முசிறி முன்றுறை:** முசிறி பாண்டிய நாட்டுக் கடற் கரைப்பட்டினம் அங்குள்ள துறை இது. "முதுநீர் முன்றுறை முசிறி" என்கின்றார் நக்கீரர். முதுநீர்-கடல். ஆகவே இது கடற்றுறையாம். இம்முசிறி குட்டுவனுடைய நகரம் (புறம் 343) இதுமேல் கடற்கரைக்கண் கொடுங்கோளூரை யடுத்துள்ளது. பழைய துறைமுகம்.

iii **கருவூர் முன்றுறை:** இது ஆன்பொருனைக்குள்ள துறைகளுள் கருவூரை யடுத்துள்ள யாற்றுத்துறை. இக்கருவூர்

வஞ்சையெனவும் வழங்கப்பெறும். இங்கே ஆன்பொருநை மணலைக் கொண்டுவந்து குவித்திருக்கும் என்பது.

"கடும்ப கட்டி யானை நெடுந்தேர்க் கோதை
திருமா வியனகர்க் கருவூர் முன்றுறைத்
தெண்ணீ ருயர்கரைக் குவை இய
தண்ணான் பொருநை மணலினும் பலவே"

என்ற பகுதியால் உணரப்பெறும்.

iv **காவிரித் தண்டுறை:** இது காவிரித் துறைகளில் ஒன்று. இதனை நக்கீரர் தண்டுறையெனக் குறிப்பதிலிருந்து இது தண்மை மிக்கது என்றுணரப்பெறும். (அக நா. 126)

v **தொண்டி முன்றுறை:** தொண்டி சேரநாட்டுக் கடற்கரைப் பட்டினம். அது ஒருபக்கம் குலைதள்ளிய தெங்குகளையும், ஒருபக்கம் பரந்த வயல்களையும், நாற்புறமும் வேலி போலச் சூழ்ந்துள்ள மலைகளையும், நிலாப்போல பரந்த மணற் பரப்பினையுடைய கடற்கரையையும், தெளிந்த கழிகளிலே தீப்போல மலர்ந்த தாமரை முதலிய நீர்ப்பூக்களையும் உடையது. தொண்டி எம் ஊர், கோதை எம்மிறைவன் என்கின்றார் பொய்கையார். நமது நக்கீரர் :

வெண்கோட் டியானை விறற்போர்க் குட்டுவன்
தொண்டிரைப் பரப்பின் தொண்டி முன்றுறை.

எனத் தொண்டி சேர மன்னற்குச் சொந்தமானது. கடற்கரைக்கண்ணது என உணர்த்துவர். சோழ நாட்டுக் கீழைக் கடற்கரையின்கண் உள்ளதும், "வங்க வீட்டத்துத் தொண்டியோர்" (சிலப். 14. 107 வரி) என்ற பகுதிக்கு அடியார்க்கு நல்லார் எழுதும் சோழ குலத்தோர் என்னும் உரையாற் குறிக்கப்பெறுவதும் ஆகிய தொண்டி அதனின் முற்றும் வேறானது.

இடவகை.

நக்கீரர், நானிலம் பற்றிய மக்கள் நடக்கையை வாழ்வியல் ஓவியமாக வகுக்கத் தொடங்கியவர் ஆதலின், அவர் பாடல்களில் பலவேறு நகரங்களும், நகரின் உள்ளுறுப்பாகிய இடங்

களும், மலையும் கடலும் வயலும் காடுமாகிய நிலங்களும் குறிப் பிடப் பெற்றுள்ளன. அவை பெயரளவிற் குறிக்கப் பெற்றிருப்பின் நம்மனத்தை அவை கவரா. அவற்றைப் பற்றி நாம் சிந்திக்கப் போவதும் இல்லை. அவரோ பல இடங்களிற் சுவைபடப் பாராட்டுகிருர். அவற்றை மட்டும் காண்போம்.

ஐவகை நிலங்களில் குறிஞ்சியைப் பற்றி இவர் பாடல் களில் வருவன. மலையை அடுத்துள்ள காடுகளின் நடுவிடம். அது அடர்ந்த பகுதி; யாளிகள் வாழ்கின்றன. அதற்கு அஞ் சிய ஆண் யானைகள் தம்மினத்தை ஓரிடத்தே கூட்டுகின்றன. அவற்றுள் ஒன்று சூலுற்ற பெண் யானை. அது அச்சத்தால் நடுங்குகிறது. அதனை ஆண் யானை தன் துதிக்கையால் இன் புறத் தழுவுகின்றது. அப்படியிருந்தும் அதன் அச்சந்தீர்ந்த பாடில்லை. நடுங்கிக்கொண்டேயிருக்கிறது.

மலைவாழ் மக்கள் குறவர்கள். அவர்கள் குடிசையின் முற்றத்திலே மூங்கிற் காடுகள் அடர்ந்துள்ளன. அவற்றிலிருந்து மலர்கள் காம்பூழ்த்துச் சிந்துகின்றன. காந்தட்பூக்கள் நீண்ட துடுப்புப்போல அசைகின்றன. இந்நிகழ்ச்சியை அறி விப்பது அகநானூற்று 78-ம் பாடல்.

பெரிய மலைகளின் உச்சியிலிருந்து அருவிகள் ஒழுகுகின் றன. அவை மிக வெண்மையாகக் கூத்தர் முழவைப்போல ஒலித்துக் கொண்டிறங்குகின்றன (குறுந். 78) வேடன் தினை விதைத்தான். அவை விளைந்தன. முதல் விளைவான பொன் போன்ற கதிர்களைக் கடவுளுக்குப் பலியாக இட்டான். மலையில் வாழ்கின்ற மயில்கள் அவற்றை அறியாமல் உண்டன. அதனல் அவை வெறியேறி, வெறி பிடித்த கூத்திபோல ஆடின. நடுங்கின (குறுந். 105) பொழுதும் போயிற்று. மழையும் இடைவிடாமற் பெய்கின்றது. பேய்களும் மழை வேகந் தாங்காமல் நடுங்குகின்றன. அத்தகைய சூழலையுடையது மலை (குறு. 161) என்கின்ருர்.

பாலை:

இவருக்குப் பாலையைச் சொல்லோவியமாகத் தீட்டுவதில் தனியாற்றலுண்டு. இவர் மனத்தைக் கவர்ந்தது பாலையே என்பதை முன்னர் காட்டினேம்.

ஒரு காட்சி : வேனில் வெதுப்புகிறது; வௌவால் நெடுந் தூரம் பழுத்தமரம் இருக்கும் என்று எண்ணிப் பறந்துவந்தது. வேனிற் கொடுமையால் மரங்கள் உலவையாகிப் பழங்கள் உதிர்ந்து வெறுவிதாயின. வந்த பறவைகள் ஏமாந்து, இனி மரங்கள் பழுக்கும் நாளை எண்ணிக்கொண்டு ஏக்கமடைந்து உலர்ந்த கிளைகளில் உட்கார்ந்துள்ளன.

சிறு பாறைகள். அதன் பக்கத்தில் குட்டையான இற்றி மரம். இற்றியின் நீண்ட விழுதுகள் இறங்கி அப்பாறைகளைத் தொட்டுக் கொண்டிருக்கின்றன. காற்றும் அடிக்கிறது. அப் போது அப்பாறைகள் யானைகளைப் போலவும் அசைகின்ற விழுதுகள் அந்த யானைகளின் தூக்கிய கையைப் போலவும் காட்சியளிக்கின்றன. (அக நா. 57)

மயிலின் சிறகாலான மாலையை யணிந்த எயினர்கள் பூத்தகாட்டின் அருநிழலிலே தங்கி இளம்பசுக்களைக் கொன்று தின்ற இடத்தில் வீசிய காற்றொலியை மான்கூட்டம், புலி யோசையென்று எண்ணித் திசை கெட்டோடும் மலையிடம் (அக நா. 249) எனப் பல்லாற்றானும் பாலைவளம் பேசப்படுகின் றது. வறுமையிற் செம்மைபோல இன்மையில் அழகு பயப் பது பாலை.

முல்லை :

இவர் பாடலில் முல்லைபற்றியது ஒன்றே ஒன்று. அது 'கொடுங்கட்காக்கை' என்னும் நற்றிணை 367ம் பாட்டாகும். இதுவும் ஒழுக்கம்பற்றி வந்த முல்லைத்திணைப் பாடலேயாகும். இதனுள் காடும்—காடு சார்ந்த இடமுமாகிய முல்லை நிலத் தியல்பு மொழியப் பெற்றிலது. ஆனல் தலைவியே! நின்கூந் தலில் உள்ள குவளை மலரொடு கலந்து தொடுத்த முல்லை மாலையைச் சூடி இளையர் வந்தனர். அவரும் விரைந்து வரு வார் என ஆற்றியிருத்தலின் இன்றியமையாமையைப் புலப் படுத்துகிறது.

மருதம் :

நக்கீரர் தந்த பாடல்களில் மருதம் பற்றியன, ஐந்து பாடல்களே. அவற்றுள், அகநானூற்று 36ம் பாடல், வரால்

மீன் காளையைப்போலக் கதங்கொண்டு கழனியைக் கலக்கிய செய்தியைச் சொல்லுகிறது. மருத நிலத்து வலைச்சி வாளை மீனுக்கு விலையாக மருதப் பயனாகிய நெல்லை விரும்பாமல் நெய்தற் பயனாகிய முத்தை விரும்பும் செய்தியும், (அக-126) ஆண் கொக்கு கயல் மீனை எதிர்நோக்கி, காஞ்சி மரக்கிளையை நட்டு கரும்புகளை வேலியாக மிடைந்து நெற்பயிர்களையிட்டுக் கட்டிய அணையின் மேலிருந்து வேகமாக வழியுங் நீரினைப் பார்த்துக் கொண்டேயிருக்கின்றன என்னும் செய்தியும் (அக நா 346) பெரிய குளமடை உடைப்பெடுக்க, வாய்க்கால்வழி ஓடிய வாளை மீன் வயலில் சென்று, காளையின் காலால் சேறு பட்டுப் புள்ளியான உடலுடன் மதர்த்து அணையிற்கிடந்து வரப்பைக் கடக்க மாட்டாமையால் வரப்படியிலே புரளுகின்றன என்னும் செய்தியும் மருதநில வனப்பாக வகுக்கப்படுகின்றன.

நெய்தல் :

நெய்தலைப்பற்றிய பாடல்கள் ஏழு உள்ளன. அவற்றில் கொக்கினங்கள் மீனருந்தி மெதுமெதுவாகப் பறந்து சூரியன் மறையும் வேளையில் இருப்பிடத்தையடைந்தன என்பதும், பெண் கொக்கு விடியற்காலையிலே இறைதேடச் சென்ற ஆண் கொக்கு வலையிற்சிக்கி மீளாமைகண்டு மாலைப்போதில் இரையும் உண்ணாது, தன் குஞ்சுகளைத் தழுவிக்கொண்டு பனைமடலி லிருந்து புலம்புகின்றன என்பதும், உப்பு வண்டியுடன் வந்த பெண் கொக்கு அஞ்சி ஓட அலை ஆரவாரிக்கின்றது, என்பதும் தலைவ! பொழுதுபோயிற்று; ஆனதால் இரவு எம்மில்லில் நீ தங்கிப் போ. உனக்கு மீன் விலையாக வெந்த வெண்ணெல் அரிசியால் ஆக்கப்பெற்ற தயிர்ச் சோற்றை யுண்ணக் கொடுப்போம்; நல்ல சந்தனம் பூசுவோம்; ஆகையால் சுறுமீன் கிழித்த வலை தொங்கு எங்கள் வீட்டில் தங்கிப்போ எனத் தம் இல்லமைப்பு, விருந்தேற்கும் வண்மை முதலியனவும் நெய்தலியல் பாக உணர்த்தப்பெறுகின்றன.

இவ்வண்ணம் ஐவகை நிலவளங்களையும் அறிவிப்பதோடன்றி ஆங்காண்டுள்ள சில ஊர்களையும் உணர்த்துவார்:

ஆலங்கானம் :

இது தலையாலங்காடு எனவும் சமய உலகில் ஆலங்கானம் எனவும் பேசப்பெறுவது. சிறந்த சிவத்தலம். நெடுஞ்செழியன்

இருபெருவேந்தரொடும் ஐம்பெரும்வேந்தரொடும் ஒருங்கு போர் செய்து வென்ற இடம் இப்போரிலே செழியன் எழுவரையும் வென்று, அவ்வூரையே செங்கிலமாக்கி, அவர்களுடைய முரசினையும் கொற்றக் குடையினையும் கைப்பற்றினன் என்று நக்கீரர் தெரிவிக்கிருர். (அக நா 26) இவ்வூர் குடவாயிலுக்கு அண்மையில் 5 கல் தொலைவில் உள்ளது.

இடையாறு:

சோழன் கரிகாலனது ஆட்சிக்குட்பட்ட சோழநாட்டூர்களில் ஒன்று. இடையாற்றுமங்கலம் என வழங்குகிறது. கரிகாலன் காலத்து நல்ல செல்வ வளமிக்க ஊராக இருந்தது, "இடையாற்றன்ன நல்லிசை வெறுக்கை தருமார்" என இவ்வூரை நக்கீரர் பாராட்டுகிருர். (அக நா. 141)

முசிறி: இதனைப்பற்றிய குறிப்பு முசிறி முன்னுறையிற் கூறப்பெற்றது. இவ்வூரின் பெயர் ஐயரவர்கள் பதிப்பில் "முழங்குகடல் முழவின் முசுறியன்ன" என (புற 343) முசுறி எனவும் காணப்படுகிறது; (அக நா 57)

வேங்கடவைப்பு: தமிழகத்தின் எல்லையாக வடக்கின்கண் அமைந்த மலை. 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' எனச் சிறப்பித்தோதப் பெறுவது. இதன் இயல்பை, நக்கீரர், பொருள் தேடச் செல்லும் தலைவன் மிகுந்த பொருளைத் தேடுவதற்காக வேங்கட மலையைச் சார்ந்த சுரநெறிகளைக் கடந்து செல்கின்ருன்; வேங்கட மலையிலே வேங்கை மரங்கள் நிரம்ப உள்ளன. அவை பூத்துச் சொரிகின்றன. அவை புள்ளிகளையுடைய வரிப்புலியின் நிறம்போலங் காட்சி வழங்குகின்றன. அந்த வேங்கை மலர்களின் நடுவே நாரத்தைப் பூக்களும் உதிரக் குரங்குகள் தாவுகின்றன. மலைச் சிகரங்களிலிருந்து தேன் மணத்தோடு வழிகின்றது. அத்தகைய, கண்ணுக்கும், நாவுக்கும், மூக்கிற்கும் விருந்தாகும் இயற்கையழகு கொழிக்கும் வேங்கடவைப்பு என விளக்குகிருர். (அக நா. 141)

காவிரிப்பூம்பட்டினம்: இது சோழர் தலைநகரங்களில் ஒன்று. சிறந்தது. நக்கீரர் காலத்து வாய்மொழிக் கோசரை

வென்ற பொலம்பூண் கிள்ளியினுடைய தலைநகராக விளங்கியது. இருபக்கமும் பூக்கள் மலர்ந்த கழிகளினிடையிலே பரந்த தோட்டங்களையுடையது என்று பேசப்பெற்றுள்ளது. (அக நா. 205)

ஊணூரும் – மருங்கூர்ப்பட்டினமும்:

இவை ஊரும் அதனையடுத்துக் கடற்கரை ஓரமாக உள்ள பட்டினமுமாம். இவை வழுதுணைத் தழும்பனுடைய ஊராகும் நல்ல காவலோடுகூடிய மதில்களாற் சூழப்பெற்றது. இந்நகருக்கு அப்பால் பெரிய உப்பங்கழிகளாற் சூழப் பெற்ற மாட்டங்களையுடைய மருங்கூர்ப் பட்டினம் உள்ளது. அது நிறைந்த செல்வம்படைத்தநகரம். இதில்எப்போதும் ஆரவாரத்தோடு கூடிய கடைத்தெரு ஒன்றுண்டு என அறிவிக்கப் பெறுகின்றது. (அக நா, 227) நற்றிணையில், நல்ல நண்பகலிலே வெயில் கொளுத்தும் வேளையிலே மருங்கூர்ப்பட்டினத்தே வாழ்கின்ற மகளிர் விருந்தினர்க்காகச் சமைத்து, அதனை இல்லுறை தெய்வங்கட்கு நிவேதித்துக் கொக்கின் நகம்போன்ற சோற்றை முற்றத்திலே பலியாக இட்டிருக்கிறார்கள். அவற்றை உண்டு காகங்கள் மாலை வேளைகளில், இறால் தின்று பசுமையான கண்களோடு வேறு வேலையின்மையால் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்கிற தோணியிலேயுள்ள பாய்மரக் கூம்புகளிலே தங்கியிருக்கின்றன என மருங்கூர்ப் பட்டினத்தின் செல்வ வளமும், விருந்தோம்பற் சிறப்பும், பிறவும் விளக்கப்பெற்றுள்ளன. (நற் 258)

தொண்டி :

இது இவர்காலத்து குட்டுவன் சேரனுடைய கடற்கரைப் பட்டினமாக இருந்தது. நெய்தல் மலர்ந்த கழிகளையுடையது எனக் கூறப்பெற்றுள்ளது. இது முன்னரும் தொண்டி முன்றுறையில் விளக்கப்பெற்றது. (அகநா 290) பரணர் பொறையனுடைய ஊர் என்பர். (குறுந் 128) ஒரு காலத்து வாழ்ந்த இரு புலவர்களின் கருத்து இவ்வகையில் மாறுபடுகின்றது. இது ஆய்வுக்குரியது.

வேம்பி :

முசுண்டை என்னும் வள்ளலின் ஊர். மிக அழகானது. தலைவியின் அழகுக்கு உவமமாக எடுத்தாளப்பெறும் தகுதி படைத்தது. (அகநா 249)

கூடல் :

பாண்டிய மன்னர்களின் தலைநகர். இதன் காலைக் கடை வீதி தலைவியின் நெற்றியையும் கூந்தலையும்போல மணம் வீசும் எனப் பாராட்டப்பெற்றுள்ளது (அக 93) கொங்கர் ஓட்டி நாடு பல தந்த பசும்பூண்பாண்டியனுடைய நகரம் என்றும், பொன் மலி நெடுநகர் என்றும் பேசப்பெறுவது (அகநா 253) மற்றும் இந்நகரில் பாண்டியன் படைத் தலைவனுகவோ அல்லது பேரரசனுகவோ இருந்த பழையன்மாறனுக்கும் கிள்ளிவளவனுக்கும் பெரும்போர் நடந்திருக்கிறது. அதில் வளவன் மாறனைவென்று அவன் கைப்பற்றிய நாடுகளை மீட்டான். அதனால் சேர மன்னனுகிய கோதை மார்பன் பெரு மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தான் என்று நக்கீரரது அகநானூறு 346ம் பாட்டறிவிக்கிறது. திருமுருகாற்றுப்படையுள் திருப்பரங்குன்றப் பகுதியில், போரை விரும்பித் தூக்கிய கொடியினையும், மாற்றரசர்களை மாதராக மதித்து பொருவார் பொருது வென்று அறுப்பாராக என்ற சூளொடு தூக்கிய பந்துகழங்கு பாவைகளையுடைய தோரண வாயில்களையும் உடைய கூடல் எனவும், திருமகள் என்று நீங்காமல் நிலைபெற்ற கடைத்தெருவினையுடையது எனவும், பாராட்டப்பெற்றுள்ளது. (திருமுரு 67–71 வரி) பரணர் செழியனுடைய நகரம் எனவும், செழியன் இங்குச் சேர சோழ வேந்தரொடு பொருது வென்ருன் என்றும் (அக 116) கூறுவர்.

கருவூர் :

இதுவும் கருவூர் முன்றுரை என்ற பகுதியில் குறிக்கப் பெற்றதே. இவ்வூர் யானைப் படையையும் தேரையும் உடைய கோதையின் ஊர். இவ்வூரை ஆன்பொருநை என்னும் யாறு அணி செய்கிறது. யாற்றுத்துறை வெள்ளிய மணல் பரந்தது எனக் குறிக்கப் பெறுகின்றது. (அகநா 93)

சிறுகுடி :

"வாணன் சிறுகுடி" (நா 340) முதில் அருமன் பேரிசைச் சிறுகுடி (நற் 367) என இரண்டு மக்கள் பேரோடு இரண்டுசிறு குடிகள் குறிக்கப் பெறுகின்றன. புற நானூற்றில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுல் பாராட்டுப் பெற்ற பண்ணன், பரணனுகிப் பரணன்வாணனுக வாணன் சிறுகுடி யென நற்றிணையிற் பதிப்பிக்கப் பெற்றிருக்கலாம் என்றும் எண்ண இடமுண்டு. ஆனல் அருமன் சிறுகுடி இதனின்வே றெனவே எண்ணப்பெறும்.

(அருமன் என்பான் அருவர் மகனுகவோ, அல்லது அருவன் என்பது அருமன் எனத் திரிந்த பெயராகவோ இருக் கலாம் என்று பொ. துரையரங்கனுர் அவர்கள் கூறுவார்கள். இது ஆய்வுக்குரிய கருத்து சங்ககாலச் சிறப்புப் பெயர்கள் பக். 326)

அருமன் பேரிசைச் சிறுகுடியில் காக்கைகள் குஞ்சுகளையும் இனங்களையும் அழைத்து மக்களிடும் பலிச்சோற்றை யுண்ணக் காத்துக் கிடக்கின்றன என்று நற் 367ல் கூறப் பெற்றுள்ளது.

வாணன் சிறுகுடியெனப்படும் பண்ணன் சிறுகுடியில் மருதவளமே மிகுத்துப் பேசப்பெறுகின்றது. வாளை மீனின் செய்தி விளக்கப் பெற்றுள்ளது ஆதலால் இது சோழ நாட்டுச் சிறுகுடியாக இருக்கலாம். (நற் 340.)

மருங்கை :

'பசும்பூண் வழுதி மருங்கை' எனக் குறிக்கப்பெறுவதால் இவ்வூர் பசும்பூட் பாண்டியனுடைய ஊராகும். இருல் மீனின் முடங்கலை வெண் காக்கை நாட்காலை யுணவாகக் கொள்ளும் **மருங்கூர்** எனச் சிறப்பிக்கின்ருர் நக்கீரர். (நற் 358) இந்த மருங்கூரும் ஊணூர் மருங்கூர்ப்பட்டினமும் (நற்றிணை 258) ஒன்றேயாதல் வேண்டும் என அவையிரு பாடலும் அறிவிக்கும் நெய்தனிலக் காட்சி கருதச் செய்கிறது. ஆனல் பசும்பூண் பாண்டியனது மருங்கை ; தழும்பன் என்ற வீரன் வாழ்ந்த மருங்கை என வேந்தனுலும் வீரனுலும் சிறப்பிப்பனுத

எண்ணின் நக்கீரர் இருவரையும் இணைத்துப் பாடினர் எனலும் இயைபுடைத்தாகும்.

உறந்தை :

"ஆரங்கண்ணி யடுபோர்ச் சோழர், அறங்கெழு நல்லவை உறந்தையென" நக்கீரரால் புகழப்பெற்றது. உறந்தையிலுள்ள அரசவையின் சிறப்பு மிகப் பெரியது. (அகநா 93)

"கடலந்தானைக் கைவண் சோழர்
கெடலரு நல்லிசை உறந்தை"

எனச் சோழ மன்னர்களின் படைப் பெருமையும், அவர்கள் ஆட்சிச் சிறப்பால் அழியாப் புகழ்பெற்றமையும் உறந்தைக்கு அமைந்த சிறப்புக்களாகத் தெரிவிக்கப் பெறுகின்றன. (அகநா 369)

இவ்வூரின் கீழ்த்திசையில் வேண்மான் அறப்பெயர்ச் சாத்தனுடைய பிடவூர் இருப்பதாகப் புறநானூற்றில் நக்கீரர் தெரிவிக்கின்றார். (புற 395)

"தமிழ் அகப்படுத்த" எனத் தமிழ்நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் உள்ள என்றும் நீங்காத இயைபுபற்றி வழங்கிய சிறப்பு நுனித்தறிந்து இன்புறத்தக்கதாம்.

பவத்திரி :

கடற்கரை ஓரமாக உள்ள கடற்கரைச் சோலை சூழ்ந்த ஓரூர். இதனழகால் தலைவியின் மேனியழகு அளக்கப் பெறுகின்றது. (அக நா 340 வரி 7, 8.)

இரண்டாம் நாள் சொற்பொழிவு

அன்பும் பண்பும் அமைந்த தலைவர் அவர்களே! ஆசிரிய நண்பர்களே மாணவ மணிகளே!

இன்று நக்கீரர் நாளின் இரண்டாவது நாள். முதல் நாளிலே நக்கீரருடைய வாழ்க்கை வரலாறு, புலமைத்திறன், இவராற் பாடப்பெற்ற மன்னர்கள் வேளிர்கள், அவர்கள் காலத்து புலவர்கள், காலம், நக்கீரர் காலத்து நாட்டுநிலை, செய்யுள் அமைப்பு, அவராற் பாடப்பெற்ற யாறுகள், நீர்த் துறைகள், இடங்கள், நகரங்கள் நாடுகள் முதலியவற்றை அகச் சான்று துணைச் சான்றுகள் கொண்டு சிந்தித்தோம்

இன்று, அவர் பாடலில் வந்துள்ள உயிரினங்கள், மரம் செடிகொடி வகைகள் பூக்கள், மக்கள் அவர்கள் சமுதாய அமைப்பு, பல்லிய வகைகள், போர்முறைகளும் அவற்றிற்குரிய கருவிகளும், பருவ காலங்களைப்பற்றிய நிகழ்ச்சிகள், அணி யாடை வகைகள் தெய்வங்களும்—அவர்களை வழிபடுமுறை களும், அவர்காலத்திய வழக்கங்கள், உவமநலம், சில பாடல் களின் சுவைநலம், என்ற அடிப்படையில் சுவைக்க இருக் கிறோம் அவற்றுள் முதலாவதாக உயிர் வகைகளிலே நீர் வாழ்வனவற்றைப்பற்றிய குறிப்புக்களை நக்கீரர் வாய்மொழி யாகக் கூறுகின்றேன்.

மீன் வகை

வரால் :

இம்மீனைப்பற்றிய சுவையான நிகழ்ச்சியொன்றை நக்கீரர் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுகின்றார். வரால்மீன் பிளந்தவாயையுடையது. உடல் முழுதும் வரி வரியாகப் பல வரிகளையுடையது; அது தூண்டிலிலுள்ள இரையை விழுங்கு கிற தூண்டில் இரை தனக்கு எமனாகப்போகிறது என்பதை அம் மீன் அறியவில்லை; விழுங்கிவிட்டது. விடுபடுவதற்காக மேலே

துள்ளியது ; அதனல் அல்லியின் மெல்லிய இலைகள் கிழிந்தன ; பக்கவாட்டிற் பாய்ந்தது ; அதனல் குவளை மலர்கள் பல சிதைந்தன ; கிடந்து புரண்டது ; அதனல் வள்ளைக்கொடிகள் கலங்கின. இந்நிலையில் தூண்டில் போட்ட பாணன் வராலை வலிந்திழுக்கின்ருன். அவன் இழுக்க இழுக்க அது வரவில்லை. மூக்குக் கயிறும் தலைக்கயிறும் இட்டு இழுக்கின்ற முரட்டுக் காளையைப்போல மதமிகுந்து அக்குளத்தையே கலக்குகிறது என்கிருர். இது எத்தகைய இயற்கைக் காட்சி. இதனல் வரால் மீனின் இயற்கை ஓரளவு அறிவிக்கப்பெறுகின்றது. (அக 36)

சுரு மீன் :

இது மீனினங்களிற் பெரியது. கோவேறு கழுதை உப்பங் கழிகளில் இறங்கி அதனைக் கடக்க முயலும்போது சுருமீன் அவற்றின் காலைத் தாக்குகின்றன அதனல் அவற்றின் காலிற் புண்பட்டு அவை இரவில் இயங்க முடியாமல் வருந்துகின்றன என்கின்ருர். (அகநா 120)

வாளை :

வாளைமீன் வேட்டையைப்பற்றிய குறிப்பு, உழவர்கள் காவிரியாற்று மடுக்கள் கலங்கும்படி நடு இரவிலே இருள் சூழ்ந்த நேரத்திலே சென்று வேட்டையாடுவர் என்றும் மறுநா காலை அம்மீனைக் கரைசேர்ப்பர் என்றும், அம்மீன்கள் உரு திரண்ட கொம்புகளையுடையன என்றும் கூறப்பெற்றுள் (அகநா 126)

நற்றிணையில் நக்கீரர் கூறுவது ஓரழகான ப செழியன் பெருங்குளம் என்பதொரு குளம். நீர் யிருந்தது ; மடையடைத்திருந்தது ; தாகை உ கொண்டது. அதன்வழியே உருண்டுதிரண்ட யுடைய வாளை மீன் ஒன்று வாய்க்கால் வழியே ஓ நிறைந்த வயிலிற்புகுந்தது. அங்கே எருமைக் கடாக்க கொணடிருந்தன ; மாடுகளின் காலிற்பட்ட சே புள்ளிகளோடு கூடிய உழவர்கள், கோலால் அஞ்சாது செருக்குற்றுச் சேற்ருேடு வரப்படிக்

வரப்பைக் கடக்க முடியாமையால் அவ்வரப்படியிலே புரண்டது என்கின்றார். (நற் 340)

இரு மீன் :

இம்மீன் காக்கைகட்கு இரையாவது. இம்மீன் சிவப்பாக இருக்கும். இதன் தலை பஞ்சுபோலிருக்கும் என உருவ அமைப்பையும் உணர்த்துகிறார். (நற் 31, 358)

விலங்கு வகை

காளை :

காளைகள் கயிறிட்டு இழுத்துப்பிடித்தால் கட்டுக்கடங்காது துள்ளிக் குதிக்கும் (அகநா 36) தங்களை மேய்க்கும் இடையர்களின் அழைப்பொலியை யறிந்து பசுக் கூட்டங்களையும் சேர்த்துக்கொண்டு தங்கள் தலைவனை வந்தடையும். நல்ல வளர்ந்த கொண்டைகளோடு விளங்கும். கழுத்தில் தங்களை மேய்க்கும் இடையர்களுக்கான உணவடைத்த மூங்கிற் குழாய்களைச் சுமந்து செல்லும் என்ற பண்புகள் உணர்த்தப் பெறுகின்றன. (அகநா 253)

புரவி :

'கொய்சுவற் புரவி' (அக 36) 'விரியுளை நன்மா' (நற். 367) ... பகுதிகள் குதிரைகளின் பிடரிமயிர் கத்தரிகையாலே ...யப்பெற்று அழகு செய்யப் பெற்றுள்ளது என்பதும், ...ின் தலையுச்சியிலே விரிந்துதொங்குகின்ற தலையாட்டங் ...ணிந்திருக்கும் என்பதும் அறிவிக்கப்பெறுகின்றன. ... ஆங்காங்கு அவற்றின் வேகமும் சதியும் உணர்த்தப் ...றன.

... ஆண் களிறு எனவும், பெண் பிடி எனவும் வழங்கப் ...லையின் கண் வாழ்வது, காட்டில் வாழ்வது, நதிக் ...ாழ்வது என வாழிடம் நோக்கி மூன்றாகும். ஆனல் ...யும் தோற்றத்தால் ஒற்றுமையும், சிறுபான்மை ...டையது. துதிக்கையையுடைமையால் 'பெருங்

கையானை' எனவும். மதநீர் ஒழுகுவதால் கடாஅ யானை' எனவம் இலக்கியங்களில் வழங்கப்பெறுகின்றன. (அகநா 57 20·)

நக்கீரர் மலையிலிருந்து அருவி ஒழுகுவதை யானையின் கன்னப்பகுதியிலிருந்து மதம் ஒழுதலுக்கு உவமிப்பர். மதத்தால் நனைந்த கவுளையும், மத்தகம் கன்னம் இவற்றிலிருந்து வழிந்து வாயிற்புகும் மதநீரையும் உடையயானை எதிரியில்லாமையால் வேங்கை மரத்தில் மோதிப் பூக்களையிழந்து கிளைகள் வருந்த அடிமரத்தை முட்டி, செம்மண் நிலத்துப் புழுதி படிந்து போர்க்களம் புக்க வீரன்போல ஆரவாரிக்கின்றன என்கிறர் யானைகளின் கொம்பு மிக வெண்மையானது; (அக நா 290) போர்த்தொழிலையன்றிப் பிறதொழிலைக்கல்லாதன (நற்றி 340 வெண்புள்ளி விழுந்த நெற்றியையுடையன; வாயில் மதநீர் புக வீரன்போல வலிமையொடு நிலத்தையறைந்து ஓடிவந்து ஆட்களைப் பிடித்தலில் சிறிதும் தவருதன. கண்டார் அஞ்சத் தக்க கையையுடையன. கரியன (93 அக) ஆளிக்கு அஞ்சித் தம்மினத்தையே காப்பன என்பது நக்கீரர் காட்டுங்காட்சி.

கலை :

முசுக்கலை என்பதன் ஒருசார் பெயர். குரங்கு என்பது பொருள். குரங்குகள் நாரத்தம் பூ உதிர மரக்கிளைகளில் தாவி விளையாடுகின்றன. (அகநா 141) கூட்டமாக வாழ்கின்றன; அஞ்சிய வழி வேங்கை மரத்தின் உயர்ந்த கிளைகளில் ஏறித் தம்மினத்தை அழைக்கும வழக்கம் உடையன; (அகநா 205) என்ற செய்திகள் அறிவிக்கப்பெறுகின்றன.

புலி :

ஒளியோடு கூடிய வரிகளை உடலில் உடையவை. கொடுமையும் வலிமையும் மிக்கன; மலையிடங்களில் இரையை விரும்பி வேட்டையாடுவன. (அக 249) பெரிய களிறுகளையும் கொல்லும் வலியுடையன; யானையைக் கொல்ல, அது தம்மிடபக்கத்தே வீழ்ந்தமையால் அவற்றை உண்ணுத இயல்புடையன. வெற்றிக் களிப்பால் மலையும் அதிரும்படி உறுமுவன. (389 அக) என்ற செய்திகள் குறிக்கப்பெறுகின்றன.

மான் :

மான்களுக்குள் உழைமான் என்பதொருவகை. புலியின் ஒலிகேட்டுக் காட்டிலே கவர்பட்ட வழியாக ஓடுகின்றன. கூட்டமாக வாழும் இனத்தன என்பதை யுணர்த்துகிறார்.

ஆளி :

யானைகள் அஞ்ச பிளிறுவன. இதன் ஒலியைக் கேட்டு அஞ்சிக் களிறுகள் பிடிகளைத் தழுவுகின்றன. சூலுற்றபிடிகள் களிறுகள் தழுவி அஞ்சாதே யெனவும் நடுங்குகின்றன என அதன் ஒலிக் கொடுமை யுணர்த்தப்பெறுகின்றது. (அகநா 78)

கோவேறு கழுதை:

இது அத்திரியென வழங்கப்பெறுகின்றது. இளையர் ஏறிச் செலுத்தும் ஊர்தியாகப் பயன்படுவது. உப்பங்கழி முதலான நீர்நிலைகளையும் கடந்து செல்வது. மாலையில் நீர் நிலையில் இறங்கியபோது சுறாமீன் கடிக்க அதனால் கால்கள் புண்ணுற்று விரைந்தோட மாட்டாதன ஆயின என்று (அக நா 120ல்) குறிப்பிடுகிறார் நக்கீரர்.

பறவைகள் :

நக்கீரர் செய்த பாடல்களில் வந்த பறவையினங்களையும் அவற்றின் பண்புகளையும் ஆராய்வோம்.

வெளவால் :

இது வாவல் என இலக்கியங்களில் வழங்கப்பெறும். சிறிய மெல்லியதோற் சிறகினையும் சிவந்த காலையும் உடையது. வெயில் வெப்பத்தையும் பொருட்படுத்தாது நெடுந்தூரம் வானில் பழுத்த மரங்களை நாடிப்போகும். அங்கு வேனிற் கொடுமையால் பழங்கள் உதிர்ந்துபோக, உலவை மரங்களில் உட்கார்ந்துகொண்டு, பழங்களை நிரம்பப் பெற்றுண்ட பழைய நாட்களை எண்ணி இனியும் அத்தகைய நாள் விரைவில் எய்தவேண்டும் என ஏமாந்து காத்திருக்கும் என்கிறார். (அக நா 57)

அன்றில் :

ஒன்றைவிட்டொன்று பிரியாமல் ஆணும் பெண்ணுமாக இணைந்தே வாழும் பறவை. இது நெய்தனிலத்திலே பனைமரங்களில் கூடுகட்டி வாழும். மாலையில் தன் துணையைத் தேடி மணற்பரப்பில் இருந்து அகவும். (அகநா 120)

மயில் :

மலைநாட்டில் வாழும் பறவை. தினை முதலிய தானியங்களை விரும்பியுண்பது. குறவன் தன் தோட்டத்தில் விளைந்த தினையைக் கடவுளுக்குப் பலியாக இட்டானாக அவற்றை மயில் அறியாமல்தின்றது. தேவராட்டி, தெய்வமேறி வெறியாடுவது போல மயில் ஆடிற்று என்றறிவிக்கப் பெறுகிறது. (குறுந் 105)

குருகு :

வாழைமரத்தின் மட்டைகளிலே வசிப்பது. மகளிர் அவலிடிக்க உலக்கையை ஓங்க, அதற்கு அஞ்சி, வாழையை விட்டுப் பறந்துபோய் உயரமான மாமரத்தின் உயர்ந்த கிளைகளிலே இருக்கின்றன என அறிவிக்கப்பெற்றுள்ளது. (அகநா 141)

நிலாப்போலும் வெண்மணல் பரந்த கடற்கரையிலே புன்னைக் கிளையில் இருக்கும் கடுஞ்சூல் கொண்ட வெண் குருகு கடலோதம் பெருகுந்தோறும் அஞ்சுகின்றன என நக்கீரர் நற்றிணையிற் கூறுகின்றார். (நற் 31)

கொக்கு :

குருகும் கொக்கும் ஓரினமாயினும் சிறிது வேறுபாடுடையன சூரியன் மறையும் மாலை வேளைகளில், கொக்குகள் மீனருந்திக் கூட்டமாகச் செவ்வானத்தை ஊடறுத்துப் பறந்து போகின்றன என்ற இயற்கை உணர்த்தப் பெறுகின்றது. (அகநா 120) கொக்கின் இல்லற வாழ்க்கையினைப்பற்றி நக்கீரர் கூறுவது ஒரு சுவையான பகுதி. ஆண் கொக்கு நாட் காலையிலேயே மீன் வேட்டைக்குப் புறப்பட்டுப் போயிற்று.

அங்கே பரதவர் கூடிய வலையிற் சிக்கியது. மாலைநேரம் வந்து விட்டது. தன் ஆண் வரவில்லை. பெண் கொக்கு இறை எடுக்காமல் தன் குஞ்சையும் தழுவிக்கொண்டு வேகவேகமாகப் பனையுச்சியில் பறந்துபோய் உட்கார்ந்துகொண்டு ஒலிக்கின்றது என்கிறார். (அக 290)

கொக்கிற்கு வெண்தோடுபோன்ற கயல் மீன்களை யுண்பதில் விருப்பம். ஆதலால் மீன்களைப் பெறுவதற்காக, உழவர் பாய்ச்சலுக்காக காஞ்சி மரத் துண்டுகளை நட்டு, கரும்புகளைக் குறுக்கே வரிச்சாகக் கட்டிச் செய்த அணைகளின் மீது இருக்கின்றது என்ற பகுதி கொக்கின் இயல்பைத் தெரிவிப்பது. (அகநா 346)

காக்கை ;

வெண்காக்கை, கருங்காக்கை இரண்டும் நக்கீரரால் குறிக்கப்பெறுகின்றன. அவற்றுள், வெண்காக்கை சிவந்த இறால் மீனை வேட்டமாடி உப்பங்கழிதோறும் தன் பெடையைத் தேடியலைந்து அது கிடைக்காமையால் அழைத்து அழைத்து, அது வந்தபின் அதற்கும் ஊட்டி யின்புறுகின்றன என (நற் 31) அறிவிக்கிறது.

நண்பகலிலே வீடு தேடி வரும் விருந்தினருக்கு விருந்தளித்த மகளிர் புழைக்கடையிற் சிந்திய சோற்றினை உண்டு, மாலைக்காலத்திலே அங்காடித்தெருவிலே பசுமையான இறால் மீனைக் கவர்ந்த காகம், கடற்கரையிலே உள்ள தோணிக் கூம்பிலே தங்கியிருக்கின்றன. (நற் 258) அங்கே என்றும் இறால் மீனின் பஞ்சுபோன்ற தலையினையுடைய உணங்கலைக் காகங்கள் நாட்காலையுணவாக உட்கொள்கின்றன. (நற் 358)

காகங்கள் மிகக் கூர்மையான அலகினையுடைய தன் குஞ்சைச் சேர்த்துக்கொண்டு, இனத்தையும் அழைத்து பொரிக்கறியோடு கூடிய செந்நெலரிசிச் சோற்றைப் பலியோடு உண்ண, குறுகிய இறப்பிலே காத்துக் கிடக்கின்றன என்ற செய்திகள் உணர்த்தப் பெறுகின்றன. (நற் 367)

ஞிமிறு :

நால்வகையான வண்டினங்களில் ஒன்று. இது நல்நாற்றம் ஒன்றிலேயே செல்வது. யானைகளின் மதநீர் மணமுடைய தாகலின் அதனை யுண்கின்றன. இவ்வண்டுகளின்மேல் வரிகள் உண்டு என்கின்றது. (அக நா 78)

புள் :

பறவைகளுக்கு எல்லாம் பொதுப்பெயராயினும், இங்கு வரப்போகும் நன்மையை அறிவிக்கும் காரிப்புள் போன்ற சகுனப் புட்களையேயுணர்த்தி வந்திருக்கிறது. முதன் முதலில் நிமித்தம் பார்த்தல் பறவைகளைக்கொண்டே அறியப்பெற்றதா தலின் சகுனம் பார்ப்பதற்கே 'புள்' எனப் பெயராயிற்று. ஆரிய மொழியிலும் சகுனி-பறவை. அவற்றைக் கொண்டறி யும் நிமித்தம் 'சகுனம்' என்றானமை ஈண்டு இணைத்து எண்ணு தற்கு உரியது. சகுனம் எனினும் பறவையே. தலைவன் வருகை யையே எதிர்நோக்கியிருக்கின்ற தலைவி "புனைவினை நல்லிற் புள்ளும் பாங்கின" என்கின்றான். இதனால் பறவைகளைக் கொண்டே முதன்முதலில் மேல்வரு நன்மை தீமைகள் பார்க்கப் பெற்றன என்பதறியப் பெறும். (அக நா 141)

மரவகைகள்

இற்றி :

"குறுங்கால் இற்றிப் புன்றலை நெடுவீழ்" என்ற பகுதி (அக. 57) இற்றி மரம் ஓங்கி வளராதது. குறுகிய அடியினை யுடையது. அதன் கிளைகள் இலையடர்த்தியின்றி என்றும் புற்கென்றிருக்கும். அதன் கிளைகளிலிருந்து நீளமான விழுதிறங்கும் என்றறிவிக்கிறது.

ஈங்கை :

இது இளவேனிற் காலத்தே தளிர்னும் என்பதை 'ஈங்கை நற்றளிர் நயம்வர நுடங்கும் முற்றாவேனில்' என்ற நற்றிணைப் பகுதியான் நக்கீரர் உணர்த்துகிறார். (நற். 86)

கோங்கம் :

இது முருங்கை யினத்தைச் சார்ந்த நாரில் மரம். இதன் பூ சுரிதகம் போன்றது. (நற். 86)

வாழை :

வீட்டுக் கொல்லைகளிலும் வைத்து வளர்க்கப்பெறுவது. 'தீங்குலை வாழை ஓங்குமடல்' என்பதால் இதனியல்பு உணர்த்தப்பெறுகிறது. (அக. 141)

மருது :

யாற்றங்கரை முதலிய நீர்த்துறைகளில் ஓங்கி வளரும் மரம். "வருபுனல் வையை வார்மணல் அகன்றுறைத் திரு மருது" எனப் புகழப்படுகிறது, (அக. 36)

மா :

"நெடுங்கால் மாசு" (அக. 141) எனப்படுவதால் ஓங்கி வளரும் மரவகையைச் சார்ந்தது என்றார்.

நரந்தம் :

நாரத்தை. முசுக்கலை பாய்வதால் நரந்த மலர்கள் உதிர்கின்றன என்பது மட்டும் குறிக்கப்பெற்றுள்ளது. (அக 141)

மூங்கில் :

"நீடமை நிவந்த நிழல்படு சிலம்பு" "கழைமாய் பிறங்கல்" (அக நா. 205, 249) என்பன மூங்கில் மலைகளின்மீது ஓங்கி வளரும் என்பதும், அடர்ந்து வளரும் என்பதும் அறிவிக்கப் பெற்றன.

வேங்கை :

"பொன்னிணர்ப் புலிக்கேழ் வேங்கை" (அக 227) 'படப்பை வேங்கை' (குறுந். 266) என்பன வேங்கையின் பூ பொன்போன்ற நிறமுடையன. கொத்துக் கொத்தாகப்பூப்பன; புலியின் நிறத்தையுடையன ; மரங்கள் அடர்ந்து தோப்

பாகவும் வளர்வன என்ற இயல்புகள் உணர்த்தப்பெறுகின்றன.

புன்னை :

"கழிசேர் புன்னை" பொன்னிணர் நறுமலர்ப் புன்னை' என்பன புன்னை மரங்கள் உப்பங்கழிகளின் ஓரமாக வளர்வன; பொன் போன்று பூப்பன. நல்ல மணமுடையன என்ற இயல்புகள் உணர்த்தப்பெறுகின்றன 'நிலவு மணல் நெடுஞ்சினைப் புன்னை' என்பது புன்னை நெய்தனிலத்தில் மணற் பாங்கான பூமியில் ஓங்கி வளரும். இலைகள் நீண்டும் உறுதியாகவும் இருக்கும் என்பதைக் காட்டுகிறது (நற். 31)

பனை :

இது பெண்ணை என இலக்கியங்களில் வழங்கப்படுகிறது. "பெண்ணை யோங்கிய வெண்மணற் படப்பை" என்பது பனை கடற்கரை மண்ணில் கூட்டமாக வளரும் என்பதும், அதில் அன்றில் முதலிய பறவைகள் கூடுகட்டி வாழும் என்பதும் உணர்த்தப் பெறுகின்றன. (அக நா 120, 290)

ஞாழல் :

இது இக்காலத்துப் புலிநகக் கொன்றையென வழங்கும். "சிறுவீ ஞாழற் றுறையும் பல" (நற். 31) என்பதால் பூ சிறியது; கடல் அல்லது கழிகளின் அருகே வளர்வது என்பன உணர்த்தப்பெற்றன.

செந்நெல்

"பழஞ் செந்நெல்லின் முகவை கொள்ளாள்... முத்தமொடு நன்கலம் பெறூஉம் என்ற பகுதியும் (அக நா. 126) "பெருஞ் செந்நெல்லின் வாங்கு கதிர் முறித்துப் பாசவலிடிக்கும்" (அக நா 141) என்ற பகுதியும் செந்நெல் பண்டமாற்றுப் பொருளாகப் பயன்பட்டமையும், செந்நெல்லைப் பசுங் கதிராக முறித்து வறுத்து அவலிடிப்பது வழக்கம் என்பதும் அறிவிக்கப்பெறுகின்றன. பாரியின் மலை முற்றுகையிடப்பெற்ற காலத்துக் கபிலர் கிளிகளைப் பழக்கிச் செந்நெற் கதிர்களைக்

கொண்டுவந்து ஆம்பல் மலரவியலோடு மக்கள் அனைவர்க்கும் ஊட்டினர் என்பதும் (அக நா. 78) அறியலாம்.

சிறுதினை :

இது மலையில் புனங்களில் விதைக்கப்பெறுவது. அதன் முதல் வருவாயைத் தெய்வங்கட்குப் பலியாகச் சமைத்திடுவது வழக்கம் என்பன அறியலாம். (குறு 105)

மலர் வகை

இவர் பாடல்களில் சுனை மலர்ஆம்பல், குவளை, வள்ளை, அல்லி முதலிய நீர்ப் பூக்களும் (அக 36) கோங்கமுகை (நற். 86) யும், காந்தள், முல்லை, பகன்றை முதலிய கொடிப் பூக்களும், பீர்க்கம்பூ, நரந்தம்பூ, வாடா மலர் முதலியவற்றைப் பற்றிய குறிப்புக்களும் வந்துள்ளன.

மக்கள்

குறவர் முதலிய மக்களின் சமுதாய ஒழுகலாறு முதல் பல குறிப்புக்களை நக்கீரர் பாடல்கள் நமக்கு அறிவிக்கின்றன. புலவரின் கவிதைகள் சமுதாயத்தின் அன்றைய அமைப்பைக் காட்டும். சமுதாயம் வளரவேண்டிய –வாழவேண்டிய—உயர வேண்டிய உபாயங்களை உணர்த்தும். அந்நிலையில் இவர் கவிதைகள் எங்ஙனம் உதவுகின்றன என்பதை உற்று நோக்குவோம்.

குறவர் :

இவர்கள் மலை வாழ் மக்கள். இவர்களுடைய சிறந்த உணவு தேன். இதனைத் தேம்பிழி நறவின் குறவர்' என்ற சொற்றொடராற் குறிக்கின்றார் நக்கீரர். இனிமையுறப் பிழியப் பெற்றதேனை யுண்கின்ற குறவர்கள் என்பது இத்தொடரின் பொருள். பிழிநறவு தேம்நறவு என்பன, தேனடையில் தேனுள்ள பகுதியை மட்டும் கசக்கிப் பிழிந்து எடுத்தல் மரபாதலையும் அங்ஙனம் எடுக்கப்பெற்ற தேன் இனிமையாக இருக்குமேயன்றிப் புளிப்பு முதலான சுவைகள் கலவாதவை என்பதையும் உணர்கின்றன.

குறவர்கள் தினைப்புனத்தைப் பாதுகாத்தலால் புனவர் எனவும் அழைக்கப்பெறுவர். அவர்கள் தினைவிளைந்த முதற் போகத்தைக் கடவுளுக்குப் பலியாக இடுவர் அது கொத்துக் கொத்தாகவே இருக்கும். மயில்கள் கடவுட் பலி என்பதை அறியாது உண்டு வெறியுற்று ஆடுகின்றன என்ற இயல்புகள்

"புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட சில்குரல்
அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்
சூர்மலை நாடன்"

என்ற குறுந்தொகை 105 பாடலால் உணர்த்தப்பெறுகின்றன.

மறவர் அல்லது எயினர் :

இவர்கள் பாலையில் வாழ்கின்ற மக்கள். எப்போதும் கொலைக்கருவியாகிய வேலை ஏந்தியிருப்பர் என்பது 'மறவர் வேலென விரிந்த' என்பதாற் பெறப்படும். (நற் 86)

உழவர் :

தூண்டில் இட்டு மீன் பிடிப்பதும், (அகநா 36) உழுதலும், வித்தலும் விளைத்தலும் இவர்கள் தொழில் என மருதம்பற்றிய இவர் பாடல்கள் தெரிவிக்கின்றன.

மருத நிலத்து மீன் பிடிப்பாரைத் 'தூண்டில் வேட்டுவன்' என வழங்குவர் நக்கீரர். (அகநா 36) பெண்களைப் பாண்மகள் என விளிக்கின்றார் காவிரியாற்று ஆழமான நீர்நிலைகளிற் பிடிக்கப்பெற்ற வாளை மீனுக்குப் பண்டமாற்றாக நெல்லைக் கொள்ளாமல் கழற்சிக்காய் போன்ற முத்துக்களையும் நல்ல கலன்களையும் விரும்புகின்ற பாண்மகள் எனக்குறிப்பதால் அறியலாம். (அக நா 128)

பரதவர் :

இவர்கள் நெய்தனில மக்கள். இவர்களியல்பை "திண் திமில் எல்லுத்தொழில் மடுத்த வல்வினைப் பரதவர்" (அகநா 340) என்ற தொடர் நன்கு விளக்கும். பகலிலே படகிலே

சென்று மீன் பிடித்தல் இவர்கள் தொழில் என்பதும் இது வல்வினை என்பதும் விளக்கப்பெறுகிறது. தாங்கள் உண்பது மீனுயினும், வந்த விருந்தினர்க்கு விருந்தூட்டும்போது, அவர்கள் விருப்பத்திற்கினியவெண்ணெல்லரிசியை மாவாக்கித் தயிரிட்டுப் பிசைந்து கூழாக்கி மோர்க்கூழை உண்பிப்பர் என்பது.

> "பசுமீன் நொடுத்த வெண்ணெல்மாத் தயிர்மிதி
> மிதவை மா ஆர் குநவே"

என்ற இப்பகுதியால் அறிவிக்கப்பெறுகின்றது

மேலும் இவர்கள் வாழிடம் கடற்காற்று கடுமையாக வீசும் இடம். சுருமீன் கிழித்தமையால் பல முடிகளையுடைய வலை வீட்டு வாசலில் அசைந்தாடிக் கொண்டிருக்கும்; மனை முற்றங்களில் தாழை சூழ்ந்திருக்கும்; என்பனவும் அப்பாடலால் (அக நா 340) உணர்த்தப்பெறுகின்றன.

இவர்களேயன்றிக் கொங்கர் கோசர் வடுகர், கோடியர், யவனர் வடவர் முதலான கூட்டங்களும் குறிக்கப்பெறுகின்றன,

கொங்கர் :

கொங்குநாட்டில் வாழ்ந்த வீரர்கள். இவர்களைப் பசும்பூண் பாண்டியன் வென்றுன் என்ற வரலாறு "கொங்கர் ஓட்டிய நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்" என்ற பகுதியால் குறிக்கப்பெற்றுள்ளது.

வடுகர் :

அயிரியாறு பாயும் எருமை நாட்டு மக்கள். வீரர், நிரை கவரும் செயலில் வலியர். இவர்களுக்குத் தலைவனுக எருமை என்பான் விளங்கினுன் என்பதை (அகநா 253) பாடல் அறிவிக்கும்.

கோடியர் :

இவர்கள் கூத்தர். 'முதுவாய்க் கோடியர்' (குறு 78) எனப்படுகின்றுர். முழவு கொட்டுவதும், பாடுவதும், ஆடுவதும் இவர்கள் தொழில்.

யவனர் :

பன்னெடுங்காலமாகத் தமிழர்களோடுவாணிகத்தொடர்பு கொண்ட அயோனியர்களே யவனர் எனப்பட்டனர். பின்னர் இச்சொல் அயல் நாட்டுக்காரர்களாகத் தமிழ்நாட்டில் வந்தவர்கள் அனைவரையும் குறிப்பதாயிற்று. இவர்கள் நகர காவலராக இருந்திருக்கிறார்கள். கோவலன் அடல்வாள் யவர்னர்க்கு அஞ்சாது புக்கான் என்கின்றது சிலம்பு. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 'நயனில் வன்சொல் யவனரைப் பிணித்து நெய் தலைப் பெய்து, கைகளைப் புறத்தே கட்டிக் கொணர்ந்தான் எனப் பதிற்றுப்பத்துக் கூறுகிறது. இவர்கள் கப்பல் வழியாகப்பல பண்டங்களைக் கொணர்ந்திறக்கினர் என்கின்றது அகநானூறு 149.

நக்கீரர் நெடுநல்வாடையில் மன்னன் மாளிகையில் இரவில் ஒளிக்காக அங்கங்கே விளக்குகள் வைக்கப்பட்டிருந்தன என்ற நிகழ்ச்சியைக் கூறுமிடத்து.

''யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேந் தையகல் நிறைய நெய்சொரிந்து
பருஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி
அறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிருள் நீங்கச்செய்தனர்

நெடுநல் வரி 101-105.

என்கின்றார் நக்கீரர். இதனால் அரண்மனைகளில் அழகுக்காகவும் ஒளிக்காகவும் வைக்கப்பெறும் விளக்குகள் யவனர் தந்தவை என்பது புலனாம். மேலும் யவனர்கள் கொற்றொழில் காவற்றொழில் செய்வதிற் சிறந்தவர்கள் என்பதும் சங்கநூல்களால் உணர்த்தப்பெறும் செய்தி.

வடவர் :

தமிழகத்திற்கு வடக்கிலுள்ள மக்கள். இவர்கள் சந்தனம் அரைக்கும் வட்ட வடிவமான கல்லைத் தமிழகத்திற்கு தந்தவர்கள் என்பதை,

"வடவர்தந்த வான்கேழ் வட்டம்" (அகநா 340)
"வடவர்தந்த வான்கேழ் வட்டம்
தென்புல மருங்கிற் சாந்தொடு துறப்ப"
நெடுநல். வரி 51, 527

என்ற பகுதிகள் நன்கு விளக்குவன.

பல்லிய வகை

நாட்டுமக்களுடைய மகிழ்ச்சி, இசையாலும் தாளவாத்தியங்களாலும் எழுச்சிபெற்றுக் கூத்தால் மலர்ந்து மணப்பது. ஆகவே நக்கீரர் சில இய வகைகளை எடுத்துரைக்கின்றார். அவற்றுள் ஒன்று:

தெண்கிணை:

இது கிணை வகையில் ஒன்று. கிணை என்பது ஒருவகைப் பறை. இது ஆடவர் மகளிர் இருவராலும ஒலிக்கப்பெறுவது கிணை கொட்டுபவன் கிணையன் எனவும், கொட்டுபவள் கிணை மகள் எனவும் வழங்கப்பெறுவர். இக்கிணையின் அமைப்பியல்பினை அகநானூற்று 249 பாட்டாகிய நக்கீரர் பாட்டு

...."வள்வார்
விசிபிணித் தியாத்த அரிகோல் தெண்கிணை"

என்கின்றது. ஆகவே அது வாரால் இழுத்துக் கட்டப்பெற்றதொரு தோற்பறை. இருபக்கமும் திரண்ட சிறு கோலால் தாக்கப்பெற்று ஒலிப்பது என்பதறியப்படும்.

முரசு:

மேகம்போல ஒலிப்பது என்பது "கணங்கொள், இன்னிசை முரசின் இரங்கி என்பதாலறிவிக்கப் பெறுவது. அரசர்களுக்கு அங்கமானது. தெய்வத்தன்மையுடையது என மன்னர்களால் வழிபடப்பெறுவது. பகை மன்னர்கள் முரசையும் குடையையும் கைப்பற்றியே தம் வெற்றியைக் குறிப்பர்.

...முரசொடு வெண்குடை யகப்படுத்து' என்பது நக்கீரர் ...கப்பாட்டுப் பகுதி.

முழவு:

இது தமிழ்நாட்டுத் தோற் கருவிகளுட் சிறந்தது. இது தாள லயத்திற்காக வாசிக்கப்பெறுவது இதனைப்பற்றி 'விசி பிணி பண்ணுர் முழவின் கண் அதிர்ந்தியம்புகிறது" என்கிறது அகநானூறு. இதனால் முழவின் அமைப்பும் அறிவிக்கப்பெறு கின்றது.

யாழ்:

தமிழ்நாட்டிற்கே உரிய நரம்புக் கருவிகளில் ஒன்று. இதனைப் பாணர்கள் தம் வாய்ப்பாட்டிற்குச் சுருதி லயம் போன்று வாசிப்பது வழக்கம். 'பண்ணமை நல்யாழ்' எனப் பாராட்டப்பெறுகிறது. (அகநா 347)

தொண்டகச் சிறுபறை:

மலைவாழ் மக்கள் கொட்டும் பறை இது. முருகனை வழி படுங்காலத்துக் குறவர்கள் தம் சுற்றஞ்சூழ இருந்து கொட்டிக் குரவை யாடுவர் என்கிறார் நக்கீரர். (திருமுரு 196–197 வரிகள்)

முருகியமாகிய தெய்வ வழிபாடு ஒன்றற்கேயுரிய வாச் சியமும், கொம்பும் மணியும் வாச்சிய வகைகளைச் சார்ந்தனவாக முருகாற்றுப்படையுள் மொழிகின்றார்.

போர்க் கருவிகள்

போர்க்கருவிகளே ஆட்சித்திறம் செறிந்த மக்களின் நாகரிகத்திற்கு உரிய காப்புக் கருவிகள். அவற்றின் அமைப்பு, பயன்படுத்தியமுறை இவைகளைக்கொண்டே வரலாற்று சிரியர்கள் சமுதாய அமைப்பின் உயர்வை முடிவு செய்வர். ஆதலால் நக்கீரர் பாடல்களில் வந்துள்ள அளவு போர்க் கருவிகளைத் தொகுத்துப் பார்ப்போம். பாரியை யறிமுகப் படுத்துகின்ற நக்கீரர் வாளமர் உழக்கி, வேந்தரோட்டிய பாரி என்கின்கிறார். இதில் வாளைப் பயன்படுத்தியமை யறியலாம்.

திருமுருகாற்றுப் படையில் வேல், அங்குசம், ஐயிருவட்ட மாகிய புரிசை, மணி இவைகளும் "போர்க் கருவிகளாகக்

குறிக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் வேல் என்பது எறி படையாகிய வேலும், குத்தும் படையாகிய வேலும் என இரு வகைப்படும். முருகன் கைவேல் எறி படையே. இதற்கு எஃகு எனவும் பெயருண்டு. ஐயிரு வட்டம் என்பது கிடுகுப் படை. இதனை இக்காலத்தார் கேடயம் அல்லது தோற்படை என்பர். எதிரிகள் எய்யும் அம்புகளோ, வாள் வீச்சு ஈட்டிக் குத்துக்களோ தம்மேற் படாதவண்ணம் பாதுகாக்கப் பயன் படுவதாம். இது பெரிய ஐந்து வட்டக் கோடுகளையுடைமையின் இப்பெயர் பெற்றது எனலாம், நச்சினார்க்கினியர் ஐ—வியப்பு, இரு—கருமை. ஐயிருவட்டம்—வியப்பினை விளைவிக்கும் கரிய கிடுகுப்படை என்பர். (திருமுரு வரி 111 உரை) மணி வென்றிக் காலத்து இரட்டப்படுங் கருவியாய்ப் போர்க்கு அங்கமாதலின் இதுவும் கருவியுள் அடங்கும்.

இவைகளேயன்றி வாழ்க்கைக்குப் பயன்படு கருவிகளும் இவர் பாடல்களில் வழங்குகின்றன. அவை ஏர், கணிச்சி, தூண்டில் முதலியவைகளும் பேசப்படுகின்றன. கணிச்சி—குந்தாலிப் படை. மழுவாயின் போர்ப் படையாம். உழு படையாகிய ஏர் நாஞ்சில் எனவும், மரங்களைச் செதுக்கவும் குடையவும் பயன்படுங் கருவி உளி எனவும் வழங்கப்பெற்றதை நெடுநல்வாடை காட்டுகிறது. இங்ஙனம் நாள் வாழ்வுக்கும் போர் வாழ்வுக்கும் வேண்டிய கருவிகள் பல குறிக்கப் பெற்றுள்ளன.

காலம்

இயற்கைச் செவ்வியை மிகுத்து மக்கள் மனத்திற்குக் களிப்பூட்டுவன காலங்களே. அதிலும் வேனில் மிக்க அழகை தருவது. அக்காலத்தே வெயில் மிகக் கொளுத்தும். மரங்கள் யாவும் இலையுதிர்த்து, உலர்ந்து நிற்கும். இவ்வியல்பை அக நானூற்று 57ம் பாடலால் அறிவிக்கின்றார். மற்றும், மழை ஓய்ந்துவிடும். மதி நன்கு தோன்றும். உழவர்கள் கலப்பைகளைத் தொங்க விடுவர். (அகநா 141) இளவேனிலைப் பற்றிக் 'கோங்க மொட்டுக்கள் மலரும்; ஈங்கை தளிர்க்கும்' என்கிறார் (நற் 86).

முன் பனிக் காலம் :

இது பிரிந்த மக்களுக்குப் பெருந்துயர் விளைப்பது. இது அற்சிரக்காலம் எனப்படும் இக்காலத்தில் வாடை மிக வீசும். பூக்கள் காம்பு ஊழ்த்து உதிரும். விலங்குகள் குளிரால் நடுங்கும் என்பது உணர்த்தப்பெற்றுள்ளது. (அகநா 78, 8, 11)

இக்காலத்து பகன்றையென்னும் சிவதை வெள்ளிவட்டிலை போல மலரும். (நற் 86)

இளவேனிற் பருவம் கோங்கம் மலருங்காலம்; ஈங்கைகள் தளிர்த்துக் கண்டவர் கண்களைக் கவரும் காலம் (நற் 86)

வாடை :

முன்பனிக் காலத்திற்குரிய காற்று. இதன் பெயராலேயே ஓரிலக்கியம் எழுந்ததென்னின் இதன் சிறப்பு எத்துணையளவு நக்கீரர் மனத்தைக் கவர்ந்திருக்கவேண்டும். நெடுநல் வாடையில், வாடையின் கொடுமையால் காட்டில் ஆடு மாடுகள் முதல் இடையர்வரை நடுங்கி நிற்கும் நிலையைக் காட்டுவர். (வரி 1–70) அது நெடுநல்வாடை ஆராய்ச்சிற்றனியே சிந்திக்கப்பெறும்.

இங்ஙனம் நக்கீரர் இளவேனில் முதலான காலங்களைக் கவினுறக் கற்பனையுடையணிந்து கால மங்கையின் இயல்பு தோன்ற எடுத்துரைத்துள்ளார்.

அணி வகைகள்

அழகுக்கு அழகு தருவன அணிகள். அணிகள், கைவல்ல கம்மியனல் அவ்வக் காலங்களுக்கு ஏற்ற கற்பனையுடன் கலந்து ஆக்கப் பெற்றவை. அவைகளைக் கொண்டே மக்களுடைய வாழ்வின் வளமும், நாகரீக வளர்ச்சியும் அறியப் பெறும். ஆதலால் நக்கீரர் வாய்வழிவந்த அணிகளின் பெயரைத்தொகுத்து நோக்குவோம். பின்னர் சிறந்தன சிலவற்றை அவர் வாய்மொழி கொண்டு விளக்குவோம்.

தொடி, ஒண்தொடி, நன்கலம், பூண், ஆரம், சிலம்பு, தாலி, கிண்கிணி, காசு, முதலியன குறிக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் மகளிர்க்கு மங்கல வணியாகப் பிறர் கண்ணிற்படும் எளிமையில் இருப்பன தொடிகள். தொடிகள் — வளையல்கள், அவற்றில் குறுந்தொடி, தொடியென இருவகையுண்டு, தொடிகள் தோளிற் செறிக்கப்படுவன என்பதைத்தோளோ நெகிழ்ந்தன என்ற தொடரால் அறியலாம். (நற் 197, 1) காசு என்பது தகட்டுவடிவான ஓரணி. இவைகளிற் பலவற்றைச் சேர்த்து இடுப்பில் அணிவது மகளிர் வழக்கம் "பல்காசு நிரைத்த சில்காழல்குல்" என்பது திருமுருகாற்றுப் படை.

சிலம்பு, காலிலணியும் அணி. உள்ளே பருக்கைக் கற்களையுடையதாக நடந்தால் ஒலி செய்வது. மணவினைக் காலத்து இதனைக் கழற்றுதல் ஒரு சடங்காக நிகழும். இதற்குச் சிலம்பு கழி நோன்பு என்பது பெயர். தலைவனோடு சென்ற தலைமகள் அவன் வீட்டிலே மணந்துகொள்கிருள். என்பதனைக் கேட்ட தாய் தன் வீட்டுப் பெருநிலையை எண்ணித் தன் மகள் விட்டுச் சிறுநிலையை

''சிறப்பும் சீரும் இன்றிச் சீறூர்
நல்கூர் பெண்டின் புல்வேய் குரம்பை
ஓ ராயாத்த ஒரு தூண் முன்றில்
ஏதில் வறுமனைச் சிலம்புடன் கழீஇ
மேயினள் கொல் என நோவல் யானே. (அக நா 369)

எனக் காட்டுகிருள். இதனல் சிலம்பு ஏனைய அணிகளைக் காட்டிலும் சிறப்பான இடம் பெற்றுள்ளமை தெளியப்பெறும்.

சிறுபிள்ளைகளுக்குப் புலிப்பற்ருலி கட்டுதல் மரபு என்பதனை 'புலிப்பற்ருலியில் புதல்வர்' என்னும் குறுந்தொகை பகுதியான் உணர்த்துவர். (குறுந் 161)

ஒப்பனை

மகளிரும் மாந்தரும் பருவநிலைக்கும் பயன் துய்க்கும் முறைக்கும் ஏற்பத் தம்மை ஒப்பனை செய்து கொள்வர்.

ஒப்பனைப் பொருள்களாகப் பன்னிற மலர்கள்[1], சாந்தம்[2], மயிர்ச்சாந்து[3], இவற்றையணிவர். தோள்களிற்றொய்யில் எழுதுவர். மார்பில் சந்தனத்தைப் பூசி அதில் தளிர்களைக் கிள்ளி ஒட்டி யழகு செய்வர்[4]. இவை வாழ்வுக் கலையில் உயர்ந்த மக்களின் நிலையாகுமெனப் பலவிடங்களில் உணர்த்துகிறார் நக்கீரர்.

கடவுளரும்–வழிபாட்டுமுறைகளும்

பழந்தமிழ்ப் பண்பாடே கடவுளரை அடியாகக் கொண்டு எழுந்தனவே. தொல்காப்பியமாகிய முதனூலும் 'வேந்தன் மேய தீம்புனலுலகமும்' எனத் தெய்வங்களைக் கொண்டே நிலத்தின் பாகுபாட்டை யுணர்த்தத் தொடங்கியது. நக்கீரர் தமிழரும் தமிழும் வளஞ்சிறக்க வாழ்ந்த காலத்து வாழ்ந்த புலவர், அவர் பாடல்களில் வரும் கடவுளரையும்—வழிபாட்டு முறைகளையும் காண்போம்.

நெடுவேள் மார்பின் ஆரம்போலச் செவ்வாய் வானந் தீண்டிக் கொக்கினம் பறந்து செல்வதைக் காட்டுமுகத்தான் முருகன் தோற்றத்தைக் கூறுகின்றார். இதில் முருகனுடைய சிவந்த மேனியும், மார்பின் அகலமும், அதன்கண் விளங்கும் ஆரமும் கூறப்பெறுகின்றன. (அக நா. 127)

[5] 'கடியுண் கடவுள்'–குறவர்கள் தினை விளைந்தால் முதற் கதிரைக்கடவுளுக்குப் பலியாக வழங்குவர் என்ற செய்தியால் குறவர்களின் கடவுள் வழிபாட்டு முறை ஓரளவு உணரப்படு கிறது. (குறுந். 105)

இவை நீங்க. திருமுருகாற்றுப்படையுள், முருகனை வழி படு முறையும், இயல்பும் பயனும் சிறப்பாக விளக்கப்பெறு

1 அகநா 389 2 அக நா 249-6 3 அக நா 141-13 4 திருமுரு 33–37வரி

5 இதிற் கடி என்னும் பல பொருளொரு சொல்லாகிய உரிச் சொற்குக் காவல் என்னும் பொருளும் உண்டாகவே புனத்திற்குத் தெய்வத்தானும், பிற வுயிர்களானும் ஏதம் வாராதே காத்த கடவுட்குத் தினையின் முதற் கதிரைப் பலியாகப் புனவர் வழங்கினார் எனவும் பொருள் கொள்ளலாம். ஆனால் இப்பகுதியை எடுத்துக்காட்டித் தெய்வச் சிலையார் புதுமை என்னும் பொருள் வந்ததாக விளக்கந் தருவர். ஏனையோரும் அங்ஙனமே (தொல் சொல் வரி 87 தெய்வ)

மாயினும், அதனுள், ஆலமர் கடவுள், மலைமகள், கொற்றவை, முதலான கடவுளரும் உணர்த்தப்பெறுகின்றனர்.

நெடுநல்வாடையுள், மனை கோலும்போது தெய்வம் பராவுதலும், வாயில்களிலும் கதவிலும் தெய்வத்தை வைத்து ஐயவி முதலியன அப்பி வழிபடுதலும் விளக்கப்பெற்றுள்ளன.

ஆகவே, வீடு கட்டுதல், நிலை வைத்தல், திருமணம், புனங் காத்தல், பயிரிடுதல் முதலான நிகழ்ச்சிகள் அனைத்திலும் தெய்வம் பராவிய செய்தியைத் தெரிவிக்கின்ற நக்கீரர் சிறப்பாக முருகனை வழிபட்டால் பெறலரும் பரிசில் பெறலாம் என்றும் காட்டுகிறார்.

சில வழக்கங்கள்

நமது விழாத் தலைவர் நக்கீரனார், தமிழர் வாழ்வில் ஊறிப் பழுத்த சில வழக்கங்களைத் தெரிவிக்கின்ற சிறப்பு மிக ஆழ்ந் தனுபவித்தற்குரியது.

ஒரு வீட்டுத் தலைவன் பொருள் தேடப் போயிருக்கிறான்; நாள் பல கழிந்தன; அந்த வீட்டுத் தலைவியின் தோழி ஐயோ! அவர் போய் எவ்வளவு நாளாயின; நம் தலைவி பிரிவால் எத்துணைக் கவலையுறுவாள் என்று எண்ணிக் கவன்றாள். தன் உயிர்த் தோழி தனக்காகக் கவலைப்படுகிறாள் என்பதனை யறிந்த தலைவி அவளைப் பார்த்து, தோழி நம் தலைவர், நிறை மதியோடு அறுமீன் சேரும் நாளிலே நாம் கொண்டாடும் விளக்கீட்டு விழாவிற்கு வந்துவிடுவார் என் கிறாள்.

> "மழைகால் நீங்கிய மாக விசும்பின்
> குறுமுயல் மறுநிறம் கிளர, மதி நிறைந்து
> அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்
> மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப்
> பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
> விழவுடன் அயர வருகதில் அம்ம"

என்பது அப்பகுதி. (அக நா. 141)

கார்த்திகை மாதத்திலே மழை நின்றுவிடும்; அதனல் உழவு ஓய்ந்துபோம். வானம் வெளுத்துவிடும். இரவிலே நிறை மதியிலே களங்கமெனக் காட்சியளிக்கும் முயலின் கறை தெற்றெனத் தோன்றும்; அத்தகைய நிறை மதி நாளாகிய பூரணையிலே மதியை அறுமீன்களின் கூட்டமாகிய கார்த்திகை மீன் சேர்ந்திருக்கும்; அத்தகைய நாளின் நள்ளிரவிலே தெருவிலெங்கும் விளக்கேற்றி வைத்து வீடுகளில் மாலைகளைத் தொங்கவிட்டு, ஊரொருங்கு கூடி விழாக் கொண்டாடுவர். அவ்விழாவிற்குப் பிரிந்த கணவர் வந்துவிடுவார். தங்கமாட்டார் என்கின்ருர். இதனல் கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்கேற்றும் விழா கார்த்திகை நாளும் நிறைமதியும் கூடிய நாளில்-நள்ளிரவில்—வீட்டிலும் வெளியிலும் விளக்கேற்றி வைத்துக் கொண்டாடப்பெறும் விளக்கு விழா ஆகும். இதுவே பழந்தமிழர் மரபாகக் களவழி நாற்பது முதலிய நூல்களிலும் பேசப் பெற்றுள்ளது. சந்திரனைக் கொண்டறியும் மாத மரபின்படி வந்த இதே விழா, இது எப்படியோ சூரியனைக் கொண்டறியும் மாத மரபின்படி (சௌரமான மாதத்தால்) ஐப்பசி அமாவாசைக்கு முன்னாளாகக் கருதப்பெற்றுத் தீபாவலியாகி நரகாசுரன் கதையைச் சுமந்து வழக்கில் வந்து விட்டது. மாதமாறினலும், கதை வேருனலும் நோக்கமும் காலமும் மாருமலிருப்பதை உற்றுணரலாம்.

இவ்விழா நள்ளிரவில் அதாவது ‘அகலிருள் நடுநாள்’ தெருவில் விளக்கேற்றி வைத்து, வீட்டை மாலைகளாலும் மணப்பொருள்களாலும் புனைந்து கொண்டாடப்பெறுவது என்ற மரபாலும், காதலர் பிரியக்கூடாத—பிரிந்தாலும் ஒன்று சேரும் நாளாகக் கருதப்பெற்றது என அதன் நோக்கமும் இன்றும் மாருமல் இருப்பதை அறிய வேண்டும்.

அதிலும் சிறப்பாகக் கார்த்திகை விளக்கு விழாவில் இன்று நாம் அவல்பொரி படைத்து வழிபடுகிறோம். நக்கீரர் தம் கால நிகழ்ச்சியாகச் சொல்வதைக் கேளுங்கள்,

“துவரப் புலர்ந்து தூமலர் கஞலித்
தகர நாறுந் தண்ணறுங் கதுப்பின்
புதுமண மகடூஉ அயினிய, கடிநகர்ப்
பல்கோட் டடுப்பில் பாலுலை இரீஇக்

கூழைக்கூந்தற் குறுந்தொடி மகளிர்
பெருஞ் செந்நெல்லின் வாங்குகதிர் முறித்துப்
பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கைக்
கடிதிடி வெரீஇய குருகு"

மாமரத்தில் தங்குகின்றது என்கின்றார். இதில் புதுமணப் பெண் உண்பதற்காக கன்னிப் பெண்கள் செந்நெற் கதிர்களைப் பறித்துவந்து அவலிடிக்கிறார்கள். அந்த அவல் ஏனைய அவல்களைப்போல வறுத்து இடிக்கப்பட்டதன்றாதலின் பாசவல் அல்லது பச்சையவலாயிற்று. பல கொண்டைகளை உடைய அடுப்பிலே பாலை உலையாக வைத்து அதிலே அவலை இட்டுக் (பாயசம்) கூழாக்குகிறார்கள் என்கின்றார்.

ஆகவே இன்று நாம் தீபாவளிப் பண்டிகைக்காகப் புதுமணக் காதலர்களை பெண் வீட்டிற் கழைத்துப் பலவகைப் பண்டங்களைச் சமைத்து உண்ணச்செய்து, புத்தாடை யுடுக்கச் செய்து, நள்ளிரவிலே விழாக் கொண்டாடுகிறோம். அது அன்று நம்முன்னோர் மரபில், சங்ககாலத்தில் புதுமணப்பெண் உண்பதற்காக அவலையும் பாலையுங் கூட்டிக் காய்ச்சி பெண்ணுக்கு ஊட்டி கார்த்திகை விளக்கேற்றுவிழவாக நடைபெற்றதாகும். இங்ஙனம் எத்தனையோ பழந்தமிழர் விழா புதிய வரலாறுகளையும், நாட்புரட்சியையும் பொருந்திப் புது விழாவாகத் தலைதடுமாறியுள்ளன என்பதையறிய இப்பகுதி துணையாகின்றது.

அன்றாடம் அடுப்பில் உலை ஏற்றுகின்றபோதே 'தமக் கென்றுலையேற்றார்' தமிழ்நாட்டுத் தாயர்கள். ஆகவே பொருள் தேடப் போகின்ற தலைமகனும் பணத்தாசை யாலா தேடப் போவான்? அவன் பொருள் தேடும் நோக்கத்தைத் தானே சொல்கிறார். கேட்போம்.

கேள் கேடு ஊன்றவும், கிளைஞர் ஆரவும்.
கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்
ஆன்வினைக்கு எதிரிய ஊக்கமொடு புகல் சிறந்து,
... ...
... ... உறந்தையன்ன
பெறலரு நன்கலன் எய்தி நாடும்
செயலருஞ் செய்வினை முற்றின மாயின்
தலைவியை முயங்குகம் சென்மோ

எனத் தன் நெஞ்சிற்குச் சொல்லிக் கொள்கிருன் தலைவன், தான் பொருள்தேடும் நோக்கத்தைத் தஞ் நெஞ்சிற்கே சொல்லிக் கொள்வதால், இவை அவன் மனத்தொடுபட்ட வேட்கையே யன்றிப் பிறர் மெச்சப் பிறந்ததன்று என்பது துணிவு முதலாவதான குறிக்கோள்:- சுற்றத்தார்க்கு ஏதாயினும் கேடுவருமாயின் அவர்களைத் தாங்குவதற்காகப் பொருள் தேவை என எண்ணுகிருன். இரண்டாவதாகச் "சுற்றத்தாற் சுற்றப்பட ஒழுகல் பெருஞ் செல்வம், பெற்றத் தாற் பெற்ற பயன்" ஆதலால் தம் சுற்றத்தார் அனைவரும் நிரம்ப உண்டு மகிழப் பொருள் தேவை என எண்ணுகிருன். மூன்ருவதாக, தனக்குச் சுற்றத்தார் அல்லர். ஆனல் சுற்றமாம் தன்மையர். அவர்கள் பகையும் நட்புமில்லாத அயலார். அவர்கள் தன்னைச் சுற்றமாகக் கொண்டு வாழப் பொருள் தேவை என எண்ணுகிருன். இம்மூன்று காரணங்களுக்காகவே நான் பொருள் தேடுவதில் முனைந்து போகின்றேன் என்னும் தலைவன் குறிக்கோள் எத்துணையுயர்ந்தது. தமிழர் பண்பைக் காட்டுவது ?

பிரிவால் பெருந்துன்பெய்தும் தலைவியே கூறுகிருள். கேளுங்கள். என் தலைவர் புனைவ புனைந்து, பூச்சூட்டிப் பூசுவ பூசி, தொய்யில் எழுதி அடிகளுக்குச் செம்பஞ்சு எழுதி எந் நேரமும் என் பக்கலிலே என்னைப் பாராட்டியிருப்பவர். அத்தகைய காதலர் இன்று பொருள் தேடவும், வெற்றிப் புகழைத் தேடவும் போயினர். அதன் காரணம் என்ன என்று தெரியுமா ? இரப்பவர் வந்து ஏந்திய கைகளிலே புரப்பவர் புதிய புதிய செல்வத்தை நிரம்பக் கொடுக்க வேண்டும். அதுவும் மனம் உவந்து, காக்க வைக்காமல் விரைந்துவந்து கொடுக்க வேண்டும். அப்படி அவர்கள் கொடுக்கும் வண்ணம் அவர்களுக்கு யான் கொடுப்பதற்காகப் பொருள் தேட வேண்டும் என்று போயினர் என்கின்ருள். (அகநா 389) அப்பகுதி.

"... ... ... துனைதந்து,
இரப்போர் ஏந்துகை நிறையப் புரப்போர்
புலம்பில் உள்ளமொடு புதுவதந் துவக்கும்
அரும்பொருள் வேட்டம் எண்ணிக் கறுத்தோர்
சிறுபுன் கிளவிச் செல்லல் பாழ்பட
நல்லிசை தம்வயின் நிறுமார் ... ... இறந்தோர்"

என்பது. பொருள் வேட்டம் எண்ணிச் சென்ருர் என்கின்ருள்; பகைவென்று நல்லிசை நிறுவிப் பொருளும் தேடி வருதலால்.

இவ்வண்ணம் தமிழர் பண்பு செல்வந் தேடுதல் பிறருக்கு ஈந்துவத்தற்கே என்பதை வற்புறுத்துதல் காண்க.

இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி, வேளாண்மை செய்தற் பொருட்டேயாகலான், இல் வாழ்க்கையியற்றும் மகளிர் நன்ருக வெயில் காயும் நண்பகல் வேளையிலே வருகின்ற விருந்தினர்களுக்கு உணவூட்டுகிருர்கள். அப்போது புறங்கடையிற் சிந்திய சோற்றை யுண்டு காகங்கள் மாலையில் கப்பலின் பாய் மரங்களில் கவலையற்று உறங்குகின்றன என்பதால் விருந்தினர் உண்டு தேக்கெறியக் கூடிய அளவு விருந்தளித்த சிறப்பினை.

"கதிர்கால் வெம்பக் கால்காய் ஞாயிற்றுத்
திருவுடை வியனகர் வருவிருந் தயர்மார்
பொற்ருெடி மகளிர் புறங்கடை யுகுத்த
கொக்குகிர் நிமிரல் மாந்தி ஏற்பட
... ... காக்கை, கூம்பிற் சேக்கும் பட்டினம்"

என்ற பகுதி நன்கு விளக்கும்.

இடையர்கள் மூங்கிற் குழாய்களில் உணவை நிரப்பி அதனைக் காளைகளின் கழுத்திலே கட்டி வைப்பர் என்பதனை,

நல்லேற்றுத்
தழூஉப் பிணர் எருந்தந் தாழப் பூட்டிய
அந்தூம்பு அகலமைக் கமஞ்செலப் பெய்த
துறுகாழ் வல்சியர்" (அகநா 253-13-16)

என்ற பகுதி விளக்கும்.

வள்ளல்கள், கிணைப்பாணர்கள் வந்து இரப்பார்களாயின் அவர்கட்கு நல்ல ஏறுகளைப் பொற்கோட்டுப் பொற் குளம்பினவாகப் புனைந்து, பொன்ஞலாகிய மாலைகளைச் சூட்டிக் கொடுத்தலும், பெரிய தேர்களையும் யானைகளையுங் கொடுத்தலும் மரபு என்பதனை முசுண்டையின் கொடைத் திறத்தாற் குறிப்பிடுவர். (அகநா 249)

மன்னர்களுக்குள் பகை மூளின், ஒருவர் ஒருவரை வென்று அவர்கள் காவல் மரத்தை வெட்டி வீழ்த்துதல் வழக்கம் என்பதனைப் "பொன்னிணர் நறுமலர்ப் புன்னை வெஃகித் திதியனொடு பொருத அன்னிபோல்" என்ற (அக. நா. 126) பகுதி தெரிவிக்கும்.

கனவு நல்லனவாகக் காணின் அது வாழ்வில் பலிக்கும் என்பதும், நனவில் காணும் வாய்ப்புள் கேட்டல்போல் வனவும் வரும் பயனை முன்னறிவிப்பன என்பதும் (அக. நா. 141) நெடுநாட் பிரிந்த காதலர் கூடின் 'நலங்கேழாகப் பூண் வரும் பொறிப்பப் புல்லுதல்' ஆராமை யகற்றும் என்பதும் (அக. நா. 93) மக்கள் பழியஞ்சியே வாழவேண்டும் என்பதும் (குறுந். 141) நக்கீரர் பாடலிற் குறிக்கப் பெறுகின்றன.

விலங்கின் செய்திகளாக, மேல் காற்றின் ஒலியை மான் கூட்டங்கள் புலியோசை என்றஞ்சி யோடுவதும், (அக. நா. 249) இடையர்கள் அழைக்கும் ஒலியை யறிந்து காளைகள் பசுக் கூட்டங்களையும் அழைத்துக் கொண்டு இடையர் பக்கம் வரும் என்பதும் (அக. நா. 253) ஆளிக்கு அஞ்சிப் பெண் யானை தன்னை ஆண் யானை தழுவவும் நடுங்குகின்றன என்பதும் (அக நா. 78) உணர்த்தப் பெறுகின்றன.

ஆண் கொக்கு வலையிற் சிக்கிக் கொள்ள, அதன் வரவை மாலை வரை எதிர்பார்த்த பெண் கொக்கு அதனைக் காணமை யால் இரையும் உண்ணமல் வருந்துகின்றது எனப் பறவையின் இயல்பும் காதலும் (அக. நா. 290) உணர்த்தப் பெறுகின்றது.

இவ்வண்ணம் நக்கீரர் எறும்பு முதல் யானையீருன உயிர்த் தொகைகளின் செய்திகளையும், பல தரப்பட்ட மக்கட் பண்பு களையும், உயர்ந்தோர் வாமும் இலட்சிய வாழ்வின் இயல்பு களையும் ஆங்காங்கு விளக்கிச் செல்வர் என்பதனைக் கண்டோம்.

நக்கீரர் பாடலில் வந்துள்ள உவம நலம்

கயிறிடுகதச்சே போல மதமிக்கு—வாரல் நாட்கயம் உழக்கும்.
அக 36, வரி 7.

"பெருங்கை யானை நிவப்பிற் றூங்கும் குன்றம்"
அக நா 37, வரி 9–10.

'ஞாட்பின் அரும்பூண் உறுநரின் வருந்தினள்'
அக நா. 37, 16-17

"உறந்தையன்ன பெறலரும் நன்கலம்" —93-5.

"வரை குயின்றன்ன வான்தோய் நெடுநகர்" —93-12.

"நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை" —93-13.

நெடுவேள் மார்பினாரம்போலச்
செவ்வாய் வானந் தீண்டி...கொக்கினம் நிரைபறையுகப்ப"
– 120–1–3.

' திதியனெடு பொருத அன்னிபோல விளிகுவை" –126–16-17.

'கயலெனா அமர்த்த உண்கண்' அக நா. 126, 19-21.

"புயலெனப் புறந்தாழ்வு இருளிய பிறங்கு குரலைம்பால்"
அக நா. 126, 19–21

"மின்னேர் மருங்குல்" அக 126, 19–21.

"உயிர்கலந் தொன்றிய தொன்றுபடு நட்பின்
செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர் போலத்
தையல் நின்வயிற் பிரியலம்" —அக நா. 205, 1–3.

"காவிரிப் படப்பைப் பட்டினத்தன்ன
செழுநகர்" —அக நா. 205, 12-13.

"சிலம்பின் கடாஅ யானைக் கவுள் மருங்குறழ"
—அக நா. 205, 16-17.

"புலியுரி வரியதள் கடுப்ப கலிசிறந்தது
நாட்பூ வேங்கை நறுமல ருதிர" – அக நா. 205, 19-20.

"வேங்கைப் பூஞ்சினை புலம்ப
முதல் பாய்ந்திட்ட முழுவலி ஒருத்தல் —அக நா 227, 8–9.

... .
களங்கொள் மள்ளரின் முழங்கும்'' —அக நா. 227, 10-12.

''மருங்கூர்ப் பட்டினத்து, எல்லுமிழாவணத் தன்ன
கல்லென் கம்பலை'' —அக நா 227, 20–27.

''வேம்பியன்ன என் நல்லெழிலிள நலம்'' -அக நா. 249, 9 10.

''அலர்,... ... ...கூடலாடிய இன்னிசையார்ப்பினும் பெரிதே''
— அக நா. 253, 7-8

திங்களன்ன திருமுகத்து - அக நா 253-25.

''பல்பூங் கானல் பவத்திரியன்ன இவள் நல்லெழிலிள நலம்''
—அக 340, 7-8.

''மாரிச் சுதையினீர்ம் புறத் தன்ன
கூரற் கொக்கின் குறும்பறைச் சேவல்'' — அக நா. 346, 2-3.

''வெள்ளி வெண்தோடன்ன கயல்'' அக நா. 346 : வரி 4.

''உறந்தையன்ன நிதியுடை நன்னகர்ப் புதுவது புனைந்து''
அக நா. 349 : 14-15.

நல்கூர் பெண்டின் ... ...வறுமனைச் சிலம்புடன் கழீஇ
மேயினள். 369 : 23-25.

''களிறு தொலைச்சிய இருங்கேழேற்றை... .. உருமின்
முழங்கும்'' 389 : 20-23.

"அருவி முழவின் ததும்பிச் சிலம்பினிழிதரும் மலை"
குறு[illegible] : 1-2.

"பொன்போற் சிறுதினை." குறுந் 105 : 1.

"மஞ்ஞை ஆடுமகள் வெறியுறு வனப்பின் வெய்துற்று
நடுங்கும் மலை" குறுந் 105 : 3–4.

"ஆடமை புரையும் பணைத்தோள்" குறுந் 131 : 1.

ஈரம்பட்ட செல்விப் பைம்புனத்து
ஓரேருழவன்போலப்
பெருவிதுப் புற்றனனல் நோகோயானே. குறுந் 131 : 3–5.

நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சின்
கடப்பாட்டாள னுடைப் பொருள்போலத்
தங்குதற் குரிய தன்று... ... ...மேனி பாஅய பசப்பு.
குறுந் 143 : 4–7.

"ஆரம் நாறு மார்பினன்
மாரியானையின் வந்து நின்றனனே'' குறுந் 161 : 6–7.

நளிநீர்நீந்தத்து
இடிகரைப் பெருமரம்போல
தீதில் நிலைமை முயங்குகம் பலவே குறுந் 368 : 6–8.

"மறவர் வேலென கதுப்பின் தோல" நற் 86 : 1–2.

''பாண்டிலொப்பின் பகன்றை" நற் 86 : 3.

பீரிவர் மலரிற் பசப்பூர்ந்தன்றே நற் 197 : 2.

பொலந்தொடிபோல மின்னி நற் ,, : 9.

''இன்னிசை முரசின் இரங்கி'' நற் ,, :10.

''மன்னர் எயிலூர் பல்தோல் போலச் செல்மழை தவழும்''
நற் 197 : 11–12.

''கொக்கு உகிர் நிமிரல்" நற் 258 : 6

''மருங்கூர்ப் பட்டினத்தன்ன இவள்" நற் 258 : 10.

''வாணன் சிறுகுடியன்ன என்" (தலைவி கூற்று) நற் 340 : 9.

''பசும்பூண் வழுதி மருங்கையன்ன என்...கவின்''
நற் 358 : 10-11.

'ஞாயிறு கடற்கண்டாங்கு இமைக்கும் ஒளி' திருமுருகு 2-3.

செல் உறழ் தடக்கை திருமுரு. 5.

'கோபத்தன்ன தோயாப் பூந்துகில்' திருமுரு. 15.

'கூற்றத்தன்ன மாற்றரு மொய்ம்பின்' திருமுரு. 81.

'கால்கிளர்ந்தன்ன வேழம்' திருமுரு. 82.

'பொலங்குழை வான்மதி கவைஇ,
அகலா மீனின் இமைப்ப' திரு. 87–88

'கொடிபோல் நுசுப்பு' ,, 101

'வலம்புரி புரையும் வால்நரைமுடி' ,, 127

'புகை முகந்தன்ன மாசில் தூவுடை' ,, 138

'மாவின், அவிர் தளிர் புரையும் மேனியர் ,, 144

'பொன்னுரை கடுக்குந் திதலையர்' ,, 145

'அழலென உயிர்க்கும் பாம்பு' ,, 149

'மீன்பூத்தன்ன தோன்றலர்'	,,	169
'வளி கிளர்ந்தன்ன செலவினர்'	,,	170
'வளியிடைத் தீயெழுந்தன்ன திறலினர்'	,,	171
'தீப்பட உருமி இடித்தன்ன குரலினர்'	,,	172
'மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு	,,	205
'நரம்பார்த்தன்ன இன்குரற்றொகுதி'	,,	212
'முழவுறழ் தடக்கை'	,,	215
'வேறுபல் துகிலின் நுடங்கி... இழிதரும் அருவி	,,	296-316
'குன்று குளிரப்பன்ன கூதிர்ப்பானாள்'	நெடுநல்.	12
'பொன்போற் பீரம்'	,,	14
'மணியுறழ் கமுகின் எருத்து'	,,	23
யாறு கிடந்தன்ன அகல் நெடுந்தெருவில்	,,	30
முத்துறழ் முறுவல்	,,	37
கொள்ளுறழ் நறுங்கல்	,,	50
குன்று குயிறன்ன ஓங்குநிலை வாயில்	,,	88
வரைகண்டன்ன தோன்றல...கருஇல்	,,	108
வரைசேர்புவில் கிடந்தன்ன கொடிய	,,	109
வெள்ளியன்ன விளங்குசுதை (யுரீஇ)	,,	110
மணிகண்டன்ன மாத்திரள் திண்காழ்	,,	111
புனையா ஓவியங் கடுப்ப புனைதுகில் மேனி	,,	147
தளிரேர் மேனி	,,	148
எரிமருள் அவிர்சடை	புற.	56:1
மணிமிடறு	,,	56:2
கடல்வளர் புரிவளை புரையும் மேனி	,,	56:3
மண்ணுறு திருமணி புரையுமேனி	,,	56:5
கூற்றொத்தீயே மாற்றருஞ் சீற்றம்	,,	56:11
வலியொத்தீயே வாலியோனை	,,	56:12
புகழொத்தீயே இகழுநரடுநனை	,,	56:13
முருகொத்தீயே முன்னியது முடித்தலின்	,,	56:14
வெங்கதிர்ச் செல்வ[...]போலவும் குடதிசைத் தண்கதிர் மதியம்[...]வும், நின்று நிலைஇயர்	,,	56:24,25
'வேயன்ன மென்[...]'	,,	395:12
'மயிலன்ன மெ[...]ார்'	,,	395:13

'தன்மனைப் பொன்போல் மடந்தையைக் ,, 395:30
'கொக்கு நிகர்நிமிரல்' ,, 395;36

இவற்றுள் மிக மிக நயமான இரண்டொன்றைச் சுவைப்போம்:

முதல் உவமை: "கயிறு கதச்சேப்போல வரால் நாட்கயம் உழக்கும்" என்பது. வரால் மீன் நன்ருகப் பிளந்த வாயினையுடையது; உடலில் பல வரிகளையுடையது; அதிலும் இளமைத் துடிப்புடையது; இதற்கு உவமை காளை: காளை எனவே இளமையும் வீரமும் தோற்றமும் உடையதென்பது தானே பெறப்படும். அதிலும் கயிறிட்டதால் கதமிக்கது. பொருளாகிய வரால் தூண்டில் இரையை விழுங்க, தூண்டிலிட்டவன் தூண்டிற் கயிற்றைச் சுண்டியிழுக்கிருன். அதனல் வரால் கோபங் கொள்கிறது. தான் வாழ மறைவிடந் தந்த ஆம்பலிலை குவளை மலர் இவைகளைப் பாழ்படுத்துகிறது; துள்ளி விழுகிறது: குளத்தைக் கலக்குகிறது. உவமையாகிய காளையும் மூக்குக் கயிற்றையும் தலைக் கயிற்றையும் இட்டு இடையன் இழுத்துப் பிடிக்கத் துள்ளுகிறது. நீர்நிலையாயின் அதனைக் கலக்குகிறது இவ்வண்ணம் எல்லா வகையானும் இணைந்த இரு பொருள்களை ஒப்புக் காட்டுகிருர் நக்கீரர்.

அப்போது இதனைச் சுவைத்துப் படிக்கின்ற நமக்கு காளையைத்தான காட்டவேண்டும்; கடிவாளத்திற்கஞ்சாது முரண்டு பிடிக்கின்ற குதிரையைக் காட்டக்கூடாதா? அங்குசத்திற்கஞ்சாத யானையைக் காட்டக்கூடாதா? என்று தோன்றலாம். வேற்று நிலத்துப் பொருள்களைக் காட்டுவதைக் காட்டிலும் அதே நிலத்திலுள்ள இரு பொருள்களை இணை காட்டுவதில் எளிமையும் விளக்கமும் இருக்கிறது. அதனல் மருத நிலத்துக் காளையை மருத நிலத்து வராலுக்குக் காட்டி மகிழச் செய்கிருர். அத்தகைய ஊரன் எனத் தலைவனைக் காட்டி, மிகச் சிறந்த உள்ளுறை ஒ[illegible]றையும் உதவுகிருர். வரால் தூண்டிலிற் சிக்கித் தன்னழிவ[illegible] அறியாது மயங்கி, தூண்டில் வேட்டுவன் இழுக்க அதிலிரு[illegible] விடுபட இயலாது துள்ளியதுபோலத் தலைவனும் பரத்[illegible]யின்பம் என்ற தூண்டிலில் அகப்பட்டு, பரத்தை த[illegible]ாக்க இழுக்க,

அவளிடமிருந்து தப்ப முடியாமல் வையைத் துறையிலே வதுவை யயர்ந்தான் என்ற பொருளும் தோன்ற நிற்றல் காண்க. (அகம் 36)

2 "உயிர்கலந்தொன்றிய தொன்றுபடு நட்பின்
செயிர்தீர் நெஞ்சமோடு செறிந்தோர் போலத்
தையல்! நின்வயிற் பிரியலம்" (அக நா. 205)

நட்பு: உயிர் கலந்த நட்பு: உழுவலன்பு என்பார்களே! அங்ஙனம் பல பிறவிகளிற்றொடர்ந்து வரும் பழைய நட்பு! அதனால் இடையீடறக் கலந்த இருவர்; மனத்திலே உட்பகை முதலான குற்றம் சிறிதுமில்லாதவர்கள் கூடினால் எங்ஙனம் அந்நட்பு வாழ்வினும் தாழ்வினும் பிரிக்க இயலாதிருக்குமோ அங்ஙனமான காதல் நின்பாற் கொண்டேன். ஆதலால் நாம் இருவரும் ஒருபோதும் பிரியேம் என்று தலைநாட் புணர்ச்சியிற் சூளுரைத்தான். இன்று பிரிந்தான்; துன்புறுத்துகிறான் என்கின்றாள். இதிலே முதிர்ந்த நட்பினரை—தன் காதலுக்கு உவமை தந்தான் தலைவன். இதனால் நட்பின் கெழுதகைமையும் பழமையும் கூறிக் காதலின் கெழுதகைமையும் பழமையுந் தோன்றச் செய்தல் காண்க.

3 கடப்பாட்டாளன் ஒருவன்; உலகத்தையும்—உலகப் பொருள்களையும் நன்றாக அறிந்தவன்: அவைகள் யாவும் நிலையில்லாதன என்று தேர்ந்தவன்; மன்னுலகத்து என்றும் மன்னியது நிலையாமை ஒன்றே எனத் தெளிந்தவன் ஆதலால் தனக்குப் பின்னும் எஞ்சியிருப்பது புகழொன்றே எனக் கண்டவன். அவன் தன் பொருள்களை நாளைக்கு—பிற்றைக்கு என்று வைத்திருப்பான்? ஓயாமல் வழங்கி வாழ்வான். அவனிடம் பொரு[illegible]ாது. அதுபோல நம் தலைவன் நம் பால் அ[illegible] உடையன். பழிக்கு அஞ்சுவான். விரை[illegible] கொடையாளன்கைப் பொருள் போல நம் பே[illegible]ம் தங்காது என்கின்றாள். (குறுந். 143)

[illegible]லா உவமைகளுமே மிக ஆழ்ந்த—வாழ்வொ[illegible]ன் கருத்துக்களையுடையனவாக இனிமை பயப்[illegible]ாலத்து உருவக முதலிய அணிகள்

பொருளே யுவமமாகவும் வேறுபட வந்த வுவமத் தோற்றமாக வும் அமைந்தன ஆதலால் அவற்றை யாம் வேருக எண்ணேமா யினேம்.

இனி இப்புலவர் பெருமகனருடைய அகத்துறைப் பாடல் களில் நயமான வாழ்க்கைக்கு இன்றியமையாத—சுவையுள்ள சில பாடல்களைச் சிந்திப்போம்.

ஒரு குடும்ப ஓவியம்; ஒரு காதலனும் காதலியும் இல்லறம் நடத்துகிருர்கள்; பொழுதெல்லாம் தலைவியை அழகு படுத்திக் காண்பதிலேயே கழிகிறது. அப்போது அவன் வீட்டிலே இரவலர் சிலர் வருகிருர்கள். அவர்கள் என்றும் இலனென்னும் எவ்வம் உரையாமை யீயவேண்டும் என்பது தலைவன் கருத்து. அதற்கேற்ற நிலையில் செல்வ நிலை இல்லை. ஆனல் செல்வம் இல்லாமலும் இல்லை. மூதாதையர் ஈட்டித் தொகுத்த செல்வம் ஏராளமாக உள்ளது. அதனை ஈவதாற் பயனில்லை என்று எண்ணுகிருன். தன்னுழைப்பால் தான் தேடிய செல்வத்தைக் கொண்டே ஈத்துவக்க எண்ணுகிருன்.

இதன் நடுவே இவனுடைய பகைவர்கள் சிலர். அவர்கள் இளையனென்ருே கோழையென்ருே பண்பற்றவனென்ருே சில சிறு சொற்களைச் சொன்னர்கள்; அவைகளும் இவன் செவியில் வந்து வீழ்ந்தன; இவன் மனத்திலே பெரிய உளைச்சல். அவர்களை யடக்கிச் சிறு சொல்லால் விளைந்த துன்பத்தையும் துடைக்கவேண்டும் என்ற வீரக் கிளர்ச்சி.

இவற்றிற்கு மேலாக 'ஒன்ரு உலகத்து உயர்ந்த புகழல் லால், பொன்ருது நிர்பதில்' ஆகையாலே நல்லிசை நம்வயின் நிறுத்த வேண்டும் என்ற ஆசை பிறக்கிறது. அதனல் மாற்ருரை வென்று புகழாக்கிப் பொருளை வே[illegible]க் தலைவன் மலை களையுஞ் சுரங்களையும் கடந்து [illegible]பிரிவு பெண் மனத்தைக் கலக்குகிறது. அந்நிலையி[illegible] வாழ்ந்த காலத்து நிகழ்ச்சிகளை எண்ணித் த[illegible]ண்மை யன்பை உற்ற தோழிக்கு உணர்த்து[illegible]பாதும் கூடிக் களிக்கின்றபோது களிப்பொன்றே[illegible]ற்கும். ஆதலால், களிப்பிற்குக் காரணமான செய[illegible]களிப்பு இப்படியிருந்தது என்ருே சொல்லிக் கா[illegible]பிரிந்த

நிலையில் துன்ப நுகர்ச்சி, கழிந்த காலத்து இன்ப நுகர்ச்சிகளை சொல்லிச் சொல்லித் துன்பத்தைத் துடைத்துக் கொள்ள ஏது வாகும்; ஆதலால் தலைவி தோழியைப் பார்த்துச் சொல்லுகிருள்

தோழீ! உனக்கொன்றும் தெரியாது; நேற்றுவரை பூங்கொத்துக்களை யணிந்து, மயிர்ச் சாந்தும் பூசப் பெற்ற சுருண்ட என் கூந்தலைக் கைகளாற் கோதி விடுவார்; பூச்சூட்டு வார்; நெற்றிக்குப் பொட்டு வைப்பார்; என்னுடைய மார்பிலே நிறவேறுபாடுடைய பூவிதழ்களைக் கிள்ளி அப்புவார்; பருத்த தோளிலே தொய்யில் எழுதுவார்; என் கால்களுக்குச் செம்பஞ்சு ஊட்டுவார்; இப்படி எல்லாம் என்னைப் பாது காப்பார். நான் பெரிதும் மகிழ வேண்டும் என்பதற்காக என் உயிர்த் தோழியாகிய உன்னையும் பாராட்டுவார்; பகலிற் கூட படுக்கையைவிட்டு இறங்கமாட்டார். வீட்டையே வளைய வளைய வருவார்; அப்படியிருந்தவர், இன்று காதலா—கடமையா? இயற்ற வேண்டியது என்ற மனப் போட்டியிலே கடமை வெல்லப் பொருள் தேடிப் போருக்குச் சென்ருர் அதனல் அத்தகைய இன்ப நுகர்ச்சி இப்போது இல்லையாயிற்று என்று கழிவிரக்கப்படுகின்ற ஓவியம் உள்ளத்திற்கு ஒரு விருந்தாகிறதல்லவா? இந்த இன்பத் தேனை இக்கவிதை மலரிற்காணுங்கள்.

"அறியாய் வாழி தோழி! நெறிதூல்
சாந்தார் கூந்தல் உளரிப் போதணிந்து
தேங்கமழ் திருநுதல் திலகந் தைஇயும்,
பல்லிதழ் ழெதிர்மலர் கிள்ளி வேறுபட
நல்லிள வனமுலை யல்லியொ டப்பியும்,
பெருந்தோள் தொய்யில் வரிந்தும், சிறுபரட்டு
அஞ்செஞ் சீறடிப் பஞ்சி யூட்டியும்,
எற்புறந்தந்து, நிற்பாராட்டி
பல்பூஞ் சேக்கையிற் பகலும் நீங்கார்
மனைவயின் இருப்பவர் மன்னே! துனைதந்து
இரப்போர் ஏந்துகை நிறையப் புரப்போர்
புலம்பில் உள்ளமொடு புதுவதந் துவக்கும்
அரும்பொருள் வேட்ட மெண்ணிக் கறுத்தோர்
சிறுபுன் கிளவிச் செல்லல் பாழ்பட
நல்லிசை தம்வயின் நிறுமார்

... ...

... ...

நெடுமர மருங்கின் மலையிறந் தோரே" (அகம் 389)

வற்புறுக்குந் தோழியைப் பார்த்து, 'நீ அறியாய்' என்கின்ருள்; தலைவன் தனக்குச் செய்த தலையளிகளைத்தானும் அவனுமே அறிவோம்; என்ற நயந்தோன்ற, மேலும் தனக்காகக் கவலும் அவளை நோக்கி 'நின்னையும் பாராட்டினன்' என்கின்ருள். தலைவனுக்குத் தோழி மீதுள்ள கருணையை அவளறியின் மிக மகிழ்வாள் என்றெண்ணி; இங்ஙனம் கருத்தொத்த குடும்பத்தின் காட்சிகளைச் சொல்லும் அழகு இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத நயமான பகுதியாம்.

மற்ருெரு காட்சி: தலைவியுந் தோழியும் மனையின் புறக்கடைத் தோட்டத்திலே நிற்கிருர்கள் தலைவன் அந்தப் பக்கமாக வருகிருன் நேற்று மூன்னுள் அவன் வந்துபோனபோது தோழி தலைவனைப் பார்த்து 'ஐய! தாங்கள் இங்ஙனம் களவின் ஒழுகுதல் கூடாது. தாங்கள் வருங்காலத்தைக் காட்டிலும் வாராக்காலம் தலைவிக்கு கொடிதாகத் தோன்றுகிறது. அதனல் மெலிகின்ருள். ஆதலால் நீ விரைவில் வரைந்துகொள்; கவவுக்கை நெகிழாமல் வாழ்க' என வற்புறுத்தினள் அது கேட்டுச் சென்ற தலைமகன் இன்று வருகிருன். சிறைப்புறம் நிற்கின்ருன். அவன் காதிலும் படும்படியாக இவர்கள் இருவரும் பேசிக் கொள்கிருர்கள். தோழி, 'அம்மா! உன் தலைவர் இன்றே வருவார்; நீ ஆற்றியிரு' என்கின்ருள். தலைவி 'தோழீ யான் எங்ஙனம் ஆற்றுவேன்? யான் மணப்பதற்குமுன். புலிநகக்கொன்றைக்காடு செறிந்துள்ள இக்கடற்கரை மிக இனிமையாயிருந்தது. ஆண் காக்கைகள் இங்கே உப்பங்கழிகளிலே இருல் மீனைத்தேடிப் பிடித்து எடுத்துத் தத்தம்பெடையை அழைத்து அதற்கு ஊட்டும். அதனைப் பார்த்துச் சுவைத்துக்கொண்டேயிருப்பேன். எப்போது என்ரு! கேட்கிருய்? நான் அவரை மணப்பதற்கு முன்பு அவரை மணந்த பிறகு எனக்கு எப்போதும் அச்சந்தான். பழகிய கடலும் அதன் அலையும்கூட அச்சுறுத்துகிறது.

இந்தக் கடல் குருகுக்குப்புதிதா? இந்த அலை தான் புதிதா?

அதுவுமில்லை பெண் குருகு சூல் கொள்வதற்கு முன்பு அச்ச மின்றி யுலாவிக்கொண்டிருக்கும். இப்போதோ மிக உயர்ந்த புன்னைக்கிளையில் இருக்கும் சூலுற்ற குருகு கடலோதத்தைக் கண்டு கலங்குகிறது. அத்தகைய கடற்கரையையுடையவன் என் தலைவன் என்கிறாள்;

இதில் 'இருல் எறிந்த வெண்காக்கை, பனிக்கழி துழைஇ பெடைக்குப் பயிரிடூஉச் சுரக்கும்' துறையாதலின் இத்தகைய பேறு எமக்கில்லையே; எங்காதலன் எம்மையழைத்து இன் பூட்டிக் களிப்புச் செய்கின்றானில்லையே என்ற இறைச்சிப் பொருள்தோன்ற நிற்றல் காண்க;

அங்ஙனமே நிலாப்போல மணல் பரந்துள்ள கடற்கரையிலே புன்னை மரத்திலே உயர்ந்த கிளையிலே இருக்கின்ற சூலுற்ற வெள்ளைக்குருகு ஓதம் பெருகிவரும்போதெல்லாம் நடுங்குகிறது. இச்செய்தி தலைவனைக்கூடி இயல் மாறுபட்ட தலைவி, தாய் அயலார் முதலியோர் அலர்தூற்றுகின்ற காலத்திலே அஞ்சுகின்றாள் என் உள்ளுறையும் தோன்ற நிற்கின்றது.

மாயிரும் பரப்பகந் துணிய நோக்கிச்
சேயிரு எறிந்த சிறுவெண் காக்கை
பாயிரும் பனிக்கழி துழைஇப் பைங்கால்
தான்வீழ் பெடைக்குப் பயிரிடூஉச் சுரக்கும்
சீறுவீ ஞாழல் துறையுமார் இனிதே;
... ...
நிலவுமணல்
நெடுஞ்சினைப் புன்னைக் கடுஞ்சூல் வெண்குருகு
உலவுத் திரை ஓதம் வெரூஉம்
உரவுநீர்ச் சேர்ப்பனொடு மணவாவூங்கே

என்பது உள்ளுறையும் இறைச்சியும் அமைந்த கவிதை.

படித்த தலைமகன். அவனுயிர்ப் பாங்கன் ஒருவன். தலைமகன் விதிகூட்ட மதியைப் பறிகொடுத்து மயங்கி நிற்கிறான். அப்போது பாங்கன் கூறுவதாக வரும்,

"பெருவரை மிசையது நெடுவெள் அருவி
முதுவாய்க் கோடியர் முழவின் ததும்பி

சிலம்பின் இழிதரும் இலங்குமலை வெற்பா
நோதக்கன்றே காமம் யாவதும்
நன்றென உணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும்பேதைமைத்தே''

என்னும் குறுந்தொகைப் பாடலை நோக்குங்கள்.

தலைவன் ஒரு வெற்பன். மலையுச்சியிலுள்ள அருவி, கூத்தர் முழவைப்போல ஒலித்துக்கொண்டு மலையை விட்டுக் கீழே இறங்குகின்றது. அத்தகைய உயர்ந்த இடத்திற் பிறந்த அருவி, கூத்தர் முழவைப்போல ஒலித்துக்கொண்டு கீழேயிறங் குமலைக்குரியவன். ஆகையால் அம்மலைக்குள்ள தன்மை உன்னிடத்தும் உள்ளது என்கின்றான். உயர்ந்த குலத்திலே பிறந்த நீ இத்தகையது அத்தகையது என ஆரவாரஞ்செய்து கொண்டு உன் நிலைக்கு ஒவ்வாத இழிந்த இடத்திற்றாழ்கின்றாய் என்று உள்ளுறை தோன்றக் கழறுகின்றான்.

அம்மட்டோ மக்கள் மனந்தெளிய அவன் மேலிட்டு, காமம் என்பது ஒத்தார் மாட்டுளதாவது நீ காமங்கொள்கின்றாய். யாரை காமிக்கிறாயோ அவள் காமம் நன்று அல்லது தீயது என்றே அறியாதவள்; அங்ஙனமிருந்தும் உன் காமம் அவள் பாற்செல்கிறது. அதனால் அது பெரும்பேதைமைத்தானது என்றான். பாங்கன் தலைவனைக் கழறலாமேயன்றி இழித் துரைத்தலாகாது; ஆதலால் உன் காமம் பொருந்தாக்காமம் எனல் இழிப்புரையாகும். ஆதலால் அவனைச்சொல்வதற்குப் பதிலாக அவன் செலுத்துங் காமத்தைப் பேதைமைத்து என் கின்றான். இங்ஙனம் ஒத்தகாமம் நன்று; ஒவ்வாக்காமம் தீது. சென்றவிடத்தாற் செலவிடாது தீதொரீஇ, நன்றின் பாலுய்ப் பதுதான் அறிவு என்று எடுத்துக்காட்டித் தகுதியினிறுத்த முயல்கின்ற பாங்கன் முயற்சி உலகிற்கு ஒரு படிப்பினையாகும்

இங்ஙனம் இவர் கவிதைகள் ஒழுகலாறு-ஒழுக்கமாகிய நீதி இலட்சிய வாழ்வு இவற்றை உணர்த்துவன என்பதைப் பலவிடங்களிற்காணலாம்.

இன்று புலவர் நாளின் மூன்றும் நாள்

தலைவர் அவர்களே! தமிழறியும் பெருமக்களே! தங்கைகளே! தம்பிகளே!

நேற்றுவரை நக்கீரனுடைய பாடல்களைத் துணைக்கொண்டு நக்கீரருடைய கருத்தோவியத்தை அடியேனுடைய சொல்லாகிய தூரிகையைக் கொண்டு மனப்படத்தில் எழுதினீர்கள். இன்று அவருடைய பாடல்களை உரையாசிரியர்கள் எடுத்தாண்ட இடங்களையும், அவற்ருல் அவர் பாடல்கள் எய்திய ஒளியையும் அவரியற்றிய அன்புநெறிப் பாடல்களைப் பற்றிய பலவேறு படைப்புக்களையும் பலவேறு தலைப்புக்களில் சிந்திப்போம். அடுத்து நெடுநல்வாடையென்னும் அவருடைய சிறந்த கவிதை நம் செவிக்குச் சிறந்த விருந்தாகும். மேலும் புறப்பாடல்கள், தனிப்பாடல்கள் இவையும் ஓரளவு சிந்திக்கப் பெறும். சிறந்த சொல்-தொடர் இவற்றின் ஆட்சிகளும், கலந்துள்ள பிறமொழிச் சொற்களைப் பற்றிய குறிப்புக்களும் இயம்பப்படலாம் இங்ஙனம் மூன்ரு நாட்பேச்சு சிறிது நீண்டாலும் வினைமுடித்தனம் என்ற மகிழ்வோடு சிந்தனையைச் செலுத்துவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். முறையே ஒவ்வொரு பகுதியாகச் சுவைக்கத் தொடங்குவோம்.

உரையாசிரியர்கள் ஆண்ட இடங்கள்

1 நக்கீரருடைய, 'பகுவாய் வரால்' என்னும் அகப்பாட்டு(36) கற்பியலில் புலம்படு விளையாட்டுப் புல்லிய புகற்சிக்கு மேற்கோளாக நச்சினர்க்கினியரால் எடுத்தாளப்படுகிறது. அதாவது தலைவன் பரத்தையரிடத்தே உண்டாம் விளையாட்டினை விரும்பிப் பதியிகந்து சென்று, யாறுங் குளனுங் காவுமாகிய இடங்களையடைந்து அவர்களுடைய நாண் நீங்கிய காமப் புலப்பாட்டிற் களித்தற்குக் காட்டப்பெற்றுள்ளது, தொல் பொருள்-150 சூ உரை) என்பர் நச்சினர்க்கினியர்.

இப்பாட்டில் 'அலர்' வீரர் ஆர்ப்பினும் பெரிதாயிருந்தது என்கின்றாள். வெற்றி கண்ட வீரர் சூழலும் தகுதியு நோக்காது ஆரவாரஞ் செய்வர். அவர் ஆர்ப்பினும் நீ பரத்தையரொடு விளையாடியதா லுண்டான அலர்பெரிதாயிற்று எனத் தோழி கூறுகிறாள். இவள் இங்ஙனம் கூறுவது தலைவனைத் திருத்த வேண்டும் என்ற கருத்தாலன்று. தலைவி இச் செய்தியறிந்து புலப்பள். அவள் புலவி தணிந்து வாயில் நேர்வதற்காகவே கூறுகின்றாள் என்ற அமைதியும் புலப்பட வைக்கின்றார். இக் கருத்து உரையாற்பெற்ற ஒன்றாம்.

இப்பாட்டின் "பகுவாய் வரால் பல்வரி இரும்போத்து" என்ற அடி இளமையான வரால் மீனையும் வராற் போத்து என வழங்கும் மரபுண்மையை விளக்க வந்த எடுத்துக் காட்டாகத் "பிள்ளை குழவி கன்றே" என்ற தொல்காப்பிய மரபியற் சூத்திரத்தில் 'ஓரறிவுயிர்க்குக் கொள்ளவும் அமையும் என்னும் உம்மையை எச்சப்படுத்துப் பிறவழியுங் கொள்ளப் படும் என்பதற்கு உதாரணமாக எடுத்தாளப் பெற்றுள்ளது.

உம்மைகளில் எச்சப்படுத்தற்குரியது முற்றும்மை ஒன்றே யாகும், "முரசு முழங்குதானை மூவருங் கூடி" "ஆறுந்தருவது வினையே" என முற்றும்மைகள் இனைத்தென்றறி பொருளைய டுத்துவரும். அதுவே ஒரோ, வழி எச்சமாவது. அங்ஙனமாக 'கொள்ளவும்' என்ற உம்மை எச்சப்படுதல் யாங்ஙனம் என்ற ஐயம் எழலாம். ஓரறிவுயிர்க்குக் கொள்ளவும் அமையும் எனவே ஈரறிவுயிர் மூவறிவுயிர் முதலான எஞ்சியவற்றிற்கும் இப்பெயர்கள் அமையுமாயின் கொள்ளலாம் என அமைதி கூறியதாகக் கொள்ளலாம். அஃதெங்ஙனமாயினும் வரால் நீர் வாழ் சாதியில், நாலறிவுடையனவாய்ப் போத்தென்னும் இளமைப் பெயரை ஏற்றற்கு உரியது எனப் பேராசிரியர் காட்டியவாறு காண்க.

2 "கேள் கேடுன்றவும்" என்னும் நக்கீரரது அகப்பாட்டு (93) வினை முடிந்த காலத்துப் பாகனொடு விரும்பப்பட்ட வினைத்திறத்தினது வகையின்கண் தலைவன் கூற்று வந்ததற்கு மேற்கோளாக இளம்பூரணர் எடுத்தாண்டுள்ளார். தலைவன்

போர் முடிந்த பிறகு பாகனொடு கூறலே மரபு. 'வகை' என்ற தனால் நெஞ்சிற்குக் கூறியனவும் கொள்க என்பர். 'முயங்கு கஞ்சென்மோ நெஞ்சே' என நெஞ்சிற்குக் கூறியதற்குச் செய் யுளிது என்பர். (தொல்-பொருள் இளம்பூ : சூ 44 உரை)

பேராசிரியர், செய்யுளியலில், கற்பிற்குரிய கைகோள் களாகிய ஐந்தனுள் 'மலிதல்' என்னும் கைகோளுக்கு, இப் பாடலில் வந்துள்ள

"நலங்கேழாகம் பூண்வடுப் பொறிப்ப
முயங்குகஞ் சென்மோ நெஞ்சே"

என்னும் அடிகளைக் காட்டுவர். மலிதலாவது இல்லொழுக்கம் புணர்ச்சி முதலியவற்றான் மகிழ்தல். (தொல்-பொருள் சூ499) குடிமை" என்ற சூத்திர உரையில் "இன்ன காரணத்தாற் பிரிந்து போந்து வினைமுடித்தனமாயினும் அவளை முயங்குகம் சென்மோ" என்றமையின் தன் ஆள்வினைக்குத் தக்க பெண் மையான் அவள் ஆற்றியிருந்தாள் என்பதும் கருதியபோது தனக்கு காமக் குறிப்புப் பிறந்தமையின் ஆண்மையாயின மைக்கு மேற்கோளாகக் காட்டினர்.

இங்ஙனம், இளம்பூரணரும் பேராசியரும் இப்பாடலையும் இதன் பகுதியையும் எடுத்தாளுகின்ற சூழலை உற்றுநோக்கும் போது, இப்பாடல் நெஞ்சிற்குக் கூறிய புதுமையையுடைத்து என்பதும், தலைவி தன் ஆள்வினைக்குத் தக்க பெண்மை உடை யவள் : தலைவனும் அவளை யாளுவதற்கேற்ற ஆண்மையுடைய வன் : அதனால் இல்லொழுக்கமும் புணர்ச்சியுமாகிய மலிதல் தலைவன் மாட்டுளதாயிற்று என்ற நுண்கருத்துக்கள் கருதப் படுவனவாம்.

3 "நெடுவேள் மார்பின் ஆரம்போல" (அக. நா. 120) என்ற நக்கீரர் பாடல், தோழி தலைவனை நோக்கி உபகாரமாகிய பெருநெறியை வேண்டிக் கொள்வதாகிய "வேளாண் பெரு நெறி வேண்டிய இடத்திற்கு இளம்பூரணரால் எடுத்துக் காட் டப் பெறுகிறது. (தொல்-பொருள் : இளம் : சூ. 112)

4 நச்சினார்க்கினியரால், 'வைகுறுவிடியல்' என்ற சூத்தி

ரத்தில்நெய்தல் நிலத்தில் எற்பாடு, காமக்குறிப்பு வெளிப்பட்டு இரங்கற் பொருள் சிறந்ததற்குக் காட்டப் பெற்றுள்ள.

அகநானூற்றுப் பழையவுரையில் பகற்குறிக்கண் இடத் துய்த்துத் தலைவனை எதிர்ப்பட்டு உரைத்தற்குக் காட்டப் பெற்றுள்ளது.

இங்ஙனம் இந்தப் பாடலும் உரையாசிரியர் மூவர் உள்ளத் திலும் மூன்று விதமான கருத்துக்களை விளைவித்துள்ளது.

5 'பன்னாள் எவ்வம்' என்னும் அகப் பாடல், நச்சினார்க் கினியரால் வேளாண் எதிரும் விருந்தின்கண் தோழி கூறுவ தற்கு எடுத்துக் காட்டப்பெற்றுள்ளது. நாண்பெரிதுடையளா தலின் தலைவி தலைவற்குத் தாம் சில கொடுத்தனைத் தானே சொல்லாள். அதுவும் களவுக் காலத்தில். ஆகையால் அவள் கருத்தறிந்த தோழி, மாலைக் காலம் வந்தது. கழி ஓதம் பெரு குகிறது; அரவும் சுறு முதலிய மீன்களும் திரிகின்றன; என உன்னைப் பற்றி அவள் அவலங் கொள்வாள். அவ்வவலங்கெட நீ இரவு இங்குத் தங்கிப் போ. தங்கினால் குதிரைக்குத் தயிர்க்கூழ் உண்ணக் கொடுப்போம்; நினக்கு நறுஞ்சாந்தணி யத் தருவேம்; என்று விருந்தெதிர் கொள்கிறாள். (தொல்-கள .நச் உரை. சூ. 114)

6 'நகை நன்றம்ம' என்னும் 346-ம் அகப்பாடல், தலைவன் பரத்தையர் மனைக்கண் தங்கித் தன் வீட்டிற்கு வந்தான். ஆனால் வீட்டுக்குள் புகவில்லை; தோழி தலைவனைக் கண்டாள். இடித்துரைத்தாள்; இதனால் தலைவியின் மனத் திலே ஊடல் தணிந்தது; அதனால் கூட்டத்திற்குத் துணை புரியும்போது அவள் கூறியதற்கு உதாரணமாக நச்சினார்க் கினியர் காட்டுகிறார். அகநானூற்றுப் பழையவுரை தோழி தலைமகற்கு வாயில் மறுத்ததாகக் கூறுகின்றது (அக.நா. 346)

7 'அழியல் ஆயிழை' என்னும் குறுந்தொகை (143) இளம்பூரணரால், தோழி செங்கடுமொழியாக, மனத்துள் அன்பை மறைத்து வைத்துத் தலைவனை இயற்பழிக்கும். அப்போது தலைவன் அன்பு சிதைவுடைத்தாயினும், தலைவன்

இன்றியமையான் என ஆற்றுவித்ததற்கு எடுத்துக் காட்டப் பெறுகின்றது. (தொ. கள. 113சூ உரை)

நச்சினார்க்கினியரால், பிரிவிடைத் தோழி இயற்பழித்து வற்புறுத்ததற்குதாரணமாகக் காட்டம்பெற்றது.

குறுந்தொகையுரை வரைவிடைவைத்துப் பிரிந்தவிடத்துத் தலைமகட்குத் தோழி கூறியது என்னும். இம்மூன்றும் ஒத்த கருத்துடையனவாயினும் இளம்பூரணர் உரைக்குறிப்பே விளக்கமும் நயமும் உடையதாதல் காண்க.

8 "புனவன்றுடைவை" என்னும் குறுந்தொகை 105-ம் பாடல், வரைவிடைவைத்தக் காலத்து வருந்தித் தலைவி தோழியிடம் கூறியது என்பர் இளம்பூரணர். "பொழுதும் எல்லின்று" என்னும் குறுந்தொகை 161-ம் பாடல் இயற்கைப் புணர்ச்சியுணர்ந்த பின்னரும், உள்ளப் புணர்ச்சியான் உரிமை பூண்டிருந்த காலத்தும் தலைவி மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்ததற்கு உதாரணமாக இளம்பூரணரால் காட்டப்பெற்றது. (தொ. கள 109 உரை இளம்)

நச்சினார்க்கினியராலும் அதே கூற்றுக்காக எடுத்துக் காட்டப்பெறுகின்றது. (தொ. கள 111 சூ உரை) மற்றும் காதல் கைம்மிக்க கனவின்கண் அரற்றுதற்கண் புதல்வற் புல்லியன்னாய் என்றது தலைவியை விளித்து அரற்றியது. தொ. கள 115 சூ நச். உரை) இது செவிலி கூற்று.

9 "புல்லேன் மகிழ்க" என்னும் நற்றிணை 340ம் பாடலை "வாயிலின் வரூஉம் வகை" என்றமையான் கொள்ளப்பெற்ற தன் ஆற்றுமை வாயிலாகத் தலைவன் சென்றதற்கு மேற்கோளாகக் காட்டினார் இளம்பூரணர். (தொ. பொருள் இளம். 145 உரை)

நச்சினார்க்கினியர் தலைவன் ஆற்றுமை வாயிலாகச் சென்றுழித் தலைவிகூறியது என்பர். (தொல் பொருள் நச் சூ. 147 உரை)

பரத்தையின் மறுத்தந்த தலைமகனைத் தலைமகள் நொந்து சொல்லியது என்றும் நற்றிணை பழைய உரை கூறும்.

இங்ஙனம் நக்கீரர் பாடல்களில், ஒன்பது பாடலும் அவற்றின் பகுதிகளுமே தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றுள்ளன. இவற்றை இங்குத் தொகுத்து நோக்குவதால் உண்டாய பயன் யாதோ எனின், சில பாடல்கள் உரையாசிரியர் கொள்ளுங்கருத்தின்படித் திணைகள் மாறுவாயினும் கிளவிகளிற் சிறு மாற்றமும் அதனல் பொருள் நயமும் உண்டென்பதனை உணர்ந்ததன்பயனும்.

இப்பகுதியுட் சிறப்பாக, நக்கீரர் எஞ்ஞான்றும் புதுவது புனையும் விருப்பமும், அறிவுலகப் புரட்சி நோக்கமும் படைத்தவர் என்பதைப் பல இடங்களிற் சுட்டி வந்தேம். அதுபோல ஈண்டும். 'வராற்போத்து' என போத்து என்னும் இளமையுணர்த்தும் மரபுப் பெயர் ஓரறிவுயிர்க்கே யுரியது எனத் தொல்காப்பியம் கூறுமாயினும், நான்கறிவுயிராகிய மீனுக்கும் பொருத்தி இலக்கணப் புரட்சி செய்தார் நக்கீரர்.

இரண்டாவதாகப் போர் முடித்த தலைமகன் தான் விரைந்து ஊர் செலல் இன்றியமையாமையைப்பற்றித் தன் பாகனெடு கூறுதலே மரபு. அங்ஙனமாகவும், தன் நெஞ்சொடும் கூறுவான் என்பதற்கு இலக்கியம் அமைத்து, நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள், 'வகை என்றதனல் நெஞ்சிற்கும் கொள்க' எனப் புதிய இலக்கணமும் சொல்ல வைத்த புரட்சிக்காரர் இவர். இங்ஙனம் பல நுணுக்கங்கள் எடுத்துக்காட்டுக்களால் விளங்குவன.

இவ்வளவில் இவற்றை நிறுத்தி, அடுத்து அவர் செய்த அன்பு நெறிப் பாடலைப் பற்றி ஆராய்வோம். அன்பு நெறிப் பாடல் எது ? **திருமுருகாற்றுப்படை.**

CONNEMARA PUBLIC LIBRARY
9-JUN 1974

அன்பு நெறிப் பாடல்.

செந்தமிழ்ச் செல்வர்களே! அறிஞர் பெருமக்களே!

நக்கீரர் நாளிலே இன்றைய சிந்தனைக்குரிய பொருள் அவருடைய அன்பு நெறிப் பாடலாகும்,

அன்பு தமிழின் தனிப் பொருள். தமிழரின் தனிப் பண்பு. அன்பு தமிழர்க்கேயுரிய தனிப் பெருங்குணம் என்று ஆரிய நூலாகிய மத்ஸ்ய புராணமும் கூறுகிறது. 'அன்பே கடவுள் அன்பேசிவம்' என்பது தமிழாகமம். குழவி பிறந்தது முதல் இறவாப் பெருநெறி எய்துகின்றவரை அன்பிலே வளர்கிறது அன்பிலே வாழ்கிறது. அன்பிலே ஒடுங்குகிறது. தாயிடம் முதன் முதலில் உண்டாகின்ற மன நெகிழ்ச்சி யன்பு; அது தந்தையிடம் உண்டாகின்றபோதும் அன்பு; ஆசிரியன் தெய்வம் முதாலானவர்களிடத்தே உண்டாகின்றபோதும் அன்புதான். அன்பை (அகண்டமாக) எல்லையில்லாததாகவும் பொதுவுடைமையாகவும் கண்டது தமிழ். பிறமொழிகளிலோ அன்பு என்ற ஒரே குணம் தாய் தந்தையர்கள் தன் பிள்ளையிடம் செலுத்துகிறபோது வாத்ஸல்யம் ஆகிறது; தாய் தந்தை குரு தெய்வம் முதலானவர்களிடம் மகன் செலுத்துகிறபோது பக்தியாகிறது. அண்ணன் தம்பிகளிடம் வாஞ்சையாகிறது. ஆளுக்குத் தக்கவண்ணம் பெயரைக்கூட மாற்றிக்கொள்கிறது. அங்ஙனமன்றித் தாய் தந்தையர் முதல் மனைவி மக்கள் வரை பற்றியுள்ள அன்பு இறைவனிடத்தும் அப்பெயரையே அடைகிறது. ஆனல், மனைவி மக்கள் முதலான உறவினரிடம் செலுத்தும் அன்பு சிறப்பதற்கும் நெறி தவருதிருத்தற்கும், என்றும் மாருதிருத்தற்குங்கூட இறை யன்பு ஏதுவாகிறது என்ற உண்மையை உணர்ந்தவர் நக்கீரர். அதனல் காதலும் மணமுமாகத் தோன்றித் தந்தை தாய் மகனை மாறி இல்லறம் என்ற பேரால் உலகை வளர்க்கின்ற அன்பும், உள்ள அமைதியைத் தரும் இறையன்பு இல்லையானல் நிலைக்காது நீளாது என்பதைக் கண்டார். அதனல் காதலு மோதலுமாகிய உலகி

யல் வாழ்வை அகப் பாடல் புறப் பாடல்களாற் காட்டியவர் இதனை ஆற்றுப் படையால் அறிவிக்கின்றார். ஆதலால், முருகாற்றுப்படை அன்பு நெறிப் பாடலாகிறது.

புதுமைப்படைப்பு:

(உலகம் பெரும்பாலும் சென்ற வழியே சென்றுகொண்டிருப்பது. என்ன வருமோ! எது விளையுமோ! என்ற அச்சத்தால் எதிலும் மாற்றத்தை விரும்பாதது. 'பழங்காலைத் தூக்காதே-புதுக்காலை வெட்டாதே' என்று கூக்குரலிடுவது தான் உலக இயல்பு. அதிலும் படித்துப் பழமையில் ஊறியவர்க்ளுக்கோ சொல்லவேண்டாம். நமது நக்கீரரோ வழிவழியாகப் படித்துப் பண்பண்ட உள்ளத்தால் எதிலும் புதுமை காண்கிறார். அவற்றுள் ஒன்று ஆற்றுப்படை மருங்கிற் போற்றிய புதுமை.

தொல்காப்பியர் காலம்வரை கூத்தராற்றுப்படை, பாணராற்றுப்படை பொருநராற்றுப்படை விறலியாற்றுப்படை என்ற நான்கைப்பற்றிய பாடல்களே இருந்தன. அதனல் இலக்கியங்கண்டு அதற்கு இலக்கணம் இயம்பும் தொல்காப்பியர் பாடாண் பகுதியாகக்,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சியுறழத் தோன்றி
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்"

எனத்தொகுத்தார். இவர் காலத்திற்குப்பின் இவரது இலக்கண நூலை மேல்வரிச் சட்டமாகக்கொண்ட புலவர் பெருமக்கள், பாணர்களின் வகையினைக் கொண்டு சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படையெனப் பிரித்துப்பாடினர். கூத்தராற்றுப்படை என்பது மலைபடுகடாத்துக்கு வழங்கிய மறுபெயர். இந்த ஆற்றுப்படைகளின் நோக்கமும், அமைப்பும் என்ன என்பதை ஆய்ந்தார் நக்கீரர். எல்லா ஆற்றுப்படைகளும் கலைஞனைக் காவலனிடம் ஆற்றுப்படுத்ததாகத்தானே உள்ளன. ஒட்டிய வயிறும் உலர்ந்த வாயும், குழிந்த கன்னமும் ஒளி

மழுங்கிய விழிகளுமாகத் தோன்றுங்கலைஞன் ஒருவனை புதுவ ளம் பெற்றதால் பூரித்துப்போயிருக்கின்ற கலைஞன் ஒருவன்' என்போல் வாழலாம் இங்கே செல்லுக ; இன்னணம் செல்லுக' என வழிகூட்டியனுப்பிய செய்திகளைத்தானே தெரிவிக் கின்றன. அதுவும், கூத்தரும் பாணரும் பொருநரும் விறலி களுமா தெரிவிக்கின்றனர். இல்லையே! நாடாளுமன்னனு யிருந்தாலும், நலிவகற்றும் வீரனுயிருந்தாலும் அவனிடம் அஞ்சாது அணுகிச் சென்று நேர்மையைக்கூறி, அவன் தன்னைக் காப்பாற்றியதற்காகப் பணிவன்புடன் தரும் நிதியைக்கொண்டு அறவழிவாழ்கின்ற புலவன் கூத்தர்முதலாயினோர் தன்மையை ஏறட்டுக் கொண்டுதானே பாடுகிறுன். இதனையே பாடமாகப் பாணன் முதலியோர் பசிதணிக்கும் வாயிலாகப் பாடிப் பெற்ற பயன் எத்தகையது. நிலைபேறில்லாத இன்பந்தானே! பாடு கின்ற புலவனுடைய புலமை நலத்திற்குத்தக நிலைத்த இன்பத்தை நாடி, வேண்டுதல் வேண்டாத-எஞ்சாத நிறை வாகவுள்ள இறைப்பொருளிடம் ஆற்றுப்படுக்கலாமே என்று எண்ணுகிறுர் இறையருளைப்பல்லாற்ருனும் பெற்ற புலவ ணுகிய நாமே ஒரு புலவனை ஆற்றுப்படுக்கலாமே! யாம் பெற்ற இன்பத்தை இவனும் பெறட்டுமே என எணணுகிறுர். அத ஞல், சிற்றின்பம் வேண்டாத-பேரின்பம் ஒன்றையே வேண் டிய புலவராற்றுப்படை உருக்கொள்கின்றது. அதுவே திரு முருகாற்றுப்படை என இன்று வழங்குவது.

உண்மைப் பெயர் புலவராற்றுப்படையா—முருகாற்றுப் படையா? பத்துப்பாட்டைத் தொகுத்தார் கால முதல், 'முரு குபொருநராறு' என்ற முறைவைப்பு வெண்பாவை இயற்றினுர் காலம் வரை உரை நூல்களிலும் பிறவற்றிலும் முருகாற்றுப் படை என வழங்கலாயிருக்க உண்மைப் பெயர் எது என்ற ஆய்வு தேவையா? என்ற வினு எழக்கூடும்; எழுவதும் இன் றியமையாததே!

நச்சினர்க்கினியர் "தாவினல்லிசை கருதிய கிடந் தோர்க்கு" என்னும் பாடாண் வகை கூறும் சூத்திரவுரையில் "முருகாற்றுப்படையுட் 'புலம்பிரிந்துறையுஞ் சேவடி' (திரு 62 -63) எனக் கூறி, 'நன்னர் நெஞ்சத்தின்னசை வாய்ப்பப்பெ றுதி" (65-66) எனவுங் கூறி அவனுறையும் இடங்களும் கூறி

ஆண்டுச்சென்ருல் அவன் விழுமிய பெறலரும் பரிசில் நல்கும் (முரு. 294-5) எனவுங் கூறி, ஆண்டுத் தான் பெற்ற பெருவளம் அவனும் பெறக் கூறியவாறு காண்க. இதனைப் புலவராற்றுப் படை என்று உய்த்துணராது பெயர் கூறுவார்க்கு முருகாற்றுப் படையென்னும் பெயரன்றி அப்பெயர் வழங்காமையான் மறுக்க என்பர். இதனுன் புலவராற்றுப்படை என்னும் பெயரும் வழங்கியமை துணியப் பெறும். இடத்திற்கோ பொருளுக்கோ புதிய பெயர் ஒன்று ஏற்படுமாயின் அது பழைய பெயரை மறைத்து விடுவது இயல்பே. அங்ஙனமே புலவராற்றுப்படையென்ற பெயரை முருகாற்றுப்படை என்ற புதுப் பெயர் மறைத்து விட்டது,

புதுப் பெயர் ஏன் வந்தது ?

கூத்தராற்றுப் படை என்பது, நூற்பெயரைக் கேட்டவுடனேயே தன்னினத்தை ஆற்றுப்படுத்துவது என்பது புலப்படும் கூத்தரைப் புரவலனிடம் போகச் சொன்னதை யறிவிப்பது. அங்ஙனமாகவும் யாரோ படிப்பவன் உள்ளத்தில்,

"அலகைத் தவிர்த்த எண்ணருந் திறத்த
மலைபடு கடாஅ மாதிரத் தியம்ப" (மலைபடு 347-8 அடி)

என்ற அடியிலுள்ள 'மலைபடு கடாம்' என மலைக்கு யானையை உவமித்து, அதன்கட் பிறந்த ஓசையைக் கடாம் எனச் சிறப்பித்த பகுதி உள்ளத்தைக் கொள்ளைக் கொண்டது ; அன்றியும் அப்புலவன், பதிற்றுப்பத்துச் சிந்தனையுடையவன் அதில் பாடல்கள் ஒவ்வொன்றும் 'புண்ணுமிழ் குருதி' 'மறம் வீங்குபல் புகழ்' முதலியனவாகச் சிறந்த சொற்றொடரடியாகப் பெயர் பெற்ருற் போல இதற்கும்மலைபடுகடாம் எனப் பெயர் சூட்டினன். அதுவே பெயராகி இலக்கண மரபொடுகூடிய கூத்தராற்றுப்படை என்ற பெயர் மறைந்து போயிற்று. பிற்காலத்தும், சேக்கிழாரே தாம் செய்த நூலுக்கு

இங்கிதன் நாமங் கூறின் இவ்வுலகத்துமுன்னாள்
... ...
... ...
செங்கதிரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம்

என்பாம் (பெரிய. பாயிரம் 10) என்று சொல்லியிருக்கவும் "எடுக்கும் மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளா" (பெரிய. பாயிரம் 3 செய்) என விநாயக வணக்கத்துட் கூறிய சொற்றொடரின் பொருளான பெரிய புராணம் என்ற பெயரே பெருவழக்காறுற் போலவும், கம்பர் தாம் பாடிய இராமகாதைக்கு

"நடையினின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடைநிகழ்ந்த இராமா வதாரப் பேர்த்
தொடை நிரம்பிய தோமறு மாக்கதை" எனவும்
(கம்ப - காப்பு 11)

இத்தலத்து மிராமா வதாரமே பத்தி செய்து பரிவுடன்
கேட்பவர் ....

அவனடி யெய்துவர்" (கம்ப. காப்பு 20) எனவும்

இராமாவதாரம் இராம காதை எனப் பெயரிட்டிருக்க அது இன்று இராமாயணம் என வழங்குதல் போலவும், கூறப்பெறும் பொருளியைபுப்பற்றி வந்த துறைப் பெயரரகிய புலவராற்றுப் படை என்பது மறைந்து, முருகாற்றுப்படை என்பது பெயராயினமைக்கு இந்நாலுள் வரும் "முருகாற்றுப் படுத்த உருகெழுவியனகர்" (வரி 214) என்ற அடியிலுள்ள முருகாற்றுப் படுத்த என்ற சொற்றொடரே முருகாற்றுப்படை என்ற பெயர் அமைதற்குக் காரணமாயிற்று. பழம் பெயராகிய துறைப் பெயர் மறைந்தது. அது நச்சினார்க்கினியர் பெருமானல் வழக்கின்மை காரணமாக மறுக்கப்படுவதும் ஆயிற்று.

நச்சினார்க்கினியர்க்கு மிக முற்பட்டவரும், நக்கீரனாருக்குச் சில நூற்றாண்டு பிற்பட்டவருமாகிய புறப்பொருள் வெண்பாமாலையாசிரியராகிய ஐயனாரிதனர் புறப்பொருள் வெண்பாமாலையுள் பாடாண் திணையுள், புறநிலை வாழ்த்தும், கொடிநிலை கந்தழி வள்ளியுமாகிய இறைத் தொடர்புடைய துறைகளுக்குப் பின் புலவராற்றுப்படையை வைத்து இமையோருழைப் பெரும் புலவனை ஆற்றுப்படுத்தும் முறையை அறிவித்தார். தொல்காப்பியத்துள் இத்துறை யில்லையாகவும் அவர் வகுத்தற்கு இலக்கியமாக இருந்தது புலவராற்றுப் படையாகிய திருமுருகாற்றுப் படையேயெனலாம். அதுவும் அவர் காலம் வரையில் புலவராறுப்

படை என்ற பெயராலேயே வழங்கியுமிருக்கலாம். அவ்வமை தியே பின்னேன் வேண்டும் விகற்பங் கூறும்படி ஐயனரிதனை ரைப் பணித்தது எனல் துணிவாகலாம்.)

பெயர்க் காரணம்:

முருகாற்றுப்படை என்பதற்கு முருகன்பால் வீடு பெறு தற்குச் சமைந்தான் ஒரிரவலனை ஆற்றுப்படுத்ததென்பது பொருளாகக் கொள்க என்பர் நச்சினர்க்கினியர். (தொல். பொருளதி : சூ: 91 உரை) கூத்தராற்றுப்படை முதலியன கூத்தனையாற்றுப்படுத்தது, பாணனையாற்றுப்படுத்தது என இரண்டாவது விரிய நிற்க, முருகாற்றுப்படை மட்டும் முருகன் பால் ஆற்றுப்படுத்தது என ஏழாவது விரிய நிற்பது மிகமிகச் சிந்தித்தற்கு உரியது.

கருவி நூற்புலமுற்றி, நிலையாமை ஞானம் பெற்று, நிலை யான பேறடைய வேண்டும் என முயல்பவன் இரவலனகான் என எண்ணி நக்கீரரே அவனை இரவலனின் வேறுபடுக்க,முது வாய் என்ற அடை கொடுத்து, புலவன் கூற்ருக வைத்துக் கூறுகிருர். முதுவாயிரவலன் வந்தோன் பெரும! நின் வண் புகழ் நயந்து (284-5 வரி) என்று சேய் சேவடி படரும் செம் மலுள்ளமொடு வருகின்றவன், ஆண்டாலும், அனுபவத்தாலும் முதிய ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்ருேனகிய பெரும் புலவனே ஆதல் வேண்டும். அவன் தனக்கு வீடுபேறு வழங்க காத்திருக்கும் முருகன் முற்றுணர்வும், முற்றுத் தொழிலும் உடையனுக முன்நிற்கிருன். 'அளியன்' 'முதுவாயிரவலன்' எனப் பணிமொழி கூறுகிருன். ஆகவே வந்தவன் பெரும் புலவனே. பெரும் புலவனைப் பெரும் புலவன் ஆற்றுப்படுத்த புலவராற்றுப்படையே திருமுருகாற்றுப்படை என்பது துணிபு.

இப்பாட்டுள் வரும் 'முருகாற்றுப்படுத்த' (244 வரி) என்பதற்கும், குறமகள் வழிபாட்டிற்கேற்ற துணைப் பொருள் களைக் கூட்டினள். முருகன் உவக்கும் வாச்சியங்களை வாசிக்க பண்ணினள். அவ்விடத்திற்கு முருகனை ஆற்றுப் படுத்தினள், எனவே இரண்டனுருபு விரித்து உரை கூறுகிருர் நச்சினர்க் கினியர்.

இங்கு இரண்டனுருபு விரித்துப் பொருள் கண்டவர் பெயர்க் காரணங் கூறும் வழி இடர்ப்பட்டு ஏனைய ஆற்றுப் படையிலக்கணங்களுக்கும், பொருளுக்கும் மாறுபட்டு, ஏழனுருபுவிரித்துப் பொருள் செய்ய வேண்டிய இன்றியமையாச்சூழ் நிலையை உருவாக்கியது புலவராற்றுப்படை என்ற பெயர் போல் முருகாற்றுப்படையான பெயர் மாற்றமே என்பதைத் தெளியலாம்.

எஞ்ஞான்றும், உலகியலில் அரசனிடம் அமைச்சன் செல்வதும், ஆசிரியனிடம் மாணக்கன் செல்வதும் போல உயர்ந்தாரிடம் இழிந்தார் செல்வதே மரபு. இரவலன் புரவலன் பாற் போவதே மரபு. புரவலன் எளிவந்த கருணையனுயின் இரவலன் தன்னை நோக்கி இடம்விட்டுப் பெயரின் இவன் விரைந்தோடிச்சென்று அருள் செய்வன். இதுவே இறையியல்பும், நீ கடவுளைக் நோக்கிச் சில அடிகள் எடுத்துவை; அவர் உன்னை நோக்கி ஒடி வருவார்' என்பது விவிலிய வேதம். ஆகவே இரவலனை முருகன் பால் ஆற்றுப்படுப்பதே முருகாற்றுப்படையென்ற பெயருக்கு அமைவுடையதாகும்.

இக்காலத்துச் சில ஆய்வாளர், முதுவாயிரவலன்பால் முருகனை ஆற்றுப்படுத்ததே முருகாற்றுப்படை என வலிந்து பொருள் கொண்டு, அதற்காக யாற்ரெழுக்காகச் செல்லும் முடிவுகளையும் மாற்றிப் பொருள் கொள்வர். இத்துணையுங் குறித்ததே இச்சொற்பொழிவின் நோக்கம்.

ஆகவே, இந்நூலுக்குப் பண்டைப்பெயர் துறைப் பொருள் கருதிய புலவராற்றுப்படை என்பது. பின்னர் 'மலைபடுகடாம் என்பது போல 'முருகாற்றுப்படுத்த' என்ற தொடரடியாகப் பிறந்த முருகாற்றுப்படை பெயராயிற்று. அதனல் மரபு வழி வந்த தொகைச் சொல்லை விரிக்கும் முறை மாறி ஏழனுருபு விரிக்க வேண்டிய நிலையும், முருகனை இரவலன்பால் ஆற்றுப் படுத்த வேண்டிய சூழலும் விளைந்தன.

முதுவாயிரவலனை முருகன்பால் ஆற்றுப்படுக்கும் முருகாற்றுப்படைக்கு, புறத்திணைப் பாடாண்பகுதியுள் இல்லாமற் இலக்கணம், போகக்கூடாதே என்று கூத்தரும் பாணரும்

பொருநரும் விறலியும்,பெற்ற பெருவளம் பெருர்க்கு அறிவுறீஇ சென்று பயனெதிரச் சொன்னபக்கமும், ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி பெற்ற பெருவளம் பெருஅர்க்கு அறிவுறீஇ சென்று பயனெதிரச் சொன்னப்பக்கமும் எனச் சூத்திரத்தை இருகூருக்கி இசைஎச்சமாகத் தன் கருத்தினை முழுதும் ஏற்றி முருகாற்றுப்படைக்கு இலக்கணமாக நச்சினுர்க்கினியரை எழுதவைத்ததும் இப்பெயர் மாற்றமே. இளம்பூரணர் இச்சூத் திரத்திற்கு நேரிய பொருள் கண்டு நால்வகை யாற்றுப்படையே கூறினர். (தொல். பொருளதி. இளம் சூ 88 உரை) என்பதும் ஈண்டு எண்ணுதற்குரியது. புலவராற்றுப்படை என்ற புறப் பொருள் வெண்பாமாலைப் பாகுபாடு அவர் கண்ணிற்பட்டிருக் குமாறல் இலேசு முதலியவற்ருற் சேர்த்திருப்பர். அங்ஙனம் உரை எழுதாமையே புலவராற்றுப்படை என்ற துறைப்பாகு பாடு அவர் காலத்தில்லை போலும் என்பதற்குச் சான்ருகிறது. ஏனைய ஆற்றுப்படைகளுக்கும் இதற்கும் உள்ள வேற்றுமைகள்

1 ஏனைய ஆற்றுப்படைகள் ஆற்றுப்படுத்தப்படுவார் பெயரோடிணைந்து வழங்கப்படுவன. இது பாட்டு டைத் தலைவன் பெயரோடு இணைந்து வழங்குகிறது.

2 பிற ஆற்றுப்படைகளில் ஆற்றுப்படுத்தப்படுவானை விளித்து அவனிலையை விரித்தலும், ஆற்றுப்படுத்துகி றவன் தனதுபழையநிலை கூறலும், பரிசில்பெற்றமுறை யினைக் கூறலும் அமைந்திருக்கும். இதில் அவை உய்த்துணர வைக்கப் பெற்றமையோடு, வழங்கும் வள்ளல் எழுந்தருளியுள்ள இடங்களும், அவனை வழி பட வேண்டிய முறைகளும் அவனியல்பும், உருவமும், வழிபட்டால் எய்தும் பயனும் அறிவிக்கப்படுகின்றன.

இப் பாடலமைப்பு:-

இப்பாட்டு முந்நூற்றுப் பதினேழு அடிகளைக் கொண்ட நேரிசை ஆசிரியப் பாவாகும். முருகப் பெருமான் எழுந்தருளி யுள்ள இடங்களைத் தனித்தனியாகவும் தொகுத்தும் கூறுகி றது. அதனல் திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய், திருவாவி னன்குடி திருவேரகம், பழமுதிர் சோலை என்று ஐந்திடங்

களைத் தனியாகவும், முருகன் எழுந்தருளியுள்ள மலைகளனைத்தையுந் தொகுத்துக் குன்றுதொருடல் என்ற பெயராலும் உணர்த்துகிறது.

செலவு நயக்கும் முதுவாயிரவலனுக்கு வழி கூறும் வகையான், முருகன் திருப்பரங்குன்றில் இருப்பான்; அஃதல்லாமலும் திருச்சீரலைவாயில் இருப்பான்; மலைகள் தோறும் இருப்பான் என்றனர். இதனைப் பின்னோர் ஆறுபடை வீடு, ஆறு பதிகள் என்றெல்லாம் மொழியத் தொடங்கினர் முருகனுக்குத் தாயர் கார்த்திகை மாதர் அறுவர்; தோற்றம் ஆறு தீப்பொறிகளாக; வளர்ந்த இடம் ஆறு தாமரை மலர்களில், ஆறு முகங்கள், அவனுக்குரியமந்திரம் ஆறெழுத்து, அவனுக்குரியயந்திரம் அறுகோணம் உடையது என்று எல்லாம் ஆறாக அமைவதில் ஒரியையுண்மையின் தலங்களையும் ஆறாகக்கொண்டனரோ என்றெண்ணத் தோன்றுகின்றதே யன்றி இந்த ஆறுஇடங்கள் தாம் முருகன் எழுந்தருளியுள்ள இடங்கள் என்று முடிவு கட்டியதாகாது. முடிவு செய்யின் எங்குங் நிறைந்துள்ள கடவுளுக்கு ஒரிடங் கற்பித்தலாய்க்குற்றமாய் முடியும் ஆகவே ஆறுபடை வீடு என்பதில் ஆறு முருகனையும், படைவீடு நிலையாகவும், அவ்வப்போதும் படைத்துக் கொள்ளப் பெறும் கோயில்களைக் குறிப்பனவும்ஆகலாம் நக்கீரர் திருப்பரங்குன்றம் முதலாக நிலையான ஐந்து இடங்களையும், 'குன்றுதொருடல்' என்ற நிலையாகவும் அவ்வப்போதும் உள்ள இடங்களையும் யாறுங்குளனும் வேறு பல்வைப்பும், முதலாக அவ்வப்போது படைக்கப் பெறும் இடங்களையும் கூறுவாராயினர். இங்ஙனம் கூறியதன் பயன் நீ நயந்தால் அவனை எளிதில் அடையலாம், வணங்கலாம், தேடியலையவேண்டிய அவதியில்லை; பெறவரும் பரிசில் நல்கும் என்றறிவித்ததாம். ஆகவே முருகாற்றுப்படை முருகன் எழுந்தருளியுள்ள இடங்களைச் சுட்டிச் சொன்ன ஒரு பாடலே. ஆறு படை வீடுகளைப் பற்றிச் சொல்ல வந்த பாடலாகாது.

படை வீடு என்ருல் போருக்குச் செல்வார் படைகளுடன் தங்குவதற்காக அமைத்துக் கொள்ளும் படவீடு, தொன்று தொட்டதன்றிப் புதிதாகப் படைக்கப் பெற்ற வீடு என்றெல்லாம் பொருள்படும்.

போருக்குச் செல்வார் தங்கப் படைத்த வீடும், சென்று மீண்டார் தங்கப் படைத்த இடமும் படை வீடாகலாம். இம் முறையில் வைத்துக் காணும்போது இப்பாட்டில் வந்துள்ள திருச்சீரலைவாய் ஒன்றே போர்மேற் செல்வார் தங்கிய படை வீடு. பரங்குன்று வென்று மீண்டார்க்காகச் சமைக்கப்பெற்ற படைவீடு. ஏனைய தலங்கள் முருகனுக்காகப் படைக்கப் பட்ட வீடுகளே.

அன்றியும், துறவி தக்கிய இடம் மடமாதல் போலவும் 'இராமன் தங்கிய இடம்' அயோத்தியாதல் போலவும், பெரிய வீரனும் சேனைத்தலைவனுமான முருகன் தங்கிய இடங்கள் யாவும் படைவீடுகளாயின எனவுங்கூறலாம். ஆகவே திருமுருகாற்றுப்படை அமைப்புமுறை ஆறுபடைவீடு என்ற தற்குத் துணையாகாது.

பிறசங்க இலக்கியங்களிலும் பரங்குன்று, திருச்சீரலை வாய், 'அறுகோட்டியானைப்பொதினி' சோலையொடு தொடர் மொழி மாவிருங்குன்றம் முதலான இடங்கள் படைவீடு என்ற பெயரான் வழங்கப்பெறவில்லை.

அருணகிரிநாதரும், "அறுபதிதனில் அமர்வோனே" 'ஆறு திருப்பதிதனில்' என ஆறுபதி என வழங்குகின்றாரே யன்றிப் படைவீடு என வழங்கவில்லை. கந்தபுராண ஆசிரியரும் ஊர்ப் பெயரளவிலேயே அமைகின்றார். குமரகுருபரரும் "ஆறுதிருப் பதிகண்டு" என்கின்றார். ஆகவே 'படைவீடு' என்ற பெயர் எக்காலத்துத் தோன்றியது என அறியக்கூடவில்லையாயினும் பெரும்பான்மையாக மக்களிடையே வழங்குவதாயிற்று.

ஆற்றுப்படுக்கின்றார் :

முதுவாயிரவல! மறுவில்கற்பின் வாணுதல் கணவனும், கடப்ப மலர்மாலை கிடந்து புரளும் மார்பையுடையவனும், காந் கட் கண்ணி சூடிய சென்னியனும் ஆகிய செவ்வேற் சேயின் சேவடியை அடையும் விருப்போடு போதலை நீ விரும்பின் நல்ல உள்ளத்தால் நாடிய விருப்பங்களை இப்போதே பெறு வாய்' என்கின்றார். இவ்வண்ணம் உன் ஆசை இன்றே

நிறைவேறும்; இப்போதே நிறைவேறும்; என்றவுடன் இரவலன் கேட்கிறான் அவனது பொதுவியல்பைச் சிறிது விரித்துச் சொல்லுக' என;

புலவர் சொல்கிறார்; அவன் ஊர்தியின் நிறமும் திருமேனியின் ஒளியும் நீலக்கடலின் நடுவிலே இளஞ்சூரியன் எழுந்ததுபோல இருக்கும். திருவடி வருந்தி வந்தாரை ஏற்றருளுவது. அவன் கைகள் பகைவர்களைத் தேய்த்தழிப்பன; மேகம் போல வரையாது வழங்குவன; அவன் மார்பிலே முதல் மழையிலே தளிர்த்துப் பூத்த கடப்பமலர்களாலாகிய மாலைகள் கிடந்தசைகின்றன; அவன் தலையிலே வண்டு மொய்க்காத செங்காந்தட்பூவாலாகிய கண்ணி விளங்கும். அவன் பேய்மகள் துணங்கைக் கூத்தாடும்படியாக அவுணர் குழுவையழித்து மாமரமாக நின்ற சூரனையுங் கொன்ற வேலையுடையவன். சேய், இவையே அவனுடைய பொதுவியல்பு என்றார்.

இரவலன் கேட்கிறான்; அங்ஙனமாயின் அவனைக் காணும் இடம் எங்கே என்று? புலவர் சொல்கிறார், மதுரை மாநகர்க்கு மேற்றிசையிலே ஒரு மலை யுண்டு; அதைச் சுற்றியகன்ற பரந்த வயல்கள். வயல்களிலே செந்தாமரைகளும் நெய்தற்பூக்களும் மலர்ந்துள்ளன; வண்டுக் கூட்டம் பகலில் தாமரையில் தேனுண்ணப் போனவை தேன் குடித்த மயக்கத்தால் அங்கே தங்கிவிட்டன. மாலைக்காலம் வந்தது; மலர் குவிந்தது; இரா முழுதும் வண்டுகள் சிறைப்பட்டுறங்கிக் கிடந்தன. பொழுது விடியும் வைகறைக் காலம்; தாமரை மலர்ந்தது உள்ளிருந்த வண்டுகள் எழுந்து கள்ளோடு கூடிய நெய்தற்பூவிற் சென்று ஊதின; மாதர்கள் கண்களைப்போல மலர்ந்துள்ள சுனைப்பூக்களிலே சென்று ஒலிக்கின்றன; அத்தகைய இயற்கை வளமும் கருத்துவளமும் செறிந்த திருப்பரங்குன்றத்திலே இருப்பான்; நீ சென்றாற் பார்க்கலாம். என்றார்.

இதிலே அவரையும் அறியாமல், அவரனுபவம் அவருரையாகத்தானே அமைந்துவிட்டது. தேனுண்டு சிறைப்பட்ட வண்டு நக்கீரராகிய தான். பொழுதுவிடிதல் தான் உண்மை ஞானம் விளங்கப்பெற்றமை. வைகறைக்கண் இருளகன்றது. தன் அறியாமை நீங்கப்பெற்றது'. கட்கமழ் நெய்தல் ஊதி

யது, அறியாமை நீங்கினலும் வாசன மலந்தாக்க அதனல் இழிந்த தேனே நாடியது; எற்பட என்றது அறியாமை நீங்கப் பெற்ற தம் அறிவை ஞானசூரியனுகிய முருகன் தோன்றி உணருமா உணரச் செய்தது; கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர்க் குன்று முருகன் எழுந்தருளியுள்ள பரங்குன்றம். அரிக்கணம் ஒலித்தது முருகாற்றுப்படையாகிய முருகன் புகழ்த்தமிழைப் பாடுவது. அரிக்கணம்—நக்கீரரும் உடன் சிறைப்பட்டிருந்தவர்களும் என்ற அனுபவத்தையும் தந்தது இப்பகுதி.

திருப்பரங்குன்றமே இவருக்கு முருகனுடைய திருவருட் காட்சியும் சிவஞானப்பேறும் தந்து சிறை வீடு செய்த தலமாதலின் முதலிலே அங்கிருந்து' அனுபவத்தையும் குழைத்து அவனுக்கு அறிவிக்கின்றார்' இதனற் பெற்ற பெருவளம் பெருஅர்க்கு அறிவுறீஇயதும் பெறப்படும்.

அடுத்து, இங்ஙனம் திருப்பரங்குன்றத்திலே எழுந்தருளி இருப்பதோடன்றித் திருச்சீரலே வாயிலிலும் தங்கியிருக்கின்றார். அங்குச் சென்றாலும் காணலாம். பெறலரும் பரிசில் பெறலாம் என்றார் புலவர்

இரவலன் கேட்கிறான் பரங்குன்றிலே உள்ளபோது தாங்கள் கூறிய அடையாளங்களோடு அங்கேயும் இருப்பாரா என்று. புலவர் சொல்லுகிறார்; இல்லை: இல்லை. பரங்குன்றிலே இளஞ் ஞாயிறு போன்ற ஒளியோடு மறுவில் கற்பின் வாணுதல் கணவனுகை மார்பில் கடம்பு மலர் மாலை புரள, தலையில் காந்தட் கண்ணி விளங்கக் காட்சியளிப்பார். இங்கே, யானையின்மேல், ஆறுமுகங்களோடும், பன்னிரு கரங்க,ளோடும், விசும்பாறுக வந்து கோலத்தோடு காணப்பெறுவார் என்று.'

இரவலன் கேட்கிறான்; ஆறுமுகமா! பன்னிரண்டுகையா! அப்படியானல் அந்தக் கோலத்தின் அமைப்பையும் அழகையும் சொல்ல வேண்டும் என்று.

புலவர் சொல்கிறார்: அவன் ஏறியிருக்கின்ற யானை மிக்க வலிபடைத்தது: யாராலும் வெல்ல இயலாதது; எமனைப்

போன்றது: நெற்றியிலே அங்குசம்பட்டு வடுப்பட்டுள்ளது. முகத்திலே மாலே கிடந்தசையும் வண்ணப்படம் அணிந்தது; அதன் இருமருங்கும் மணி கிடந்து ஒலிக்கும். அந்த யானையில் மேல் விளங்குவார். எப்படி என்ருு கேட்கிருய்? மதியும்-மதியைச் சூழவிண்மீன்களும் விளங்குவதுபோல உச்சியில் அரதனக் கீரீடமும்-காதுகளில் பொற்குழைகளும் ஒளிசெய்ய, தவஞ் செய்வார் தவத்தை முடிக்க அவரவர் மனத்திலே தியானப்பொருளாக எழுவன முகங்கள்.

அவற்றுள் ஒன்று இருள் சூழ்ந்த இந்த பரந்தவுலகம் குற்றமின்றி விளங்க ஒளியை வீசிக்கொண்டிருக்கிறது. இந்த முகத்திற்கு உரிய இரண்டு கைகளில் ஒன்று என்றும் விண்ணிலே ஞாயிற்ருேடு உடன்திரிகின்ற முனிவர்களுக்குப் பாதுகாப்பாக உயரத் தூக்கப் பெற்றுள்ளது. அதற்கு இணையான கை இடுப்பிலே வைக்கப்பெற்றுள்ளது.

மற்ருெரு முகம், அன்பர்கள் அகங்கனிந்து கூறும் துதிகளேக் கேட்டு அருள் சுரந்து வேண்டிய வரங்களேக் கொடுத்துக்கொண்டேயிருக்கிறது. அதற்கு இயைந்த கரங்களில் ஒன்று தொடையின் மேலே கிடக்கிறது. அதற்கு இணையான கை (யானேமேல் வருதலால்) அங்குசத்தை வீசி யானையைச் செலுத்துகிறது.

மற்ருெரு முகம் வேதநெறி தவருத அந்தணர்கள் செய்கின்ற யாகங்கட்குத் தீங்கு நேராதவண்ணம் கூர்ந்துநோக்கிக் கொண்டேயிருக்கிறது. அதற்கேற்ற கைகள் கேடகத்தையும் வேற்படையையும் சுழற்றுகின்றன.

மற்ருெருமுகம், இந்த உலகத்திலே வழங்காத வேதசாத்திரங்களில் உள்ள நுண்ணிய உண்மைகளேயாராய்ந்து, முனிவர்கள் இன்புற அவர்கட்குப் பாதுகாப்பாக உணர்த்தி, எல்லாத் திசைகளிலும் அறிவொளியைப் பரப்பி, எல்லாப்பொருள்களேயும் விளக்குகிறது. இதற்கேற்ற கைகளில் ஒன்று உபதேச ஞானமுத்திரைக் கையாக மார்போடு விளங்குகிறது. மற்ருென்று வரத அத்தமாக மார்பிலேயுள்ள மாலேயோடு கீழ்நோக்கிவிளங்குகிறது.

மற்ற முகம் கறுவுதல்கொண்ட உள்ளத்தோடு அசுரர்களை யழித்துக் களவேள்வியைச்செய்கிறது. அதற்கேற்ற கைகளில் ஒன்று வளையலோடு மேல்நோக்கிச் சென்று களவேள்விக்கு முத்திரை கொடுக்கிறது. அதற்கு இணையான கை கீழ்நோக்கித் தொங்கவிடப்பெற்று மணியை யடிக்கிறது.

மற்ருெரு முகம் வள்ளிநாயகியாரோடு புன்முறுவல் பூத்து மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறது. அதற்கியைந்த கைகளில் ஒன்று வானில் மழை பொழிவிக்கிறது; மற்ருென்று தேவப் பெண்களுக்கு மணமாலையைச் சூட்டி வாழ்த்துகிறது.

இங்ஙனம் முகங்களாறும் கைகள் பன்னிரண்டும் தொழில் செய்ய, முருகப்பிரான் தேவதுந்துபி முழங்க, ஊதுகொம்பு ஒலிக்க, சங்கு முழங்க, முரசு முழங்க, கொடியிலேயிருந்து மயில் அகவ, யானையில் மேலேறி வானவழியாக வந்து அலைவாயிலே எழுந்தருளுதலும் அவருக்கு இயல்பான குணம். ஆகவே நீ அங்குச் செல்லின் இத்தகைய கோலத்தில் அறுமுகப்பண்ணவனைப் பார்க்கலாம் என்ருர்.

இரவலன் உலகமனைத்தையும் உய்விக்க எழுந்தருளிய அவர் உருவத்திறத்தை உளப்படத்தில் எழுதி உவகைகொண்டான்.

புலவர் அவருக்குரியது அந்த இடமட்டுமன்று ஆவிநன் குடிக்குப் போனலும் பார்க்கலாம். அங்கும் இருப்பார் என்ருர்.

இரவலன் இரண்டிடங்களில் இருவகையான உருவங்களை உரைத்தீர்களே! அங்கு எங்ஙனம் இருப்பார்? என்ருன்

புலவர், தேவர்களும் முனிவர்களும் தன்னிலையுயர வேண்டியும், குறைகள் தீரவேண்டியும், வான் வழியாக வந்து கண்டு உய்ந்து போகத்திருவாவிநன்குடியிலே தெய்வக்கற்பின்தெய்வயானையம்மையாரோடு சில நாள் தங்கவும் செய்வார் அங்கும் சென்று காணலாம் என்ருர்.

இரவலன்: அங்கு எல்லாரும் சென்று காணலாமோ என்ருன்.

புலவர். அங்கு, யாழின் மெல்லிய நரம்பை எஃகு செவி யாலே அளந்து சுதி கூட்டி, பெருமையாகப் பாடுகின்ற கந்தரு வர்களும், கந்தருவ மகளிரும், யாழ் வாசிக்க, கருடவாகனத்தை யுடைய திருமாலும், இடபக்கொடியையுடைய உருத்திரனும் ஆயிரங்கண்ணுடைய இந்திரனும் தாம் தாம் முன்போலத் தலைவராக வேண்டியும் முருகனுற் சாபம் பெற்ற அயனைமீளவும் அவனுடைய பதவியிலே நிலைபெறுத்துவதற்காகவும் பதி ணெண்கணமான முப்பத்துமுக்கோடிதேவர்களும் தோற்றமும், வலியும், ஒலியும் உடையவர்களாகத்தங்குறை முடிக்க எந்நேர மும் வான் வழியாக வந்து கொண்டேபிருப்பார்கள். அபபோது நீயும் செல்லத் தடை என்ன இருக்கிறது போகலாமே என்கி ருர். (சற்றுச்சிந்தித்து) ஆனல் எல்லாருக்கும் முன்னே முனிவர் கள் போவார்கள். அவர்கட்கு என்றும் தடையேயில்லாமை யால் செல்வார்கள். அவர்கட்கு இடந்தந்து நீ செல்க; காண்க; கருதியதைப் பெறுக என்ருர்.

இரவலன் இத்தனை பேருக்குக் கிடைக்கும் வாய்ப்பு எனக்கும் கிடைக்காதா என்று எழும்புகிருன். உடனே புலவர் அங்கு மட்டுமல்ல ஏரகம் என்ருேரிடம் உண்டு; அங்குச் சென்ரு லும் காணலாம் என்ருர்.

இரவலன்: அதனியல்பு? .... என்ருன்.

புலவர் : அதுவா? ஏரகம் மலைநாட்டிலே உள்ள ஒரு திருப்பதி. அது இன்று குமாரகோவில் என வழங்கப் பெறுவது; அங்கே, அந்தணர்கள் ஈரம்புலராத ஆடையை உடுத்திக் கொண்டு உச்சிமேற் கைகளைக் கூப்பி, முருகப் பெருமானைத் துதித்து, கைகளில் பூக்களை ஏந்தி, ஆறெழுத்து மந்திரத்தை நாவினுள்ளேயே சொல்லி, பெருமானுடைய காலம் அறிந்து தோத்திரங்களைச் சொல்லுவார்சள் அதனைக் கேட்டு மகிழ்ந்து ஏரகத்திலேயும் எழுந்தருளியிருப்பர்.

இரவலன்: இதுவரை அங்கேயிருப்பர்; அங்கேயிருப்பர் என நான்கு இடங்களைச் சொல்லிவிட்டீர்கள்' இருக்கிற இடங் கள் அனைத்தையும் சொல்ல வேண்டும் என்ருன்.

புலவர் : கானவர்கள், மூங்கிற் குழாயிலே அடைக்கப் பெற்று நெடுநாள் முதிர்ந்த தேனைச் சிற்றூரிலேயுள்ள சுற்றத் தோடு உண்டு மகிழ்ந்து, தொண்டகப் பறையின் தாளத் தோடு கூடிய ஒலிக்கு ஏற்ப, பாடு மகளிரோடு குரவை யாடு கின்றனர், அதனைக் கண்டு அவனும் மெய் தீண்டற்குரிய மகளிர் பலரும் குரவையாடுகின்றனர். அவன் அவர்களைத் தழுவி அவர்களை வாரி எடுத்து, அவர்கள் களவறிந்து அவர்களுக்கு இருப்பிடங் கொடுத்து, அவர்களோடு குரவையாடி அசை கின்றான், அதனைப் பொறுக்காமல், வேலன், ஆடை மலர்மாலை அணிகள் முதலிய அனைத்தையும் செந்நிறமாகப் பூண்டு கச்சை யிறுகக்கட்டி, வீரக்கழலையணிந்து, வெட்சிமாலையைச் சூடி, மயில்மீது ஏறிக் கோழிக் கொடியை உயர்த்தி, மகளிரோடு மனைகடோறும்சென்று ஆடுதலும் அவன் பண்பு; ஆகவே அவனை நீ காண விரும்பின் வேலன் குரவை யாடுகின்ற குன்றங்கடோ றும் காணலாம். இன்னின்னமலையென எம்மாற் பட்டியல் தர இயலாது. அங்கு மட்டும் என்று எண்ணி விடாதே, இன்னும் பல இடமுண்டு பார்க்கலாம் என்றார்.

பரவசமுற்ற இரவலன் அவைகளையும் அறியும் விருப்போடு நிற்கிறான். அதுகண்ட புலவர்; எங்கெல்லாம் தினையரிசியும், பூவுங் கலந்து தூவி ஆடறுத்து, கோழிக்கொடியை நாட்டிவிழா எடுக்கிறார்களோ அந்தந்த ஊர்களில் எங்கும் இருப்பான்.

அன்பர் பலர் கூடியிருந்து, துதிப்பாடிக் குழைந்து கண்ணீர் மல்க இருக்கிறார்களோ அங்கெல்லாம் இருப்பன்.

வேலன் வெறியாடுகிற களங்களில் இருப்பன்; காட்டிலே பொழிலிலே யாற்றிலே அதன் இடைக்குறைகளாகிய நடுத் திட்டுக்களிலே குளத்திலே இன்னும் வேறு வேறான இடங்களி லே இருப்பன்.

நாற்சந்தி, முச்சந்தி, ஐஞ்சந்தி, கடம்பமரத்தடி, ஊர்ப் பொது மன்றங்கள், ஊரம்பலம், ஆதீண்டு குற்றியாகிய ஆஉரிஞ்சுதறியிருக்கும் இடங்கள் இங்கெல்லாம் இருப்பன்.

அங்கெல்லாம் கோழிக் கொடி நட்டு வெண்கடுகையும் நெய்யையுங் கலந்து அப்பி, மந்திரங்களை வாய்க்குள் சொல்லி,

வணங்கி, மலர்தூவி, மேலாடையுடன் கையிலே காப்புக்கட்டி பொரிகளைத்தூவி, உதிர அரிசியைச் சிறுபலியாகயிட்டு, மஞ்சள் சந்தனம் முதலியவற்றைக் கரைத்துத் தெளித்து, எங்கும் மாலைகளைத் தொங்கவிட்டு, நாடு பசியும் பிணியுங் நீங்கி, வசியும் வளனும் பெறுக என வாழ்த்தெடுத்து, பல வாச்சியங்கள் ஒலிக்க தெய்வத்தை வரவழைக்கின்ற இடத்திலே கொம்பூதி, மணிகளையடித்து, வாகனமாகிய மயிலை வாழ்த்தி, வேண்டியவர் வேண்டியதைப் பெற்று வழிபட எழுந்தருள்வார், யான் அறிந்தவரை கூறினேன். எங்கிருந்தாலும் சரி நீ இனிய முகத்தோடு துதிசெய்; கைகளைத் தலைமேலே குவித்து வணங்கு; பின்பு அவருடைய திருவடிகள் உன்முடியிலே படும்படிக் கீழே விழுந்து வணங்கு; பின்னர் அவருடைய குணநலங்களையும் வரலாறுகளையுஞ் சொல்லித்துதி; 'ஏதோ யானறிந்தஅளவு துதித்தேன். தேவரீர் புகழ் அளந்தறிய மாட்டாதன ஆதலால், திருவடியை யடைய எண்ணி வந்தேன்; என்று நீ சொல்வதற்கு முன்பே பேய்க்கணமும் பூதகணமும் ஓடிச்சென்று முருகனிடம் இவன் கருணை செய்யத்தக்கவன்; நின்புகழைக் கேட்டு வந்தனம் என்று கூற, முருகப்பிரான் அவைக்கு வந்து, தன் அளவிலாற்றலை யடக்கிக்கொண்டு, நின்கண்ணொளி பொறுக்குமளவு தன் ஒளி வடிவான மேனியைக் காட்டி', நீ வந்தது எனக்குத் தெரியும்; நீ ஒருவனே வீடடைதற்குரியவனாகத் தோன்றும் வண்ணம் வீடுபேற்றை வழங்குவன்.

அவன் பழமுதிர் சோலையாகிய திருமாலிருஞ் சோலையிலும் உள்ளான். அம்மலை அருவிகளையும், அழகுகளையும் உடையது என்று கூறி ஆற்றுப்படுத்தார். இரவலன் முருகனைக் காண வேண்டும்; கருதியன முடித்து இன்புற வேண்டும் என்ற விருப்பினன் ஆயினன் என்பது.

இப்பாடல் முழுதையும் பொருட்டொடர்புடைய ஒரே நோக்குடன் இணைத்து எண்ணும் போது, பழமுதிர்சோலை மலைகிழவோன், குன்றமர்ந்து உறைதலும் உரியன்; அலைவாய்ச்சேறலும் உரியன்; ஆவிநன்குடி அசைதலும் உரியன்; ஏரகத்துறைதலும் உரியன்; குன்றுதொறாடலும் பண்பு; அவனைக்காண விரும்புவையாயின், அவன் நின் முன்தோன்றிப் பெறலரும் பரிசிலை நல்குவன் என்ற பொருள் கிடைக்கும்.

மதுரை யாசிரியர் நக்கீரருக்கு மதுரையின் பாலுள்ள சோலைமலையும் மேல் பாலுள்ள பரங்குன்றும் முன் எண்ணத்தக்கவையாயின. அதனால் இரண்டனையும் ஒருங்கெண்ணப் பாடல் முழுவதையுமே ஒரு தொடராக்கிப் பழமுதிர் சோலைகிழவோன் இங்கெல்லாம் இருப்பன்; கருணையே வடிவானவன்; வேண்டிய வெல்லாங் கொடுப்பான் என்கின்றார். இது நூல்நுதலிய பொருள்.

ஆராய்ச்சி:

இதுவரை நாம் கருதிய நூற்காட்சியும்—திணைதுறைக் காட்சிகளும் நக்கினார்க்கினியர் உளத்தில் நக்கீரரைக் காணும் வாய்ப்பினை அளித்தது. இனி, நக்கீரருடைய தனி நிலையை அவர் வாய்மொழியைக் கொண்டு ஆராய்வோம்.

ஆற்றுப்படுக்கும் பெரும்புலவன் தன்னை இன்னாரென்று காட்டிக்கொள்ளவில்லை. இப்பாடலையியற்றிய நக்கீரனாகிய தானே என்று கருதும் வகையில் கவிதையை நடத்திச் செல்கிறான்.

முதுவாய் இரவலன் என்பதற்கு நக்கினார்க்கினியர் முதிர்ந்த வாய்மையையுடைய புலவன் என உரைகண்டு வீடு பெறுதற்குச் சமைந்தான் என்றனர். அது போலவே 'பெறலரும் பரிசில் என்பதற்கு வீடுபேறாகிய பரிசில் என்றனர்.

இந்த ஆற்றுப்படை 'பொய்ம்மையாளரைப் பாடாமற் புகலூர் பாடிய செந்தமிழடியாரைப்போலப் புலவன் மன்னர்களைப் பாடிப் பொருளையடைய விரும்பாமல் இறைவனைப்பாடிப் பெறலரும் பரிசில் பெற எண்ணிய கூற்றானே அமைக்கப்பட்ட தொன்றாம்.' பெறலரும்ப-ரிசில்வேறு எங்கும் எவரிடத்தும் பெறுதற்கரிய பரிசில். அது பொன்னும் போகமுமாகலாம் வீடுபேறாகலாம். எதுவாயினும் தன்குறையை நிறைவாக்கிக் கொள்ளப் புலவன் விழைந்ததையே யுணர்த்தும். ஆனால் நக்கினார்க்கினியர் 'ஏன்? வீடுபேறு' எனக்கருதினார் என்று எண்ணத்தோன்றும். நச்சர்காலத்திற்கு முற்பட்ட பரிபாடலில் 'பொருளும் பொன்னும் போகமுமல்ல அருளும்

அன்பும் அறமும்' என்று புலவனொருவன் வேண்டிய பகுதி புலவன் விருப்பம் இவையாகா என்ற எண்ணத்தைத்தர அதனாலே வீடுபேறு எனக்கருதினாரோ என எண்ணத் தோன்றுகிறது.

பழமுதிர்சோலை மலைகிழவோன், உறைதலும் முதலான தொழிற்குரியன் எனப்படுதலால், ஆறேபடை வீடாதற்குரியன என்பது பெறப்படாது. அந்தவரிசையிற் கூறப்பெற்ற காடுங்காவுங்களின் பெறுந்துருத்தியும் கூட படை வீடெனக்கருதப்படுதல் வேண்டும். இவை படைவீடல்லவாயின் குன்றுதோறாடலிற் கூறப்படும் குன்றுகளும் படை வீடாகா, ஆகவே படை வீடு என்றபடிக்கு இயற்கையாகவும் அவ்வப்போதும் படைக்கப்பெற்ற முருகனிலையங்களை உணர்த்தும் என்பதே பொருளாதல் வேண்டும்.

ஆகவே நக்கீரர் புதுப்படைப்பாகப் புலவனைத் தெய்வத்தினிடத்து "ஆற்றுப்படுத்து ஆற்றுப்படுக்கப்படுவான் — ஆற்றுப்படுக்கு இடம் இரண்டினும் புதுமை கண்டார். அது பின்னர் புலவராற்றுப்படையாகப் புறப்பொருள் வெண்பா மாலையில் இடங்கொண்டது. அதனால் பலரும் இதனைப்புலவராற்றுப் படை என்றனர். நச்சினார்க்கினியர் இதனை மறுத்து நால்வகை யாற்றுப்படையுள் ஒன்றாகவே அடக்கி இது தலைவனொடு சார்த்தி வழங்கும் பெயராயிற்று என்ற கருத்தில் முடித்தார்.

திருமுருகாற்றுப் படையால் அறியப்பெறும் சில வழக்களும் — மரபுகளும் :-

நக்கீரர் மாடமலி மறுகிற் கூடலின் பகைவரை வென்றடக்கிய புறவாயிலைக் காட்டுகிறார். அங்கே போரை விரும்பித் தூக்கப் பெற்ற கொடியுள்ளதாம். "அது மிக மிக உயர்ந்துள்ளதாம், அதில் பந்தும் கழங்கும் பாவையும் கட்டப்பெற்று தொங்குகின்றனவாம். மற்ற மன்னர்கள் பந்தும் கழங்கும் பாவையும் வைத்து விளையாடும் பாவைமார்போன்றவர்கள்; யான் ஒருவனே வீரன் என்ற குறிப்புத் தோன்றக் கட்டுவது மரபு. இது போரை விரும்பிய காலத்துத்தான் இங்ஙனம் கட்டப்

பெறும். இதனால் பந்து முதலியன வைத்து விளையாடுதல் மகளிர்க்கேயுரிய வழக்கம் என்பதும், ஆடவர் ஆடுதல் இழிவு என்பதும் கூட விளக்கப் பெறுகின்றன. இது வீரமும் விளையாட்டும் பற்றிய மரபு.

இறைவழிபாடு:-

தமிழகத்து மக்கள் தொன்றுதொட்டு இறைவனை மனமுருகி வழிபடும் மாண்பினர். கற்பன கற்றுத்தேர்ந்த அறிஞர்கள் செய்த வழிபாட்டுமுறை ஒன்று, தந்தொழிலையன்றிப் பிறவற்றைக்கல்லாத மக்கள், தங்கள் சமுதாய வாழ்க்கையோடு ஒட்டி, வழிபட்ட முறை ஒன்று. ஆக இரு முறைகள் உள. அவற்றுள் கற்றறிந்தோர் வழிபாட்டுமுறை விதிமுறைப் பூசனை எனப்படும். மற்றோர் வழிபட்டது அன்புநெறிப் பூசனை எனப்படும். இவையிரண்டனையும் நக்கீரர் தமது ஆற்றுப்படையிற் குறிக்கின்றார்.

விதிமுறைப் பூசனை .-

திருவேரகம் என்னுந் தலம். அங்கே அந்தணர்கள் நல்ல குடியிற்றோன்றியவர்கள். நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியம் காத்தவர்கள். அறநெறி தவறாதவர்கள்; முப்புரிகொண்ட பூண் நூலாக ஒன்பதிழையணிந்தவர்கள். அவர்கள் நீராடி ஈரம்புலராத ஆடையை உடுத்திக் கொண்டு, உச்சிமேற் கைகுவித்து, ஆறெழுத்து மந்திரத்தை வாய்க்குள் ஒதிக்கொண்டு, பூவைக் கையிலேந்திப் பூசிக்கின்றார்கள் என்கிறார். இதில் அந்தணருடைய அகத்தூய்மையும் புறத்தூய்மையும் வழிபடுமுறையும் வகுக்கப்பெறுகின்றன.

அன்புநெறிப் பூசை:-

பூசை செய்வதெல்லாம் அன்பைப்பெருக்கி அறிவைப் பெறுதற்கே. "கிரியை எனமருவும் யாவையும் ஞானங் கிடைத்தற்கு வாயில்". ஆகவே பூசையின் பெரும் பயன் அன்பு சுரக்கச் செய்வதே. அன்பு சுரந்து அதனாலேயே பூசை நிகழுமானல் அது எந்த விதிகளையும் கட்டுப்பாடுகளையும் வேண்டாது. அவரவர்களும் தம் மனத் தெழுந்த

அன்பின் மீதுர்ச்சியினல் இறைவற்கு உகந்த செயல் எவை என்று எண்ணுகிருர்களோ அவைகளைச் செய்வர். இறைவன் மிகமிக இரங்கி அவர்களுக்கே விரைவில் அருள் செய்வன்.

அன்புநெறிப்பூசையைக் குறமகள் செய்வதாக வைத்துக் காட்டுகிருர் நக்கீரர். குறமகள் வேத ஆகமங்களை ஓதிய வளல்லள். பூசை விதிகளையும் அறிந்தவள் அல்லள். ஏதோ அன்பு மேலிட்டது. தங்கள் குலவழக்கப்படி வழிபடுகின்ருள். குலவழக்கே விதியாகிறது.

காடு கா கந்துடைநிலை முதலான இடங்கள் பரந்துபட்டிருத்தலின் தெய்வ வழிபாட்டிற்குரிய இடம் இதுவென வரையறுத்தற் பொருட்டுக் கோழிக் கொடியை நட்டு அவ்வுருகெழு வியனகரைச் செப்பனிட்டுத் தூய்மையுறுத்தினர் *நற்செயல்களைச் செய்யும்போது பேய் முதலியன வந்து இடையூறு செய்யும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. அவைகள் அங்ஙனம் செய்யாதபடி வெண்கடுகையும் நெய்யையும் அப்பினர்கள். மந்திரத்தை முணுமுணுத்தார்கள். குருதியும் அரிசியுங் கலந்து திசைகாவற்றெய்வங்கட்குப் பலியிட்டார்கள். (பிரப்பங் கூடையிலே அரிசியை வைத்தார்கள் எனலும் உண்டு) நாற்புறமும் சிவந்த நூலைக் கட்டினர்கள். எல்லை கோலினர்கள் காப்புக் கட்டினர்; நடுவிலே மஞ்சளையும், சந்தனத்தையுங் கரைத்துத் தெளித்தார்கள். அந்த இடத்தை மாலைகளால் அணி செய்தனர். நறிய தூபமும் தீபமுங் கொடுத்தனர். ஊர் வாழ்த்தோடு பூசை தொடங்குகிறது. பிள்ளையாரை வரவழைத்தனர் என்கின்றனர் (வரி. 226-244) 'இது முருகன் எல்லார் உள்ளத்திலும் எழுந்தருளி, அச்சூழலில் பூசை முடியும் வரை இருந்துஅருள் வழங்கும்படி வேண்டும் அருவ வழிபாட்டுமுறை

மற்றென்று, வேலன்மீது முருகன் ஆவேசம்வர, அதனல் வேலன் பசுகரணங்களாகிய தன்னுணர்வு கெட்டுத் தான்

*சிலர் கோழிக் கொடியோடு சென்று நீராடி வந்து என்பர். உரைகாரர் 'கோழி கொடியோடே வியனகரை அமைவரப்பண்ணி' என்பர். ஆகவே கோழிக்கொடியை உருகெழுவியனகர் எல்லையைக் குறிப்பிட நட்டு இடத்தைச் செப்பஞ் செய்தனர் என்பதே கருத்தாதல் காண்க

முருகன் என்ற உண்மையுணர்வு தோன்றப் பெற்று, முருகனே தானகி நின்று, சிறுகுடியில் வாழ்வார்க்கு வசியும் வளனும் கொழிக்க வரங்கொடுக்கும் முறை. இதுவும் அருவ வழிபாடு போலத் தோன்றினும் வேலன் தன்னறிவு கெட்டுத் தலைவனறிவையுஞ் செயலையுமே தான் மேவி அறக்கருணை, மறக்கருணையிரண்டையும் புரிகின்ருனென அறிவுருவ வழிபாட்டு முறையை அறிவிப்பதாம். இங்ஙனம் மூவகை வழிபாடுகளையும் மக்கள் பண்பாட்டிற்கேற்ப மொழிகின்ருர் நக்கீரர். (194-216)

இறை வழிபாட்டின் எதிர்நோக்கு :-

இறைவனை வழிபட்டால் வேண்டுநர் வேண்டியாங்கு எய்தலாம் நாடு பஞ்சமும் பிணியுமின்றி வாழும் என்ற எதிர்நோக்கும் மன உறுதியும் மக்கட்கு இருந்தனஎன்பது அறிவிக்கப்பெறுகின்றது.

புராண வரலாறுகள் :

'மறுவில் கற்பின் வாணுதல் கணவன்'

என்றதுமுருகன் சூரபன்மனை வென்று வீரமாகேந்திரபுரியை விட்டுத் திருப்பரங்குன்றத்தில் தெய்வத்தச்சனல் படைக்கப் பெற்ற வீட்டில் எழுந்தருளினர். இந்திரன் முதலானவர்கள் வெற்றிக்களிப்பால் வாழ்த்தெடுத்தனர். பூசித்தனர். இந்திரன் தன் மகள் தெய்வயானையம்மையாரை முருகனுக்கு மணஞ் செய்து கொடுத்தான் என்ற வரலாறு குறிப்பிடப்பெறுகின்றது

2 'சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்' 'கோழியோங்கிய வென்றடு விறற்கொடி' "மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து" ஓடாப்பூட்கைப்பிணிமுகம்" என்பன, முருகனுடைய பேராற்றலுக்கு எதிர் நிற்க மாட்டாத சூரன், இவனை நேரில் வெல்ல இயலாது. வஞ்சகத்தால் மறைய நின்ருவது பொருவோம் என எண்ணிக் கடல் நடுவே ஒரு மாமரமாயினன். முருகன் கைவேல் அங்கும் சென்று அம்மரத்தை வேரோடும் வீழ்த்தியது. சூரன் மரவடிவு நீத்துத் தன்வடிவெய்தி இரண்டு வேறு வடிவு கொண்டான். அவற்றுள் ஒன்று

பிணிமுகமாகிய மயில்; மற்ருென்று கோழி. இருவுரு எடுத்து முருகனுக்கு ஊர்தியும் கொடியும் ஆயினன் என்பது வரலாறு.

3 'ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப, அறுவர் பயந்த ஆறமர்செல்வ'

நிலம் நீர் தீ வளி ஆகாயம் என்ற பூதத்தெய்வங்கள் ஐந்தில் ஒன்ருகி அங்கியேற்று அறுவரிடம்தர, அவர்கள் வாயிலாக முருகன் ஆறு குழந்தைகளாய்ப் பதுமப்பாயிலிலே வளர்ந்தான் என்பது.

தேவர்கள் சூரனிடம் படுந் துன்பந் தாங்காமல் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான் தேவர்கள் செய்த தீவினை கழியும் வரை யோகிருந்து பின் பார்வதியாரை மணந்தும் சேனைத்தலைவனுகிய மகனைத் தர நாள் பல கழிந்தன. அதனல் தேவர்கள் மீண்டும் வேண்டினர். சிவன் ஐந்து முகங்களோடு அதோ முகமும் தந்து திருமுகங்கள் ஆருகித் திருவுளம் பாலித்தான். அப்போது அவர் நெற்றிக் கண்களிலிருந்து தீப்பொறியாறு உண்டாயின. அவற்றை அங்கியேற்ருன். சரவணப்பொய்கையிலே விட்டான். சாலினி ஒருத்தி நீங்க ஏனைய ஆறு முனிபன்னியரும் ஏற்றனர், கருவுற்றனர் சரவணப்பொய்கையிலே பதுமப் பாயலிலே கருவுயிர்த்தனர். முருகன் ஆறுகுழந்தையாகித் தாமரை மலரிலே விளையாடினர் என்பதையுள்ளிட்டுச் சொன்னது இப்பகுதி.

4 ஆல்கெழுகடவுட் புதல்வ: சிவபெருமான் தாட்சாயணி என்னும்தன் பன்னியை இமவானிடம் மகளாகப் பிறக்க என அனுப்பிவிட்டுக் கல்லாலமரத்தடியிலே சனகாதியர்க்கு உபதேச குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்தார். அப்போது தேவர்கள் வேண்ட, இமவான் மகளாராகிய பார்வதியாரை மணஞ்செய்தும் அவர் வழியாக அன்றித்தன் கண் வழியாக வேதனயனைத் தோற்றுவித்தார் என்பது வரலாறு.

மால்வரை மலைமகள் மகனே: இது பார்வதிதேவியார் ஆறுகுழந்தைகளையும் ஒன்ருக வாரியெடுத்து ஒன்ருக்கிக்

கந்தனெனப் பேர் புரிந்தனர். தன்பாலை ஊட்டினர். ஆதலால் வந்த பகுதியிது.

மங்கையர் கணவ: இது தெய்வயானையம்மையாருக்கும் வள்ளி நாயகியாருக்கும் கணவனுன வரலாற்றையறிவிப்பது.

குன்றங் கொன்ற குன்ருக் கொற்றப்: இது முருகன் போருக்காக வீரமாகேந்திரம் நோக்கி வரும்போது தாரகன் உறைவிடமாகிய கிரவுஞ்சம் என்னும் மலை, வழியைத்தடுத்தது. சேனைகளையும் மறைத்தது. அதனை முருகன் தன் வேலாற் பிளந்தார், அனைவரையும் விடுவித்தார் என்பது வரலாறு.

முருகனுடைய பிறப்பு வரலாறும் போர் வரலாறும் பிறவும் பரிபாடலிற் சிறிது மாற்றமுடன் வழங்கப்பெறுகிறது. தொகை நூல்களில் முருகன் பல இடங்களில் ஆட்சி செலுத்துகிருர். ஆகவே புராணவரலாறு புகுந்தமையால் இந்நூல் பிற்பட்ட காலத்தது. எனவோ ஆற்றுப்படை செய்த நக்கீரர் வேறு எனவோ சாதிக்க இயலாது.

முருகன் மந்திரமும் ஓதுமுறையும்.

முருகன் மந்திரம் ஆறெழுத்துடையது. அதனல் 'ஆறெழுத்து' எனவே கூறப்படும். இம்மந்திரம் மிக மறைவானது. பிறர் செவியிலும் கண்ணினும் படாத வண்ணம் நாவசையாமல் எண்ண வேண்டும். அதற்குமுன் புறத்தூய்மையுடன் புலரா ஆடையுடனிருக்க வேண்டும் என்றெல்லாம் கூறுகின்ருர்.

எண்ணுமுறை: நம்மால் தொழப்பெறும் திருவுருவை இடைவிடாது எண்ணுவதாலேயே நம் எண்ணம் உயருகிறது. சித்தம் தெய்வமாகிறது. எண்ணுவதற்குத் திருவுருவ அமைப்பு முழுவதையும் அறிந்திருத்தல் வேண்டும். அதற்காகவே திருச்சீரலைவாயில் எழுந்தருளியிருக்கும் செவ்வியைக் கூறுவதாக வைத்துத் தியானம் அல்லது எண்ணு முறையை நன்கு கற்பிக்கின்ருர் நக்கீரர். அறுமுகப்பண்ணவனுடைய அருளுருவ நிலையை அறிவிக்கின்ருர்.

நிற்குமுறை: முறுகிய அன்பால் இறைவனேடொன்றி அவனே தானேயாய் நிற்குமுறையும், முன்னும் உள்ளும் நின்று அருள் வழங்குகிருர் என இறைவனைத் தன்னின் வேருக எண்ணுமுறையும், என்றும் எங்கும் துணையாகின்ருர் என உடனுக நிற்குமுறையும் ஆகிய மூன்றையும் உணர்த்துகிருர்.

இறைவனையுள்ளத் தொளியாகத் தன்னுளடக்கி நிற்கும் ஒன்ருனநிலை வேலன் வெறியாடுகின்றபோதும், விளைவு கூறும்போதும் அறிவிக்கப்படுகிறது. உடனுய் நிற்குநிலை காடு கா, பரங்குன்று எங்கும், மற்றுஞ் செல்லுமிடங்களனைத்திலும் முருகனைக்காணும் நிலையைக் கூறும்போதும் அறவிக்கப்பெறுகின்றன.

இங்ஙனம் புராணவரலாறுகளையும்- அவன் நமக்குச் செய்யும் அருள் நிலைவேறுபாடுகளையும் அறிந்த நமக்கு அவனணியும் அணிவகை, ஆடை, முதலியன பற்றியும் நக்கீரர் சொல்வதை நன்கறிதல் வேண்டும் என்ற எண்ணம் பிறப்பதியற்கையே.

அணிகள்: கிண்கிணி (14) பல்காசு நிறைத்த சில்காழ் (மேகலை) (16) அவிரிழைச் சங்கிலி சரடு முதலியன. (18) தெய்வவுத்தி (தலையிலணியப்படும் அணி) (23) மகரப்பருவாய் காதிலிருந்து பின்முடியில்தொட அணியப்பெறும் மீன்வடிவானஅணி(25) முடி(84) பொலங்குழை (86) பருமம்-ஆடைமேலணியும்மாலை(146) முதலிய பொன்னணி வகைகளுரைக்கப்பெற்றுள்ளன.

முருகனுக்குரிய மலரும் மாலையுமாக, மராமலர்மாலை (10-11) சண்பகமலர்(27) காந்தட்கண்ணி(44) அலரி மாலை 236, முதலியன கூறப்படுகின்றன.

ஆடை 'கோபத்தன்ன தோயாப் பூந்துகில்' என்பதால் இயல்பாகவே செம்மையான ஆடையே அவனுக்குகப்பானது என்பது உணர்த்தப்பெறுகின்றது. சிவபெருமானுக்கு மானின் உரிவையும் உரியது. பொதுவாக ஆடையின் இயல்பை

'புகை முகந்தன்ன மாசில்தூவுடை (138) என்ற பகுதி உணர்த்துகின்றது.

படைக்கலங்கள்: அங்குசம், எஃகு அல்லது வேல், வட்டம் அல்லது தோல், மணி, தோட்டி(78- வரி 107முதல் 109வரை)

முருகனுக்கு விருப்பமான வாச்சியங்களில் முரசம் (121) தொண்டகம் (197) வயிர்—வளை (120) முதலான பலவகை வாச்சியங்கள் கூறப்படுகின்றன.

மரமுதலான ஓரறிவுயிர்வகைகள்:

அகில் 296,
ஆசினி 301,
ஆரம் அல்லது சந்தனம் 297.
கடம்பு 225
சண்பகம் 27,300,
தாழை-தென்னை. 307
நாவல்+மரம் 18
தக்கோலம் 191
மராஅ—வெண்கடம்பு, செங்கடம்பு 10. 202, 225
வேங்கை 36.
செயலை— அசோகு 207
கணவீரம் 236.
குல்லை—கஞ்சங்குல்லை. 201
குளவி- காட்டுமல்லிகை. 191
தினை.—218, 242,
காந்தள்—தோன்றி-43.
நெய்தல்- 74

அமை— முள்ளிலாமூங்கில். 195,
ஆல்— 256.
பனை 312
கோங்கு 34
மா 60, 143, 203.
நாகம்- சுரபுன்னை 302.
பிண்டி—அசோகு 31
மருது. 28, 34
வெள்ளில்-விளா 37
வெட்சி 21
வேரல்- சிறுமூங்கில் 297
ஐயவி 228.
கறி. (மிளகுக் கொடி) 309
பச்சிலைக்கொடி. 190
மஞ்சள் 235
தாமரை 73
நீலம்—தருப்பை. 253.
வெண்கூதாளம்— 192

இவைகளே இப்பாடலில் வந்த ஓரறிவுயிர்களின் பெயர்கள். இவற்றின் இயல்பும், வளர்ப்பு முறையும் பயனும் முன்பின் வரும் அடைமொழிகளால் அறியக்கிடப்பன. அவை தனித்தெழுத வேண்டிய சிந்தனையாதலின் ஈண்டு எழுதப் பெறவில்லை.

விலங்கினங்கள்:

உளியம்—கரடி. 313.
களிறு—யானை, 52, 158, 304
கேழல்—ஆண்பன்றி 311
விடை—ஆட்டுக்குட்டி 232.
மறி—ஆட்டுக்குட்டி 218
மான்—கருமான் 129.
முசுக்கலை—குரங்குவகைகளில்ஒன்று 303
யூகம்—கருங்குரங்கு 303
வெள்ளேறு—இடபம் 151

நீர்வாழ்வன:

மகரமீன் 25, வளை அல்லது சங்கு 120.

பறவைகள்:

கூகை 49.
கோழி 38, 219, 311
சுரும்பு 43, 203
சேவல் 210.
மயில் 122, 210, 247, 310.
புள்—கருடன் 151
வண்டு 76, 150, 199.

ஊர்வன: பாம்பு. 49, 150

தெய்வங்களைப்பற்றிய குறிப்புக்கள்:

1 **இந்திரன்:** ஆயிரங்கண்களை யுடையவன்; நூறு வேள்விகளைச் செய்து முடித்தவன்; வெற்றியுடையவன், பக்கத்திற்கிரண்டாக நான்கு கொம்புகளுடைய ஐராவத யானையில் ஊர்ந்து செல்பவன். இவன் முருகனை வழிபட ஆவிநன்குடிக்கு வருகிறான்.

2. **நாற்பெருந் தெய்வங்கள்;** இந்திரன் யமன் வருணன் குபேரன் என்னும் தெய்வங்கள். இவர்கள் நால்வரும் ஊரைக்காப்பவர்கள். (160-1)

3 **பலர் புகழ் மூவர்:** அயன் அரி அரன் என்பார் மூவரும். இவர்களில் அயன் முருகனாற் சாபம் பெற்றுப் படைப்புத் தொழிலை யிழந்தான். முதற்றொழிலின்றாகவே ஏனையிருவருக்கும் தொழில் இல்லையாயிற்று. ஆதலால் அவரவரும் தத்தம் தொழிலைப் பெற முருகனைக் கண்டனர் என்ற வரலாறு பேசப்படுகிறது. (162.)

4 **ஐவருள் ஒருவன்**: அங்கியின் அதிதெய்வமான உருத்திரன் இவன் சிவபெருமானருளிய தீப்பொறிகள் ஆறனையும் ஏற்றுச் சரவணப் பொய்கையில் உய்த்தவன். (255)

5 **அறுவர்**: ஏழுமுனிவர்களுடைய மனைவிமார் எழுவரில், கற்பிற் சிறந்தவளாகிய அருந்ததி நீங்க ஏனைய மாதர்கள் அறுவர். இவர்கள் கருப்பத்தைத்தாங்கிச் சரவணப் பொய்கையிலே பதுமப் பாயிலே முருகனைப்பெற்றவர்கள். (255)

6. **கொற்றவை**: உமையம்மையின் கூறாக வெற்றிக்குரிய பெண்தெய்வம். முருகனுக்குத் தாயாகக் கூறப்படுபவள். மயிடனைக் கொன்றவள். (258.)

7 **பழையோள்**: காடுகிழாள், இறைவனுடைய சக்திகளில் ஒருத்தி. மறக்கருணைகாட்டி மக்களையாள்பவள். இன்று வனதுர்க்கை என வழங்கப்படுபவள். 'பழையோன் குழவி' என்கிறார் இவர். (259)

தெய்வங்களேயன்றி அவுணர், பேய்க்கணங்கள் முதலிய சிறுதெய்வங்களும் குறிக்கப்பெறுகின்றன.

அவுணராவார் தேவர்களின் பகைவர்களாய்த் தீயகாரியங்களையே விரும்பிச் செய்யும் கூட்டத்தினர். அவர்கட்குத் தலைவன் சூரன். அவனைக்கொன்று அமரரைக்காத்தவர் முருகன். (வரி 59)

பேய்மகள்: முருகன் சூரனோடு செய்த போரிலே பேய்மகள் ஊனுண்டு துணங்கையர்டுகிறாள் என்ற நிகழ்ச்சியையறிவிக்கின்றபோது பேய்மகள் தோற்றத்தை நக்கீரர் நவில்கின்றார். (47-56)

அவள் தலைமயிர் சிலிர்ந்து சிதறிக்கிடக்கும்; கோணலான முறை பிறழ்ந்த பற்கள்; பிளந்த வாய்; எப்போதும் கோபத்தாற் சிவந்து சுழல்கின்ற கண்கள்; கொடுமையான அச்சத்தை விளைவிக்கும் பார்வை, கோட்டானும் பாம்பும் காதணியாகத் தொங்குகையிலேலே மார்பில் முலையை வருத்

துகின்ற காதுகள்: கரடுமரடான உடல், வயிறு: கண்டவர் அஞ்சும்படியான அதிரும் நடை; இவற்றையுடைய பேய்ப்பெண், அவுணர்களின் குருதியை யளைந்தமையால் முடைநாறும் கூரிய நகங்களாலே கண்களைத் தோண்டியுண்டு, அந்தத் தலையைக் கையிலேந்திப் போர்க்களத்தே தோளை வீசித் துணங்கைக் கூத்தாடுகிருள் என்று அச்சமிகச் சொல்லும் அழகு சிந்தித்தற்குரியது.

பேய் என்பது தீவினையாலிறந்தோர் ஆவி என்பர் சிலர். புறநானூற்று உரையாசிரியர் பதினெண்கணங்களுட் கூறும் வேதாளமே பேயாகும். ஆதலால், தீச்செயலும் கொடுமையும் உடையதாயினும் அசுரர்போலத் தேவகணம் பதினெட்டுள் ஒன்ருகவே கருதப் பெறுவது. இதில் நற்கணமும் உண்டு என்பது பேயாய நற்கணம்' என்னும் திருமுறைப் பகுதியால் உணரப்பெறும். நற்கணத்துப் பேய் மக்களுக்கு நன்மையே செய்யும் என்பதும், அல்லாதது அல்லாதனவே செய்யும் என்பதும் ஊகிக்கத்தக்கவை.

கூத்துவகை: இப்பாடலில் துணங்கை, குரவை என்ற இருவகைக் கூத்துகள் உணர்த்தப்பெறுகின்றன. அவற்றுள் துணங்கை என்பது, "பழுப்புடை இருகை முடக்கியடிக்கத் துடக்கிய நடையது துணங்கையாகும்" என்ற சிலப்பதிகரா மேற்கோள் சூத்திரத்தால் இருகைகளையும் மடக்கி விலாப் புறத்தில் அடித்துக் கொண்டு ஆடும் கூத்தென்று அறியப் பெறும். ஈண்டு பேய்மகளிர், சூரன் போரிலே நிரம்ப உண்ட மகிழ்ச்சியால் ஆடிய கூத்து இது என்று உணர்த்தப் பெறுகின்றது.

குரவை: எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்து ஆடுங்கூத்து. இது வரிக்கூத்தின் ஒருறுப்பாயும் விநோதக்கூத்து ஆறனுள் ஒன்ருயும் விளங்குவது என்று சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதை அறிவிக்கும். இப்பாட்டில் கானவர் சிறுகுடியிலேயுள்ள சுற்றத்தாரோடு கள்ளையுண்டு களித்து தொண்டகப் பறையின் தாளத்திற்கு ஏற்ப ஆடினர்கள் என்று கூறப்பெற்றுள்ளது. இதனுல் இது பலர் நின்ருடியமை யுணர்த்தப்பெற்றது. (196–7)

குடந்தம்படல்: வழிபடல் என்றும், குட என்பது தட என்பது போல வளைவை யுணர்த்துவதோர் உரிச்சொல்லாதலின் அதனடியாகப்பிறந்த பெயராம் என்றும் கூறுவர் நச்சினார்க்கினியர். 'குடந்தம்பட்டுக் கொழுமலர் சிதறி' என்னும் சொற்றொடரை நோக்கும்போது இறைவழிபாட்டுக் காலத்தில் இருகைகளையும் வளைவாக உட்குழியுமாறு இணைத்து அதில் நிறையப்பூக்களை எடுத்துத் துதிபாடிச் சொரிதல் மரபாதலின் அதனை யுணர்த்திற்றோ என்று எண்ணத்தோன்றுகிறது. அச்செயல் இக்காலத்து ஆரியக்கலப்பால் தன் பெயர் மறைந்து புஷ்பாஞ்சலி என வழங்கப்பெறுவதாயிற்று. கூத்திற்குரிய கைவகைகளில் இணைக்கைக்குரிய பதினைந்து வகையுள் ஒன்றுவது. இதனை 'இரண்டு கையும் குடங்கையாய் வந்து ஒன்றுவது; என்னை "புட்பாஞ்சலியே பொருந்த இரு குடங்கையும், கட்டி நிற்கும் காட்சியதென்ப" என்றாராகலின்' என்னும் அடியார்க்கு நல்லார் உரையானும் நன்கு விளங்கும். வரி(229) புட்பாஞ்சலியும் வழிபாட்டு வகையுள் ஒன்றாதலின் 'வழிபட்டு' என்று உரைகண்டார் நச்சினார்க்கினியர்.

இப்பாடலைப்பற்றிய ஆய்வுரைகளும் அவற்றின் அமைதியும்:

இப்பாடலுக்கு இளம்பூரணர் எழுதியதாக உள்ள உரையொன்றும், நச்சினார்க்கினியர் உரையொன்றும், பரிமேலழகர் எழுதியதாக ஒன்றும் வெளிவந்துள்ளன. அவற்றுள் இளம்பூரணர் உரை கி.பி. 1943-ம் ஆண்டில் திரு. வையாபுரிப்பிள்ளை அவர்களால் மதுரைத்தமிழ்ச்சங்க வெளியீடாக அச்சிடப்பெற்றது. நச்சினார்க்கினியருரை பத்துப்பாட்டாக 1889-ம் ஆண்டுமுதல் இன்றுவரை ஐந்தாறு பதிப்புக்கள் மகா மகோபாத்யாய ஐயரவர்களால் வெளிவந்துள்ளன. பரிமேலழகர் உரை பார்த்திப ஆண்டு தி. சண்முகம் பிள்ளையால் வெளியிடப்பெற்றது. பரிமேலழகர் எழுதிய உரையாக இருக்க இயலாதோ என்ற எண்ணத்தால் என் ஆசிரியப்பெருந்தகை ஐயரவர்களால் பத்துப்பாட்டு மூன்றும்

பதிப்பிலே அடிக்குறிப்பாகப் பழையவுரை என்ற தலைப்பிலே இவ்வுரை அச்சிடப்பெற்றுள்ளது. பெரும்பாலும் நச்சினார்க்கினியர் உரை வெளிவந்தபிறகு அதில் அவர் மற்றவருரையாகக் கூறும் பகுதிகளைச் சுமந்து வந்தனவே இளம்பூரணருரையும் பரிமேலழகர் உரையும் எனலாம்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் பழைய உரையாசிரியர்கள். அவர்கள் இருவரிடமும் காணப்பெறும் உரை நயங்களையும் அதனால் நம் விழாத்தலைவர் நக்கீரர் பாடலுக்குள்ள உயர்வையும் காண்போம்.

வரி **இளம்பூரணர்:**

1 'வலன் **நேர்பு** எழுதரும்-வலமாக, யாவர்க்கும் **நேராகச்** சுழலும்'

2 **பலர்** புகழ் ஞாயிறு—தமது சாட்சியாற் பயன் கொள்வார் பலரும் புகழும் ஞாயிற்றை.

கடலின் பசுமையும் ஆதித்தன் மேனியும் போன்று மயிலின் பசுமையும் பிள்ளையார் திருமேனியும் புலப்படலால் என வண்ண உவமம் மட்டும் கொண்டார்.

3 "ஓ அற இமைக்கும் சேண் விளங்கு அவிர்ஒளி போது செய்யாமல் எப்போதும் விளங்கும், மனம் வாக்குகளைக் கடந்த ஒளி"

சோமசூரியர்க்கு இனியன் அவ்வொளி செல்லாமல் ஒழிவற இயல்பான ஒளியையுடைய

வரி **நச்சினார்க்கினியர்:**

ஏர் புவலன் திரிதரும்-எழுந்து மேருவை வலமாகத் திரிதலைச் செய்யும்

எல்லாச் சமயத்தாரும் புகழும் ஞாயிற்றை.

ஞாயிற்றை—மாயைக் கெடுத்தலிற்றொழிலுவமமாகவும், இரண்டையும் வண்ண உவமமாகவுங்கொண்டார்.

"இருவகை யிந்திரியங்களும் பொருள்கண் மேற்சென்று தங்குதல் இல்லையாக இமைத்துப் பார்த்ததற்குக் காரணமான ஒளி: கண்ணால் நோக்குவார்க்கு கண்ணிடம் எல்லாவற்றினும் சென்று விளங்கும் ஒளி"

வரி	இளம்:	வரி	நச்சி:
	தேவருலகத்திலே அகமும் புறமுமுள்ள ஒளி எனலுமாம்.		
4	மதன் உடை நோன் தாள்-யான் எனது என்னும் செருக்கைக் கெடுக்கும் வலிய தாள்.		அறியாமையை உடைத்தற்குக் காரணமாகிய வலியினையுடைய தாள்.
14	பணைத்தோள்-மூங்கில்போன்ற தோள்.		பெருமையையுடைய தோள்
16	சில்காழ்இரண்டு வடம்பொருந்திய காஞ்சி		ஏழு வடமாகிய மேகலை
27	தகடு-இலை		புறவிதழ்
42	மந்தி சூரியன்		குரங்கு
49	கழல்கண்-கழல்போன்ற கண் என உரு உவமங் கொள்வர்.		பிதுங்கிய கண் என வினைத்தொகையாகக் கொள்வர்.
61	சே எய்·முதிரா வடிவையுடையவன்.		சேய்.
80	படுமணி-பெருமையையுடைய மணி.		தாழ்கின்ற மணி.

வரி	இளம்:	நச்சி:
89	**வீ**ரக்கோட்பாடு	விரதக்கோட்பாடு (பதிப்புப் பிழை)
106	**வசிந்து** வாங்கு நிமிர்தோள்—**திரண்டு** வளைய வேண்டுமிடம் வளைந்தும் நிமிர வேண்டுமிடம் நிமிர்ந்தும் உயர்ந்த தோள்.	பகைவர் மார்பைப் **பிளந்து** படைக்கலங்களால் வடுப்பட்டு வேறுரை (பரிமே) இதனை மறுப்பர்
110	ஐயிருவட்டம்; அழகினையும் பெருமையையும் உடைய பரிசையுடனே.	வியப்பையும் கருமையையும் உடை பரிசை.
117	அரமகளிர்க்கு - தெய்வயானையம்மையாருக்கு-	தெய்வமகளிர்க்கு.
122	பல்பொறிமஞ்ஞை வெல்கொடியகவ—பல பீலிகளையுடைய மயிலும் **வெற்றிக்கொடியாகிய கோழியும்** ஆலிக்க; உம்மைத் தொகையாகக் கொள்வர்-கொடி-இடவாகுபெயராகக் கோழியை யுணர்த்தியதாக் கருதினர்.	மயில் கொடியிலேயிருந்து அகவ என்பர்.

வரி	இளம்:	வரி	நச்சி:
145	பருமம்-பதினாற்கோவையாகிய மேகலை.		பதினெண்கோவை மேகலை
159	திருக்கிளர் செல்வன்-அழகுமிக்க தேவேந்திரன்		திருமகள் விளங்கும் இந்திரன்
175	தா-இடையீடு.		வருத்தம்.
213	குறும்பொறிக்கொண்ட... துகில்-நுண்ணிதாய எழுத்துத்தொழில் பொருந்திய துகில் ...		உதரபந்தத்தின் மேலே உடுப்பதாக உட்கொண்ட துகில்.
	முழவு உறழ் தடக்கை—முழந்தாளைப் பொருந்திய கையிலே... (வேலை ஏந்தியவன்)		முழவை ஒத்த கை.
216	தலைத்தந்து-அவரவர்கள் அளவறிந்து இடங்கொடுத்து-		முதற்கைகொடுத்து.
228	ஐது உரைத்து-அழகிய மந்திரங்களை உச்சரித்து.		தோன்றாமல் உச்சரித்து. சிறிது மந்திரம் (பரி)

வரி இளம்:	வரி நச்சி:
244 உரு கெழு வியனகர்-உருகுதல் பொருந்தின அகன்ற நகரின்கண்	அச்சம் பொருந்தின அகற்சியையுடைய நகர்
247 ‘பிணிமுகம் வாழ்த்தி’— மயிலைவாழ்த்தி.	பிணிமுகம் என்னும் பட்டத்தையுடைய யானையை வாழ்த்தி.
256 மால் வரை மலைமகள்- உயர்ந்த மூங்கில்கள் நெருங்கின இமயபர்வத ராசன் மகள்.	பெருமையையுடைய மலையாகிய மலையரையன் [மகள். மால்போலும் வரையினையுடைய மலையரையன் மகளார். (பரி)
268 ‘நன்மொழிப் புலவரேறே’- நல்ல சொற்களையுடைய கவிப்புலவோர்க்கு சிங்கத்தின் முதன்மை யுடையாய்	பர சமயத்தினுள்ளார்க்கு ஏற்றின் தன்மையை யுடையவனே.
273 உருகெழு- உருகுதல் பொருந்திய உருகு+எழு.	உரு + கெழு-உட்குதல் பொருந்திய
282. குறும்பல் கூளியர்- சிறியபல்லையும் உடையராய சேவித்து நிற்பார்.	சிறிய பலராகிய சேவித்து நிற்பார்.
301 நல் பல வாசனை முதுசுளை கலாவ-நல்ல பலாவின்வாசனைகளையுடைய முற்றியசுளை விரவ.	ஆசினி முது சுளை- ஆசினிப்பலாவின் முற்றிய சுளை.

என்பன உரையாசிரியர்கள் வேறு படும் இடங்கள். இளம்பூரணர் கூறும் உரைக்குறிப்புக்கள் சிலவற்றை 'என் பாரும் உளர்' 'எனலுமாம்' என எடுத்தாளுதலால் நச்சினார்க் கினியர் உரைக்கு முந்திய உரை இளம்பூரணரது எனலாம் ஆயினும், இடைக்காலத்தே பழைய உரையைச் சிற்சில இடங் களிற்றழுவி முன்னோர் பொருளாகப் புதுவது புனைதல் பொய் யடிமைப் புலவர்களின் செயலாயிருந்தால்......என எண்ண வும் தோன்றுகிறது. இருவரும் வரிக்கு வரி சொன்னடை யானும் பொருளமைதியானும் ஒத்துச் சில இடங்களில் மட்டும் மாறு படுவதாலும், அவற்றுட் சில மிக நுணுக்கமும் பொருட் செப்பமும் உடையதாக விளங்குதலாலும் இளம்பூரணர் உரையாகவே இருக்கலாமோ என்று துணியவுந் தோன்று கிறது. நச்சருக்கு முன் உரையொன்றிருந்தமை அவருரை யானே அறியப்பெறுதலின் அது இவ்வுரையாகத்தானிருக் கக்கூடும் என்றும் துணியலாம்.

இவையன்றிப் பிற்காலத்தே எளிமையும் இனிமையுங் கருதி, யாழ்ப்பாணத்து நல்லூர் திருவாளர் திரு. ஆறுமுக நாவலர் அவர்கள், குமாரசாமி உவாத்தியார், பூபாலப்பிள்ளை முதலியவர்களும் மற்றும் பலரும் உரை எழுதியுள்ளனர். அவை பொருளுணர்ச்சிக்கு ஓரளவு துணைபுரிவன அன்றிச் சிந்தனைக்குப் பெரிதும் விருந்தாவன அல்ல.

இப்பாடலில் வந்துள்ள அரிய இலக்கண வழக்குகள் சில:-

"**தேயர் என்னுயிர்**"- என்னுயிர் தேய்வதாக எனப் பொருள்படும் வியங்கோள் வினைமுற்று தேயர் என்பது. வியங் கோளீருக, க, இய, இயர் என்பன ஓதப்பட்டுள்ளன. அவற் றுள் இது 'தேயியர்' என்ற சொல்லின் சிதை வழக்காக வழங் கப் பெற்றுள்ளமை காணலாம்.

மாரீற்றுச் சொல்: இவ்வீற்றுச்சொல் இப்பாடலில் இரண்டிடத்து வந்துள்ளது. ஒன்று 'தந்தொழின் முடிமார்' (வரி 99) என்பது. மற்றொன்று 'தம் பெறுமுறை கொண்மார்' என் பது. இவற்றுள் முன்னையது, தொல்காப்பிய மரபின் வண்ணம்

மாரைக்கிளவியும் பல்லோர் படர்கை; காலக் கிளவியோடு முடியும் என்ப" என்ற விதிப்படி 'முடிமார் வந்தார்' 'கொண்மார் சென்றார்' எனக் காலக்கிளவியாகிய வினைகொண்டு முடிதலே மரபு அங்ஙனமாகவும் ஈண்டு நச்சினார்க்கினியர் உரைப்படி, 'முடிப்பாருடைய மனன்' எனப் பெயர்கொண்டு வந்தது. ஆதலால் தொன்னெறி வழுப்பட்டது. அதனால் இப்பாட்டுச் சங்ககாலத்தாகாது. ஆசிரியரும் சங்க நக்கீரர் அல்லர். என முடிவு கட்டுவர் சிலர்.

தொல்காப்பியம், வினைமுற்றியற்கை பெயர் கொண்டு முடிவதாக, இம்மாரீற்று முற்றுச்சொல் 'செய்கு' என்னும் முற்றுப்போல வினை கொண்டு முடியினும் வினை முற்றேயாம் என வழக்குண்மை தெரிவிக்கிறது. ஆயின் வினைமுற்று 'வினை கொண்டு முடியின்' வினைமுற்றே வினைஎச்சமானதாகக் கருதவும் கூடாது என்பதனையும் விளக்க வந்ததாகச் 'செய்கு' என்பதனை வினைஎச்சம் என்றதனாற் குற்றம் என்னை எனின் வினை எச்சம் பால்தோன்றாது; இவை பால் தோன்றலின் முற்று எனல் வேண்டும் என்ற தெய்வச்சிலையார் உரையும் நன்கு விளக்கும். ஆகவே மாரீற்று முற்றுச் சொல் ஏனையமுற்றுக்கள் போலப் பெயர் கொண்டு முடிதல் இயல்பாகவே அமைந்தமையின் ஈண்டுப் புறனடைவிதியாக வினை கொண்டு முடிதலையும் எச்சமாகாமையையும் விதித்தார். ஆகவே மாரைக்கிளவியும் என்னும் இச்சூத்திரம். இது எய்தியதன்மேற் சிறப்பு விதியே யன்றி விலக்கன்று. ஆகவே 'கொண்மார் மனன்' என ஆறனுருபாக விரித்துக் கிழமைப் பொருடோன்ற முடிப்பாருடைய மனத்திலே' என உரைகோடலால் மரபுவழீஇயதாகாது. ஆனால், வினைகொண்டுமுடியின் வினைஎச்சமாகாது, வினைமுற்றே எனத் தெளிவித்தவர் இச்சொல் வினையாலணையும் பெயராகாது என விதந்தனர் அல்லர். ஆதலானும் இங்ஙனம் கூறிய நச்சருரையும், அதனைக் குறிக்கும் 'கொண்மார் மனன்' என்னும் தொடரும் மரபு வழீஇயன ஆகா; கொண்மார் என்பது ஆறனுருபேற்க வந்த வினையாலணையும் பெயராகி, மனன் என்பதனொடு புணர்ந்து கிழமைப் பொருளதாக வந்தது எனலாம். அன்றியும் எங்கும் நுணுக்கமான புதுமைநலங் காணும் நக்கீரர் 'கொண்மார்' என்பதிலும் வினை

யாலணையும் பெயரைக்கண்டார் எனலுமாம். அன்றியும் முடிமார் எழதரு முகன் என இயைத்து காலங்கொண்டதாகவே கொள்ளினும் பொருளிழுக்காது; மரபும் வழாது எனலாம். இதனல் நக்கீரரைத் திருமுருகாற்றுப்படை பாடியதால் பின்னவராக்க வேண்டுவது மின்று.

அடுத்துக் 'கொண்மார்' என்பதனை நோக்குவோம்: 'தம் பெறு முறைகொண்மார் ...... காண" என மாரீற்று முற்றுச் சொல் வினைஎச்சங்கொண்டு முடிந்தது உரையாசிரியர் நச்சினர்க்கினியர் குறைவேண்டிநின்று பெறுங்கூற்ருலே முடித்துக் கோடற்கு'' என செயற்கு என்னும் எச்சமாகத்திரித்தார். இது ஏனைய வினைமுற்றுக்கள்போல முற்று எச்சமாமாயிற்று.

இந்த மார் என்னும் விகுதியே ஒருபெயர்ச்சொல்லையடுத்து பயம்புமார் உளவே எனவரின், அது பொருள்தாரா அசையாய் நிற்கும் (மலை.199) இங்ஙனம் மாரீற்று முற்றுச் சொல் வினை முற்ருயும், வினைஎச்சமாயும், வினையாலணையும் பெயராகியும் வருதல் உணரப்பெறும். ஆதலால் இது முருகாற்றுப்படை நக்கீரர் நெடுநல் வாடை நக்கீரரிலும் வேருனவர் பின்னவர் என்பதற்குத் துணையாகாது.

பெறீஇயர்: *(168)* இது பெற்றவர் என்னும் பொருளைத் தரும் தொழிற் பெயர் என்பர் நச்சினர்க்கினியர். இயர் என்னும் விகுதிபெற்றது வினைமுற்ருயின் வியங்கோளாகவும், எச்சமாயின் எதிர்காலங்காட்டும் செய்யியர் என்னும் வாய்பாட்டு எச்சமாகவும் வருமே யன்றி பெற்றவர் என வினையாலணையும் பெயராகாது. அங்ஙனம் கொள்ள அமைத்தமையான் இது சங்ககால வழக்காகாது என்பர் சிலர். இதிற் பெறீஇயர் என்பது அவ்விரண்டுமன்று. வினையாலணையும் பெயரேயாம், இதுவும் நக்கீரர், பெறு என்னும் பகுதியடியாக அர், 'ய்' அல்லது 'இ' கால இடை நிலை பெற்று வந்த பலர்பாற்படர்க்கை. அது வினையாலணையும் பெயராகிய நுண்மாண் படைப்பு.

எமியம்- "யாமே எமியம் ஆக" - யாம் தனித்திருப்ப. இவ்வுரை கருத்துரை யாமேயன்றி முடிபு வழுவா நேருரையா

காது. யாமே தனித்திருப்பேம் ஆகி என்பதே நேரிய பொருள் ஆகவே 'எமியம்' என்பது தன்மைப்பன்மை வினை முற்றும் எமி—தனி. அம் தன்மைப்பன்மை விகுதி; இவையிணைந்து எமியம் ஆயிற்று. இது, மிக அருவழக்கினது.

அயினிய-செய்யிய என்னும் வாய்பாட்டு வினை எச்சம் 'அயின்றனன்' என்பதன் வேர்ச்சொல் 'அயின்', உண் என்னும் பொருளது. அதனொடு செயப்படு பொருளைத்தரும் இகரவிகுதி புணர்ந்து அயினி எனப் பெயராய் உணவு என்னும் பொருளைத் தந்தது. அயினிய என்பது அயின் என்னும் வேர்ச் சொல்லடியாகப் பிறந்த செய்யிய என்னும் வாய்பாட்டு வினை எச்சம். இங்ஙனம் வரும் ஆட்சியும் மிக அரியதாம்.

கொலைஇய- கொலை என்னும் தொழிற் பெயரடியாக வந்த பெயரெச்சம். இதுவும் பெருவழக்காய் இவர் உரையிற் காணப்படுவதொன்று.

நல்குமதி: மதி என்பது முன்னிலை யசைச்சொல். (தொல். இடையியல் 26) அங்ஙனமாகவும் படர்க்கை வினையைச்சார்த்தி இவர் ஓர் புதிய வழக்காற்றை உண்டாக்கினார். எனல் ஆகாது. மதி தொல்காப்பியனார் காலம்வரை முன்னிலை வினையைச் சார்ந்தே வரும் சொல்லாக இருந்து இவர்காலத்துப் படர்க்கையிலும் வந்ததாகல் வேண்டும் ஆனால் ஓரையந்தோன்றுகிறது. திருமுருகாற்றுப்படைக்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர்,

"இரும்ம் சின்னும் ஏனையிடத்தொடும்
தகுநிலை யுடைய என்மனார் புலவர் (இடையியல் 28)

என்னும் சூத்திரவுரையில் மதி படர்க்கைக்கண் வந்ததனைத் தகுநிலையுடைய என்றதனான் ஆதல், 'திரிந்து வேறுபடினும் தெரிந்தனர் கொளலே'' (இடையி. 47) என்றதனான் ஆதல் கொள்க என்றார். அதனால் மதி படர்க்கையிலும் வரும் அசைச் சொல்லாதலை நக்கீரர் ஆட்சியிலும் காட்டினர்.

ஆகவே, நக்கீரர் இலக்கண நுட்பங்களானும், சொற்படைப்பானும் அரிய சில ஆட்சிகளைத் தம் பாடலால் விளக்கங் கண்டவர் எனலாம்.

அடுத்து நெடு நல் வாடையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

நெடு நல் வாடை.

இப்பாடல் நக்கீரர் பெருமானது பல துறைப் புலமையைப் புலப்படுத்துவது. முன்னே நூற்றறுபத்து ஏழு அடிவரையில் நம்மை இன்பக்கிளவியிலே அழைத்துச் செல்கிறது. நடுவழியிலே கூதிர்க்காலக் கொடுமைகளையும், வாடைக்காற்றின் வருத்தத்தையும் நுகரும் கோவலர், ஆடு மாடுகள், மரங்கள் நிலைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

நாம் இடம் விட்டுப் பெயராமலே—இருந்த இடத்தில் இருந்தபடியே மலையிடத்துக் கூதிர்க் கொடுமையையும், காடு, கடற்கரை, வயல் இங்கெல்லாம் கூதிர் எங்ஙனம் கொடுமைப்படுத்தியது என்பதையும் உணருகிறோம்.

அது மட்டுமா! கவலையேயில்லாத, வாழ்நாளின் பயனை வளமான வழியில் நடத்திச் செல்ல அறியாத முழுவலிமக்கள் கள்ளையுங் குடித்து, மழையையும் பொருட்படுத்தாமல் தெருவிலே குறுக்கும் நெடுக்குமாகத் திரிகின்ற அறியாக் காட்சியை யறிகிறோம்.

எங்கும் மாடமாளிகை: கூடகோபுரங்கள்: யாற்று நீரோட்டம் போன்ற மேடுபள்ளமில்லாத நீர்மட்டமான தரையுடன் கூடிய தெருக்கள் அவற்றில் இருமருங்கும் பருவக் காலங்களுக்கேற்ற தட்பவெப்பத் தகுதி படைத்த வீடுகள்; அந்த வீடுகளில் கூடிமகிழும் குலமகளிர் மாலைக்காலத்திலே போதுகளைக்கொண்டு பொழுதறிந்து விளக்கேற்றி வணங்கும் காட்சி; மாலைநேரக் கடைத்தெருவின் பல வகையான காட்சிகள் எல்லாம் குறுக்கிடுகின்றன. நம்முடைய கண்களின் வழியாகக் கருத்துட் களிக்கிறோம்.

அடுத்து, ஒருபக்கம் சில குலமகளிர் கொழுநனைப் பிரிந்திருந்தும் கடமையுணர்ச்சி மீதுரப்பெற்றுக் கவலையின்றி விளங்குகின்றனர் எனவும், கோமகளோ பூவுதிர்த்த பூங்

கொடிபோல அணிகளை யகற்றித் துன்பமே யுருவாக. நகரின் நடுவே உள்மாளிகையில் தந்தக்கட்டிலில் வடிகிற கண்ணீரை வழித்தெறிந்துகொண்டு கிடக்கின்றாள் அவள் துன்பம் மறைவதாக-இன்பம் வளர்வதாக எனச் செவிலியர் தெய்வம் பராவுகின்றனர். அரசி தன்னை மறந்து துன்பத்திலாழ்ந்து கிடக்கிறாள் இதனடுவிலே அரண்மனையில் வேனிற்காலத்துப் பயன்படுத்தப்பெற்ற போகப்பொருள்கள் யாவும் இன்று பயனற்று கிடக்கின்றன. சன்னற் கதவங்கள் சாத்தப்பெறுகின்றன.

ஆடல்மகளிர் யாழ் வாசிக்க விரும்புகின்றனர். சுதி தளர்ந்திருக்கிறது. யாழ் நரம்புகள் ஈரமாயிருந்தன. அவற்றைச் சூடேற்றிக்கொள்ள நரம்புகளைத்தம் மார்பகத்தே வைத்துச் சூடேற்றிச் சுதி கூட்டிப் பண்வழியே நிறுத்துகின்றனர். இங்ஙனம் கூதிர்க்கால ஆட்சி நடைபெறுவதைப் பார்க்கிறோம்.

கோயிலிலே அரசி துன்புருவாய்ப் புனையா ஓவியமாய் இருக்க அரசன் போர்க்களத்திலே-பாசறையிலே-நள்ளிரவிலே-மழை தூறும்போது விழுப்புண் பட்ட வீரர்களைப் போற்றுவதன்பொருட்டு, நன்மந்திரியொருவனுடன் போர் வீரன் ஒருவனுடைய தோளிலிலே கையைஇட்டு. சேறு துளிக்கப் படவீடுகள் தோறும் சென்று வீரர்களைப் பாராட்டி வருகிறான். அவனிடம் வாடையின் வருத்தமோ கூதிர்க் கொடுமையோ இல்லை. கடமை யுணர்ச்சி ஒன்றே தலைதூக்கி நிற்கிறது. இயற்கை எல்லாருக்கும் பொதுவாயினும் கடமையில் மறந்த கணவனைத் துன்புறுத்துவில்லை. கடமை நிறைவேற்றச்சென்ற கணவனையே நினைத்துக் கொண்டிருக்கும் காதலியை வருத்துகிறது. ஆதலால் போர்முடிக, வேந்தன் வெற்றியுறுக என்று கொற்றவையைப் பராவுகிறாள் செவிலி. போர் முடிந்தால் வேந்தனது முதனினைப்பு அரசி. ஆதலால் விரைந்து வருவன். தலைவி மகிழுவாள் என்றதனை யுள்ளடக்கிய இந்த ஒருபாட்டுக் காப்பியம் உள்ளத்தே எழிலோவியமாகப்படிகிறது. ஆகவே, பிற்பகுதி கடமையுணர்ச்சியாகவும்

போர்ப்பாசறையின் வீரஎழுச்சியாகவும் முடிகிறது. இவ்வளவு தான் பாடற்கரு.

கருவளரும்போது கை கால் தலை கண் காது மூக்காக வளருவதுபோல —அவற்றினிடமாக அறிவொளி இம்மி இம்மியாக எழுவதுபோல இப்பாடலிலும் கருவளர்கிறது. ஒளி ஓங்குகிறது. முதலிலே உடற்பிண்ட அமைப்பைக் காண்போம் உடற்பிண்டம் அல்லது ஊன்தடி பாட்டின் பொதுக்கருத்து. அதில் நானிலக்காட்சி; அதில் முதற்காட்சி; முல்லைநிலம்; அதில் கோவலர் நிலைமை; அவர்கள் கையிலே மாடுகளுக்கு மரக்கிளைகளை வளைத்துத் தின்னத்தருவதற்காக கொடுங்கோல் உள்ளன. மழை கொட்டுகிறது. அதிலே பசுமந்தையை ஓட்டிக்கொண்டு இங்கே மழைகொட்டி எங்கும் வெள்ளக் காடாக இருப்பதால் வேற்றிடம் செல்ல விரும்புகின்றனர். ஆனால் சொந்த இடத்தை விட்டும், பழகிய இடத்தை விட்டும் போக மனமில்லை. ஆனாலும் என்ன செய்வது போகிறார்கள். குளிர் நடுங்குகிறது; கூட்டமாக இருந்து குளிர்காய்கிறார்கள். கையைத் தீயிலே காய்ச்சிக் கன்னத்திலே ஒத்திக் கொள் கின்றனர். அப்படியிருந்தும் நடுக்கம் ஓயவில்லை. பசுக்கள் மேய்ச்சலை மறந்து நின்ற இடத்திலேயே நிற்கின்றன. மந்திகள் வருந்துகின்றன. பறவைகள் குளிர் தாங்காமல் நிலத்திலே வீழ்கின்றன. கறவைப் பசுக்களும் கன்றுகளை யுதைத்துத்தள்ளுகின்றன. இத்தகைய கூதிர்க்காலத்து நள்ளிரவிலே காட்டுச் சூழல் கவின் செய்கிறது. அங்கங்கே புதர்கள். புதர்களின்மேல் முசுண்டைக் கொடியும் பீர்க்கங்கொடியும் விரவிப் படர்ந்துள்ளன. பசுமையான புதரின்மேல் வெண்மையான முசுண்டைப்பூக்களும் பொன்னிறமான பீர்க்கம்பூக்களும் மலர்ந்துள்ளன.

கொக்கினங்கள் நாரைக் கூட்டத்தோடு களிபரந்த ஈர மணலிலே இருந்து கயல்மீனை எதிர்நோக்குகின்றன. பெருமழை ஓய்ந்து வானிற் பரந்துள்ள் வெண்மேகங்கள் மழை பெய்யக் கற்றுக்கொள்கின்றன. மழையால் ஓங்கி வளர்ந்த செந்நெற்பயிர்கள் கதிர் முற்றித் தலைவணங்குகின்றன. கமுக மரங்கள் பாளைவிரிந்து பசுங்காய் முற்றிச் சேறு கொள்கின்றன. சோலைகள் தோறும் மழைநின்றும் தூவானம் சிதறுகின்றன.

நகரிலே இருசிறகும் மாடமோங்கிய தெருவிலே தூற்ற லையும் பொருட்படுத்தாது உடல் வளமிக்க முடலைநாற்ற மிக்க முழுவலிமாக்கள் மேலாடையை இருபுறமும் தொங்க விட்டுக்கொண்டு குறிக்கோளின்றிக் குறுச்கு நெடுக்குமாகத் திரிகின்றனர்.

மகளிர், பூங்கூடையிலுள்ள பூக்கள் மலர்தலால் பொழு தறிந்து கைவிளக்கிலே நெய்பெய்து திரியிட்டுத் தீக்கொளீஇ பூவும் நெல்லுந்தூவித் தாங்கள் மேன்மேலும்ஆக்கமுற மாலைக் காலத்தைக் கொண்டாடுகின்றனர்.

வீட்டு இறப்புக்களிலுள்ள புறாக்கள் குளிர்மிகுதியால் இரவு பகல் தெரியாமையால் பறந்து சென்று இரை தேடி யுண்ணமல், காலை மாற்றி மாற்றி வைத்துக் கொண்டு போதி கைகளிலேயே உறங்குகின்றன.

மாளிகைக்குள், சந்தனக்கற்கள் பயனற்று மூலையிற்கிடக் கின்றன. மகளிர் கூந்தலை வாரிச் சீவி ஒப்பனை செய்யாமல், மங்கலத்திற்காகச் சில பூக்களை மட்டும் அணிந்து நெருப்புச் சட்டியை விட்டகலாமற் குளிர் காய்கின்றனர். ஆல வட்டங்கள் ஆணிகளில் மாட்டியபடியே நெடுநாள் தொங்குவதால் அவற் றின்மேல் ஒட்டடைகள் படிந்துள்ளன. மக்கள் வேனிற்காலம் போலத் பானைத் தண்ணீரை யுண்ணமல், கணப்பில் குளிர் காய்கிறார்கள். இவ்வண்ணம் கூதிர்க்காலத்துக் குளிர் வீசும் போது அரண்மனையில் அரசி மன்னனைப்பிரிந்து கவலையுறு கிறாள். செவிலியர் இனியவும் நல்லவும் சொல்லித் தேற்று கின்றனர். தலைவி ஆராமை மிக்கு கண்ணீரைக் கையால் வழித்தெறிகிறாள். இத்துடன் அரண்மனைக்காட்சியும் அரசி யின் நிலைமையும் முடிகிறது.

நக்கீரர் நம்மைப் பாசறைக்கு அழைத்துச் செல்கிறார். அங்கே அரசன் விழுப்புண்பட்ட வீரர்களைக் காணச் செல் கிறான். ஏவலர் அகல் விளக்கை ஏந்தி வருகின்றனர். அகல் விளக்கின் சுடர் வாடைக்காற்றால் தெற்கே சாய்ந்து எரி கிறது. அரசன் வேம்பு கட்டிய வேலை ஏந்தி வீரன் வழி காட்ட முன் செல்கிறான். பிடிகளும் குதிரைகளும் சேற்றுத்

துளிகளைச் சிதறுகின்றன. அரசன் நழுவி விழும் மேலாடையை இடப்பக்கத்தில் தழுவிக்கொண்டு, வாளைத்தோளிலே தொங்க விட்டுக்கொண்டிருக்கிற வீரனுடைய தோளிலே கையையிட்டு, நள்ளிரவிலும் தூங்காமல் சில வீரர்களோடு கள முழுதையும் சுற்றிவருகிறான்.

இங்ஙனம் இருவருக்கும் இருவகைநிலைகளை ஒருகாலத்தே விளைவிக்கின்ற பாசறைத் தொழில் இன்னே முடிவதாக என்பது பாடலின் பிண்டம்.

இவ்வளவும் செய்வது கூதிர்ப்பாளை். ஆதலால் இப் பாடலின் பிண்டத்திற்குக் கோவலர் செயல் முதலாக– பிரிந் தோர் பேதுறலீறாக இருபத்தொரு காட்சியாக வருகிற கூதிர்க் கால வருணனை முதலுறுப்பாகிய முகமாகிறது. நகரும், அரண்மனையும், அதில் இராக்காலமும், அரசியினிருக்கையும் அப்பிண்டத்தின் கைகளாகின்றன அரசியினிலையும், அரசன் செயலும் இடக்கண்ணும் வலக்கண்ணும் ஆகின்றன. நகர மக்களின் செயல்கள் பிரிவு நோய்க்கும்– கடமையுணர்ச்சிக் கும் ஒளியூட்டும் உயிர்ப்புகளாகின்றன அங்கங்கே யமைந்து கிடக்கின்ற அணிவகைகள் இவ்வுடலின் அழகாகின்றன. இவ்வண்ணம் பாடற்கரு வளர்ந்து பருவம் வந்து ஒண்மையும் வன்மையும் பெற்றுப் புலவருலகத்தில் வாழ்கிறது

இப்பாடலின் ஒவ்வொரு சிறுபகுதியும் சுவையும் பொரு ளாழமும் பலதுறைப் பேரறிவும் படைத்தனவாயினும் மிக மிகச்சிறந்த சிலவற்றைப் பார்ப்போம்.

நக்கீரர் பெருமான், இப்பாடலை நடத்திச் செல்லும் அழகே தனித்தது. முன்னர் முகமாகக் கூதிர்க்காலவருண னையை யமைத்து 'பெயல்கனைந்து, கூதிர்நின்றன்றால் போதே' என முடித்தார். கூதிரிற் குளிர்ந்த நம்முள்ளம் வெதுவெதுப் பான இடத்தை விரும்புகின்றபோது, உயர்ந்த அரண்மனை கட்ட அடிகோலுகிறார்.

அடிகோலும் நாள்:

சித்திரைத்திங்களில் நடுப்பத்து நாள்; அதில் வாழ இருக்கின்ற அரசனுக்கும், அரசிக்கும், நாட்டிற்கும் பொருத்த மாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற சிறந்ததொரு நாள்; அந்நாளில்

ஞாயிறு நடுவானத்தில் விளங்கும் உச்சி நேரத்திலே, நடப் பட்ட கம்புகளில் வீழும் நிழலால் திசையையறிந்து சிற்ப நூல்வல்லோர் நூலைநேராகப் பிடித்துத் திசையை வரையறுக் கிறார்கள்.

அவ்வத்திசைகளிலே நிற்கும் திசைகாவல் தெய்வங்களைக் குறிக்கின்றனர். அரசன் மனைக்கேற்ற வகையில் வாயில்கள், மண்டபங்கள், முற்றவெளிகள், நிலாமுற்றங்கள் அனைத்தை யும் கீறிக்கொள்கின்றனர். பின்னர் இவ்விடங்கள் எல்லா வற்றையும் சூழ உயர்ந்த புறமதிலை எடுக்கின்றனர்.

அந்த மதிலுக்குப் பெரிய வாயில். அது இரட்டைக் கதவுகள் பொருத்தப்பெற்றது. கதவுகளோ மிக வுறுதி யானவை. ஆணிகள் பல அழுத்தப்பெற்றவை. சாதிலிங்கம் என்னும் செந்நிறக்கலவை பூசப்பட்டவை. உறுதியான தாழ் உள்ளவை.

அக்கதவுகளைத் தாங்குகின்ற வாயில்களோ மிகப்பெரி யவை; அதன் மேற்பரப்பிலே, பரப்புப்பலகை என இன்று வழங்கப்பெறும் உத்தரக்கற்கவி இடப்பெற்றுள்ளது. அதில் இருமருங்கும் பெண்யானைகளையுடைய திருமகள் செந்தாமரை மலரில் எழுந்தருளி இருப்பது போலத் திருவுருவம் செதுக்கப் பெற்றுள்ளது. அதிலுள்ள யானைகள் இரண்டும் துதிக்கை யால் செங்கழுநீர்ப்பூக்களைத் தூக்கிப் பிடித்துள்ளன. வாயில் களும் கதவுகளும் இணைப்பும் செறிப்பும் பொருத்தும் எவ ரானும் அறியப்படாவண்ணம் நன்றாகக் கடாவப் பெற்றவை.

பெரிய அந்நிலைவாசற்படியின் இருபக்கமும் வெண் கடுகை யரைத்துப் பூசியுள்ளனர். நெய்யை அப்பியுள்ளனர். அதனால் வாயில் தெய்வங்கள் பேய் முதலிய தீத்தெய்வம் அணுகா வண்ணம் நிலைத்து நின்று பாது காப்ப ஆயின. இந்த வாயில்கள் யானைகள் கொடிகளோடு தடையின்றி நுழையக்கூடிய அளவு உயர்ந்தவை. பொதுவாகச்சொன்னால் ஒருமலையைக் குடைந்து வைத்தது போலத்தோன்றும்.

கோயிலின் வாயில் வழியாக உள்ளே நுழைந்தால் முதலிற் காணப்பெறுவது முற்றவெளி. அது புதுமணல் பரப்பப் பெற்

றுள்ளது. திருமகள் என்றும் நீங்காது வாழும் பொலிவினை யுடையது. இம்முற்ற வெளியைக் கடந்து சென்றால் முன்னே எதிர்ப்படுவது அரண்மனையின் முகப்புவாயில். அங்கே அன்னமும் கலரிமானும் விளையாடுகின்ற காட்சி கண்ணுக்கு விருந்தாக மட்டும் இல்லை. காண்பார் கருத்திற்கும் விருந்தாகின்றது. அன்னம் பறந்து விளையாடுவது இந்த அரண்மனைக்கு நல்லதையும் கெட்டதையும் பிரித்தறிந்து, நீதி - அநீதிகளைப் பகுத்தறிந்து, நேர்மையே வழங்கும் ஆற்றலுண்டென்பதைக் சாட்டுகிறது. கவரிமா இம்மன்னனும் இவனடிக்கீழ்வாழும் மக்களும் மானம்படவரின் வாழாத பண்பினர் என்பதைக் காட்டுகிறது. இவ்வண்ணம் கருத்து விருந்தாகின்றன. மேலும் கவரியும் அன்னமும் ஊன் உண்ணாதன. இனத்தால் வேறுபடினும் மனத்தால் ஒன்றுபட்டவை. இரண்டும் இனவேற்றுமை யின்றி விளையாடுகின்றன. அரசனீதிக்குமுன் இனவேற்றுமை நிற்காது. மனவேற்றுமை வளராது என்பதையும் காட்டுகின்றன.

முன்வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் குதிரைப்பந்தி யானைக்கூடம் முதலிய பல படைநிலையங்கள் உள்ளன அவைகளுக்குப் போரின்றி வீணே நிற்க முடியவில்லை. வீரவுணர்ச்சி மனஎழுச்சியைத் தருகிறது. அதனால்புல்லுணவைக் குதப்பி யுமிழ்ந்து கொண்டு ஒலிக்கின்றன. இன்னும் பல ஒலிகள் கேட்கின்றன. இங்ஙனம் படைகளின் எண், வலி முதலியவற்றைப் புகுந்தவர் எளிதில் காணக்கூடாது. காணும் எளிமையில் அரண்மனை யிருத்தலாகாது ஆதலால் அவைகளின் ஒலிகளைக்கூறி அவற்றின் இருப்பை யுணர வைத்த ஆசிரியர் திறன் வியத்தற்குரியது.

அடுத்து நிலாமுற்றம். அதில் நீர் விழுவதற்காக மீன் வாயைப்போன்ற நீர்விழுந்தூம்பு (தூரய்) அமைக்கப்பெற்றுள்ளது. அதிலிருந்து நீர் கலங்கலாக அருவிபோல விழுந்து கொண்டேயிருக்கிறது. அந்த அருவியின் ஒலியும் கேட்கிறது. அங்கே மயிலின் ஒலியும் கேட்கிறது. இங்ஙனம் பலவகை ஒலிகள் நிலவ முன்வாயிலின் உட்கட்டு அமைந்துள்ளது

இவற்றைக்கடந்து உட்புகுந்தால் ஓரழகான மாளிகை. அங்கே பல விளக்குகள் ஒளி செய்கின்றன. எல்லாம் பாவை விளக்குகள். யவனர்களாற் செய்யப்பெற்றவை. விளக்கு களில் நெய் வற்ற வற்ற நடைபாவைகளாகிய ஏவல் மகளிர் நெய் வார்த்து திரியைத்தூண்டி ஒளியைப் பாதுகாக்கின்றனர். மாளிகையுள் இருளே இல்லை. எங்கும் ஒளி. இங்கே ஆட வர்களில் அரசன் ஒருவன்தான் வரலாம். ஆண்மக்கள் எவ ரும் வரமுடியாத் இடம்.

அது மலையைக் கண்டாற் போன்ற மாண்பினையுடையது. மேலே பல வண்ண வண்ணக் கொடிகள் பறக்கின்றன. பொதுவாக மாளிகையையும் மேலுள்ள கொடிகளையும் இணைத்து நோக்கும்போது இந்திர வில் கிடந்து இமைப்பது போன்ற எண்ணம் உண்டாகும்.

சுவர் எங்கும் வெள்ளிபோன்ற வெண்சுண்ணம் தீற்றப் பட்டுள்ளது. மாளிகையிலே அங்கங்கு நீலமணியாற் செய்யப் செய்யப்பட்டனவோ என்னும்படியான தூண்கள் அணிசெய் கின்றன. சுவரில் பலவண்ணப்பூங்கொடி ஓவியங்கள் அழகு செய்கின்றன. இந்த மாளிகைதான் அரசி வாழும் அந்தப் புரம். இதனை விளக்கும் அழகான தொடர் "கருவொடு பெயரிய காண்பு இன் நல் இல்" என்பது அதுதான் இன்றைய கருப்பக்கிருகம் என வழங்கப்பெறுவது.

இந்தக் கரு இல்லுக்குள்ளே ஒரு தந்தக் கட்டில். அது நாற்பது யாண்டு நிரம்பிய கட்டிளங் காளைப்பருவத்ததான போரிலிறந்த யானையின் கொம்பாற் செய்யப்பெற்றது. எப் படியெனில், கைவல்லிய கம்மியனால் தலையும் வாலும் (அதா வது அடியும் நுனியும்) சமமாக இருக்கும் வண்ணம் சீவி, சிற்றுளியாலே குடமும், மலரும், உள்ளிப்பூண்டு போன்ற அமைப்பு வரச் செதுக்கிச் செய்யப்பெற்ற கால்களையுடையது.

புலிகளின் புள்ளிபோன்ற பூநிறத்தையுடைய தகடு போன்ற வட்டவடிவமானது. அதனால் பாண்டில் எனப் பெயர் பெற்றது. கச்சு பின்னப்பெற்றது. சுற்றிலும் மூட்டுக் கள் நன்றாக அமைந்த முத்துச்சரங்கள் தொங்குவது; சாள

ரங்களையுடையது. சாளரங்கள் கழலாவண்ணம் ஆணிகள் இறுகத் தைக்கப்பெற்றது. கட்டிலின் மேல் விரிப்பு ஒன்று. அதில் ஒரு சிங்கம் யானையை வேட்டையாடுவது போன்ற ஓவியம் அமைய வண்ண மயிர்களால் செய்யப்பெற்றுள்ளது. அதன்மேல் பஞ்சணை. பஞ்சணையின் மேல் மணமலர்கள் காம்பும் புறவிதழும் நீக்கிப் பரப்பப்பெற்றுள்ளன. அதன் மேல் காட்டில் மலர்ந்த முல்லைமலர்களும் பலவண்ணமலர்களும் பரப்பப்பெற்றுள்ளன. அதற்குமேல் அன்னத்தின் தூவியாலான மெத்தை. அதன்மேல் தலையணை. அணையும் தலையணையும் மறையும்படி வெளுத்த மெல்லிய ஆடையை விரிக்கப்பெற்றுள்ளது. இவ்வண்ணம் தீண்டுதலால் மென்மை பயப்பதாயினும், காட்சியால் வீர உணர்வைப் பயப்பது அத்தந்தக்கட்டில்.

கட்டிலிலே:

ஒரு பெண் படுத்திருக்கிறாள்; அவள் மார்பிலே ஒற்றைச் சடை கிடக்கிறது. கூந்தல் நெற்றியின் மீது பரந்து சிதறிக்கிடக்கிறன. அவள் காதில் மகரக்குழையில்லை. அதற்குப் பதிலாக தாழுருவி செறிக்கப்பட்டுள்ளது. வயிரவளைத் தழும்புகள் படிந்த கைகளிலே சங்க வளையல் கிடக்கின்றன. அதனுடன் ஒரு நூற்காப்பு. விரலில் ஒரே ஒரு மோதிரம். பட்டேயுடுக்கும் அவளிடுப்பில் இன்று நூலாடை. அதுவும் மாற்றி யுடுக்காமையால் கசங்கி அழுக்கேறியது. அவள் புனையா ஓவியமாக இருக்கிறாள்.

அவள் பக்கத்திலே சில பெண்கள்: அழகாலும், வடிவாலும் ஒத்த இளந்தோழியர். அவர்கள் தலைவியாகிய நங்கைக்குத் துயில் உண்டாவதற்காக தலைவியின் கால்களை வருடுகிறார்கள் வருடினாலும் அந்தக்கூதிர்க்காலமும், நள்ளிரவும், மலர்ப்படுக்கையும் உறக்கத்தைத் தருமா? ஏக்கத்தை எழுப்புகின்றன

வயது மூத்த பெண்களாகிய செவிலியர் சிலர் இந்நிலையைக் கண்டனர். அவளுள் ஒருத்தி அரசியின் கூந்தலைக் கோதி விட்டுக்கொண்டே, அம்மா நீ வளர்த்த கிளி நின்னைக்

காணாது வருந்துகிறது. பால் நினைந்தூட்டும் அன்னை ஏன் என்னைத் திரும்பிப் பார்க்கவில்லையென்று அழைக்கிறது என்றாள். ஒருத்தி அன்னம் அழைக்கிறது என்றாள்; ஒருத்தி உன் முகத்தினது பொலிவு குன்றியதைக்கண்டு திங்களஞ் செல்வன் செருக்கித்திரிகின்றானே. அவனை இப்படி விடலாமா? என்கிறாள். தலைவியின் காதில் ஒன்றும் விழவில்லை. அவள் ஏதோகட்டிலின் மேற்காட்டியைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறாள்.

அதில் உரோகிணியோடு கூடிய சந்திரன் உருவம் காணப்படுகிறது. அது தலைவிக்கு உரோகிணியைப்போல நமக்கும் நந்தலைவனைப் பிரியாதிருக்கும் பேறு கிடைத்திலதே என்ற கவலையை மிருவித்தது. கண்களில் நீர் ததும்பியது. அதைக்கைவிரல்களால் துடைத்து எறிகிறாள்.

இவ்வண்ணம், இன்ப உலகைப் படைத்து, பருவ நிலையையமைத்து, போகப்பொருள்களைப் பரப்பிச் சோகக் கதையை வடித்து வீரன் கடமை யுணர்ச்சியாக நிறை வேய்துபிறந்து நெடு நல் வாடை.

பெயர்க்காரணம்:

இப்பாட்டு நெடிதாகிய நல்ல வாடையில் தலைவன் தலைவியாகிய இருவர் இயல்புணர்த்துவதால் ஆகுபெயராய்ப் பாட்டிற்குப்பெயராக வந்தது என்பர் உரை செய்தாராகிய நச்சினார்க்கினியர். மேலும், 'தலைவனைப் பிரிந்திருந்து வருந்தும் தலைவிக்கு ஒருபொழுது ஓரூழிபோல நெடிதாகிய வாடையாயும்,' போகம் வேண்டிப் பொதுச் சொற்பொருளைப் அப்போகத்தில் மனமற்று வேற்றுப்புலத்துப் போந்திருக்கின்ற தலைவனுக்கு நல்வாடையாயும் ஆயிற்று. ஆகவே வாடை யொன்றே பிரிந்த இருவரில் ஆணுக்கு நல்லதாயும், பெண்ணுக்கு நீண்டதாயும், ஒருபொருட்கண் இருதன்மை ஒருசேர விளங்குதலின் இதற்கு இப்பெயரமைந்தது என்பர்.

என்பிலதனை வெயில் சாய்ந்தது எனின் என்புளதனை காயாமையும், இலதனை காய்தலுமாகிய இருதன்மை வெயிலிடத்திருந்தது என்பது கருத்தன்று. ஆயின் வெயில் காயும் இயல்புடையது. என்பிலது சென்று அது பொருமல் வருந்துகிறது. என்புளது பொறுத்தும் வெறுத்தும் உயிர்தாங்கி வாழ்கிறது என்பதே கருத்து. அதுபோல வாடை குளிரும் இயல்பினது. ஒரு சாராருக்கு, அதாவது காதலன் கலப்பையே கருதியிருப்பார்க்கு மிகுந்து நீண்டும், கருத்தைக் கடமையிற் செலுத்தியிருப்பார்க்கு அங்ஙனம் தோன்றுமலும் இருந்தது என்ற அளவே கருதத்தக்கது. ஆகவே நுகர்வோர் வேறுபாட்டான் வாடையும் இருதன்மை பெற்றது என்பதாம். இங்ஙனம் பால் மாறுபட்ட இருவர்க்கும் இருதிறப்பட்டது வாடை என்பதிற் சிறப்பொன்றுமின்று. தலைவியராகிய பெண்களுக்குள்ளே சிலர்க்கு நீண்டு துன்பந்தருவதாயும், சிலர்க்கு ஐயோ! இவ்வளவு விரைவிற்கழிந்துவிட்டதே என்று ஏங்கும் நிலையில் இன்பவுணர்வை மிகுவிப்பதாயும் இருந்தது என்று வாடையியல்பைக் காட்டுவதிலே நக்கீரர் கருத்தோட்டம் இருக்கிறது. பாருங்கள் குலமகளிர், 'மல்லல் ஆவணம் மாலையயர்ந்தனர், கோதை புனையார் பல்லிருங்கூந்தற் சின்மலர் பெய்ம்மார் இருந்தனர் எனக் கூடினேரியல்புகூறி, காதலர்ப்பிரிந்தோர் புலம்பியதை எடுத்துக்காட்டத் தலைவியின் சூழலையும் நிலையினையும் சிறப்பையுங் கூறிப் பாட்டை முடிக்கின்றவர் கிளவித்தலைவி இங்ஙனம் வருந்துதற்குக் காரணம் தலைவன் பாசறைச் செலவே எனவும், அது விரைவில் வெற்றியோடு முடிவதாக என வேண்டுவதாகவும் முடிகிறது. ஆகவே இப்பாடல் கணவனொடு கூடிய மகளிர்க்கு நல்ல வாடையாகச் சின்மலர் சூட்டிச் சாளர மடைக்கக் கூடியதாயிற்று பிரிந்த மகளிர்க்கு நீளமாயிற்று என அறியக்கிடத்தல் காண்க. கருத்தை வேறொன்றிற் செலுத்திய காதலனுக்குப் போகத்தை வென்ற வெற்றியாய் நல்லதாயிற்று எனின் நோக்கே வேருயினமையானும், மாறுபட்ட இருகுணங்கள் ஒருபொருளிடத்து ஒரே காலத்து ஒருங்கியைதல் இயற்கைக்கு மாற்று ஆதலானும் நச்சினார்க்கினியர் கருத்து ஆழ்ந்து சிந்தித்தற்குரியது.

இப்பாடலின் சிறந்த — தலையாய பொருளமைதி தலைவி இத்துணைப்போக சாதனங்களிலிருந்தும், பருவ வாய்ப்பிருந்தும் நுகர்ச்சிக்கு வாய்ப்பின்மை தலைவனது போர்மேற்சேறலாயிருந்ததை எண்ணி ஆற்றியிருந்தாள் என்பதே அதற்குத்துணையாக வந்தது தலைவனுடைய பாசறையிருப்பு. ஆகவே பாசறையிருப்பு ஏதுவும், தலைவியின் வருத்தம் அதன் பயனும்மாயிற்று. அதனாலே கூடினார் செயலை விளக்கேற்றுதல், பூச்சூடுதல், கதவடைத்தல் முதலிய செய்திகளாற் குறிப்பானுணர்த்தி, தலைவியின் பிரிவுநோயை விரித்துக் கூறினார். ஆதலால் நெடுநல்வாடை என்பது பிரிந்த மகளிர்க்கு நல்லதாயும் பிரிந்த பெண்களுக்கு நெடியதாகவும் தோன்றி நுகர்வாரியல்பால் இருதிறனுடைத்தாயிற்று என்பது பெற்றும்.

இது அகப்பாட்டா? புறப்பாட்டா?

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் புறப்பாட்டே. 'வேம்பு தலையாத்த நோன்காழ்எஃகம்' எனக்குறிப்பாற் கிளவித்தலைவனைப் புலப்படச்செய்தலின் என்பர். சிலரும் பலருமான திறனாய்வாளர்கள் வேம்பு மன்னருக்கு மட்டுமன்றி. அவனடி பணியும் சிற்றரசர்க்கும் உண்டு ஆதலால், குறிப்பான் அது கிளவித் தலைவனைப் பாண்டியன் என்றுணர்த்தியதாகாது. மன்னன்நள்ளிரவில்விழுப்புண்பட்ட வெற்றிவீரர்களைக் காணச் செல்கின்றான். அவனுடன் போகின்ற வீரன் கையில் வேலேந்தி மெய்காப்பாக உடன் போகின்றான். வேல் பகல் முழுதும் புண்ணிற் குளித்துக் குருதி மணங்கமழ்வது. அதனால் பல பேய்க்கணங்கள் தொடரவும் கூடும் அதற்காக வீரன் அரவாய்க்கடிப்பகையை அதிற்காட்டிச் சென்றான் எனின் வரும் இழுக்கென்னவோ? அங்ஙனமாயின் அது மன்னர்க்குரிய மாலையாமோ சுட்டிச்சொன்னதாமோ என்பவற்றைச் சிந்தித்தால். அஃதோர் வறள் வாதமாகவே முடியும். வேற்றரசர் வரலாற்றைத் துணைக்கொண்டும் பிறபுலவர் கூற்றைச் சான்று காட்டியும் பலர் நச்சினார்க்கினியர் கருத்தை மறுத்திருத்தலின் யாம் அதில் ஆய்ந்திலேமாயினும் இறுதியிற் சிறிது கூறப் பெறும்.

பத்துப்பாட்டில் வரும் அகப்பாடல்கள் மூன்று. அவை குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை என்பன. இந்த வாடையும் அகப்பாட்டேயாதல் முன்னர் இப்பாட்டின் சிறப்பு நோக்கம் கூறிய வழிவிளக்கப் பெற்றது. அகப் பாட்டா புறப்பாட்டா என்ற குழப்பம் உரையாசிரியர் உரை யாற் போந்ததேயாம்.

அவர் உரைத்தலைப்பில், இப்பாட்டினுள் "கூதிர் நின் றன்றாற் பொழுதே" (72) 'கூதிர்ப்பாளுள்' 12 எனவுங் கூறுகின்றாராதலின் இது பாலைக்குப்புறனை வாகையாய் அதில் கூதிர்ப்பாசறையேயாயிற்று என்கின்றார்.

உரையிறுதியில் 'இப்பாட்டுத் தலையாலங்காணத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மண்ணாசையாற் சென்று பொரு தலின் இப்போர் வஞ்சியாகலின் வஞ்சிக்குக் கொற்றவை நிலை யுண்மையின் கொற்றவை வெற்றிப் பொருட்டுப் பரவு தல் கூறினர் அது பாலைத்திணைக்கு ஏற்றலின்' எனத்திணை வஞ்சி· துறை கொற்றவைநிலை என்றார். இதனால் இவர்க் குத் திணையுந்துறையுந்துணிந்து கூறுதற்கண் நிகழ்ந்த நிலை யின்மையை உணரலாம். புறப்பாட்டல்லாத ஒன்றை 'வேம்பு தலையாத்த' என்ற ஒன்றான் புறப்பாட்டாக்க எண்ணிய எண்ணமே, புறமாயின் திணை துறைகள் யாவை என்ற எண்ணத்தை எழுப்ப அதனால் வாகையும் கூதிர்ப்பாசறை எனவும், வஞ்சியும் கொற்றவை நிலை எனவும் கூறினர்.

கூதிர்ப்பாசறை என்பது கூதிர்க்காலத்தே பாசறைக் கண்ணே காதலால் திரிவில்லாத மனத்தனாகி ஆண்டு நிகழ்த் தும் போர்த்தொழில் கருதிய மரபு என்பது நச்சினார்க்கினி யரே தரும் விளக்கம். அங்ஙனமாயின் இப்பாடலில் தலைவி யின் இருப்பு முக்காற்பகுதியில் முனைத்து நிற்க, இறுதிக் கண்ணவாகிய பதினைடிகளே பாசறையாதலை விளக்குவன. இதனாலும் முல்லையுரிப்பொருளாகிய இருப்பே மேலோங்க- அதற்கு அடைகல்லாக – அல்லது - அப்பொருளைச் சிறப்பிப் பதாக அமைக்கப்பட்டதே தலைவன் பாசறையிருப்பு என்பது பெறப்படும் ஆகவே, ஒருபோதும் கூதிர்ப்பாசறையாகாது. வாகைத்திணையுமாகாது.

அன்றியும் இவரே 'இருத்தற் பொருள் முல்லை' என்பதே பற்றிப் பாசறைக்கண் இருத்தலாற் பாசறை முல்லை எனப் பெயர் கூறுவாரும் உளர் எனக்கூறி 'மூதில்வாய் தங்கிய' என்னும் புறத்திரட்டை மேற்கோள் காட்டினர். அப்பாடலும் தலைவியின்பாற் பெற்ற வலியளவே, பாசறையுள் தலைவன் மதனனை வென்றது என்று கூறுவதால் அவளிருப்பின் ஆற்றலே வியக்கப்படுகின்றது. இங்ஙனம் தலைவியின் இருப்பைச் சிறக்கக் கூறுதலே தொன்மரபாதலும், அதற்குத் துணையாகத் தலைவன் பாசறையிருப்பைக் கூறல் மரபாதலும் தெளியப்பெறும். அங்ஙனமாகவும் நச்சினர்க்கினியர் வாகை கூதிர்ப்பாசறையெனக்கூறியது பாட்டுடைத்தலைவனே கிளவித்தலைவன் என மயங்கிய முதன் மயக்கமேயாம்.

அடுத்து இறுதியில் அவர் எழுதிய வஞ்சி — கொற்றவை நிலை என்பனவோ எனின், அவையும் அதன் விளைவே. வட்கார் மேற்சென்றூன்றும் வஞ்சித்திணையில் கொற்றவை நிலை என்பதொரு துறை தொல்காப்பியத்து இல்லை. அது புறப்பொருள் வெண்பாமாலைக் காலத்துப் புகுந்தது. அதுவும் இலக்கிய மரபு பற்றி ஆராயின், வாளைப்புறவீடு செய்த பின்பு வீரனே — அல்லது முதியோரோ நீள்தோளான் வென்றி கொள்கென, —நிறை மண்டை வலனுயரிய, கூடாரைப்புறங்காணும் கொற்றவை மொய் யிரியத் தான் முந்துறும் என அவள் நிலையைக் கூறுவது. செவிலீ வேண்டிக் கொள்வதாகா.

அன்றியும் 'பாசறை தொழில் விறல் தந்து இன்னே முடிக' என்ற பகுதிக்குக் கொற்றவையை எழுவா உரைக்க வேண்டிய இன்றியமையாமையும் இன்று. போர் வெற்றி கொடுத்து இன்றே முடிக என அவள் வேண்டியது வினைமுடித்தால் தலைவன் இன்றே மீள்வான் எனத்தலைவியைத் தேற்றும் அவ்வளவினதே. 'கொற்றவை' என்ற வேண்டாத சொல்லை வருவித்து மரபொடு படாத கொற்றவை நிலையாக்குதலும் அதற்காக வஞ்சித்திணை யாக்குதலும் கொற்றவை பாலைத்தெய்வம். பிரிவெல்லாம்பாலை. ஆகவே பிரிவையுணர்த்தும் இப்பாடல் வஞ்சியாய்க் கொற்றவைநிலை

யாயிற்று எனலும் வலிந்து கோடலேயன்றி மரபுவழி யதாகாது.

ஏனைய சில ஏதுக்களைப் பிற ஆராய்ச்சி நூல்கள் பேசுதலின் அவற்றை விடுத்து ஈண்டுச் சிலவற்றையே சொன்னேன்.

ஆகவே, நெடு நல் வாடை முல்லைத்திணையும், செவிலியர் கூற்றுமாக அமைந்த அகப்பாடலேயாம்.

இவர் பாடல்களில் வந்துள்ள ஆரியச் சொற்கள்.

அங்குசம் (முரு 110)

முகம்? முரு 92; 94, 96, 98. 303

இது தமிழ்ச் சொல்லே எனலும் உண்டு.

கணவீரம்-அலரி முரு 236

காமம்? (முரு 134)

இதுவும் தமிழ்ச் சொல்லாகலாம்.

சண்பகம் முரு 27

சந்தி-முரு 225

சமம்-நடுநிலை முரு 99

திசை. முரு 98

திலகம் முரு 24

நகர்? முரு 160, 238, 244

நாகம்-சுரபுன்னை முரு 302

நியமம்-கடைவீதி முரு 70

நீலம்-தருப்பை முரு 253

பருமம்-முரு 146
மகரம். முரு 25
மதம். முரு 275
மதன். முரு 4
மதி முரு 87
மந்திரம்-வேதம் முரு 95
யூகம்- கருங்குரங்கு. முரு 303
வதுவை மணமாலை. முரு 117
விதி. முரு 95
ஆரம்-கச்சு நெடு 136
கலிங்கம்-புடைவை 134, 146:
தகரம்-மயிர்ச்சந்து. நெடு 55
தசம்-பத்து. நெடு 115
படம்-மேற்கட்டி. நெடு 159
பருமம். நெடு 179
பித்திகம். நெடு 40
மாதிரம்-திசை. நெடு 72
யவனர்-சோனகர். நெடு 101
முரசு. அகம் 36
மதி. " 57
ஆரம். " 120
தகரம் 141
பதம்- 249
கணம்-கூட்டம் 253
குறுந்தொகை:
பயம்-143
ஆரம் 161
ஓதம்-பெருக்கு 31
புறநானூறு:
யவனர். புற. 56

இங்ஙனம் இவர் பாடலுள் திருமுருகாற்றுப்படையில் இருபத்திரண்டு வடசொற்களும், நெடு நல் வாடையில் ஒன்பது வடசொற்களும், அகநானூற்றில் ஆறு சொற்களும் குறுந்தொகையுள் மூன்றும் நற்றிணையுள் ஒன்றும், புறநானூற்றில் ஒன்றும் ஆக நாற்பத்திரண்டு சொற்களே ஆளப் பெற்றுள்ளன. இவற்றுள்ளும் வினைக்குறியிட்டவை ஆரியச் சொல்லா தமிழ்ச்சொல்லா என்று ஆய்தற்குரியவை. இவற்றுள் **'தச நான்** கெய்திய' 'பணைமருணேன்ருள்' என்ற அடி 'பத்தொடு நான் குறு பணைமருள் நோன்ருள்' என்றிருந்திருப்பினும் குற்றமாகாது. துணைகொண்டு துணிதற்பாலது.

இப்பாடலால் அறியப்பெறும் சில வழக்கங்கள்:

கோவலர் கையில் வளைகோல்வைத்திருத்தல் (நெடு 3) மழைமிகின் இடம் விட்டு இடம் ஆநிரைகளை ஓட்டிச் செல்லுதல் (5) கோவலர் செங்காந்தட்கண்ணி சூடல் (6) குளிரில் தீக்காயும்போது கையைத் தீயில் காய்ச்சிக் கன்னத்தில் ஒற்றிக்கொள்ளுதல் (8) கயவர்கள் காமமிக்கு ஊரில் திரிதல் (32) விளக்கினை மாலையில் வழிபடுதல் (40-3) சந்தனக்கல் வடக்கேயிருந்து வந்ததெனல் (51) மழைக்காலத்து மகளிர் அகிற் புகையில் கூந்தலையுலர்த்துதல், (55-57) சாந்தாற்றி கொண்டு வீசுதல் (58) வேனிலில் பானைத்தண்ணீர் உண்ணுதல் (65) கணப்புக்காய்தல் (66) ஆடல் மகளிர் யாழ் நரம்பைக் கூதிர்க்காலத்து மார்பிலே ஒற்றிச் சூடேற்றல் (67—70) மனைகோலுவார் மரபு (75—80) அரண்மனையமைப்பு (81-100) கருவில் அமைப்பு (101-114) தந்தக்கட்டில் செய்முறை (115-127) படுக்கை வகையும் விரிப்பு செய்யுமுறையும் (128-135) காதலற் பிரிந்த மகளிர் ஒரு சடை, ஒருவளை, அழுக்காடை யணிந்திருத்தல் (136-146) கட்டிலின் மேற்கட்டியில் சந்திரன் உரோணி படம் வரைதல் (160-163). மன்னர்கள் புண் பட்ட வீரரைப்பரிவுடன் காணப்போதல் (172) இரும்பால் வட்டமான விளக்குச்செய்தல் 175, பாவைவிளக்குகள்...... இரவில் வேல் நுனியில்

வேம்பு கட்டி வெளிச் செல்லுதல் (176). யானைகட்கு மணியும், குதிரைகட்குச் சேணமும் இடுதல் (177–179). அரசன் வெளியிற் செல்லின் தோழர் தோள்மீது கையிட்டுச் செல்லல் (181–183) முதலான வழக்கங்கள் இப்பாட்டிற் குறிக்கப்பெறுகின்றன.

புறப்பாடல்கள்

இவர் பாடியனவாகப் புறத்தில் மூன்று பாடல்களே உள்ளன. அவற்றுள் 'ஏற்றுவலனுயரிய' என்னும் 56ம் பாடல் இலவந்திகைப்பள்ளி துஞ்சிய நன்மாறனை இவர் பாடியது. இதில் அவனாற்றலையும் சினத்தையும் வலியையும் புகழையும், நினைத்ததை நினைத்தபடி நிறைவேற்றும் வன்மையையும் உருத்திரன் முதலிய தேவர்களோடு ஒப்பக் கூறிய பகுதி இருவகையில் நமக்கு இன்பம் பயப்பதாகின்றது. இப்பாடலைக் கேட்பார் பிறர்க்கு இவன் இத்தகைய தெய்வங்களை இவற்றுள் ஒத்துள்ளான் என்ற எண்ணத்தைப் பயந்து உருகெழு ஒட்பத்தை யளிக்கிறது. கேட்கின்ற பாட்டுடைத் தலைவனாகிய நன்மாறனுக்கு உன்னுடைய இச்குணங்களுக்கு உடையாரிவரிவர், அவற்றுள் உன்னாற்றல் குன்றிய வழி அவரை வேண்டிப்பெறுக எனக் குறிப்பானறிவுறுத்ததூஉம் ஆயிற்று இங்ஙனம் கூறுதல் பண்டைய மரபு. இதனால் நக்கீரர் தெய்வங்களை மக்களுக்கு ஒப்பக் கூறித்தலைவன் தயவை வளர்த்து வயிறு வளர்ப்பவரினத்தைச் சேர்ந்தவர் என்று எண்ணிவிடுதலாகாது ஆட்சியிலிருப்பவர்க்கு அறிவுறுக்கு முறைகளில் இது ஒன்று.

அடுத்து, நீ போருக்கென்றே என்றும் செல்கின்றாய். உனக்கு அரியபொருள் ஒன்றுமில்லையாதலால் இரவலர்க்குத் கொடு. உரிமை மகளிர் பொன்வள்ளத்திலே போக... மாகிய மதுவைக் கொடுக்க வாங்கியுண்டு ... ஞாயிறும் மதியும் போல நாளும் வாழ் என ... வாழ்த்தினார். இதனால் அரசனைக் கள்ளருந்து காதலியரோடு ... களிக்கூத்தாடு என்று பணிப்பதாகச் சிலர் எழுதியும் உள்ளனர். இதன் கருத்து வீரத்தில் செல்லும் மன்னன் மனத்தைக்

காமத்திற் புகுத்தி புகழிற் செலுத்திப் போரை நிறுத்தச் செய்த புண்ணியச் செயலாம்.

இவரே சங்ககாலத்தில் பொதுவுடைமைக்கு வித்திட்டவர். மன்னனுகட்டும், வீரனுகட்டும் வேடனுகட்டும் அனைவருக்கும் உண்பது நாழியரிசி; உடுப்பவை இரண்டே யாடைகள். மற்றவை அனைத்தும் சரிதானே! ஆதலால் பணம் படைத்தால் பலருக்கும் கொடுத்து வாழவேண்டும். நாமே தனித்திருந்து உண்பேம் எனில் நம்கையை விட்டு நழுவுவன பல என்கின்ருர். இதைவிட உயர்ந்த உண்மையை இத்துணை எளிமையாக யார் கூற இயலும். இதனுல் இவருடைய மனக்கிடக்கை தெளியப்படும்.

மற்ருெரு பாட்டிலே தன்னைப்பாணராகப் படைத்துக் கொண்டு பேசுகிருர். நான் ஒரு நாள் உறையூருக்குக் கிழக்கிலுள்ள பிடவூர்ப் பெருஞ்சாத்தனைக் காணச்சென்றேன். அவன் சிறிதும் காலந்தாழ்த்தாது, மிகப்பேசாமல் அரிய அணிகளை அள்ளிக் கொடுத்தான்.

சில செல்வர்கள் செய்வார்களே,!

> **யாமாயின் எம்மில்லங் காட்டுதும் தாமாயின்**
> **காணவே கற்பழியும் என்பார் போல்**
> **புறங்கடை வைத்தீவர் சோறும் அதனல்**
> **மறந்திடுக செல்வர் தொடர்பு.**

அங்ஙனமின்றி, தன்மனைவியை யழைத்து என்னை அறிமுகஞ் செய்வித்து, 'இவனை என்போற் போற்று' என்ருன். அவனை யான் மறக்கவே மாட்டேன் என்கின்ருர். இவனை எண்ணுகிற மனத்திலே வேறு எவனையாவது எண்ணுவேனு? மாட்டேன் என்கிருர். இதனுல் ஈவோன் பண்பும். ஏற்போன் தகுதியும் விளக்கப் பெறுகின்றன.

இவர் பாடிய புறப்பாடல் சிலவே ஆயினும் பொன் போன்றவை. மிகப்மிகப் போற்றத்தக்கவை.

இவையன்றி இவர் இறையனுர் அகப்பொருளுக்கு ஓர் சிறந்த உரையும் இயற்றியுள்ளார். அது உரை நடைக்கே ஓர் எடுத்துக் காட்டாக அமைவது

நாலடி நாற்பது. நாலடி நானூறு முதலான செய்யுள் இலக்கண நூலும் இயற்றியதாக யாப்பருங்கல விருத்தியுரை முதலிய நூல்கள் குறிக்கின்றன

திருமுருகாற்றுப்படை யிறுதியினும், நெடுநல் வாடை யிறுதியினும் இவர் பாடியனவாகப் பதினொரு வெண்பாக்கள் உள்ளன.

பதினொராந் திருமுறையில் நக்கீரதேவநாயனார் என்ற பெயருடன் இவரியற்றியனவாகப் பத்துச் சிறுநூல்கள் உள்ளன. இவையனைத்தும் சங்ககால நக்கீரர் இயற்றியன தாமா என்பது ஆழ்ந்து ஆய்தற்குரியன.

வரலாறுகளும் அவற்றையுணர்த்து நூல்களும்:

நக்கீரனாருடைய புராண வரலாறுகள் அனைத்தும் தமிழகம் அறிந்தனவே. இவர் வரலாற்றை யுணர்த்தும் பழைய நூல்கள் தமிழில் நம்பி திருவிளையாடலும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலும், கடம்பவன புராணமும், வடமொழியில் ஆலாஸ்யமான்மியம் முதலியனவுமாம். இவையன்றித் திருப் பரங்கிரிப்புராணத்தும் காளத்திபுராணத்தும் இவர் வரலாறு வந்துள்ளது. இவைகளில் வரலாறு பெரிதும் மாற்றமும் தோற்றமும் பெற்று வளர்ந்துள்ளன. இவற்றிற்குக் காரணம் அவ் வந்நூல்களை யாக்கிய புலவர் பெருமக்களுடைய கற்பனைத் திறமும், செவிவழிச் செய்திகளின் மாற்றமுமே. புலவர்புராணம் எல்லா நூல்களையும் ஒட்டி மிக விரிவாகக் கூறுகிறது இவற்றையே முதலாகக் கொண்டு ஆய்ந்து விரிவுரை எழுதிய ஆசிரியர்கள் பலர். ஆதலால் அவற்றை விடுத்துச் சில குறிப்புக்களை மட்டும் ஈண்டுத் தரலாம் என்றெண்ணுகிறேன்.

தருமி என்பான் ஓர் ஆதி சைவ அந்தணன். திருமணமாகாதவன். திருமணமும், ஆசிரிய நீராட்டும் இன்றிச் சிவபிரானைப்பூசிக்க இயலாமையைக்கண்டு திருமணம் செய்து கொள்ள விரும்பினன். அதற்கான பொருளில்லை. அரசன் விளம்பரம் கண்ணிற் பட்டது. அதனைப் பெற்றுவது மண

முடிக்க எண்ணிக் கடவுளிடம் விண்ணப்பித்தான். கடவுள் "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் பாடலைப் பாடிக் கொடுத்தார். தருமி சண்பக மாறன் அவைக்குச்சென்று சங்கப்புலவர் முன்னே கவிதையை யரங்கேற்றினன். மாறன் தன் மனக்கருத்தோடொத்திருத்தலையறிந்து மகிழ்ந்தான். பொற்கிழியை யறுத்துப்போக அனுமதி தந்தான். நக்கீரர் இப்பாடலிற் பொருட்குற்றமிருக்கிறது என்ருர். அரசன் அதனையறிய அவாவினன். நக்கீரர். பெண்களின் கூந்தலுக்கு மணம் செயற்கையேயன்றி இயற்கையன்று. இப்பாடல் இயற்கை என்கிறது அதனுற் குற்றமுடைத்து என்ருர். தருமி கவலையுற்று மீளவும் கோயில் சென்று தமிழறியும் பெருமானிடம் விண்ணப்பித்துக் கொண்டார். பெருமானே நன்பாட்டுப் புலவனுகிச் சங்கமேறி வாதித்தான். நெற்றிக் கண்ணைக்காட்டினன். நக்கீரர் அப்போதும் குற்றங் கூறினர் சிவன் நீ வழிபடும் ஞானப்பூங்கோதையின் கூந்தலுக்குமா? என்ருன் அதுவும் அப்படியே என்ருர். அதனுல் சிவன் சினந்தார். நக்கீரர் தீக்கொளுத்தப்பெற்றுப் பொய்கையில் வீழ்ந்து வருந்தினர் என்பது வரலாறு. இந்த வரலாற்றுக் குறிப்புக்கள் "நன்பாட்டுப் புவவனுய்ச் சங்கமேறி நற்கனகக் கிழி தருமிக்கு அருளினேன் காண்" என அப்பர் சுவாமிகளால் திருப்புத்தூர்த்திருத்தாண்டகத்தும் பேசப்பெறுகின்றது.

"பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக்கு அற்புட னுதவி
என்னுளங் குடிகொண் டிரும் பயனளிக்கும்
கள்ளவிழ் குழல்சேர் கருணையெம் பெருமான்"

எனக் கல்லாடம் கூறுகிறது. "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் பாடல் குறுந்தொகையுள் ஒன்ருகத் தொகுக்கப்பட்ட பழம்பாடல். இவற்றைக் கொண்டு இவ்வரலாற்றை ஒத்துக்கொண்டு சிறிது சிந்திப்போம்.

நக்கீரனுர் பாடலில் பொருட்குற்றம் உண்டென்று சாதித்தபோது வந்த நன்பாட்டுப்புலவனை சிவபெருமான் அதற்கு அமைதி கூறிச் சாதித்திருக்க வேண்டுமேயன்றி

நெற்றிக்கண்ணைக் காட்டி மருட்டியது ஆகாது. அதுவும் ஓர் தோல்வித்தானமாம் என்பார் சிலர்.

நக்கீரனார் குற்றங் கூறினர். சிவன் ஞானப் பூங்கோதையின் கூந்தலுக்குமா? என்றார். கீரன் 'அதுவும் அப்படித்தான்' என்றான். சிவன் நெற்றிக்கண்ணைக் காட்டினார். மீண்டும் கீரன் குற்றங்குற்றமே என்றான் என்பது வரலாறு. வரலாற்றை ஊன்றிப்பார்த்தால் நெற்றிக்கண்ணைக் காட்டியது கீரனை வெருட்டவா? மருட்டவா? தெருட்டவா என்பது தெளிவாகும். ஞானப்பூங்கோதையின் கூந்தலும் செயற்கையாக மணம் படைத்ததுதான் என்றபோது சிவன் நெற்றிக்கண்ணைக் காட்டியது ஞானப் பூங்கோதையின் கூந்தல் மணம் கண்டு நுகர்ந்தவன் தானொருவனே யாதலால் தானே காளத்தி நாதன் என்பதைக்காட்ட நெற்றிக்கண்ணைக்காட்டினர் அப்போதும் அவர் உணர்ந்திலர். ஆகவே, இது தெருட்டும் அருளேயன்றி மருட்டும் மருளன்று என்று துணியப்பெறும்.

இங்ஙனமே திருமுருகாற்றுப்படை பாடிய வரலாறு புராணங்களில் மட்டும் பேசப்பெறுகின்றது. ஆயினும் இவர் வாக்கில் திருப்பரங்குன்றத்தைப் பற்றியப் பகுதியில் உள்ளுறையாக அமைந்திருப்பது முன்னரே உணர்த்தப்பெற்றது.

நக்கீரர் சங்ககாலத்தில் தனிச்சிறப்புடன் வாழ்ந்த புலவர் தலைவர். அவர் நமக்குக் கற்பித்துச் சென்ற கற்பனைகள் 'செல்வத்துப்பயனே யீதல், துய்ப்பேம் எனினே தப்புபல' ஆதலால் இரவலர்க் கருங்கலம் அருகா தீதல் வேண்டும். இரவவன் புரவலன் வேறுபாடு கருதாது வீடுமுதல் நாடுவரை யாங்கணும் 'என்போற்போற்று' எனல் வேண்டும். உள்ளதும் இல்லதும் அறியாது வெள்ளம்போல உள்ளமுவந்தீதல் வேண்டும். தெய்வம் பராவி வேண்டுவ பெற்று உள்ளொளியுடன் விளங்கவேண்டும் என்பனவாம்.

— ❊ —

2933
9-JUN 1974